V211,31 N80
N81.3-5
123084

[1980 ஜூலை 14

திரு. கு. ரமணி : தலைவரவர்களே, நீலகிரிக்கும் மேட்டுப் பாளையத்திற்கும் இடையே எல்லாவிதமான போக்குவரத்திற் கும் அதாவது மனிதர்கள் மற்றும் வாகனங்கள் போக்குவரத் திற்கு ஒரு உயிர்நாடி போன்ற பாதையாகும் அது. அந்த் ரோடு இல்லையென்றால் அங்கு எல்லாவிதமான போக்கு வரத்தும் நின்று விடும் என்பதை அமைச்சரவர்களும் அறி வார்கள். அந்தச் சாலையில் உள்ள ஒரு சிறிய பாலத்தைக் கட்டுவதற்கு இவ்வளவு நீண்ட காலம் எடுத்துக்கொள்ள வேண் டியது அவசியம்தானா? மேலும் கட்டப்படுகின்ற பாலத்தை வாகனங்கள் ஒரே சமயத்தில் போவதற்கும் வருவதற்கும் வசதி யான வகையில் போதுமான அகலத்தோடு கட்டுவதற்கு ஏற்பாடு செய்யப்பெறுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவ ரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போல நீலகிரிக்கும் மேட்டுப்பாளையத்திற்கும் குறுக்கே பவானி ஆற்றிலே கட்டப்படுகிற பாலமாகும் அது. இந்தப் பாலத்தைக் கட்டத் துவங்கிய நேரம் 31—3—1978. அவ்வாறு துவங்கிய தற்குப் பிறகு கட்டுமானத்தில் ஏற்பட்ட சில திருத்தங்களின் காரணமாகவும், திருத்திய ஒப்பீடுகள் கொடுக்கப்பட்டிருப்பதன் காரணமாகவும் அவைகளை எல்லாம் பரிசீலனை செய்து அதற்குப் பின்னாடி கட்ட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டதால் தான் அந்த வேலை தடைப்பட்டதே தவிர வேண்டுமென்றே கால அவகா சத்தை யாரும் ஏற்படுத்தவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

திரு. பாபு ஜனார்த்தனன் : பேரவைத் தலைவ்ரவர்களே, இப்படிக் கட்டப்படுகின்ற சில பாலங்களுக்கு சில இடங்களில் சுங்க வரிகள் வசூலிக்கப்படுகின்றன. உதாரணமாக, செய்யாறு கொள்ளிடம் போன்ற இடங்களில் கட்டப்பட்ட பாலங்களுக்கு நீண்டகாலமாக சுங்கம் வசூலிக்கப்படுகின்றது. ஆகவே அதைப் போல இந்த பாலத்திற்கும் வசூலிக்கப்படுமா? அல்லது நீண்ட காலமாக வசூலிக்கப்படுகின்ற சுங்கத்தைத் தள்ளுபடி செய்ய அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன். மேலும் இந்த பவானி ஆற்றுப் பாலம் போதுமான அகலம் உடையதாக இருக்கின்றதா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, பாலமே இன்னும் கட்டப்படவில்லை. ஆனால் அதற்கு செஸ் வசூலிப்பதைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட் டிருக்கிறார்கள். மேலும் போக்குவரத்திற்கு இடைஞ்சல் இல் லாத வகையில் போவதற்கும் வருவதற்குமாக சேர்த்து அகல மாகத்தான் அமைக்கப்பட்டு வருகின்றது என்பதைத் தெரிவித் துக்கொள்கிறேன்.



1298

1980 ஜூலை 14]

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவரவர்களே, மேட்டுப் பாளையம் அருகில் சிறுமுகை ஆற்றுப் பாலம் ஒன்றும் கட்டப்பட்டு வருகின்றது. இதன் வேலை ஆண்டுக் கணக்காக நடந்து வருகின்றது. அதே காண்ட்ராக்டர்தான் இந்த வேலையையும் செய்து வருவதாகச் சொல்லப்படுகிறது. ஆகவே அது எப்போது கட்டி முடிக்கப்படும்? சிறுமுகை ஆற்றுப் பாலத்தைக் கட்டுகின்ற காண்ட்ராக்டரிடமிருந்து மாற்றி, அவர் காலதாமதம் செய்வதால் வேறொருவரிடம் கொடுத்து நல்லமுறை யில் செய்வதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, சிறுமுகைப் பாலம் 9 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டு வருகின்றது. இதுவும் அதே காண்ட்ராக்டரால் தான் கட்டப்பட்டு வருகின்றது. அதிலும் சில குறைபாடுகள் ஏற்பட்டிருக்கின்றன. அதற்கு காரணம் இப்போது விலைவாசி கள் எல்லாம் ஏறி விட்டதால் அவர்கள் அதிகமாகப் பணம் வேண்டும் என்று கேட்கிறார்கள். ஆகவேதான் காலதாமதம் ஏற்படுகின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. மு. அரங்கநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டுப் பாளையத்தின் குறுக்கே ஓடுகிற பவானி ஆற்றின் மேல் கட்டப்படுகிற இந்தப் பாலத்தின் வழியாகத்தான் நீலகிரியில் உள்ள மக்களுக்கு அரிசியிலிருந்து உப்பு வரை எடுத் துச் செல்லப்படுகிறது. இந்தப் பாலத்தின் வழியாகத்தான் உருளைக் கிழங்கு போன்ற பொருட்கள் வெளி மாநிலங்களுக்கு எடுத்துச் செல்லப்படுகிறது. ஆகவே இந்தப் பாலம் கட்டும் வேலையை துரிதப்படுத்த அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பாலத்தை சீக்கிரமாக கட்டி முடிப்பதற் காகத்தான் வேலைகள் துரிதமாக மேற்கொள்ளப்பெறுகின் றன. இன்னும் ஓராண்டு காலத்திற்குள் இந்தப் பால வேலை கட்டி முடிக்கப்பெற்று, பஸ் போக்குவரத்து மற்றும் பல வாகனங்கள் வந்துச் செல்லக் கூடிய வழி வகைகள் மேற்கொள்ளப் படும் என்று கூறிக்கொள்கிறேன்.

திரு ஜே. ஹேமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது போன்று ஏற்கெனவே கட்டப்பெற்ற பல பாலங்களில் போக்குவரத்துக்கு இடைஞ்சலாக உள்ளது. ஒரு பேருந்து போனால் இன்னொரு பேருந்து போக முடியாத அளவு குறுகலாக இருக்கின்றன. அப்படிப்பட்ட பாலங்களை

மீண்டும் எடுத்து பழுது பார்த்து, அகலப்படுத்துவதற்கு முக்கியத் துவம் கொடுத்து, பாலங்களை திருத்தி அமைக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, பாலங்கள் குறுகலாக கட்டப் பெற்றிருக்கிற காரணத் தினால்தான் இப்படி போக்குவரத்து இடைஞ்சல்கள் ஏற்படு கின்றன என்ற காரணத்தை உணர்ந்து பல பாலங்கள், அகலமாக திருத்தியமைக்க ஏற்றுக் கொள்ளப்பெற்று வேலைகள் மேற் கொள்ள ஆய்வுகள் நடைபெறுகின்றன. இன்னும் எங்கெங்கே அப்படி இருக்கின்றன என்பதைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் கள் தனியாக எடுத்துச் சொன்னால் நடவடிக்கை மேற்கொள்ளப் படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. டி. மணி : பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாகக் கட்டப்பட்டிருக்கும் பாலங்களில் சுங்கம் வசூலித்து வரும் நடவடிக்கையை இந்த அரசு வாபஸ் பெறுமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே இதுபற்றி தனிக் கேள்வி போடவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்னும் பாலமே கட்டி முடிக்கப்பெறவில்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்கெனவை சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பாலம் கட்டி முடித்த பிறகு சுங்கத்திற்கு வரலாம்.

திரு. கோவைத் தம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோயம்புத்தூர் மாவட்டத்தில் பொள்ளாச்சியில், குறிச்சிக்கும், ஈச்சனார் கோவிலுக்கும் இடையில் உள்ள இரயில்வே கேட்டின் மீது மேம்பாலம் கட்டும் திட்டம் ஏதேனும் அரசுக்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, இண்டஸ்டிரியல் எஸ்டேட் ஒன்றுக்கும், ஈச்சனார் கோவிலுக்கும் இடையே இருக்கக்கூடிய மத்திய பாகத்திலே சாலை போக்கு வரத்துக்கு இடைஞ்சல் இல்லாமல், அங்கே இரயில்வே கேட் இருக்கிற காரணத்தினால், அந்த இரயில்வே கேட்டுக்கு மேலாக மேம்பாலம் ஒன்று கட்டுவதற்கான பிரபோசல் ஒன்று இப்பொழுது தயாராகிக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூலக் கேள்வி பவானி ஆற்றின் குறுக்கே கட்டப்பெறும் பாலம் பற்றி. ஆனால், மாண்பு மிகு அமைச்சர் அவர்கள் ஏதோ அந்த இடங்களுக்குப் போய் வருகிற காரணத்தினால், திரு. கோவைத் தம்பியின், கோயம் புத்தூர் மாவட்டத்திலுள்ள பாலத்தைப் பற்றிய கேள்விக்கும் விடையளித்து விட்டார். இப்படியே எல்லாப் பாலங்களைப் பற்றியும் எல்லோரும் கேட்டுக் கொண்டிருந்தால், தமிழகத்தி லுள்ள அனைத்துப் பாலங்களைப் பற்றியும் வந்துவிடும். ஆகவால் மேட்டுப்பாளையம். பவானி ஆற்றின் குறுக்கே கட்டப் பெறும் பாலத்தைப்பற்றி ஏதாவது இருந்தால் கேளுங்கள்.

திரு. மு. அம்பிகாபதி : தலைவர் அவர்களே, பாலம் என்பது இணைப்பு சம்பந்தமானது. தலைவர் அவர்கள் இதிலே பார்ஷியாலிட்டி பார்க்கக்கூடாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதிலே பார்ஷியாலிட்டி என்பதே இல்லை. எல்லாக் கட்சிக்காரர்களும் கேட்டாகிவிட்டது. திரு. அம்பிகாபதி வேண்டுமானால் கேட்காமல் இருக்கலாம். அனைவரும் கேட்டாகிவிட்டது. இணைப்பு சம்பந்தமான இலக்கிய சர்ச்சைகள் எல்லாம் வெளியே இலக்கிய மன்றத்தில் வைத்துக் கொள்வோம். இப்போது இந்த மன்றத்தில் கேள்வி நேரத்தில் வேண்டாம். திரு. அம்பிகாபதி, ஏதாவது கேட்க வேண்டுமானால் கேட்டு விடுங்கள்.

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெள்ளைக்காரர்கள் காலத்தில் 200, 250 ஆண்டு களுக்கு முன்னால் கட்டப்பெற்ற பல பாலங்கள் குறுகலாக இருப் பதைப்பற்றித்தான் திரு. ஹேமச்சந்திரன் அவர்கள் கேட்டார் கள். தஞ்சையிலிருந்து வேதாரண்யம் செல்லும் வழியில் உள்ள பாலம், மன்னார்குடியிலிருந்து செல்லும் கீழப்பாலம், கோட்டூரில் உள்ள முள்ளியாற்றுப் பாலம் போன்றவைகளைப் பற்றியெல்லாம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள், திருத்தியமைக்க வேண்டி, அமைச்சருக்கு குறிப்பு அனுப்பியிருக்கிறார்கள். அதையும் கொஞ்சம் கவனத்தில் அரசு எடுத்துக் கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, அப்படி அனுப்பப்பெற்றிருந்தால் நிச்சயமாக கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பெறும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

---

குறிப்பு .—ஓர் உரையின் தொடக்கத்தில் ( * ) உடுக்குறியிடப் பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.

## 2. கவன ஈர்ப்பு.

### அ. சென்னை கொருக்குப்பேட்டையில் தீ விபத்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 54-வது விதியின் கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நிகழ்வினைக் குறித்து திருவாளர்கள் பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம், டி. மணி, என். வரதராஜன், கே. ஆர். சுந்தரம், மு. அம்பிகாபதி, பொ. விஜயராகவன், இ. முத்தையாலிங்கம், இரா. தாமரைக்கனி, டாக்டர் கே. ராமசாமி ஆகியோர், மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள். திரு. சொர்ணம்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சென்னை கொருக்குப் பேட்டையில் 2—7—1980 அன்று ஏற்பட்ட தீ விபத்தில் 300-க்கும் மேற்பட்ட குடிசைகள் நாச மடைந்தது குறித்து"

அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, 2—7—1980 அன்று இரவு 7-30 மணிக்கு சென்னை கொருக்குப் பேட்டையிலுள்ள ஜீவா நகர், பாரதி நகர் மற்றும் மீனாம்பாள் நகர் ஆகிய இடங்களில் எதிர்பாராது ஏற்பட்ட தீ விபத்தில் 333 குடியிருப்புகள் முழுவதும் சேத மடைந்தன. உயிர்ச்சேதமோ, கால்நடைச் சேதமோ இல்லை. மொத்த சேத மதிப்பீடு சுமார் ரூபாய் 1 இலட்சம். தீ விபத்திற்கான காரணம் இன்னமும் கண்டுபிடிக்கப்படவில்லை. பாதிக்கப் பட்ட குடும்பங்கள் அருகிலுள்ள மாநகராட்சிப் பள்ளிகளில் தங்கு வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு, சென்னை மாநகராட்சியினரால் உணவுப் பொட்டலங்களும் வழங்கப்பட்டன. பாதிக்கப்பட்ட 333 குடும்பங்களுக்கு தலா ரூ. 200 வீதம் நிவாரணத் தொகை வழங்கப்பட்டது. மேலும் ஒவ்வொரு குடும்பத்திற்கும் 5 கிலோ அரிசியும், ஒரு வேட்டியும், ஒரு புடவையும் வழங்கப்பட்டது.

முற்பகல் 9-10]

* திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம்: தலைவர் அவர்களே, உங்கள் மூலம் நான் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களிடம் ஒரு விளக்கத்தைக் கேட்டுப் பெற விரும்புகிறேன்.





கொருக்குப்பேட்டையில் மட்டும் அல்ல, தொடர்ந்து பல இடங் களில் இப்படி நடந்து கொண்டுவருகிறது. ஆகவே, குடிசைப் பகுதிகளின் பக்கத்தில் தீ அணைப்பு நிலையங்கள் அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தீ விபத்துக்கள், பரந்த தமிழ்நாட்டில் எங்கெங்கோ நடைபெறுகின்றன. எல்லாயிடங் களிலும் தீயணைப்பு நிலையங்கள் வைப்பதற்கு அந்த அளவிற்கு நம் வரவு—செலவுத் திட்டம் அனுமதிக்கவில்லை. ஆனால், கூடுமானவரையில் முக்கியமான நகரங்களில், முக்கியமான பகுதிகளிலெல்லாம் தீயணைப்பு நிலையங்கள் உள்ளன. மற்ற இடங்களில் ஏற்படுவதற்கு அரசு ஆவன செய்யும்.

திரு. டி. மணி: 2—7—1980-ல் ஏற்பட்ட தீ விபத்தில் நாசமடைந்த வீடுகளுக்கு புது வீடுகள் கட்ட உதவி எந்தளவில் செய்யப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: இதற்கு முன் னால் ரூ. 100 கொடுக்கப்பட்டு வந்தது. ஆனால், மறுமுறை இந்த அமைச்சரவை வந்த பிறகு 9—6—1980-க்குப் பின்னால் எங்கெங்கு தீ விபத்துக்கள் ஏற்படுகிறதோ எல்லோருக்கும் ரூ. 200 கொடுக்க உத்தரவிடப்பட்டிருக்கிறது. எல்லாம் நடந்து கொண்டிருக்கிறது.

திரு. மு. அம்பிகாபதி: இப்போது ஏறியிருக்கிற விலை வாசிக்கு இந்த ரூ. 200 என்பதைக் கொண்டு கீற்று போட முடியாது. ஆகவே, ரூ. 500-ஆவது கொடுப்பதற்கு அரசு முன் வருமா? ஏனென்றால், இப்போது கீற்று, மூங்கில் இவற்றின் விலைகள் எல்லாம் ஏறியிருக்கின்றன. ஆகவே, பாதி எரிந்தால் ரூ. 200, முழுவதும் எரிந்தால் ரூ. 500 என்று கொடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: 9—6—1980-க்கு முன்னால் ரூ. 100 கொடுக்கப்பட்டு வந்தது. ஆனால், இன்றைக்கு அதற்குப் பிறகு—ஏழாவது மாதம் நடந்துகொண்டிருக்கிறது—இப்போது ரூ. 200, அதாவது ஒன்றுக்கு இரண்டு 100 சதவீதம் ஏற்றியிருக்கிறோம். ஆனால், விலைவாசி 100 சதவீதம் ஏற வில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பொ. விஜயராகவன்: இது போன்ற தீ விபத்துக்கள் ஆங்காங்கு மாநிலம் முழுவதும் ஏற்பட்டுக் கொண்டு வருவதால் குடிசைகள் கட்டி இருக்கிற இடங்களில் தீப்பிடிக்காத வீடுகள் கட்டித்தர அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : இது பற்றிய ஆய்வு அரசின் கவனத்தில் இருக்கிறது.

திரு. இரா. தாமரைக்கனி : இந்த கவன ஈர்ப்பின் மீது நான் கேள்வி கேட்பதற்கு முன்னால் ஒன்று கேட்க விரும்புகிறேன். ஒரு உறுப்பினர் ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்கு மேல் கொடுக்கக்கூடாது என்றிருக்கிறது. திரு. விஜயராகவன் அவர்கள் இரண்டு கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்திருக்கிறார்கள். நாகர்கோவிலில் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் குறித்தும், கொருக்குப்பேட்டை தீ விபத்து குறித்தும் தீர்மானங்கள் கொடுத்திருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஈஸ்வரமூர்த்தியின் பெயரோடு அவர் பெயர் இணைக்கப் பெற்றிருக்கிறது. நீங்கள் உங்களது கேள்வியைக் கேளுங்கள்.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கொருக்குப்பேட்டையில் தீ பிடித்தவர்களுக்கு 200 ரூபாய் உதவித் தொகை கொடுக்கப்பட்டுள்ளது. இந்தத் தொகை அங்கே குடியிருப்பவர்களுக்கு கொடுக்கப்பட்டது. ஆனால், அங்கே குடியிருப்பவர்களுக்கு கிடைக்காமல், அது வீட்டு முதலாளிகளுக்குப் போய் சேர்ந்திருக்கிறது. கொத்தடிமை போன்று குடியிருப்பவர்கள் வாங்கியவுடன் அந்த ரூபாயை அப்படியே அந்த வீட்டு முதலாளிகள் வாங்கிக்கொண்டு விட்டார்கள். அதனால், இந்தத் தொகை குடிசைவாசிகளுக்கு கிடைக்கும்படியும், வீட்டு முதலாளிகளுக்கு லோன் என்ற முறையில் தனியே கொடுப்பதற்கும் வழி செய்ய இந்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, இம்மாதிரியான தவறுகள் அங்கே நடந்துவிடக் கூடாது என்பதற்காக அங்குள்ள எல்லோரையும் கூட்டிவைத்து ஒலிபெருக்கி வைத்து, அந்தப் பணம் யாருக்கு என்பது விளக்கமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இதைப் பல இடங்களில் அரசு அதிகாரிகள் சொல்லியிருக்கிறார்கள். எங்காவது தவறு நடந்திருந்தால் அதைக் கண்டுபிடித்து நீக்குவதற்கும் இந்த அரசு முயற்சி செய்யும்.

டாக்டர் கே. சமரசம் : பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற தீப்பிடிப்பு சம்பவங்கள் தொடர்ந்து அதிகரித்து வருகின்ற இந்தச் சூழ்நிலையில் இதைக் குறைப்பதற்கு வேறு என்ன காரணம் என்பதை ஆராய்ச்சி செய்ய அரசு முன்வருமா? இந்த சூழ்நிலையை மாற்றியமைக்க ஏதாவது நடவடிக்கைகளை மேற்கொள்ள இந்த அரசு முன்வருமா?



மாண்புமிகு திரு எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, தீப் பிடிக்காமல் இருக்க வேண்டும். அதற்கு வேண்டிய முயற்சிகள் எடுத்துக் கொள்ள வேண்டும். அதைக் குறைக்க வேண்டும் என்பதற்காகத்தான் அடிக்கடி ஒலிப்பெருக்கி மூலம் அங்குள்ள தாய்மார்களைப் பார்த்து, நீங்கள் அடிக்கடி உலையை வைத்துவிட்டு, கடைக்குச் சென்றுவிடுகிறீர்கள், அப்போது காற்றடித்து அந்த குடிசையும், பக்கத்து குடிசைகளும் 20, 100 என்று குடிசைகள் தீப்பிடித்து, லட்சக்கணக்கான ரூபாய்கள் பாழாகின்றது. நீங்கள் செய்யக்கூடிய இந்த சிறிய தவறினால் இப்படியெல்லாம் ஏற்படுகிறது என்பதை விளக்கிக் கொண்டிருக்கிறோம். மேலும் அவர்களை எஜுகேட் பண்ண வேண்டும் என்று வருவாய்த் துறை அதிகாரிகளைக் கேட்டுக் கொண்டிருக்கிறோம்.

(ஆ) நாகர்கோயிலில் நெசவுத் தொழிலாளர்கள் கூலி உயர்வு கேட்டு நடத்தும் போராட்டம்.

திரு மி. வின்சென்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, "கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோயிலில் கூலி உயர்வு கேட்டு ஆயிரக்கணக்கான நெசவுத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்வதால் அங்கு நிலவும் பதட்ட நிலை குறித்து" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, நாகர் கோவிலில் உள்ள 50 மாஸ்டர் வீவர்களின்கீழ் வேலை செய்யும் சுமார் 5,000 தொழிலாளர்கள் ஊதிய உயர்வு மற்றும் 1979–80-ம் ஆண்டுக்கு 25 சதவீத போனஸ் ஆகிய கோரிக்கைகளை வலியுறுத்தி 28–6–1980 முதல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர்.

நாகர்கோவில் நகர ஜவுளி உற்பத்தியாளர் சங்கம் மற்றும் [illegible]ரி மாவட்ட வேட்டி உற்பத்தியாளர்கள் சங்கம், நாகர்கோவில் ஆகிய சங்கங்கள் நிர்வாகத்தின் தரப்பில் பிரதிநிதிகளாக செயல்படுகின்றன. கைத்தறி நெசவுத் தொழிலாளர்கள் தொழிற் சங்கங்கள் ஐந்து தொழிலாளர்களின் பிரதிநிதிகளாகச் செயல்பட்டு வருகின்றன.

நாகர்கோவில் தொழிலாளர் துறை அலுவலர் முன் ஏற்கனவே நடந்த பேச்சு வார்த்தை பலனளிக்கவில்லை. ஆகையால் மேற்கொண்டு மதுரை தொழிலாளர் துறை துணை ஆணையர்

(திரு. எஸ். இராகவானந்தம்) [1980 ஜூலை 14

மற்றும் கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியாளர் முன்பு 8-7-1980 முதல் 10-7-1980 வரை சமரச பேச்சு வார்த்தைகள் நடைபெற்றன. பேச்சு வார்த்தைகளின்போது நிர்வாகத்தினர் 1-9-1980 முதல் 31-8-1982 முடிய உண்டான காலத்திற்கு 10 சதவீதமும் ஊதிய உயர்வும் மற்றும் 1-9-1982 முதல் 31-3-1983 வரை இதற்கு மேலும் 5 சதவீத ஊதிய உயர்வும் கொடுப்பதாக ஒப்புக்கொண்டனர். ஆனால் தொழிற்சங்கங்கள் ஊதிய உயர்வு ஒப்பந்த தேதியிலிருந்து கொடுக்கப்பட வேண்டுமென்று வற்புறுத்தினர். இதனை நிர்வாகத்தினர் ஏற்காததால் ஒப்பந்தம் எதுவும் இறுதியாக்க இயலவில்லை.

போனஸ் பிரச்சினையைப் பொறுத்த வரை 1979-80, 1980-81, 1981-82 ஆண்டுகளுக்கு 11 சதவீதம் கொடுப்பதற்கு ஒப்புக் கொள்ளப்பட்டது.

மீண்டும் பேச்சு வார்த்தை நாகர்கோவில் தொழிலாளர் துறை அலுவலர் முன்பு 16-7-1980 அன்று நடைபெற இருக்கிறது. இப்பேச்சுவார்த்தையில் முடிவு எதுவும் காணமுடியாவிட்டால் கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் இப்பிரச்சினையில் ஓர் உடன்பாட்டுக்கு வருவதற்கான வழி வகைகள் குறித்து மேற்கொண்டு பேச்சு நடத்த இருக்கிறார்.

வேலை நிறுத்தம் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. நிலைமை அமைதியாக உள்ளது.

திரு மி. வின்சென்ட் : பேரவைத் தலைவரவர்களே, கடந்த பிப்ரவரி மாதம் நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் பணிபுரியும் நெசவாளர்களுக்கு 11 சதவீத கூலி உயர்வு கொடுக்கப்பட்டிருக்கிறது. சொசைட்டிகளில் கூலி உயர்வு கொடுக்கும் போது கொள்ளை லாபம் அடிக்கும் தனி உரிமையாளர்கள் தொழிலாளர்களுக்கு ஏன் கூலி உயர்வு அளிக்கவில்லை.? நாளொன்றுக்கு 1,000 ரூபாய் கூலி கொடுத்தால் 2,000 ரூபாய் குறைந்த பட்சம் லாபம் உரிமையாளர்களுக்கு கிடைக்கிறது. இன்றையதினம் 20 நாட்களாக எனக்கு வாக்களித்த ஏழை நெசவாளர்கள் பசியாலும், பட்டினியாலும் வாடிக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் வயிறு பற்றி எரிகிறது. அக்கினித் தேவன் அவர்கள் வயிற்றை வாட்டுகிறான். எனவே இந்த அரசு இந்த தனி உரிமையாளர்கள் அதிக கூலி உயர்வு கொடுக்க என்ன முயற்சிகளை செய்யும்? அமைச்சர் அவர்கள் நேரடியாக இதிலே தலையிட்டு இதனை முடித்து வைக்க முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, பேச்சுவார்த்தை நடந்து கூலி உயர்வு ஓரளவு கொடுத்து, இரு சாராரும் ஏற்றுக் கொள்கின்ற நிலை வந்துள்ளது.



1980 ஜூலை 14] (திரு. எஸ். இராகவானந்தம்)

ஆனால், இன்றையதினம் எந்தத் தேதியிலிருந்து இந்த கூலி உயர்வு கொடுப்பது என்ற தகராறு காரணமாகத்தான், இன்னும் இதிலே ஒப்பந்தம் ஏற்படவில்லை. நாளை மறுநாள் 16 ஆம் தேதி தொழிலாளர் துறையைச் சேர்ந்த நாகர்கோவில் அதிகாரி பேசுவதற்கு இருக்கிறார்கள். அதிலே ஒரு ஒப்பந்தம் ஏற்படவில்லை என்றால் மாவட்ட ஆட்சியாளர் பேசுவதாக இருக்கிறார்கள். அதற்குள்ளாக ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டுவிடுமென்று நாம் எதிர்பார்ப்போம். இதையும் மீறி ஒப்பந்தம் ஏற்படவில்லை என்றால், மாண்புமிகு உறுப்பினர் சொன்ன ஆலோசனை கருத்தில் கொள்ளப்படும்.

திரு. மி. வின்சென்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட ஆட்சியாளர் முன் பேச்சு வார்த்தை ஏற்பட்டு, உடன்பாடு ஏற்பட்டு இதற்கு முன் இவ்வாறு செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் இந்த உடன்பாட்டில் உற்பத்தியாளர்கள் கையெழுத்திட மறுத்துவிடுகிறார்கள். வாக்கினாலே இவ்வாறு உடன்பாட்டை அவர்கள் செய்வதால்தான், இத்தகைய சிக்கல்கள் ஆண்டு தோறும் வந்து கொண்டிருக்கிறது. அதனால் உற்பத்தியாளர்களோடு உடன்பாடு செய்கின்ற நேரத்தில் அதிலே கையெழுத்திட வேண்டுமென்ற ஏற்பாட்டைச் செய்ய இந்த அரசு முன்வருமா?

[முற்பகல் 9-20]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவரவர்களே, கையெழுத்துப் போட்டு ஒரு ஒப்பந்தம் ஏற்படுத்துவதற்கு நாகர்கோவில் தொழிலாளர் துறை அலுவலர் அழைத்திருக்கிறார். கலெக்டர் முன்னால் ஒப்பந்தம் ஏற்பட்டாலும் தொழிற் துறை சட்டத்தின் கீழ் ஒப்பந்தம் செய்வதற்கு ஏற்பாடு செய்வார்கள் என நான் எதிர் பார்க்கிறேன்.

*திரு. ஜெ. ஹேமச்சந்திரன் : நாகர்கோவிலில் உள்ள நெசவு முதலாளிகள் தொழிற் தகராறு சட்டம், கூலிச் சட்டம், போன்ற சட்டங்கள் தங்களுக்குப் பொருந்தாது என்று சொல்லி, லேபர் ஆபீசர் முன்னிலையில் பேச்சு வார்த்தைக்கு வராமல் இருந்ததன் காரணமாக அந்தப் போராட்டம் நீண்டு செல்லக் காரணமாக இருந்தது. வருஷா வருஷம் இப்படிப்பட்ட போராட்டங்கள் கைத்தறி-நெசவுத் தொழிலாளர்களால் மதுரை, நாகர்கோவில் மற்றும் தமிழகத்தின் பல பகுதிகளில் நடந்து வருகின்றன. ஆகவே, இந்த முதலாளிகளைக் கட்டுப்படுத்தும் வகையில் தொழிலாளர்களுடைய கூலி, போனஸ் போன்றவற்றைச் சரிவர கொடுக்கும் வகையில் தகுந்த சட்டம் இயற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: கைத்தறி–நெசவுத் தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதற்கான சட்ட முன்வடிவு இங்கே அறிமுகம் செய்யப்பட்டு கூட்டாய்வுக் குழு பரிசீலனை செய்து தமிழகம் முழுவதும் சுற்றுப்பயணம் செய்து அதற்கு வடிவம் கொடுப்பதற்கு முன்னால் அரசு கலைக்கப்பட்டதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள். விரைவில் அந்தச் சட்ட முன் வடிவை மீண்டும் அறிமுகப்படுத்தி வேண்டிய திருத்தங்களோடு எல்லா முயற்சிகளையும் இந்த அரசு எடுக்கும்.

திரு டி. ரமணி: தலைவர் அவர்களே, கடந்த ஆண்டில் இதுபோன்ற நாகர்கோவில் வட்டாரத்தில் ஒரு வேலை நிறுத்தம் ஏற்பட்டு பேச்சு வார்த்தையும் நடைபெற்றது. அந்தப் பேச்சு வார்த்தையில் கலந்து கொண்டு முதலாளிகள் இந்தப் பிரச்சினையை சுமுகமாகத் தீர்த்துக் கொள்ளலாம் என்று வாக்குறுதி கொடுத்தார்கள். அந்த வாக்குறுதி காப்பாற்றப்படாததன் காரணமாகத்தான் இப்போது மீண்டும் வேலை நிறுத்தம் ஏற்பட்டது. சம்பளம், போனஸ் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ளும் வகையில் லேபர் இலாகாவும் உயர்மட்ட அதிகாரிகளும் பேச முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: போனஸ் பொறுத்தவரை 1979–80, 1980–81, 1981–82 ஆண்டுகளில் 11 சதவிகிதம் என்று ஏற்பாடாகியிருக்கிறது. முதலாளிகள் தங்கள் வார்த்தைக்குக் கட்டுப்படாமல் இருப்பது காபிடலிஸ்ட் சொசைட்டிக்குள்ள குணம். இதைக் களைய சோஷலிஷ சித்தாந்தம் உள்ள அரசைக் கொண்டு வருகிறோம். இப்போதும் அப்படிப்பட்ட அரசு வந்திருக்கும் காரணத்தால் அந்தத் துறையில் தீவிரமாகப் பணியாற்றும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

## 3. தகவல் கோரல்.

### ஒத்திவைப்புத் தீர்மான அறிவிப்புகள்.

திரு. ப. பொன்னுரங்கம்: தலைவர் அவர்களே, 55-வது விதியின்படி செங்கற்பட்டில் டெபுடி தாசில்தார் மகன் கொலை செய்யப்பட்டது பற்றி ஒரு. தீர்மானம் கொடுத்திருக்கிறேன்..

திரு. பொ. உத்திராபதி: நான் 55-வது விதியின்படி செங்கற்பட்டில் அரிசனங்களுக்கு ஏற்பட்ட கொடுமைகள் பற்றி ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன். ......



மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டிய பிரச்சினைகள் நிறைய இருக்கின்றன. இன்றைக்கு அவை முன்னவர் இல்லை. நாளையிலிருந்து ஒத்திவைப்புத் தீர்மானங்கள் வரிசையாக எடுத்துக் கொள்ளப் பெறும்.

திரு. மு. அம்பிகாபதி: தலைவர் அவர்களே, மன்னார்குடி தாலுக்காவிலேயும், பட்டுக்கோட்டை தாலுக்காவிலேயும் விவசாயிகளுக்குத் தண்ணீர் வரவில்லை என்று கொடுத்திருக்கிறேன். நீர்ப்பாசனம் சம்பந்தப்பட்ட மானியத்தின்போது பேசலாம் என்றால் அய்யார் எப்போது வருவது அதுவரையிலே அம்மாவாசை காத்திருக்குமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது போன்று உறுப்பினர்கள் கொடுத்துள்ள முக்கியமான முன்னறிவிப்புகள் குறித்தெல்லாம் அவர்கள் முன் கூட்டியே பேரவைத் தலைவரை அவரது அறையிலே சந்தித்துக் கேட்க வேண்டும். பேரவையில் கேட்கக் கூடாது. அடுத்து அரசினர் சட்ட முன் வடிவுகள்.

## 4. அரசினர் சட்ட முன் வடிவு

### நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்சவரம்பு கட்டுதல்) இரண்டாவது திருத்த சட்ட முன்வடிவு 1980.

மாண்புமிகு திரு எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, தமிழ்நாடு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்ச வரம்பு கட்டுதல்) இரண்டாவது திருத்தச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: மிஸ்டர் ஸ்பீக்கர் சார், அமைச்சர் அவர்கள் அறிமுகப்படுத்துகிற இந்தச் சட்ட முன் வடிவை அறிமுகம் செய்கிற இந்த நேரத்திலேயே நான் எதிர்க்கிறேன். எதிர்ப்பதற்கான காரணங்களைச் சொல்ல விரும்புகிறேன். எங்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள இந்தச் சட்ட முன்வடிவிலே சொல்லியிருக்கிறார்கள், 1958 சனவரி முதல் நாளன்றும் அல்லது அந்நாளைக்குப் பிறகும், 1960 ஏப்ரல் 6ஆம் தேதிக்கு முன்பும் செய்யப்பட்டிருக்கிற சில மாற்றங்கள் செல்திறனற்றவையாகும் என்று. கிட்டத்தட்ட 20, 22 ஆண்டுகளுக்கும் பிறகு 1958 ஆம் ஆண்டு சனவரி முதல் நாளிலிருந்து 1960 ஏப்ரல் 6 ஆம் தேதிக்கும் இடையே ஏற்பட்ட டிரான்ஸ்பர்கள், அது கிப்டாக இருந்தாலும் சரி, வேறு டிரான்ஸ்பராக இருந்தாலும் சரி அவையாவும் செல்திறனற்றவையாகும் என்று இந்த மன்றத்திலே ஒரு சட்டத்தைக் கொண்டு வர வேண்டிய அவசியமில்லை என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.

[திரு. வி. கிருஷ்ணமூர்த்தி] [1980 ஜூலை 14

[பிற்பகல் 9 30]

ஏற்கனவே உள்ள சட்டத்திலேயே பாதுகாப்பு இருக்கிறது.
சீலிங் சட்டத்தை ஏமாற்றி நில மாறுதல் செய்திருந்தால் அதை
ரத்து செய்வதற்கு ஆதரைஸ்ட் ஆபீசருக்கு ஏற்கனவே உள்ள
சட்டத்திலேயே தகுந்த பாதுகாப்பு இருக்கிறது. அப்படி இருக்
கின்ற சந்தர்ப்பத்தில், ஒருவன் 1959-லேயோ அல்லது 1960-
லேயோ நிலத்தை வாங்கியிருந்தாலும் இருபதாண்டுகள் கழிந்து
அந்த நிலத்தை விற்றவன் சீலிங் சட்டத்தில் சொல்லப்பட்டிருப்
பதை விட அதிகமாக நிலத்தை வைத்திருக்கிறான் என்பதற்காக
அந்த நிலத்தை வாங்கியது செல்லாது என்று சொல்லி, அவனை
நடுத்தெருவில் விட்டுவிடும் இப்படிப்பட்ட சட்டம் நல்லது அல்ல.
ஆறு மாதங்களுக்கு முன்பு கேரளாவிலே கூட இப்படிப்பட்ட
பிரச்னை வந்தது. 1965-லேயிருந்து வைத்துக் கொள்ளலாமா,
1970-லேயிருந்து வைத்துக் கொள்ளலாமா என்பது போன்ற
பிரச்னை வந்தது.

இந்தச் சட்டத்தைக் கொண்டு வருவதன் மூலம் உபரி நிலம்
எத்தனை இலட்சம் ஏக்கர் கிடைக்கும் என்று எதிர் பார்க்கிறீர்
கள்? இதனால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஏதாவது பாதுகாப்பு
இருக்கிறதா? ஒருவன் 1958 ஆம் ஆண்டு மிராசுதாரரிட
மிருந்து ஒரு ஏக்கர் நிலத்தை கிரயத்திற்கு வாங்கியிருக்கின்றான்
என்றால், இருபதாண்டு காலமாக, அதில் பயிரிட்டு அனுபவித்துக்
கொண்டிருக்கிறான் என்றால், அவனுக்கு அனுபோக உரிமை
வந்து விடுகிறது. அதை இந்தச் சட்டத்தால் ரத்து செய்ய
முயற்சிப்பது சரியல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.
14 வருஷங்கள் ஒரு நிலத்தை அனுபவித்துவிட்டால் அனுபோக
பாத்தியம் வந்துவிடுகிறது. Adverse possession இருந்தாலும்
Prescriptive right வந்து விடுகிறது. அப்படி இருக்கின்ற பொழுது,
20 வருஷம், 21 வருஷம், 22 வருஷம் அந்த நிலத்தில் பயிர்
செய்தும் விவசாயம் செய்யக் கூடியவன், அந்த நிலத்தை
கிரயத்திற்கு வாங்கியிருந்தாலும், அது செல்லாது என்று சொல்வது
விவசாயிகளுக்குப் பாதகத்தை உண்டாக்கும்; நிலத்தைப்
பயிரிடுகின்றவர்களுக்குப் பல தொல்லைகளை உண்டாக்கும்
என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதனால் உபரி நிலம் கிடைக்கப்போவதில்லை. தொல்லை
தான் உண்டாகும். எல்லா ஆதரைஸ்ட் ஆபீசர்களும், 1958 ஆம்
ஆண்டுக்கு முன் நிலம் வைத்திருந்தவர்கள் யார், யார் என்று
நோட்டீஸ் அனுப்பி, இதனால் விவசாயிகளுக்கும் அதிகாரிகளுக்கு
மிடையே மோதல் ஏற்படும் சூழ்நிலை உண்டாக்கி, லஞ்ச லாவண்
யம், ஊழல் ஆகியவை ஏற்படுவதற்குச் சாத்தியமானதாகத்தான்
இது இருக்கமுடியும்.



1980 ஜூலை 14] [திரு. வி. கிருஷ்ணமூர்த்தி]

பினாமி நிலங்களைக் கண்டுபிடிக்கும் பொறுப்பு அரசாங்
கத்திற்கு இருக்கிறது. எந்தெந்தக் கிராமங்களில், யார்
யாரிடம் பினாமி நிலம் இருக்கிறது என்று கணக்குப் பிள்ளையை
வைத்துக் கொண்டு எடுக்கலாமே தவிர, இதற்கு ரெட்ராஸ்
பெக்டிவ் எஃபெக்ட் கொடுத்து, 1958 ஆம் ஆண்டிலே வாங்கியது
இன்றைய தினம் செல்லாது என்று கொண்டு வருவது தவறு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதைப் பற்றிய விவாதம்
வரும் பொழுது நிறையப் பேசலாம்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : நான் அதற்கான காரணங்
களைச் சொல்கிறேன். இன்னும் ஒரு நிமிடத்தில் முடித்து
விடுகிறேன். சபையின் நேரத்தை அதிகமாக எடுத்துக் கொள்
வதற்கு நான் எப்பொழுதும் விரும்புவது இல்லை; இப்பொழுதும்
விரும்பவில்லை.

1-7-79-க்கு முன், இந்த வாங்கியவன் இருக்கிறானே அவன்
இன்னொருவனுக்குக் கிரயம் செய்து விட்டால் அப்பொழுது
பாதிக்காது. 1-7-79 என்ன அவ்வளவு புனிதமான நாள்.
நீங்கள் சொல்லி விட்டீர்களா, 1-7-79-க்கு முன் நீங்கள் விற்று
விடுங்கள் என்று சொல்லி விட்டீர்களா? 1-7-79-க்கு முன்
என்பதை, 1958 ஜனவரிக்குப் பின் என்று மாற்றுங்களேன்.
எனவே, வாங்கியவன் திரும்ப மாற்றியிருந்தால் பாதிக்காது
என்று சொல்வது, அரசியல் நோக்கத்தோடு கொண்டு வரப்
பட்டது என்று சொல்ல விரும்புகிறேன்; எனவே நான் இதை
எதிர்க்கிறேன்.

நில உச்சவரம்புச் சட்டத்தின்கீழ் அதிக நிலத்தைக் கைப்
பற்றுவதைப் பற்றி எனக்கு ஆட்சேபணை இல்லை. அதைக்
கைப் பற்றி ஏழைகளுக்குக் கொடுக்க வேண்டுமென்றுதான்
திராவிட முன்னேற்றக் கழகமும் விரும்புகிறது. ஆனால், இது
அரசியல் நோக்கத்தோடு 20 வருஷம், 22 வருஷமாக வைத்
திருந்த எஸ்டாபிலிஸ்ட் அனுபவத்தை ரத்து செய்யும் முறையில்
இருப்பதால் இதை அறிமுகம் செய்யும் நிலையிலேயே நான்
இப்பொழுதே எதிர்க்கிறேன்.

திரு. கு. ரமணி : Mr. Speaker, Sir, I want a clarification
on procedure.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த பில்லை முடித்து
விட்ட பிறகு கேட்கலாம்.

DII A 154—3

<u>திரு. கு. ரமணி :</u> ஒரு சட்ட முன் வடிவை whether by a private member, Minister or anybody from the ruling side.

அறிமுகம் செய்யப் பெறுகிற நிலையிலேயே அதை எதிர்ப்பதற்கு உறுப்பினர்களுக்கு உரிமை உண்டா இல்லையா? அதைத் தடுக்க முடியுமா? இதுதான் என்னுடைய கேள்வியாகும். Is it not my right to oppose it?

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> அது பற்றிய விதியை நான் படித்து விடுகிறேன்.

''விதி 124 (1)—ஒரு சட்ட முன் வடிவை அறிமுகப்படுத்த அனுமதி கோரும் தீர்மானம் எதிர்க்கப் பெற்றால் பேரவைத் தலைவர், தாம் தேவையெனக் கருதினால் அத் தீர்மானத்தை மொழியும் உறுப்பினரையும், எதிர்க்கும் உறுப்பினரையும், அவரவர்களது கருத்தைச் சுருக்கமாகக் கூற அனுமதித்த பிறகு மேற்கொண்டு எவ்வித விவாதமும் இன்றி, பேரவையின் முடிவிற்கு அதை விட வேண்டும்.'' நாடாளுமன்றத்திலும் சில முக்கியமான 'பில்' களை எதிர்ப்பது உண்டு. எதிர்க்கும்போது சில முக்கியமான காரணங்களைச் சொல்வார்கள். அதற்கான விளக்கங்களை, சபையில் 'பில்' விவாதத்திற்கு வரும் பொழுதுதான் சொல்வார்கள். இப்பொழுது எதிர்ப்பை மட்டும் தான் தெரிவிக்கலாம். திரு. கிருஷ்ணமூர்த்தி தெரிவிக்கிறார். தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற இருக்கிறது. முடிவு அவைக்குத் தெரிவிக்கப் பெறும் (குறுக்கீடு).

''மேற் கொண்டு எவ்வித விவாதமும் இன்றி பேரவையின் முடிவிற்கு அதை விட வேண்டும்.'' என்றுதான் விதி இருக்கிறது.

<u>திரு. கு. ரமணி :</u> நான் கேட்கிற விஷயம், The very introduction should be opposed. அவர் இன்ட்ரடியூஸ் பண்ணிய பிறகு th matter is over.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> மாண்புமிகு அமைச்சர் அறிமுகம் செய்ய அனுமதி கோரி இருக்கிறார். அதை, திரு. கிருஷ்ணமூர்த்தி எதிர்க்கிறார், பேரவையின் முடிவிற்கு அந்தத் தீர்மானம் விடப் பெற வேண்டும். பேரவை அனுமதி கொடுத்த பிறகே அமைச்சர் அறிமுகம் செய்வார்.



<u>மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :</u> அதாவது சட்ட முன் வடிவை அறிமுகம் செய்ய முதலில் அனுமதி கோரவேண்டும். இப்பொழுது அந்தக் கட்டம் நடக்கிறது. He new seeks permission to introduce the Bill. At that stage the Opposition has a right to air its views.

<u>திரு. கு. ரமணி :</u> அந்த 'பில்' லை இன்ட்ரடியூஸ் பண்ண அமைச்சர் அனுமதி கோரியபோது, பேரவைத் தலைவர் அனுமதி கொடுத்தீர்களா, இல்லையா?

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> மாண்புமிகு உறுப்பினர் நாடாளுமன்றத்திலே உறுப்பினராக இருந்திருக்கிறார். அவருக்குத் தெரியும். இது சகஜமாக நடைபெறுவதுதான். அமைச்சரின் தீர்மானம் இப்பொழுதுதான் பேரவையின முடிவிற்கு விடப் பெறுகிறது.

பேரவை முன்னுள்ள கேள்வி :

''தமிழ்நாடு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்ச வரம்பு கட்டுதல்) இரண்டாவது திருத்தச் சட்ட முன் வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

<u>மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :</u> இச்சட்ட முன் வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> இச்சட்ட முன் வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது. (திரு. கு. ரமணி குறுக்கீடு) இப்பொழுது விளக்கமே இல்லை. அறிமுகம் செய்ய அமைச்சர் அனுமதி கேட்டார். ஒரு உறுப்பினர் எதிர்த்துப் பேசினார். வாக்கெடுப்புக்கு விடப்பட்டு, அனுமதி வழங்கப் பெற்றது. சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது. அதற்குப் பிறகு ஏதாவது பேச வேண்டுமென்றால், 'பில்' லை ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளும்போது பேசலாம்.

<u>மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :</u> மாண்புமிகு உறுப்பினர் திரு. கிருஷ்ணமூர்த்தி சொன்னதற்குப் பிறகு அமைச்சர் ஏதாவது பதில் சொல்கிறாரா என்று பேரவைத் தலைவருக்குக் கேட்கிற உரிமை இருக்கிறது. ஆனால், இப்பொழுது அவைத் தலைவர் அவ்வாறு கேட்கவில்லை. ஆகவே நான் பதில்

சொல்லவில்லை. ஆனால், இனிமேல், அப்படிப்பட்ட நிலை வரும் போது பதில் சொல்ல அமைச்சருக்கு வாய்ப்பு தர வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தக் கட்டம் சட்ட அறிமுகம் தான். எதிர்ப்பைத் தெரிவித்ததற்கு, பதில் அளிக்க, விளக்கம் அளிக்க இப்பொழுது வாய்ப்பில்லை.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : இப்படிப்பட்ட சட்ட முன்வடிவுகளை ஆரம்பக் கட்டத்திலே எதிர்ப்பது என்பது இங்கும் நடந்திருக்கிறது. நாடாளுமன்றத்திலும் நடந்திருக் கிறது. அமைச்சர்கள் சட்ட முன் வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கேட்பார்கள். அவையிலே அதற்கு எதிர்ப்பு தெரி விக்கப்படுவது உண்டு. அதற்கு ஏதாவது பதில் சொல்கிறீர் களா என்று அமைச்சரைப் பார்த்து பேரவைத் தலைவர் கேட் பார். இப்பொழுது நீங்கள் கேட்கவில்லை. அந்த வாய்ப்பை நீங்கள் எடுத்து விட்டீர்கள் என்று தான் சொல்கிறேன்.

திரு. மு. அம்பிகாபதி : தலைவர் அவர்களே, . . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சருக்கும் சேர்ந்து விளக்கம் சொல்ல வேண்டியிருக்கிறது. எப்போதுமே எதிர்ப்புத் தெரிவிப்பது என்பது ஒரு சம்பிரதாயத்தின் பேரிலே நடை பெறுகிறது. இந்தக் கட்டத்தில் முழு விவாதமும் தேவையில்லை. பிறகு ஒரு நாள் பூராவும் விவாதம் நடை பெறப் போகிறது. அப்பொழுது நீங்கள் பேசிக் கொள்ளலாம். இப்பொழுது, அந்த விவாதத்தை எடுத்துக் கொண்டால், எல்லோரும் கலந்து கொள் வார்கள். அதனால், மற்ற அலுவல்களைக் கவனிக்க நேர மிருக்காது.

(முற்பகல் 9–40.)

## 5. வரவு-செலவுத் திட்டம் 1980–81 வாக்கெடுப்பு—(தொடர்ச்சி)

(அ) கோரிக்கை எண் 13—நீதி நிர்வாகம்.

(ஆ) கோரிக்கை எண் 14—சிறைச்சாலைகள்.

(இ) கோரிக்கை எண் 23—கூட்டுறவு.



மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, 1980–81 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்டம் மானியக் கோரிக்கை கள் மீது விவாதமும், வாக்கெடுப்பும். மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் .

### கோரிக்கை எண் 13.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, ஆளுநரின் பரிந்துரையின் பேரில் நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

" மானியக் கோரிக்கை எண் 13—நீதி நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 6,93,29,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

திரு. க. பாலன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, ஏரான மான வழக்குகள் பல ஆண்டுகளாக தீர்ப்பளிக்காமல் தேங்கிக் கிடப்பதால் ஏழை எளிய மக்கள் பெரிதும் பாதிக்கப்படுவது குறித்து விவாதிக்க—நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

" மானியக் கோரிக்கை எண். 13—நீதி நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 6,93,29,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

திரு. இல. பலராமன் : தலைவர் அவர்களே, போளூர் நகரத்தில் முன்சீப் கோர்ட் ஏற்படுத்தவேண்டிய அவசியம் பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகி றேன்.

" மானியக் கோரிக்கை எண். 13—நீதி நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 6,93,29,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : தலைவர் அவர்களே, மதுரையில் உயர்நீதி மன்ற பெஞ்ச் ஒன்று தென் மாவட்டங்களுக்காக திறக்காதது பற்றி விவாதிக்க, நான் கீழ்க் கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

" மானியக் கோரிக்கை எண் 13—நீதி நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 6,93,29,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

திரு. உ. சுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, தண்ணீர் இல்லாத கிணறுகள் வெட்டியவர்களுக்கு முழுத் தொகையையும் தள்ளுபடி செய்வது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

"மானியக் கோரிக்கை எண். 23—கூட்டுறவு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 8,86,98,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

திரு. டி. சுந்தரமூர்த்தி என்கிற சொரணம் : தலைவர் அவர்களே, கூட்டுறவு சங்கங்கள் அனைத்துக்கும் உடனடியாகத் தேர்தல் நடத்தாதது பற்றி விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

"மானியக் கோரிக்கை எண். 23—கூட்டுறவு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 8,86,98,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

திரு. பொ. உத்திராபதி : தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறையில் பணிபுரியும் ஊழியர்களை அரசு ஊழியர்களாக ஆக்குவது பற்றி விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

"மானியக் கோரிக்கை எண். 23—கூட்டுறவு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 8,86,98,000-ல் ரூபாய் 100 குறைக்க வேண்டும்."

திரு. பொ. விஜயராகவன் : தலைவர் அவர்களே, கூட்டுறவு நிறுவனங்களுக்கு ஜனநாயக முறையில் நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட தேர்தல் வைக்காதது குறித்து விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

"மானியக் கோரிக்கை எண். 23—கூட்டுறவு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 8,86,98,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் விவாதத்திற்கு வைக்கப்பெறுகின்றன.

மாண்புமிகு அமைச்சர் ஏதாவது சொல்வதாக இருந்தால் சொல்லலாம்.



மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் முன்மொழிந்து இருக்கின்ற 3 மானியக் கோரிக்கைகளின் பேரில் அரசின் கொள்கைகள் புத்தகமாக அச்சடித்து அவை உறுப்பினர்களுக்கு தரப்பட்டிருக்கிறது. அவற்றை நான் படித்ததாக அவைக் குறிப்பில் * ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்களின் அரிய ஆலோசனைகளையும், கருத்துக்களையும் கேட்டு பின் என்னுடைய பதிலை நான் அவைக்குத் தருகிறேன்.

* திரு. கு. பா. பழனியப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பேரவையில் முதன்முதலாகப் பேசுகின்ற வாய்ப்பை ஏற்படுத்தித் தந்த விழுப்புரம் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும், என்னுடைய கழகத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், பொதுச் செயலாளர் பேராசிரியர் அவர்களுக்கும் முதற்கண் என் பணிவான வணக்கத்தைத் தெரிவித்து, இந்த அவை முன்னுள்ள மானியக் கோரிக்கைகளின் மீது என்னுடைய கழகத்தின் கருத்துக்களைக் கூற முன் வருகிறேன்.

முதலாவதாக, நீதி நிர்வாகம் என்ற மானியத்தின் மீது நான் கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். நீதி-நிர்வாகத்திற்கு அடிப்படையாக இருக்கும்—மாவட்டங்களிலும், மாநிலத் தலைநகரத்திலும் உள்ள—மாஜிஸ்டிரேட் என்ற பொறுப்பில் இருப்பவர்களும், முன்சீப் என்ற பொறுப்பில் இருப்பவர்களும் நீதி மன்றங்களில் நடுவர்களாகப் பணியாற்றி வந்தபோதிலும், அவர்களுடைய நிலை மிகவும் அனுதாபத்திற்குரியதாக காட்சி தருகிறது. அவர்களை மற்ற மாநிலங்களில் உள்ள மாஜிஸ்டிரேட் முன்சீப்களோடு ஒப்பிட்டுப் பார்க்கிறபோது மிகவும் பரிதாபத்திற்குரியதாக இருக்கிறது என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

குறிப்பாகச் சொல்லப்போனால், நீதி மன்றத்தின் நடுவர்களாக பதவி வகிக்கின்ற அவர்கள் ஒரு சிறப்பான தகுதியில் இருக்கும் நிலையில் இருக்கிறார்கள். மற்ற வேலைக்கும், இந்த வேலைக்கும் மிகுந்த வேறுபாடு இருக்கிறது. இந்த மன்றத்தில் பலர் வழக்கறிஞர்களாக இருந்து பணியாற்றியவர்கள் இருக்கிறார்கள். அவர்களுடைய சிறப்பான பணியைப் பற்றி அறிந்து இருப்பார்கள். அவர்கள் செய்கிற பணிக்கு ஏற்றாற்போல் ஊதிய விகிதங்கள் இல்லையென்பதை இந்த மாமன்றத்தில் எடுத்து வைக்க நான் கடமைப்பட்டு இருக்கிறேன். உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமானால் தமிழ் நாட்டில் முன்சீப்களுக்கு அடிப்படை சம்பளம் ரூ. 750 என்று சொன்னால், மற்ற மாநிலங்

*915-1010-ம் பக்கங்களில் இணைப்பு I, II, III ஆக அச்சிடப் பெற்றுள்ளன.

பல ஊர்களில் இன்றைக்கு போதுமான கட்டிட வசதி இல்லை. குறிப்பாகச் சொல்லப்போனால் விழுப்புரத்தில் அடிஷனல் ஜுடி. ஷியல் செக்கண்ட் கிளாஸ் மாஜிஸ்டிரேட் கோர்ட் இருக்கிறது. அங்கே எந்தவிதமான வசதியும் இல்லை. கழிப்பிட வசதிகூட இல்லை. அந்த மாஜிஸ்டிரேட் காலையிலிருந்து மாலை வரையில் அங்கே இருக்கிறார். கழிப்பிட வசதி இல்லாததால் அருகிலே யுள்ள சப்ஜெயிலிலிருந்து வரும் துர்நாற்றத்தைப் போக்க அவரு டைய அறையில் அவர் வாங்கக்கூடிய சம்பளத்தில் பாதி செல வழித்து ஊதுவத்தி வாங்கி கொளுத்தி வைக்கிறார். இப்படிப் பட்ட நிலைமைகளை உடனடியாகப் போக்க வேண்டும்.

பல ஊர்களில் வழக்கறிஞர்களுக்கு பார் வசதி, லைப்ரரி வசதி இல்லை. அதைப்போல வழக்காட வரும் பொதுமக்கள் தங்கி செல்வதற்கும் வசதி இல்லை. இப்படிப்பட்ட சீர்கேடுகளை அரசு சீர்திருத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், நீதிமன்றங்களில் உட்காருவதற்கு நாற்காலிகள் கிடையாது; ஒன்றிரண்டு பெஞ்சுதான் இருக்கின்றன. அதனால் நாங்கள் விளையாட்டாகச் சொல்வோம், We have been elevated to the Bench என்று வேடிக்கையாகச் சொல்வோம். அந்த அளவுக்கு பல ஊர்களில் இருக்கிறது. இதை மாற்றி யமைக்க ஒரு திட்டத்தைக் கூட சொல்லலாம் என்று நினைக் கிறேன். இன்றைக்கு நீதிமன்றங்களில் இருக்கவேண்டிய பணம் எல்லாம் அரசாங்க கஜானாவில் இருக்கிறது. அந்த பணத் திற்கு வட்டிகூட கிடையாது. அப்படி கஜானாவில் இருக்கக் கூடிய கோர்ட் பணத்திற்கு ஒரு குறைந்த வட்டி என்று நிர்ண யித்துக்கொண்டால்கூட அந்தப் பணத்திலிருந்து பார் வசதி, லைப்ரரி வசதி இன்னும் மற்ற பல வசதிகளை செய்து கொள்ள வாய்ப்பு இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, இன்றைக்கு மாஜிஸ்டிரேட், முன்சீப் பதவிகளை இன்டகிரேட், "காமன் காடர்" ஆகச் செய்ய வாய்ப்பு இருப்பதாக இந்த அறிக்கையிலே பார்த்து தெரிந்து கொண்டேன். அதை உடனடியாகச் செய்ய வேண்டும்.

நீதிமன்றங்களிலே வேலை பார்க்கும் அசிஸ்டன்ட் பப்ளிக் ப்ராசிகியூட்டருக்கு பப்ளிக் ப்ராசிகியூட்டராக ப்ரமோஷன் கொடுக்கும் வாய்ப்பு இருந்தது. அந்த முறை சரியாக இல்லை. அதை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன். அதற்கு பல்வேறு காரணங்கள் உண்டு. இன்றைக்கு ஆயிரக்கணக்கான, பல்லாயிரக்கணக்கான வழக்கறிஞர்கள் இருந்தபோதிலும் தகுதி படைத்தவர்களுக்கு பப்ளிக் ப்ராசிகியூட் டர் வேலை கிடைக்க வழியில்லை. அப்படி வாய்ப்பு இல்லாத சூழ்நிலையில் மாஜிஸ்டிரேட் முன்சீப் பப்ளிக் பிராசிகியூட்டர்





வேலைக்கு போகும் வாய்ப்பு இருக்கிறது. ஆனால் குறிப் பாகச் சொல்லப்போனால் பல இடங்களில் அரசாங்க உத்தி யோகஸ்தர்கள் மாஜிஸ்டிரேட்டுகளாகப் போகும் வாய்ப்பு இருப் பதால் புதியவர்களுக்கு வேலை வாய்ப்பு இல்லை. ஆகவே, இவைகளையெல்லாம் கருத்திக்கொண்டு, அரசாங்க பப்ளிக் ப்ராசிகியூட்டர் வேலைக்கு வேலை உயர்வு கொடுப்பதை மறு பரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு மதுரை மாவட்டத்தில் ஒரு கொந்தளிப்பான சூழ்நிலை இருந்துகொண்டிருக்கிறது. மாஜிஸ்டிரேட்டுகளைக் நியமிக்கும்போது அவர்களை நேட்டிவ் டிஸ்டிரிக்டில் போட கூடாது என்று இருக்கிறது. அப்படி இருந்தாலும் மதுரை யிலே உள்ள ஒரு மில் தொழிலாளி மகன் மதுரையிலே அமெரிக்கன் கல்லூரியில் படித்து, மதுரையிலேயே கோர்ட்டில் வேலை பார்த்தார். அவர் இன்றைக்கு அதே கோர்ட்டில் மாஜிஸ்ட் ரேட்டாக இருக்கிறார். அவர் அடிஷனல் ஜுடிஷியல் செகண்ட் கிளாஸ் மாஜிஸ்டிரேட் 3-ஆக இருக்கிறார். அவர் அதே கோர்ட்டில் கிளார்க்காக இருந்த காரணத்தால், அங்கே பல விவரங்களை ஏற்கெனவே தெரிந்துவைத்திருக்கிற காரணத்தால், நெளிவு சுளிவுகளை பயன்படுத்தி, யார் சொன்னாலும் கேட் காமல் தன் போக்கிலேயே செயல்பட்டுக்கொண்டிருக்கிறார். அதனால் இன்றைக்கு அங்கே ஒரு கொந்தளிப்பு சூழ்நிலை உருவாகிக்கொண்டிருக்கிறது. நேட்டிவ் டிஸ்டிரிக்டில் இருக்கக் கூடாது என்று இருந்தாலும் கூட அவரை அங்கே நியமித்திருப் பதற்கு அரசியல் காரணமா என்று தெரியவில்லை. அவரை அங்கிருந்து மாற்ற வேண்டும்; மேலும் அவ்வாறு யாரையும் போடக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இந்த மாஜிஸ்டிரேட்டுகளுடைய சம்பளத்தை உடனடியாக திருத்தியமைக்க வேண்டும். (மணி அடிக்கப் பெற்றது). (இன்னும் கொஞ்ச நேரம் கொடுங்கள்.)

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> நேரம் இல்லை. முடித்து கொள்ளுங்கள்.

<u>திரு. கு. பா. பழனியப்பன்:</u> ஒரு நிமிடத்தில் முடித்துக் கொள்கிறேன். கூட்டுறவுத் துறையை எடுத்துக்கொண்டால் பல சலுகைகளை அறிவித்தார்கள். 40 கோடி ரூபாய் தள்ளுபடி என்று ஏற்கெனவே பட்ஜெட்டில் அறிவித்தார்கள். ஆனால் இங்கே 5.07 கோடி என்று சொல்லியிருக்கிறார்கள். 40 கோடி தள்ளுபடி என்று சொல்லிவிட்டு, 5.07 கோடியை இங்கே தள்ளு படி செய்துவிட்டு மீதியை எங்கே தள்ளினார்கள் என்று தெரிய வில்லை. இந்த 35 கோடி எங்கே போய் சேர்ந்தது என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். (மணி அடிக்கப்பெற்றது).

[திரு. கு. பா. பழனியப்பன்] [1980 ஜூலை 14

களில் ஆந்திரா. கேரளா போன்ற மாநிலங்களில் ரூ. 1,150 என்று இருக்கிறது. அதேபோல், சப்-ஜட்ஜ் பதவியில் இருப்பவர்களுக்கு அடிப்படைச் சம்பளம் ரூ. 1,000 என்று சொன்னால் மற்ற மாநிலங்களில் ரூ. 1,300 முதல் 1,900 வரை இருக்கிறது. டிஸ்டிரிக்ட் ஜட்ஜ் கிரேடு 2 பதவியில் இருப்பவர்களுக்கு ரூ. 1,200 நம் மாநிலத்தில் இருக்கிறது என்று சொன்னால், மற்ற மாநிலங்களில் ரூ. 1,800 என்று இருக்கிறது. இப்படிப்பட்ட நிலையில் அவர்களுடைய ஊதிய விகிதங்களில் வித்தியாசம் இருக்கிறது.

அதுமட்டுமல்ல, அவர்களுடைய பதவி நிரந்தரமாக்கப்படுவது இல்லை. ஏறத்தாழ 10—12 ஆண்டுகள் நிரந்தரமாகப் பணியாற்றினால் கூட பதவி நிரந்தரம் செய்வது இல்லை. 132-க்கும் மேற்பட்ட மாஜிஸ்டிரேட்டுகள் இன்றைக்கு அந்த நிலையில் இருப்பதாக நான் அறிகிறேன். ஒரு பழமொழி சொல்லுவார்கள்......Once a Magistrate is always a Magistrate. இந்த நிலைதான் அவர்களுக்கு இருக்கிறது என்பதை நான் வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

அவர்களுக்கு எந்தவிதமான பாதுகாப்பும் இல்லை. வேறு எந்தவிதமான வசதியும் கிடையாது. அவர்கள் குவார்ட்டர்ஸ் இல்லாமல் இருக்கிறார்கள். குறிப்பாகச் சொல்லவேண்டுமானால், சென்னை மாநிலத்தில் வசிக்கக் கூடியவர்கள் வீட்டு வசதி இல்லாத காரணத்தால், ரூ. 600—650 வாடகை கொடுத்து வசிக்க வேண்டிய நிலையில் இருக்கிறார்கள். இவ்வளவு ரூபாயை வாடகையாகக் கொடுத்துவிட்டு அவர்கள் எப்படி வாழ முடியும் என்பதை அரசு முக்கியமாக யோசிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் சொல்லப்போனால் சில வேளைகளில் அவர்களுக்குப் பாதுகாப்பு தேவை. இங்கே. ஒரு மாஜிஸ்டிரேட் ஒரு குற்றவாளிக்கு ஒரு தண்டனையோ, அபராதமோ நீதிமன்றத்தில் போட்டுவிட்டு வீடு திரும்புகிற நேரத்தில் பஸ்ஸில் வரும் சூழ்நிலை இருக்கிறது. அப்போது குற்றவாளியும் அபராதத்தைக் கட்டிவிட்டு பஸ்ஸில் வரலாம். ஆகவே, வெளியே வருகிறபோது அவர்களுக்கு என்ன நிகழுமோ என்கின்ற அச்ச உணர்வோடேயே வரவேண்டிய நிலை இருக்கிறது. குறிப்பாகச் சொல்லவேண்டுமானால், விழுப்புரம் கலவரம் நடந்தபோது அந்த மாஜிஸ்டிரேட்டை 164 செக்ஷன்படி வாக்குமூலம் பதிவதற்காக அழைத்துச் சென்றபோது அவருக்கு வண்டி வாகன வசதி செய்து தரப்படவில்லை. உயிருக்கு ஆபத்தான நிலையில் அவர் தன்னுடைய பணியைச் செய்ய வேண்டிய நிலை இருந்தது. இதை எதற்காகச் சொல்லுகிறேன் என்றால். இப்படிப்பட்ட நிலையில் வண்டி வாகன வசதி செய்து தரவேண்டியது அரசின்



1980 ஜூலை 14] [திரு. கு. பா. பழனியப்பன்]

கடமை. அதைச் செய்வதற்கு அரசு தயங்கக்கூடாது என்று தெரிவித்துக்கொள்கிறேன். சென்னையில் ஒட்டுமொத்தமாக 5—6 மாஜிஸ்டிரேட்டுகளை ஒரு வேனில் அழைத்து வந்து பாதுகாப்பாக நீதிமன்றங்களில் இருந்து வீட்டிற்கு அழைத்துச் செல்லலாம். அப்படிச் செய்வது சிறப்பாக இருக்கும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

நீதிமன்றத்தில் நடுவர்களாக இருக்கின்ற நிலை இப்படி இருக்கிறது என்று சொன்னால், அங்கே பணியாற்றக்கூடிய ஊழியர்களின் நிலை மிகவும் மோசமாக இருக்கிறது. அவர்களுக்கு இந்த நேரத்தில்தான் வேலை என்று இல்லை. இரவு பகல் என்று பாராது வேலை செய்கிறார்கள். இதை எல்லோரும் அறிவார்கள். நீதிமன்றத்தில் வேலை செய்த நேரம் போக, மற்ற நேரங்களில் வீட்டில்கூட தீர்ப்புக்கான குறிப்புகளை எழுதுவதும், மற்ற கோப்புகளைப் பார்ப்பதும் என்று அவர்கள் 24 மணி நேரமும் வேலை செய்கிறார்கள் என்று சொன்னால் அதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றும் இல்லை. ஆகவே அப்படிப்பட்ட நிலையில் பணி செய்கிறவர்களுக்கு மற்ற துறையில் இருப்பவர்களைக் காட்டிலும் கூடுதல் சம்பளம் கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

ஊழியர்கள் என்று சொல்லுகிறபோது, பப்ளிக் சர்வீஸ் கமிஷன் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களும் இருக்கிறார்கள், நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களும் இருக்கிறார்கள். நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் பத்தாண்டுகளாகியும் நிரந்தரம் செய்யப்படாமல் சர்வீஸ் கமிஷன் மூலம் வரவேண்டுமென்று சொல்லுகிறார்கள். அப்படிப்பட்ட நிலைமைகளைத் தவிர்த்து, 3 ஆண்டுகள் ஆகிவிட்டால் அவர்கள் எல்லாம் நிரந்தரம் செய்யப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[முற்பகல் 9–50]

அடுத்தபடியாக 'காப்பியிஸ்ட்' — நகல் எடுப்பவர்கள் இருக்கிறார்கள். 84,000 வார்த்தைகளுக்கு 200 ரூபாய் சம்பளம் என்று நிர்ணயித்திருக்கிறார்கள். அவர்களே சொந்தமாக டைப்ரைட்டர் வைத்துக் கொள்ள வேண்டும். சொந்தமாக டைப்ரைட்டர் இல்லாதவர்கள் 60 அல்லது 75 ரூபாய் வாடகை கொடுத்து டைப்ரைட்டர் கொண்டு வருகிறார்கள். இந்த வாடகையைக் குறைத்துவிட்டுப் பார்த்தால் அவர்களுக்கு 150 ரூபாய் கூட சம்பளம் கிடைக்க வாய்ப்பு இல்லை. இதை மாற்றி அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*டாக்டர் கே. சமரசம்: பேரவைத் தலைவரவர்களே, இன்றைய தினம் மாண்புமிகு சட்ட அமைச்சரவர்களால் 13, 14, 23 ஆகிய எண்களின் கீழ் வந்திருக்கின்ற நீதி நிர்வாகம், சிறைச்சாலைகள், கூட்டுறவு ஆகிய தலைப்பின் கீழ் கொண்டுவரப்பட்டிருக்கின்ற மானியக்கோரிக்கையின் மீது ஆட்சிக் கட்சியின் சார்பாக நான் ஒருசில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். பேரவைத் தலை வரவர்களே, இன்றைய தினம் தமிழகத்திலே நக்ஸலைட்டுகள் என்ற பெயரில் நாட்டிலே உள்ள கொலைகளும், கொள்ளைகளும் மக்கள் விரோத சக்திகளால், அரசின் விரோத சக்திகளால் நக்ஸல்பாரி இயக்கத்திற்கும் சம்பந்தம் இல்லாமல் ஒரு கூட்டத் தால் நடத்தப்பட்டு நாட்டிலே அமைதியைக் குலைக்கும் பணி களில் ஈடுபட்டு வருகின்றனர். பல பின்னணிகளை அடிப்படை யாக வைத்து அப்படிப்பட்ட காரியங்கள் நடைபெற்று வரு கின்றன என்பதை இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

இந்த நாட்டிலே அமைதியை ஏற்படுத்தக்கூடிய வகையிலே ஒரு தனி அமைப்பை அதற்காக ஏற்பாடு செய்து நல்ல முறை யிலே பாதுகாக்கக்கூடிய பணிகளை அந்த அமைப்பு மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதுமட்டுமல்லாமல் டி.ஐ.ஜி. ஒருவரை சேலம், தருமபுரி, வடாற்காடு ஆகிய மாவட்டங்களுக்கு தருமபுரியை மையமாக வைத்து கிருஷ்ணகிரியில் நியமித்திருந்தார்கள். அந்த டி.ஐ.ஜி. அலுவலகத்தை வேறு ஊருக்கு மாற்றிவிட்ட காரணத்தால் இப் போது தருமபுரியிலே நக்ஸலைட்டுகள் பெயரால் பல கொடுமை கள் நடந்துவருகின்றன. தருமபுரி மாவட்டத்திலே அந்த அலுவலகம் இருந்தால் தருமபுரி மாவட்டத்திலே நடக்கின்ற நிகழ்ச்சிகளை நேரடியாக அவர்கள் கண்காணித்து அமைதி காக்கும் பணியிலே ஈடுபட முடியும். ஆகவே அங்கு அமைதியை ஏற்படுத்துகின்ற வகையிலே அந்த டி.ஐ.ஜி. அலுவலகத்தை ஏற் படுத்தவேண்டும் என்று அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல் நீதி நிர்வாகம் என்று சொல்லக்கூடிய வகையிலே கட்சிக் கண்ணோட்டத்தோடு திறமையற்றவர்களை அரசு வழக்கறிஞர்களாக ஜி.பி., பி.பி. போன்ற பொறுப்புக்களில் நியமிக்கின்ற காரணத்தால் அரசு வழக்குகள் பல தோல்வி யுற்றிருக்கின்றன என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். காவேரிப்பட்டினம் தொகுதியிலே சப்பாணிப் பட்டி என்ற ஒரு அரிசனக் காலனி ஏற்படுத்துவதற்காக அரசு நிலம் 13 ஆண்டுகளுக்கு மேலாகியும் அது குறித்து வழக்கு மன்றத் திலே அரசு வழக்கறிஞர்கள் திறமையாக வாதாடாத காரணத்



தால் அங்குள்ள ஏழை அரிசனங்களுக்கு அந்த இடம் இன்னும் போய் சேராத நிலை இருக்கின்றது. ஆகவே அரிசனக் காலனி கட்டவேண்டிய வாய்ப்பு இன்னும் உருவாகவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல் ஆலயச் சொத்துக்கள், அரிசனக் காலனி கள் போன்ற பல்வேறு அரசு வழக்குகளில் பப்ளிக் ப்ராசிக்-யூட்டர்கள் சரியாக வாதாடாத காரணத்தால் பல வழக்குகள் தோற்றுவிடுகின்றன. ஆகவே அந்த நிலையை மாற்றி அமைக்கக் கூடிய வகையில் நல்ல திறமை உள்ளவர்களை நன்றாகப் பரி சீலனை செய்து அரசு வழக்கறிஞர்களாக நியமிக்க வேண்டும் என்று நான் இந்த நேரத்தில் அரசைக்கேட்டுக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கின்றேன். அடுத்து அரசு வழக்கறிஞர்கள் தனியாகத் தொழில் நடத்துவதற்கு உரிமை தரக்கூடாது. ஏனென்றால் அதிலே பல சங்கடங்கள் ஏற்படுகின்றன. ஊழல்கள் கூட நடப்பதற்குக் காரணமாக அது அமைந்துவிடுகின்றன. அரசு ஊழியர்களில், டாக்டர்கள், டியுஷன் வைக்கின்ற ஆசிரி யர்கள் போன்றவர்கள் தனியாகத் தொழில் நடத்தினால் என் னென்ன பிரச்சினைகள் ஏற்படுகின்றதோ அதேபோன்று அரசு வழக்கறிஞர்கள் தனியாகத் தொழில் நடத்தினாலும் சங்கடங்கள் பல ஏற்படுகின்றன. இப்படிப்பட்ட காரணங்களால்தான் 1947-லே இருந்து 1977 வரையிலும் நமது இந்தியாவில் இயற்றப்படுகின்ற மாநில, மத்திய சட்டங்களால் என்ன பயன் ஏற்படுகின்றது என்ற கேள்விக்கு பதில் ஏழை மேலும் ஏழையானான், பணக்காரன் மேலும் பணக்காரனானான் என்ற பதில் கிடைக்கிறது. ஆகவே இந்த நிலைகளை மாற்றுவதற்கு இருக்கின்ற சல்லடைச் சட்டங்களை நாம் அடைத்தாகவேண்டும். ஆகவே இதுபற்றி யெல்லாம் சிந்தித்து தகுந்த முடிவினைக் காணவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து கூட்டுறவு. கூட்டுறவே நாட்டுயர்வு என்று சொல்லப்படுகின்றது. அந்தக் கூட்டுறவு ஏட்டளவிலும், நாக் களவிலேயும் தான் இருக்கின்றதே தவிர அதை நடைமுறைப்-படுத்துகின்றபோது பல சங்கடங்கள் வருகின்றன. அதற்குக் காரணம் இருக்கின்ற சட்டங்கள் மட்டுமல்ல. இன்று நாட்டிலே இருக்கக்கூடிய பழதாய முறைகளும் அப்படித்தான் இருக்கின்றன. இன்றைக்கு நாட்டிலே இருக்கின்ற நிலைமை என்னவென்றால் "கொடுத்த கடனை திருப்பிக் கேட்டால் கொடுத்திடு தாடையிலே அடுத்து மீறி பேசினாலும் அனுப்பிடு பாடையிலே" என்று கூறப்படுகின்ற சுலோகம் இன்றுள்ள நிலையைத் தெளிவு படுத்தும். ஆகவே கூட்டுறவுத்துறையினர் கொடுத்த கடனைத் திரும்ப வசூல் செய்வது என்றால் இன்றிருக்கக்கூடிய சங்கடங்கள் என்ன என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும்.

[டாக்டர் கே. சமரசம்] [1980 ஜூலை 14

[முற்பகல் 10-00]

அது மட்டும் அல்லாமல் இன்றையதினம் நம் கூட்டுறவு வங்கிகளில் பல ஸ்பெஷல் ஆபிசர்களைப் போட்டிருக்கிறோம். அவர்களுக்கு மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் வரையில் ஊதிய மாகச் செலவழிக்கப்பெறுகின்றது. சில வங்கிகளில் கலெக்ஷன் இல்லை. ஆனால் கலெக்ஷன் செய்வதற்கென்று ஆபிசர்களைப் போட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு தனிச் சிப்பந்திகள், அவர்க்ள் எல்லோருக்கும் சேர்த்து சம்பளம். இவை களெல்லாம் யார் கொடுப்பது. அந்த வங்கிகள் தான் கொடுக் கின்றன. எந்த குறிப்பிட்ட வங்கிகளில் பணியாற்றுகிறார் களோ அந்த வங்கி தான் அவர்கள் அனைவருக்கும் சம்பளம் கொடுக்கிறது. சம்பளத்தோடு அல்லாமல், அந்த ஆபிசர்களுக் கான டி.ஏ., டீ.ஏ. போன்றவைகளையும் கொடுக்கிறார்கள். அவர்கள் அரசுத் துறையில் மிகப் பெரிய அதிகாரி அந்தஸ்தில் இருப்பதினால் அவர்கள் எவ்வளவு, டி.ஏ./டீ.ஏ. கேட்டாலும் அவை அவ்வளவும் கொடுக்கத்தான் வேண்டும். மறுக்க முடியாது. ஆனால் அதே நேரத்தில் அந்த வங்கியிலே இரவும் பகலும் வேலை செய்யும் ஊழியர்களுக்கு இப்படி கொடுப்பார்களா என்றால் நிச்சயமாகக் கொடுப்பதில்லை. அதை நாம் ஒத்துக்கொண்டாக வேண்டும்.

ஆக கலெக்ஷன் பணம் 3 ரூபாய் என்று வைத்துக் கொண்டால் இவர்களின் ஊதியத்திற்கே 1 ரூபாய் போய்விடும். இப்படிப் பட்ட நிலைமைகள் கூட்டுறவு வங்கிகளில் இருப்பதை தவிர்க்க வேண்டும். உடனடியாக அந்த அதிகாரிகளை திரும்பப் பெற வேண்டும். அவர்களுக்கு பதிலாக மக்கள் குழு ஒன்று போட்டு, அவர்களைக் கொண்டு இவைகளை கண்காணிக்கச் செய்ய வேண்டும். இப்படிப்பட்ட குழுவிற்காக மாதத்திற்கு 300 ரூபாய் தான் செலவு ஆகும். ஆனால் அந்தக் குழுவில் இருப் பவர்கள் லோகலில் பழகக்கூடியவர்களாக இருப்பதினால், யார் கடனை திருப்பிக் கொடுப்பார்கள், யார் வாங்கத் தகுதி பெற்றவர்கள் என்பதெல்லாம் தெரிந்து வைத்திருப்பார்கள். அப்படிப்பட்டவர்கள் ஆபிசர்கள் பணம் கலெக்ட் பண்ண போனாலும் அவர்களுக்கு உதவி செய்து கொடுக்க வேண்டிய வர்களிடமிருந்து பணத்தை வாங்கிக் கொடுப்பார்கள். இல்லை என்றால், ஆபிசர்கள் போகும்போது ஊரில் இல்லை என்று சொல்லி பணம் கட்டவேண்டியவர்களும் ஒளிந்து கொள்வார்கள். இப்படிப்பட்ட நிலைமையைப் போக்க அரசு கவனம் செலுத்த வேண்டும்.



1980 ஜூலை 14] [டாக்டர் கே. சமரசம்]

இன்றைய தினம் கூட்டுறவுத் துறையிலே அதன் கடன்களை ரத்து செய்திருக்கிறார்கள். முன்பு 40 கோடி, இப்போது 60 கோடி. ஏறத்தாழ 100 கோடி ரூபாய் கடன்களை இந்த அரசு வந்ததற்குப் பிறகு தள்ளுபடி செய்திருக்கிறார்கள். 100 ரூபாய் கடன் வரவேண்டியிருக்கிறது என்று சொன்னால், அதிகாரிகள் மற்ற நிர்வாகச் செலவுகள் எல்லாம் சேர்த்து 300 ரூபாய் ஆகிறது. அரசு தரப்பில், வட்டியுடன் சேர்ந்து 100 ரூபாய் என்பது 120 ரூபாயாக வசூல் செய்யப்பட்டாலும் கூட 300 ரூபாய் செலவாகிறது என்று சொன்னால் எப்படி அந்த வங்கிகள் நடக்கும்? யார் விளக்கம் கேட்டாலும் தரத் தயாராக இருக்கிறேன்.

இப்படிப்பட்ட நிலைமைகள் தவிர்க்கப்பட வேண்டுமானால் யார் கடனை திருப்பிக் கொடுப்பார்கள், யார், சிறு விவசாயிகள், யார் பெரிய விவசாயிகள்; யார் சிறு வியாபாரிகள், யார் பெரிய வியாபாரிகள், யாரிடம் கடன் கொடுத்தால் திரும்பக் கிடைக்கும் என்றெல்லாம் பார்த்து, திருப்பிக் கொடுக்கக் கூடியவர்களுக்கே கடன் கொடுக்க வேண்டும். திருப்பிக் கொடுக்க முடியாதவர் களுக்கு கடன் என்று இல்லாமல் இலவசமாகவே கொடுக்க வேண்டும். அதற்கான வழி முறைகளை ஆராய வேண்டும்.

கலெக்ஷனே செய்யாத வேலைக்கு கலெக்ஷன் ஆபீசர்கள் என்று போட்டு, வீணாக சம்பளம் கொடுப்பானேன் என்று தான் கேட்கிறேன். ஆகவே இதைப்பற்றி அரசு சம்பந்தப்பட்ட நிறுவனங்களோடும், அதிகாரிகளோடும் கலந்து பேசி பரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். இல்லாவிட்டால் எவ்வளவு கடன் கொடுத்தாலும் அவைகளை தள்ளுபடி செய்துகொண்டே போகும் நிலைமை தான் நீடிக்கும்.

என்னைப் பொறுத்தவரையில் கூட்டுறவுத்துறை என்பது மிக மோசமான நிலையில் இருக்கிறது. உதாரணத்திற்கு ஒன்று சொல்கிறேன். ஒரு கல்யாணம் நிச்சயம் செய்கிறார்கள் என்று வைத்துக் கொள்வோம். நிச்சயமாகிவிட்ட பிறகு பெண்ணைப் பெற்றவர் தன் சம்பந்தியிடம் கேட்கிறார், எங்கள் குடும்பத் தில் ஒரு வழக்கம் உண்டு, தாய்மாமன் தான் பெண்ணை மண வறைக்கு தூக்கிக்கொண்டு வந்து உட்கார வைப்பார், அப்படி ஒரு வழக்கம் உண்டு. இதை நீங்கள் ஒப்புக் கொள்ள வேண்டும் என்று கேட்கிறார். அதற்கு சம்பந்தி ஒப்புக் கொண்டு, எங்க ளுடைய குடும்பத்திலும் ஒரு வழக்கம் உண்டு, தாலியை பெண்ணின் தாயார் தான் கட்ட வேண்டும், மாப்பிள்ளை கட்ட மாட்டார் என்று சொல்லி அதற்கு நீங்கள் ஒப்புக்கொள்ள வேண்டும் என்று பிள்ளை வீட்டார் கேட்கிறார்கள். இவர்களும் அதற்கு ஒப்புக் கொள்ளுகிறார்கள். இப்படி இரண்டு தரப்பிலும் ஒப்புக்கொண்டு, கல்யாணமும் நடந்து விடுகிறது.

[டாக்டர் கே. சமரசம்] [1980 ஜூலை 14

இரண்டு பேர்களும் ஒத்துக்கொண்டு கல்யாணம் நடக்கிறது. அன்று இரவில் அவர்கள் பேசிக்கொள்கிறார்கள். பெண்ணின் தந்தை சொல்கிறார், நான் உங்களை ஏமாற்றிவிட்டேன், மணமகளை தாய்மாமன் தூக்கிவந்து மணவறையில் உட்கார வைப்பது என்ற வழக்கம் கிடையாது. மணமகளுக்கு இரண்டு காலும் விளங்காது என்று சொன்னாராம். அதைக்கேட்டு மணமகளின் தகப்பனார் சிரிக்கிறார். நானும் உங்களை ஏமாற்றிவிட்டேன். மணமகளுக்கு மணமகனின் தாய் தான் தாலிகட்டவேண்டும் என்று எங்களிடையே பழக்கம் இல்லை, ஆனால் மணமகனுக்கு இரண்டு கைகளும் விளங்காது, ஆகவே தான் அப்படிச் சொன்னேன் என்றாராம். ஆக இப்படி கைகளும் கால்களும் இல்லாதவர்கள் திருமணம் செய்துகொண்டது போல்தான் நாட்டிலே ஏற்பட்ட பல கூட்டு-உறவுகள் நிலை என்ன? முடிவு என்ன? என்பதனை கடந்த காலங்கள் சாட்சியாக காட்சியளிக்கின்றன. அந்நிலையில்தான் இன்று இந்த கூட்டுறவுத் துறை இருக்கிறது. ஆகவே நல்லமுறையில் இந்த கூட்டுறவு இயக்கம் இயங்கக்கூடிய முறையில், நல்லமுறையில் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட இதுசம்பந்தமாக சட்டதிட்டங்களை மாற்றியமைக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஏழைகளின் கடன்களை ரத்து செய்து பலபுதிய திட்டங்களைப் புகுத்தியிருக்கிறோம். இதுபோன்ற திட்டங்களை வரவேற்று, மேலும் புதிய பல திட்டங்களை வகுக்கவேண்டுமென்று கேட்டு முடித்துக்கொள்கிறேன்.

திரு. இல. பலராமன்: பேரவைத் தலைவர் அவர்களே இங்கே கூட்டுறவு மானியக் கோரிக்கையை அமைச்சர் அவர்கள் அவைமுன் வைத்திருக்கிறார்கள். இந்தத் துறை அகில இந்திய ரீதியில் இருக்கவேண்டும் என்று இந்திய ஜனநாயகத்தில் அமைக்கப் பட்ட ஒரு அமைப்பாக இருந்தாலும் இது எப்படிச் செயல்பட வேண்டும் என்பதில் இன்றைக்கு எல்லோருக்கும் அக்கறை யிருக்கிறது.

அமரர் காமராஜர் அவர்கள் காலத்தில் இந்தத் துறை சீரும் சிறப்புமாக இருக்கவேண்டும், ஒரு முற்போக்கான சமுதாயத்தை அமைக்கவேண்டும். சோஷலிஸம் மலரவேண்டும் என்றால் இந்த அமைப்புகள் ஏழை எளிய மக்களிடையே செல்ல வேண்டும், கிராமப்புற மக்களுக்குச் செல்லவேண்டும் என்பதற்காக ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒரு கூட்டுறவுச் சங்கமும், ஒரு பள்ளிக் கூடமும், ஒரு பஞ்சாயத்தும் இருக்க வேண்டும் என்ற ஒரு திட்டத்தை அமல் நடத்தினார்கள். அது இன்றைக்கு இருக்கக் கூடிய நிலையில் எனக்கு முன்பு பேசிய உறுப்பினர் அவர்கள் சொல்லியதுபோல் கை விளங்கவில்லை, காலும் விளங்கவில்லை என்ற முறையில் உள்ள மணமக்களைப் போன்று இந்த கூட்டுறவுச் சங்கங்கள் இருக்கின்றன என்று சொன்னார்கள். அந்தளவிற்கு



1980 ஜூலை 14] [திரு. இல. பலராமன்]

கூட்டுறவுத் துறை சீர்கெட்டிருக்கிறது என்றால் அதற்கு யார் காரணம் என்று ஆராய்வது அரசியல் ரீதிக்கு அப்பாற்பட்ட நிலை என கூற ஆசைப்படுகிறேன். இதற்கு பொது மக்கள் ஒரு பக்கம் காரணமாக இருக்கலாம். ஆனால் பெரும்பங்கு அரசியல்வாதிகள்தான் காரணம் என்பதை யாரும்மறுக்கமுடியாது. கூட்டுறவுத் துறையில் அதிகமான தலையீடுகள், அதிகமான சுய நலம் இவை காரணமாக இந்தத் துறை மிகவும் பாதிக்கப் பட்டிருக்கிறது. நாம் எல்லோரும் பல வாக்குறுதிகளை தேர்தல் நேரத்தில் தருகிறோம். உங்களை எல்லாம் ஆகாயத்தில் பறக்க விடுகிறோம், உங்களை வாய்ப்பு வசதி உள்ளவர்களாகச் செய்து விடுகிறோம் என்றெல்லாம் கூறினாலும் கூட்டுறவுச் சங்கங்களை நாம் எந்தளவிற்கு வைத்திருக்கிறோம் என்பதைப் பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த விவர அறிக்கையில் ஒன்றைக் கொடுத்திருக்கிறார்கள். கூட்டுறவுத் துறை மிக மிக மோசமானதொரு நிலையில் பின்தங்கிக் கிடைக்கிறது. இன்றிருக்கக்கூடிய அமைப்புகள் மிகவும் பலகீனமான நிலையில் இருப்பதற்கு ஒரு அடிப்படைக் காரணம் தேர்தல்கள் இல்லாத ஒரு நிலை.

தேர்தல்கள் நடத்தப்படும் என்று கடந்த பல ஆண்டுகாலமாகக் கூறிக்கொண்டு வருகிறோம். இந்தத் தேர்தல்கள் எப்போது வரும் என்பதை அறிவித்தால் நலமாகயிருக்கும். தேர்தல்கள் என்பது ஜனநாயகத்தின் அடிப்படை என்பதை நாம் ஏற்றுக்கொண்டிருக்கிறோம். ஆகவே எந்தச் சங்கங்களாக இருந்தாலும், அனைத்துச் சங்கங்களுக்கும் தேர்தல்களை நடத்த வேண்டும், தேர்தல்களை நடத்துவதற்குரிய ஏற்பாட்டினைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் தலைமை]

இன்று தனி அதிகாரிகள் நிர்வாகத்தை நடத்திக்கொண்டிருக்கிறார்கள். தனி அதிகாரிகள் நிர்வாகம் நடத்துவதினால் இன்று இந்தச் சங்கங்கள் எவ்வளவு சீர்கேடு அடைந்திருக்கிறது என்பதைப் பார்க்கிறோம். அது வேதனையையும் வருத்தத்தையும் தருவதாக இருக்கிறது. ஆகவே இந்நிலையை மாற்றுவதற்கு அரசு முன்வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்த தேதிக்குள் இவைகளை எல்லாம் முடிப்போம் என்ற ஒரு நிலையை உருவாக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

நாட்டில் சோஷலிசம் மலர வேண்டும், நாம் அதற்கு உறுதுணையாக இருக்கவேண்டும் என்றால் கிராமங்கள்தோறும் கூட்டுறவுச் சங்கம் அமைத்தாக வேண்டும். இடையில் பத்து கிராமங்களுக்கு ஒரு வயபிள் யூனிட் என்று ஒன்று ஏற்படுத்தினார்கள். அந்த யூனிட்டுகள் இன்று எந்நிலையில் இருக்கிறது என்று பார்த்தால் மிகவும் பரிதாபகரமான நிலையில் இருக்கின்றன.

[திரு. இல. பலராமன்] [1980 ஜூலை 14

செல்வாக்கு உள்ளவர்கள், வசதிபடைத்தவர்கள்தான் பயன்
படுத்தக்கூடிய முறையில் இருக்கின்றன. ஆகவே பழைய
நிலைக்கு மாற்றுவது நலமாக இருக்கும்.

கூட்டுறவு இயக்கம் என்பதுபற்றி பிரசாரம் செய்யப்பட்டா
லும், அது நிறைவாக ஆக்கப்படுகிறதா என்றால் இல்லை.
ஆகவே கூட்டுறவு இயக்கத்தை நிறைவாக்க அரசு முனைய
வேண்டும் என்று கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

[முற்பகல் 10-10]

இந்த மாநிலத்திலே கூட்டுறவு இயக்கத்தின் மூலமாக கிராம
விவசாய சேவா சங்கங்கள் 4·742 என்று அறிக்கையிலே கூறி
யிருக்கிறார்கள். இந்த விவசாய சேவா சங்கங்கள் இன்றைக்கு
நல்லமுறையிலே செயலாற்றிக் கொண்டிருக்கின்றனவா என்று
பார்த்தால், திவாலாகக்கூடிய நிலையிலேதான் இருக்கின்றன.
இதிலே 53.14 லட்சம் விவசாயக் குடும்பங்கள் என்று பட்டியல்படி
இருப்பதாக இந்த அறிக்கையிலே அமைச்சர் அவர்கள் கூறி
யிருக்கிறார்கள். ஆனால் இதில் சிறிய விவசாயிகள், மற்றும்
மிகச் சிறிய விவசாயிகள் என்பதற்கான டெஃபனிஷன், என்ன
அத்தாட்சி என்பது எனக்குத் தெரியவில்லை. இதிலே 42.05
லட்சம் என்று கூறியிருக்கிறார்கள். ஆனால், சிறு விவசாயிகள்
என்று சொல்கிறபோது $2\frac{1}{2}$ ஏக்கர் அல்லது 5 ஏக்கருக்குள் வரை
யறுக்கின்ற நிலையில் அதிகப்படியான பேர்கள் கணக்கிடப்
பட்டிருக்கிறார்கள். என்றாலும், 5 ஏக்கர்களுக்கும் அதிகமான
கணக்கு 11.09 என்றிருக்கிறது. இதிலே 4-ல் ஒரு பாகம் அதா
வது சிறு விவசாயிகளிலே இவர்கள் 4-லே ஒரு பாகம் என்று
கணக்கு கொடுத்திருக்கிறார்கள்.

அடுத்து, கடன் வழங்கும் நிலையைப் பார்க்கும்போது
1979-80 லே ரூ. 42.70 என்ற நிலையிலும், நீண்டகால கடன்
ரூ.8.85 கோடி ரூபாய் கடன்வழங்கியதாகவும் கூறியிருக்கிறார்கள்.
இந்த நிலையைப் பார்க்கும்போது அந்தப் பகுதி மக்கள்,
ஏழை எளிய மக்கள், ஏழை விவசாயிகள், ஆகியோருக்கு இந்த
ஸ்தாபனம் உதவி பண்ணியிருக்கிறதா, பொருளாதாரத்தை
வளர்த்திருக்கிறதா என்று பார்த்தால், இல்லை ; அது மிக மிக
வருத்தத்திற்கு உரியதாகத்தான் இருக்கிறது. ஆனால், இன்
றைக்குக் கூறுகிறார்கள் ஆட்சிப் பொறுப்பிலே உள்ளவர்கள்,
கடன் வசூலாகவில்லை என்று. ரிசர்வ் வங்கி கட்டுப்பாடு
உள்ளது, அதனால் கடன் கொடுக்க முடியவில்லை என்ற
நிலையை எல்லாம் அமைச்சர் அவர்கள் பதிலிலே சொல்வார்கள்
என்று கருதுகிறேன். அதைப் போக்குவதற்கு என்ன மாற்றுத்
திட்டம் ஏற்படுத்தி இருக்கிறீர்கள் ? கூட்டுறவு சங்கங்கள்
மறுமலர்ச்சி அடைய வேண்டும் என்ற பொதுவான கருத்தைச்



1980 ஜூலை 14] [திரு. இல. பலராமன்]

சொல்கிறார்கள். இன்றைக்கு விவசாயிகளுக்குக் கடன் கொடுக்க
முடியாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. வேறு மாற்றுத்திட்டம்
என்ன ? அறிக்கையிலே இருக்கின்ற புள்ளி விவரங்களைப்
பார்க்கிறோம். $2\frac{1}{2}$ ஏக்கருக்கும் கீழே உள்ளவர்கள் அதிகமாக
42.05 இலட்சம் அளவுக்கு இருக்கிறார்கள் என்று சொல்
கிறீர்கள். அவர்களுக்கு என்ன செய்யப் போகிறீர்கள் ? அவர்
களுக்கு இந்த விவசாயக் கடன்களுக்கான மாற்று ஏற்பாடு
என்ன என்று இந்த அறிக்கையிலே எதுவும் கூறப்படவில்லை.
இதனால் கிராமப் பொருளாதாரம் மிகவும் சீர்குலையும்
கிராமப்புற பொருளாதாரம் மேம்பட்டால்தான் மற்றப்
பொருளாதாரம், இந்த நாட்டின் பொருளாதார நிலையைப்
பலப்படுத்த முடியும் என்பதை நாம் உணர்ந்திருக்கலாம்.
எனவே, அதைப் பலப்படுத்துவதற்கான சூழ்நிலையை நாம்
ஏற்படுத்த வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை
நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

வழங்கக் கூடிய கடனுக்கு அதிக வட்டி, தனி நபர் வட்டி
போல் கூட்டுறவு ஸ்தாபனங்களிலே இன்றைக்கு நிலை இருக்
கின்றது என்பதையும் நானும், மற்ற உறுப்பினர்களும் இந்த
மன்றத்திலே பல முறை கூறியிருந்தாலும், அதை மாற்று
வதற்கு இந்த அரசு ஏதாகிலும் செய்கின்றதா என்றால்,
இல்லை. இந்த அரசு இன்றைய தினம் வட்டி வியாபாரம்
தான் செய்து கொண்டிருக்கிறது. இந்த நிலையை மாற்ற
வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கூறிக் கொள்ள
ஆசைப்படுகிறேன். அதே நேரத்தில் நிலவள வங்கி போன்றவை
களுக்கு, ஒரு மத்திய காலக் கடனாக இங்கே பல வகைகளிலும்
வழங்கியிருந்தாலும், அவைகளுக்கும் கடந்த ஆண்டு ஒதுக்கி
யுள்ள நிதியையும், இந்த ஆண்டு ஒதுக்கப்பட்டுள்ள நிதியையும்
ஒப்பிட்டுப் பார்த்தால், மிகக் குறைவாக இருப்பதை நான்
இந்த நேரத்திலே சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அதனால்,
அவைகளையும் பலப்படுத்துகின்ற சூழ்நிலையை உருவாக்க
வேண்டும் என்று இந்த நேரத்திலே அமைச்சர் அவர்களைக்
கேட்டுக் கொள்கிறேன். இந்த நிர்வாகத்தின் இணையாக
நகர்ப் புறங்களில் கடன் வழங்கும் வங்கி, அர்பன் பாங்கு
என்ற ரீதியில் 131 வங்கிகள் நல்ல முறையிலே பணியாற்றிக்
கொண்டிருக்கின்றன. அங்கே நகைக் கடன் போன்றவைகளுக்குப்
பணம்வழங்கி, அவைகள் நல்ல முறையிலே மக்களுக்குத் தொண்டு
செய்வதோடு, சிறு வியாபாரிகளுக்கும், மற்றவர்களுக்கும்
தொண்டு செய்யக் கூடிய நிலையிலே இருக்கிறது. அவைகளை
மேலும் பலப்படுத்தி மாநில அளவில் தனி நிறு
வனம், கூட்டுறவு வங்கியின் தொடர்பு இல்லாமல் ஃபினான்ஸ்
பண்ணக் கூடிய அளவுக்கு, நேர்முகமாக இயங்கக் கூடிய அளவுக்கு
ஏற்பாடு செய்ய வேண்டும்.

கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் நல்ல முறையிலே இயங்க இந்த அமைச்சரவை பாடுபடவேண்டும். அந்த நிர்வாகம் சீர் கெட்டிருக்கிறது. கோடிக்கணக்கான ரூபாய் வருவாய் உள்ள நிறுவனமாக இருந்தாலும் எல்லாப் பகுதிகளிலும் கேவலமான நிலைமையில் இருப்பதால் விவசாயப் பெருமக்கள் அதிருப்தி அடைந்திருக்கிறார்கள். அந்த நிலைமைக்குத் தீர்வு காண அரசு முயல வேண்டும்.

கூட்டுறவு ஆலைகளில் ஜெனரல் பாடியைக் கூட்டாத நிலை வட ஆற்காடு மாவட்டத்தில் இருக்கிறது. அதைக் கூட்ட தனி அதிகாரிகள் அக்கறை காட்டுவதாக இல்லை. என்ன வருவாய், என்ன செலவு என்று முதலீடு போட்ட விவசாயிகள் அறிந்து கொள்ள முடியாத பரிதாபகரமான நிலைமை இருக்கிறது.

மத்திய சிறைகள் என்ற ரீதியில் வேலூரில் இருக்கும் மத்திய சிறை சிறப்பு வாய்ந்த சிறையாக இருக்கிறது. அங்கு குடி தண்ணீர்ப் பற்றாக் குறையை நிவர்த்தி செய்து மேலும் அபி விருத்தி செய்து அழகுபடுத்துவதற்கான சூழ்நிலையை உருவாக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன். அங்கு செய்யக்கூடிய தொழில்கள் அவற்றிலிருந்து உற்பத்தி செய்யப்படும் பொருள்களை விற்பனை செய்யும் ரீதியில், வியாபாரம் செய்யும் ரீதியில் இருக்கின்றன. வெளி நாடுகளுக்கு அங்கு தயாரிக்கின்ற பொருள்களை ஏற்று மதி செய்யக் கூடிய அளவுக்கு வழி வகைகள் செய்ய வேண்டும். அவர்கள் அங்கே செய்யக் கூடிய தொழில்களை வெளியே வந்தாலும் செய்து தங்கள் வாழ்க்கையை நடத்திச் செல்ல வாய்ப்பாக பயிற்சிக் கொடுக்க வேண்டும்.

ஆயுள் தண்டனை அடைந்த கைதிகளின் தண்டனைக் காலத்தைக் குறைப்பதற்கு ஏற்கனவே இருந்த நிலைகளை எல்லாம் மாற்றியிருந்தாலும் மேலும் அதிலே முன்னேற்றம் வேண்டும். வேலை செய்த நாட்கள் குறைக்கப்படுகின்றன. இரத்த தானம் செய்பவர்களுக்குச் சில நாட்கள் குறைக்கப் படுகின்றன, இதிலே மேலும் சில சலுகைகள் அளிக்கப்பட வேண்டும். தற்போது தூக்கு தண்டனை அளிக்கக் கூடாது என்ற மறு மலர்ச்சி உருவாகிக் கொண்டிருக்கிறது. ஆகவே, தண்டனை அடைந்தவர்கள் சித்திரவதைப் படுத்தப் படக் கூடாது என்பதை மனதில் வைத்து மனிதன் மனிதனாக சிறை கள் செயல்பட வேண்டுமென்று இந்த நேரத்தில் கூறிக் கொள் கிறேன். ஐந்து வருஷங்கள் கழித்தால்தான் பரோலில் விடுவது என்ற நிலையை வைத்திருக்கிறார்கள். அதற்கு ஒரு விதி விலக்கு அளித்து நல்ல முறையில் செயல்படுவதற்கான சூழ்நிலைகளை உருவாக்க வேண்டும்.





நீதி நிர்வாகத்தைப் பொறுத்தவரை என்னுடைய பகுதி யான போளூரில் ஒரு முன்சீப் கோர்ட் ஏற்படுத்த வேண்டும். தனி நபர் கமிஷனும் அதற்கு சிபாரிசு செய்திருக்கிறது. இது வரை அதை அமைப்பதற்கான எந்தவித முயற்சியும் எடுத்துக் கொள்ளப்பட வில்லை. போளூர் தாலுக்கா, பின் தங்கிய தாலுகா ; விவசாயத்தை நம்பியிருக்கும் தாலுக்கா ; ஏழை எளிய மக்கள் இருக்கும் தாலுக்கா, பிரச்சினைகள் சாதாரண மாக அதிகமாக இருக்கின்றன. தற்போது திருவண்ணாமலை, ஆரணி, வேலூருக்குச் செல்ல வேண்டியிருப்பதால் அங்கே ஒரு முன்சீப் கோர்ட்டு ஏற்படுத்தினால் நலம். அதற்கு அமைச்சர் அவர்கள் உறுதுணையாக இருக்க வேண்டும். இந்த ஆண்டு கோர்ட்டை உருவாக்கும் சூழ்நிலையை உருவாக்கவேண்டும்.

நீதி நிர்வாகத்தில் இன்றைக்குத் தீர்ப்புகள் வழங்குவதில் காலதாமதமாகிறது என்று புள்ளி விவரங்களில் எடுத்துக் கூறி இருக்கிறார்கள். இந்த எண்ணிக்கையைக் குறைக்க, இந்த நிலையைப் போக்க என்ன செய்யப் போகிறார்கள்? பிரச்சினை கள் அதிகமாகிற நிலையில் ஏழை எளியவர்கள், சமுதாயத்தில் பின் தங்கிய மக்கள் வழக்கு மன்றத்திற்குச் செல்வது சகஜமாக இருக்கும் நிலையில் தீர்ப்புகள் விரைவாகக் கிடைக்கச் செய்வது அரசின் கடமை. நீதித் துறையின் கடமை. 1977ல் தொடரப் பட்ட வழக்குகள் 1,130 ; ஆண்டு இறுதியில் முடிவுறாமல் உள்ள வழக்குகள் 3,390 ஆக இருக்கிறது. இது ஒரு தீராத பிரச்சினை யாக இருக்கிறது.

[முற்பகல் 10-20]

அதே போன்று 1977, 1978, 1979 ஆம் ஆண்டுகளிலே பார்த்தால் எண்ணிக்கை வளர்ந்து கொண்டே இருக்கிறதே தவிர குறைந்ததாகத் தெரியவில்லை. இதை அமைச்சர் அவர்களும் நீதித் துறையும் நன்கு பரிசீலிக்க வேண்டும். அது போல் சிவில் வழக்குகளும் ஆயிரக் கணக்கில் இருந்து கொண்டிருக்கின்றன. நீதித் துறை செம்மையாகவும் சீராகவும் செயல்பட்டால்தான் நாட்டிலே அமைதியும், ஒழுங்கும் ஏற்படும். அதன் மூலமாக நாட்டு மக்கள் பயன் அடைய முடியுமென்று தெரிவித்து இதை அரசு உடனே கவனிக்க வேண்டு மென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

*திரு. வெ. அரங்கராசன் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறை மான்யத்தின் மீது பேசுவதற்கு வாய்ப்பு அளித்த தலைவர் அவர்களுக்கு நான் நன்றியைத் தெரி வித்துக் கொள்கிறேன். கடந்த ஆட்சிக் காலத்திலே கிராமப் புறங்களிலே கூட்டுறவு அங்காடிகள் திறக்கப்பட்டன. அந்த

[திரு. வெ. அரங்கராசன்] [1980 ஜூலை 14

அங்காடிகள் காலை 8 மணி முதல் மாலை 6 வரையில்தான்
இயங்கி வருகின்றன. ஆனால் கிராமப்புற மக்கள் வேலையை
முடித்துக் கொண்டு வயல் வெளியிலிருந்து இரவு 7 மணிக்குத்
தான் திரும்புகிறார்கள். இந்த நிலையில் அந்த மக்கள்
பயன் பெறத்தக்க வகையில் அந்த அங்காடிகளின் வேலை
நேரத்தை காலை 7 மணியிலிருந்து 11 மணி வரையிலும்,
மாலையில் 4 மணியிலிருந்து இரவு 8 மணி வரையிலும் அவைகள்
திறந்து இருக்குமாறு மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

அடுத்து, 1980-81 ஆம் ஆண்டு கிராம மக்களுக்கு கூட்டுறவு
சங்கங்களின் மூலமாக குறுகியகால கடனும் மத்திய
காலக் கடனும் மொத்தம் 132 கோடி ரூபாய் வழங்க இருப்பது
பாராட்டுக்குரியது. ஒரு தாயின் நிலையிலிருந்து இந்த அரசு
மக்களுக்குச் செய்து வருகின்ற காரியங்கள் மெய்மறக்கச்
செய்கிறது. நீண்ட காலக் கடனாக 17 கோடி ரூபாய் வழங்க
இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது நாட்டு மக்கள்
மேல் இந்த அரசு கொண்டிருக்கிற விசுவாசத்தைக் காட்டு
கிறது.

அடுத்து, அழுகும் பொருட்களைப் பாதுகாக்கும் வகையில்
4 குளிர் சாதன கிடங்குகள் கட்டப்படுவது பெரிதும் வரவேற்கத்
தக்கது.

திருச்சி மாவட்டத்திலே இருதயப்புரத்தில் சிறப்பு சிற்றங்காடி
திறக்க இருப்பதற்காக நான் அந்த மாவட்டத்தைச் சேர்ந்த சட்ட
மன்ற உறுப்பினர் என்ற முறையிலே எனது பாராட்டையும்
நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடந்த முறை கூட்டுறவு அமைப்புகளில் காலம் கடந்து
ஆலோசனைக் குழுக்கள் அமைக்கப்பட்டன. ஆலோசனைக்
குழு என்று பெயர்தானே தவிர குழு போடப்பட்ட 6 மாத
காலத்திலே எந்த ஒரு நிறுவனத்திலேயும் ஆலோசனைக் கூட்டம்
கூட்டப்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.
இந்த நிலையில் இந்தக் குழுக்களை அதிகாரம் அதிகமாக உள்ள
குழுக்களாக நியமித்து கூட்டுறவு நிறுவனங்களிலே உள்ள தனி
அதிகாரிகளை எடுத்துவிட்டு தலைவர், இயக்குநர் ஆகியவர்களை
அரசு நியமித்தால் மக்களுடன் தொடர்புடையவர்கள் பொறுப்
புக்கு வருவதால் ஏராளமான நன்மைகளைச் செய்ய முடியும்.
அந்த நிறுவனங்களும் எந்த நோக்கத்திற்காக அமைக்கப்பட்ட
னவோ அந்த நோக்கம் ஈடேறும் வகையிலே நடைபெறும் என்
பதை நான் வேண்டுகோளாக விடுக்கிறேன்.



1980 ஜூலை 14] [திரு. வெ. அரங்கராசன்]

இப்போது கூட்டுறவு நிறுவனங்களிலே கடன் வழங்குவதற்
காக 3 டயர் சிஸ்டம் நடைமுறையில் இருந்து வருகிறது. அதை
மாற்றிவிட்டு 2 டயர் சிஸ்டமாகக் கொண்டு வந்தால் மிகவும்
பயனுள்ளதாக இருக்கும். 3 டயர் சிஸ்டத்திலே ரிசர்வ் பாங்க்
மாநில வங்கிக்கு கொடுத்து அவர்கள் 2 சதவிகித வட்டியை
உயர்த்தி மாவட்ட கூட்டுறவு வங்கிகளுக்குக் கொடுக்கிறார்கள்.
பிறகு அந்த மாவட்ட கூட்டுறவு வங்கிகள் 2½ சதவிகித வட்டியை
உயர்த்தி கிராமக் கூட்டுறவு சங்கங்களுக்கு கொடுக்கிறார்கள்.
இதனால் வட்டி விகிதம் அதிகமாகிக்கொண்டு போகிறது. இந்த
முறையை மாற்றினால் ரிசர்வ் பாங்க் மாநில வங்கிக்கு கொடுத்து
பிறகு அவைகள் நேரடியாக இதன் கிளைகளாக மத்திய வங்கி
யிலிருந்து கிராம கூட்டுறவு வங்கிகளுக்குக் கடன் கொடுக்கப்
பட்டால் விவசாயிகளுக்கு 2 சதவீதம் வட்டி குறையும். அதைத்
தான் விவசாய சங்கத்தைச் சேர்ந்தவர்களும் கோரி வருகிறார்
கள். அந்த முறையிலே 2 டயர் சிஸ்டத்தை ஏற்படுத்திக்
கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்
கிறேன்.

அடுத்து பயிர்ப் பாதுகாப்பு இன்ஷூரன்ஸ் திட்டம் இருக்கி
றது. ஒரு இடத்திலே ஒருவருடைய நிலத்தை மட்டும் பார்த்து
விட்டு ஸ்டேட்டிஸ்டிக்கல் டிபார்ட்மெண்ட் பயிர்கள் எல்லாம்
நல்ல முறையிலே இருக்கின்றன என்று அறிக்கையைக் கொடுத்து
விடுகிறார்கள். அது சரியல்ல, அப்படிக் கொடுத்து விடுவதால்
அந்தத் திட்டம் மக்களுக்குப் பயனளிக்கவில்லை. ஆகவே இன்
ஷூரன்ஸ் செய்த எல்லோருடைய நிலத்தையும் பார்வையிட்டு
அறிக்கை கொடுத்தால்தான் அதன் மூலம் அவர்களுக்குப் பயன்
கிடைக்கும். ஆகவே அந்த வகையிலே அரசு வழிவகை செய்ய
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மலைவாழ் பழங்குடி மக்கள் கடன்கள் முழுவதையும் அரசு
தள்ளுபடி செய்ய வேண்டும். ரிசர்வ் வங்கி நலிந்த பிரிவினருக்காக
கடன் 20 சதவீதம் வழங்கியது. தமிழக விவசாயக் கூட்டுறவுச்
சங்கம் 49 சதவீதம் வழங்கியுள்ளது. பழங்குடி மக்களுக்கு
கடன் மானியம் 50 சதவீதம் கொடுக்கப்படுவதை நான்
பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

அடுத்து, இந்த அரசு கட்டுப்பாட்டுத் துணிகள், சிமின்ட்,
மண்ணெண்ணெய் ஆகியவற்றை மக்களுக்குக் கூட்டுறவுச் சங்கம்
மூலம் விநியோகம் செய்வதை நான் பாராட்டுகிறேன். அதோடு
தனி நபர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள லைசென்ஸ்களையும்
ரத்து செய்து பூரணமாக கூட்டுறவு சங்கங்கள் மூலமாக அவற்றை
விநியோகம் செய்ய வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

D II A 154—6

தற்சமயம் மாநிலப் பதிவாளருக்கு, 119-ஏ-பிரிவு முழு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர் எதை வேண்டுமானாலும் செய்யக் கூடிய அளவிற்குச் சர்வ சுதந்திரமான அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த அதிகாரங்களில் சில அதிகாரங்களைக் குறைக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

கிராமத்திற்கு ஒரு அங்காடி என்ற முறையில் திறக்கப்பட்டு வரும் அங்காடிகளில் உள்ள விற்பனையாளர்களுக்கு ஊதியம் மாதம் 100 ரூபாய் தான் கொடுத்து வருகிறார்கள். அந்தத் தொகையை உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களுக்குச் சம்பளப் பணம் மாதாமாதம் கொடுக்கக்கூட கடன் வசூலாகாத நிலைமை இருக்கிறது. அந்த ஊழியர்கள் மாதாமாதம் சம்பளம் பெற மானியம் கொடுக்கின்ற திட்டம் ஏதாவது பரிசீலனையில் இருக்கிறதா என்று கேட்டு, அவ்வாறு திட்டம் இருந்தால் அதை விரைவில் நடைமுறைப்படுத்த வேண்டுமென்று கேட்டு, இங்கே பேசுவதற்குச் சந்தர்ப்பம் கொடுத்தமைக்காக நன்றி கூறி, விடைபெறுகிறேன், வணக்கம்.

*திரு. கே. ஆர். சுந்தரம்: சட்டப்பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையின் மீது முதன்முதலாக இந்த மாமன்றத்திலே பேசுகிறேன். மாண்புமிகு அமைச்சரவர்கள் சமர்ப்பித்த கூட்டுறவு, நீதி நிர்வாகம், சிறைச் சாலைகள் ஆகிய மானியக் கோரிக்கைகளின் மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்லிகொள்ள விரும்புகிறேன்.

கூட்டுறவுத் துறையில் இன்றைக்குப் பல்வேறு அமைப்புகள் தமிழகத்தில் இருக்கின்றன. எனக்கு முன் பேசிய சில உறுப்பினர்கள் குறிப்பிட்டதைப்போல, கிராமக் கூட்டுறவுச் சங்கத்தில் பணியாற்றும் ஊழியர்களுக்கு 100 ரூபாயும், தாலுக்கா மட்டத்திலேயும், மாவட்ட மட்டத்திலேயும் உள்ள அங்காடிகளில் 150 ரூபாயும், 200 ரூபாய் என்ற முறையிலேயும், நகர்ப்புறங்களில் பணியாற்றுகின்றவர்களுக்கு 300 ரூபாய் சம்பளம் என்ற முறையில் இருக்கின்றன. இவர்கள் அனைவரும் எஸ்.எஸ். எல். சி. படித்துவிட்டு, கூட்டுறவுத் துறையிலே பயிற்சி பெற்றவர்கள்தான். ஆனால் இவர்களின் சம்பளத்திலே மட்டும் வித்தியாசம் இருக்கிறது. இதை முறைப்படுத்தி, சீர்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.





அதுமட்டுமல்லாமல், கிராமப்புறங்களில் உள்ள கடன் நாணயச் சங்கங்களிலே பணியாற்றுபவர்களுக்குப் பல மாதங்களாகச் சம்பளம் கொடுக்கப்படவில்லை. கூட்டுறவுச் சங்கத்திலே கடன்களை வசூலிக்க முடியாத நிலையிலே அங்கே பணியாற்றுகின்ற ஊழியர்களுக்கு 6 மாதம், 9 மாதம் என்ற அளவிற்குப் பல மாவட்டங்களில் சம்பளம் பாக்கியிருக்கிறது. ஆகவே, அத்தகைய முறையில் இருக்கின்ற ஊழியர்களுக்கு அரசு கூட்டுறவுத் துறையில், வங்கியின் மூலமாக மானியம் கொடுத்து அவர்களுக்கு முறையாகச் சம்பளம் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கூட்டுறவுத் துறையில் பல ஆண்டுகளாக பல ஸ்தாபனங்களில் தேர்தல் நடத்தப்படாமல் இருக்கின்ற நிலைமை உள்ளது. நான் அறிந்தவரையில், அரசு இன்றைக்கு அதற்காக சிறப்பான முறையில் சட்டம் கொண்டு வர இருப்பதாகத் தெரிகிறது. அதுவரையில் காலம் தாழ்ந்தாமல், உடனடியாக எல்லா ஸ்தாபனங்களுக்கும் தேர்தல் நடத்திவிட்டு, அதற்குப் பிறகு வேண்டுமானால் சட்ட மாறுதலைச் செய்து, உகந்த முறையில் செய்யலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே, இன்றைக்கு இருக்கின்ற கூட்டுறவு முறையில் சீரழிந்த நிலையில் இருக்கிறது என்பதை அரசு உணர்ந்திருக்கும் என்று நான் நம்புகிறேன். எனவே, உடனடியாக அதைச் சீர்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், அம்பாசமுத்திரம் பகுதியில் உள்ள விக்கிரமசிங்கபுரத்தில் இருக்கின்ற கூட்டுறவுச் சங்கத்தில் கோரம் இல்லை என்று சூப்பர்சீட் செய்திருந்தார்கள். அங்கே தேர்தல் நடத்த வேண்டுமென்று பலமுறை கேட்டும், தேர்தல் நடைபெறாமல், அது சரிவர இயங்காமல் இருக்கிறது என்பதை நான் உதாரணத்திற்காக இங்கே சொல்கிறேன். இப்படிப்பட்ட நிலைமை தமிழகத்தில் பலயிடங்களில் இருக்கின்றன. இவைகளுக்கு உடனடியாகத் தேர்தல் நடத்த வேண்டும்.

கூட்டுறவுக் கடன் நிவாரணம் செய்திருக்கிறோம். அத்தகையவர்களுக்கு மீண்டும் கடன் கிடைப்பதற்கான வழிவகைகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஐந்து ஏக்கர்களுக்கு உட்பட்ட விவசாயிகளுக்குப் பயிர் செய்ய கடன் கொடுக்கும் நேரத்தில், இன்றைக்கு நாட்டில் விவசாய உற்பத்திக்கு அதிகச் செலவு ஏற்பட்டிருக்கின்ற நேரத்தில், விவசாயிகளுக்குக் கட்டுப்படியாகாத விலை இருப்பதால், அத்தகைய சிறு விவசாயிகளுக்கு அரசாங்கம் கடனாகக் கொடுக்கும் பணத்திற்குத் தர வேண்டிய வட்டியை, அரசாங்கமே மானியமாகக்

கொடுத்து, அவர்களுக்கு வட்டியில்லாமல் இருப்பதற்கான நடவடிக்கைகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்பொழுதுதான் சிறு விவசாயிகள் தங்கள் தொழிலைச் சிறப்பாகச் செய்ய முடியும். இந்த முறையில் மேற்கு வங்காளத்தில் செய்திருப்பதாக அறிகிறேன். அதைக் கவனித்து, கூட்டுறவு முறையில் கிராமங்களிலுள்ள சிறு விவசாயிகளுக்குக் கடனுக்கான வட்டியை மானியமாகக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோன்று சட்டத்திலே எடுத்துக்கொண்டால், பீடித் தொழில், கைத்தறி நெசவுத் தொழில், மோட்டார் தொழில் போன்ற தொழிலாளர்களுக்குப் பல சட்டங்கள் நிறைவேற்றப் பட்டிருந்தாலும், அதைச் சரியாக அமல்படுத்தாததால் அந்தப் பலன் அவர்களுக்குக் கிட்டவில்லை. எனவே, அந்தத் தொழிலாளர்களுக்குப் புதிய வாழ்வு அளிக்கின்ற வகையில் சட்டம் இயற்ற வேண்டுமென்று பணிவோடு நான் கேட்டுக் கொள்கிறேன்.

கோர்ட்டுகளைப்பற்றி எடுத்துக்கொண்டால், பல கேஸ்கள் தேங்கியிருப்பதாக எனக்கு முன்னால் பேசியவர்கள் சிலர் குறிப்பிட்டார்கள். ஆகவே, இன்றைக்குச் சாதாரண அடிமட்டத்திலே உள்ள மக்கள் கோர்ட்டுக்குச் சென்று தங்களுடைய உரிமைகளைப் பெறுவதற்கு உரிமையில்லாமல் இருப்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

[முற்பகல் 10-30.]

சென்னை உயர்நீதிமன்றத்திற்கோ, மற்ற நீதி மன்றங்களுக்கோ வழக்குகளைக் கொண்டு செல்ல வேண்டுமென்றால், கோர்ட் கட்டணங்களும், மற்றுமுள்ள கட்டணங்களும் உயர்வாக இருக்கின்றன. சாதாரண தொழிலாளி, ரூ. 300, ரூ. 1,000 செலவழித்து, நீதிமன்றங்களுக்குச் செல்ல முடியாத நிலைமை இருக்கிறது. ஆகவே, சாதாரண தொழிலாளி நீதி மன்றங்களுக்குச் சென்று வழக்கு நடத்தும் முறையில் நீதிமன்றக் கட்டணங்களைக் குறைக்க அரசு வழி வகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு, இன்றைக்குப் பல்வேறு கோர்ட்டுகளிலே ஆயிரக் கணக்கான கேஸ்கள் தேங்கிக் கிடக்கிற நிலைமை இருக்கிறது. கிராமப் புறத்திலேயிருந்தும், நகரப் புறத்திலேயிருந்தும் சாதாரண மக்கள் தாவாக்களுக்காகவே இன்றைக்குக் கோர்ட்டுக்குப் போக வேண்டிய நிலைமை இருக்கிறது. குறிப்பாக, மண விலக்கு வழக்குகளை எடுத்துக் கொண்டோமானால் இரண்டாந்



தர மாஜிஸ்திரேட்டு கோர்ட்டுகளிலிருந்து வழக்குகளை முதல் தர மாஜிஸ்திரேட்டு கோர்ட்டுகளுக்கு மாற்றி விட்டதனால், ஆயிரக்கணக்கான வழக்குகள் தேங்கியிருக்கின்றன.

குறிப்பாக, வட ஆற்காடு மாவட்டத்திலே, வேலூரில் உள்ள முதல்தர மாஜிஸ்திரேட்டு கோர்ட்டில், அந்த வழக்குகளைக் கேட்டு வாய்தா போடுகிற வேலையைத்தான் அவர்கள் செய்ய முடிகிறதே தவிர, கேஸ்களை நடத்த முடியாத நிலைமையிருக்கிறது. எனக்குக் கிடைத்திருக்கிற ஒரு தகவலின்படி சேலம் மாவட்டத்தில் சங்ககிரி, திருச்செங்கோடு ஆகிய பகுதிகளிலே, புதிய கோர்ட்டுகள் அமைப்பதற்கு 10 ஆண்டுகளுக்கு முன்பாகவே அரசு முயற்சிகள் எடுத்திருந்தும், 10 ஆண்டுகளாக அந்தக் கோர்ட்டுகள் அமைக்கப்படாமலிருக்கின்றன. அதை இந்த அரசு கவனித்து, அங்கு கோர்ட்டுகளை அமைத்து, அந்தப் பகுதி மக்கள் பயன்படுகிற வகையிலே ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வழக்குகளை விரைவாக முடிப்பதற்கும் மக்களுக்கும் நீதி எளிதில் கிடைப்பதற்கும் வகைசெய்ய, தென் மாவட்டங்களில் உயர்நீதிமன்றத்தின் ஒரு பிரிவை ஏற்படுத்தி, வழக்குகளை விரைவில் பைசல் செய்ய ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். குறிப்பாக, மதுரை, திருநெல்வேலி போன்ற ஏதாவது ஒரு மாவட்டத்தில் ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக, நான் சொல்ல விரும்புவது, சிறைச் சாலைகளைப் பற்றி. எனக்குத் தெரிந்த வரையில், கடந்த 40, 50 ஆண்டு காலமாக ஆங்கிலேயர் ஏற்படுத்திய முறையில் எவ்வித மாற்றமும், சிறைச்சாலைகளைப் பொறுத்த வரையில் இல்லாமலிருக்கிறது. என் தொகுதியிலே ஓட்டு கேட்கச் செல்லும்போது, குடிக்கத் தண்ணீர் இல்லை, குடியிருக்க வீட்டு வசதி இல்லை, விளக்கு வசதி இல்லை என்றெல்லாம் சொன்னார்கள். அங்கிருந்து சிறைக்கு வந்தால், அதே நிலைதான் சிறைக்குள்ளும் இருக்கிறது: தண்ணீர் வசதி இல்லை, குளிக்க வசதி இல்லை, விளக்கு வசதி இல்லை, கழிப்பிட வசதி இல்லை என்று சொல்கிறார்கள். இப்படிப்பட்ட நிலைமையிலே, சிறைக்குள்ளே, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் அடிமைப்படுத்திய, கொடுமை செய்த நிலை இன்றைக்கும் தொடர்ந்து இருந்து வருகிறது என்று நான் சொல்ல விரும்புகிறேன்.

சிறையிலேயிருக்கிற ஆயுள் தண்டனை கைதிகள், 14 ஆண்டுகள் தண்டனையைப் பூர்த்தி செய்த பிறகுதான் விடுதலை செய்யப்படுகிற நிலைமையிருக்கிறது என்று அறிகிறேன். இதை

மாற்றக் கூடாது என்று மத்திய அரசு தலையிட்டிருப்பதாக அறிகிறேன். மத்திய அரசு என்ன சொல்லியிருந்தாலும், 14 ஆண்டுகள் என்றிருப்பதை, 10 ஆண்டுகள் பூர்த்தி செய்தாலே விடுதலை செய்யலாம் என்ற முறையில் குறைக்க வேண்டும். அதற்கென, ஒரு ஆலோசனைக் குழு இருப்பதாக அறிகிறேன். அதன்மூலம், அந்தகைய ஏற்பாடுகளைச் சீக்கிரம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த காலங்களிலே, பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் விழாவுக்காக, மூதறிஞர் ராஜாஜி பிறந்த நாள் விழாவுக்காக, சிறையிலிருக்கும் கைதிகளுக்கு லீவ் வசதி செய்து கொடுக்கப்பட்டது. தண்டனையும் குறைக்கப்பட்டிருந்தது. இப்பொழுது புதிய அரசு பொறுப்பேற்றிருக்கிற இந்த நேரத்தில், ஆயுள் தண்டனை அடைந்து 10 ஆண்டுகள் தண்டனைக் காலத்தைப் பூர்த்தி செய்திருக்கிற கைதிகளை விடுதலை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அண்டை மாநிலமான கேரளாவிலே, 8 ஆண்டுகள் தண்டனை அனுபவித்த அனைவரையும் விடுதலை செய்ய உத்தரவிட்டிருக்கிறார்கள். அதே போல், இங்கும், இந்தப் புதிய அரசு பதவி ஏற்றதன் சமிக்ஞையாக, இங்கும் தண்டனைக் காலத்தைக் குறைத்து, அவர்களை விடுதலை செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, சிறையிலே கொடுக்கப்படுகிற உணவு மிக மோசமான உணவு என்று எனக்குத் தெரியும். வேலூர் சிறையிலே என் உறவினரைப் பார்க்க, நான் போயிருந்தபோது, அங்கு அளிக்கப்படுகிற உணவிலே கல்லும் மண்ணும் இருக்கிறது என்று சொன்னார்கள். 1976லே நானே, சிறையிலே சிறிது காலம் இருந்தேன். அப்பொழுது கொடுக்கப்பட்ட உணவு, காலையிலே சோள கஞ்சி, சோள உப்புமா, சோள இட்லி, மாலை சாப்பிடவே முடியாது. அதை இன்றைக்கு மாற்றி, தமிழகத்திலே அரிசி போதுமான அளவு இருக்கிற காரணத்தாலே, அதைத் காலையிலே அரிசி கஞ்சியும், பகலிலே அரிசி சாப்பாடும் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சிறைச்சாலைகளை ரெவியூ செய்ய, மேலதிகாரிகள் சிறைச்சாலையைப் பார்வையிட வருவார்கள். அப்பொழுது, அவர்களிடத்திலே ஏதாவது குறையைக் கைதிகள் சொல்லிவிட்டால், அதிகாரிகள் போன பிறகு, அந்தக் கைதிகளைப் படுத்துகிற கொடுமை சொல்லி முடியாது. நாங்களே கூட, மிசா கைதிகளாக இருந்த காலத்திலே பயந்து இருக்க வேண்டிய நிலையிருந்தது. குற்றம் செய்து தண்டனை அடைந்த கைதிகளைப் போல், அரசியல் கைதிகளான எங்களை நடத்துகிற நிலைமை முறை இருக்கிறது.

## உள்ளடக்கம்

14—7—1980


| | பக்கங்கள். |
|---|---|
| வினாக்கள்-விடைகள்— | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் .. .. | 783—787 |
| கவன ஈர்ப்புகள்— | |
| (அ) சென்னை கொருக்குப்பேட்டை தீ விபத்து .. .. .. .. | 788—791 |
| (ஆ) நாகர்கோயிலில் நெசவுத் தொழிலாளர்கள் கூலி உயர்வு கேட்டு நடத்தும் போராட்டம் .. .. .. .. | 791—794 |
| தகவல் கோரல்— | |
| ஒத்திவைப்புத் தீர்மான அறிவிப்புகள் ... | 794—795 |
| அரசினர் சட்ட முன்வடிவு— | |
| நிலச்சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்ச வரம்பு கட்டுதல்) இரண்டாவது திருத்த சட்ட முன்வடிவு, 1980.. .. .. | 795—800 |
| 5. வரவு செலவுத் திட்டம், 1980–81 வாக்கெடுப்பு (தொடர்ச்சி)— | |
| (அ) கோரிக்கை எண். 13—நீதி நிர்வாகம்.. | 801—802 |
| (ஆ) கோரிக்கை எண் 14—சிறைச்சாலைகள் | 802—803 |
| (இ) கோரிக்கை எண். 23—கூட்டுறவு .. | 803—804 |
| மாண்புமிகு திரு. சி. பொன்னையன் .. | 892—912 |
| திரு. கு. பா. பழனியப்பன் .. .. .. | 805—810 |
| டாக்டர் கே. சமரசம் .. .. .. | 810—814 |
| திரு. இல. பலராமன் .. .. .. | 814—819 |
| திரு. வெ. அரங்கராசன் .. .. .. | 819—822 |
| திரு. கே. ஆர். சுந்தரம் .. .. .. | 822—828 |
| திரு. பி. எம். வெங்கடேசன்.. .. .. | 828—829 |
| திரு. இரா. கருப்பையா .. .. .. | 829—835 |
| திரு. எம். சின்னராஜ் .. .. .. | 836—839 |
| திரு. எஸ். ஆண்டித்தேவர் .. .. .. | 839—844 |

[திரு. கே. ஆர். சுந்தரம்] [1980 ஜூலை 14

மாற்றக் கூடாது என்று மத்திய அரசு நிலைமைப்படுத்தியதாக அறிகிறேன். மத்திய அரசு என்ன சொல்லியிருந்தாலும், 14 ஆண்டுகள் என்றிருப்பதை, 10 ஆண்டுகள் பூர்த்தி செய்தாலே விடுதலை செய்யலாம் என்ற முறையில் குறைக்க வேண்டும். அதற்கென, ஒரு ஆலோசனைக் குழு இருப்பதாக அறிகிறேன். அதன்மூலம், அந்தக் காரியங்களைச் சீக்கிரம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த காலங்களிலே, பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் விழாவுக்காக, பெருந்தலைவர் காமராஜ் பிறந்த நாள் விழாவுக்காக, சிறையிலிருந்தும் கைதிகளுக்கு லீவ் வசதி செய்து கொடுக்கப் பட்டது, தண்டனையும் குறைக்கப்பட்டிருந்தது. இப்பொழுது புதிய அரசு பொறுப்பேற்றிருக்கிற இந்த நேரத்தில், ஆயுள் தண்டனை அடைந்து 10 ஆண்டுகள் தண்டனைக் காலத்தைப் பூர்த்தி செய்திருக்கிற கைதிகளை விடுதலை செய்ய வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன். அண்டை மாநிலமான கேரளாவிலே, 8 ஆண்டுகள் தண்டனை அனுபவித்த அனை வரையும் விடுதலை செய்ய உத்தரவிட்டிருக்கிறார்கள். அதே போல், இங்கும், இந்தப் புதிய அரசு பதவி ஏற்றதன் சமிக்ஞை யாக, இங்கும் தண்டனைக் காலத்தைக் குறைத்து, அவர்களை விடுதலை செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, சிறையிலே கொடுக்கப்படுகிற உணவு மிக மோச மான உணவு என்று எனக்குத் தெரியும். வேலூர் சிறையிலே என் உறவினரைப் பார்க்க, நான் போயிருந்தபோது, அங்கு அளிக்கப்படுகிற உணவிலே கல்லும் மண்ணும் இருக்கிறது என்று சொன்னார்கள். 1976லே நானே, சிறையிலே சிறிது காலம் இருந்தேன். அப்பொழுது கொடுக்கப்பட்ட உணவு, காலை யிலே சோளக் கஞ்சி, சோள உப்புமா, சோள இட்லி, அதைச் சாப்பிடவே முடியாது. அதை இன்றைக்கு மாற்றி, தமிழகத் திலே அரிசி போதுமான அளவு இருக்கிற காரணத்தாலே, காலையிலே அரிசி கஞ்சியும், பகலிலே அரிசி சாப்பாடும் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சிறைச்சாலைகளை ரெவியூ செய்ய, மேலதிகாரிகள் சிறைச் சாலையைப் பார்வையிட வருவார்கள். அப்பொழுது, அவர் களிடத்திலே ஏதாவது குறையைக் கைதிகள் சொல்லிவிட்டால், அதிகாரிகள் போன பிறகு, அந்தக் கைதிகளைப் படுத்துகிற கொடுமை சொல்லி முடியாது. நாங்களே கூட, மிசா கைதி களாக இருந்த காலத்திலே பயந்து இருக்க வேண்டிய நிலை யிருந்தது. குற்றம் செய்து தண்டனை அடைந்த கைதிகளைப் போல், அரசியல் கைதிகளான எங்களை நடத்துகிற நிலைமை முறை இருக்கிறது.

உள்ளடக்கம்

14—7—1980


| | | பக்கங்கள். |
|---|---|---|
| 1. | வினாக்கள்-விடைகள்— | |
| | உடுக்குறியிட்ட வினாக்கள் .. .. | 783—787 |
| 2. | கவன ஈர்ப்புகள்— | |
| | (அ) சென்னை கொருக்குப்பேட்டை தீ விபத்து .. .. .. .. .. | 788—791 |
| | (ஆ) நாகர்கோயிலில் நெசவுத் தொழிலாளர்கள் கூலி உயர்வு கேட்டு நடத்தும் போராட்டம் .. .. .. .. | 791—794 |
| 3. | தகவல் கோரல்— | |
| | ஒத்திவைப்புத் தீர்மான அறிவிப்புகள் ... | 794—795 |
| 4. | அரசினர் சட்ட முன்வடிவு— | |
| | நிலச்சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்ச வரம்பு கட்டுதல்) இரண்டாவது திருத்த சட்ட முன்வடிவு, 1980.. .. .. | 795—800 |
| 5. | வரவு செலவுத் திட்டம், 1980-81 வாக்கெடுப்பு (தொடர்ச்சி)— | |
| | (அ) கோரிக்கை எண். 13—நீதி நிர்வாகம்.. | 801—802 |
| | (ஆ) கோரிக்கை எண் 14—சிறைச்சாலைகள் | 802—803 |
| | (இ) கோரிக்கை எண். 23—கூட்டுறவு .. | 803—804 |
| | மாண்புமிகு திரு. சி. பொன்னையன் .. | 892—912 |
| | திரு. கு. பா. பழனியப்பன் .. .. .. | 805—810 |
| | டாக்டர் கே. சமரசம் .. .. .. | 810—814 |
| | திரு. இல. பலராமன் .. .. .. | 814—819 |
| | திரு. வெ. அரங்கராசன் .. .. .. | 819—822 |
| | திரு. கே. ஆர். சுந்தரம் .. .. .. | 822—828 |
| | திரு. பி. எம். வெங்கடேசன்.. .. .. | 828—829 |
| | திரு. இரா. கருப்பையா .. .. .. | 829—835 |
| | திரு. எம். சின்னராஜ் .. .. .. | 836—839 |
| | திரு. எஸ். ஆண்டித்தேவர் .. .. .. | 839—844 |

5. வரவு செலவுத் திட்டம், 1980–81 வாக்கெடுப்பு —தொடர்ச்சி. — பக்கங்கள்

திரு. பி. முகமது இஸ்மாயில் .. .. 844—[illegible]
திரு. ந. குலசேகர பாண்டியன் .. .. 848—851
திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன் .. .. 851—8[illegible]5
திரு. நன்னிலம் ஆ. கலையரசன் .. .. [illegible]—859
திரு. கே. நாராயணசாமி .. .. 859—[illegible]
திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் .. .. 862—[illegible]
மாண்புமிகு திரு எஸ். டி. சோமசுந்தரம் .. .. 863, 864, [illegible]
டாக்டர் கே. சௌரிராஜன் .. .. 866—8[illegible]
திரு. சேலம் மு. ஆறுமுகம் .. .. 868—872
திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் .. .. 873—87[illegible]
திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் .. .. 875—878
திரு. அ. ரகுமான்கான் .. .. 878—89[illegible]
மாண்புமிகு திரு எம். ஜி. இராமச்சந்திரன் .. .. 888

6. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள் .. .. 194




அரசியல் காரணங்களுக்காக சிறைக்குச் செல்லுகிறவர்கள் பல்வேறு குற்றங்களுக்காக சிறைக்குச் செல்பவர்களுடன் சேர்த்து வைக்கப்படுகிற கொடுமை இருக்கிறது. எனவே அரசியல் கைதிகள் அரசியல் கைதிகளாக நடத்தப்படவேண்டும். நகர்ப்புறங்களில் இரவு நேரங்களில் சென்றால், அவர்களை சந்தேகக் கேஸ் என்று பிடித்துப் போகின்ற நிலைமை இருக்கிறது. அப்படிப்பட்ட வழக்குகள் இன்றைக்கு நிறைய கோர்ட்டுகளில் இருக்கின்றன. அவைகளைத் தீர்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்தக் கோரிக்கைகளைக் கேட்கிற இதே நேரத்தில், திருச்சி சிறைச்சாலையைப் பற்றி இந்த மன்றத்தில் ஏற்கனவே விவாதிக்கப்பட்டதாகக் கேள்விப்படுகிறேன். அதன்படி திருச்சியிலே உள்ள கைதிகள் வேலூர் சிறைக்கு மாற்றப்பட்டிருக்கிறார்கள். அப்படி வந்த அந்தக் கைதிகளைக் கொடுமைப்படுத்துகிறார்கள். சாதாரணக் கைதிகளுடன் சேர்த்து இவர்களையும் கொடுமைப் படுத்துகின்ற நிலைமை இருக்கிறது. ஆகவே சிறையில் இருக்கிற அரசியல் கைதிகளைப் பாரபட்சம் இல்லாமல் நடத்த வேண்டும் என்றும், நக்ஸலைட் கைதிகளை விடுதலை செய்ய வேண்டும் என்றும் ஆலோசனை செய்ய வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

ஏற்கனவே சிறையில் இருந்த கைதிகளுக்கு மருத்துவ விடுப்பு அவசரகால விடுமுறை என்று 15 நாட்கள் இருந்தன. அதை இப்போது 7 நாட்களாகக் குறைத்திருக்கிறார்கள். அதை ஏற்கனவே இருந்ததுதைப் போல 15 நாட்களாக உயர்த்திக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து 2, 3 வருடங்கள் சிறிய தண்டனைப் பெற்றவர்களுக்கு பரோல் விடுமுறை என்று ஒன்று உண்டு. அப்படி பரோலில் வருவதற்கு வெளியே உள்ள போலீஸ் அதிகாரிகளிடம் ஆலோசனைக் கேட்க வேண்டும் என்று இருக்கிறது. போலிசாரின் ஆலோசனை எப்படி இருக்கும் என்ற முறை நமக்கு நன்றாகத் தெரியும். எனவே அந்த போலிஸ் சிபாரிசு இல்லாமல் பரோலில் விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே போன்று சிறைச்சாலைகளிலே இட வசதி என்று எடுத்துக் கொண்டால் மிகவும் மோசமாக இருக்கின்றது. திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள சப்ஜெயிலிலும், வேலூர் சப் ஜெயிலிலும் இட வசதி மிகவும் மோசமாக இருக்கின்றது இப்போது வேலூர் சிசைக்குள்ளே இருக்கின்ற சப்ஜெயிலில் சாரணைக் கைதிகளை வைத்திருக்கிறார்கள். சாதாரண குற்றம் புரிந்தவர்களோடு சேர்த்து விசாரணைக் கைதிகளையும்

[திரு. கே. ஆர். [illegible]] [1980 ஜூலை 14

வைத்திருக்கிறார்கள். அங்கே ஒரு [illegible] இருக்கிறது. எந்தவிதமான வசதியும் இல்லை. குடிநீர் வசதியோ, குளிக்கும் வசதியோ கிடையாது. இந்த மாதிரி பல்வேறு மாவட்டங்களில் உள்ள சப் ஜெயில்களில் இட வசதி இல்லை. குறிப்பாக திருநெல்வேலி மாவட்டத்தில் இட வசதி இல்லை. நாங்குநேரி, நாகர்கோவில், போன்ற இடங்களில் [illegible] சிறைகளில் போதிய இடங்கள் இருக்கிறது. அதைப் பெருக்க வசதி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து சிறை வார்டர்கள். அவர்கள் மிகவும் நலிந்த நிலையில் இருக்கிறார்கள். காவல் துறையில் உள்ளவர்களுக்கு என்னவளவு சம்பளம்? அவர்களுக்கு இந்த அளவுக்குச் சம்பளம் கொடுக்க வேண்டும். அவர்களை நினைக்கும்போது எனக்கு ஒரு பாட்டு நினைவுக்கு வருகிறது. "எட்டடிக் குச்சுக்குள்ளே எத்தனை நாளிருப்போம் முருகா, ஒரு மச்சுவீடாயினும் கட்டித் தர வேண்டும் முருகா", என்று [illegible] பாடினார்கள். அதைப் போல அவர்களுக்கு எந்தவிதமான வசதியும் இல்லாமல் இருக்கின்றனர். அவர்களுக்கு மின் விளக்கு வசதி கிடையாது, குடிநீர் வசதி கிடையாது, அவர்களுக்குச் சரியான சம்பளமும் கிடையாது. ஆனால் 24 மணி நேரமும் வேலை செய்கிறார்கள். அவர்களும் சிறையிலேயே வாழ்க்கை நடத்துகிறார்கள். அவர்களுக்கு 8 மணி நேரம் வேலை செய்ய அனுமதிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இந்த அவையிலே பேச வாய்ப்பளித்தமைக்காக மீண்டும் நன்றியைக் கூறி விடை பெற்றுக் கொள்கிறேன்.

(மணி பகல் 10-10)

திரு. பி. எம். வெங்கடேசன்: மாண்புமிகு மாமன்றத்தின் மாற்றுத் தலைவர் அவர்களுக்கும், இந்த மாமன்றத்தில் பேச வாய்ப்பளித்த பெரணமல்லூர் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும், என் இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களுக்கும் என் முதற்கண் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழகத்திலே வடஆற்காடு மாவட்டத்தில் பெரணமல்லூர் தொகுதி மிகவும் பின் தங்கிய நிலையில் இருக்கிறது. பெரணமல்லூர் கூட்டுறவு வங்கி மூலம் சிறு விவசாயிகளுக்கு நீண்ட காலக் கடன் வழங்க இந்த அரசு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். பெரணமல்லூர் ஒன்றிய கூட்டுறவு நிலவள வங்கியில் சிறு விவசாயிகளுக்குள்ள வறுமை நீங்கிட மாடுகள் வாங்கவும், உழவு மாடுகள் வாங்கவும் நீண்ட காலக் கடன்கள் மானியத் தொகையுடன் கொடுக்க அரசு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இந்த பெரணமல்லூர் ஒன்றியத்தில் கூட்டுறவு பால் வழங்கும் சங்கம்



1980 ஜூலை 14] [திரு. பி. எம். வெங்கடேசன்]

ஏற்படுத்தி ஏழைகள் வறுமை நீங்கிட இந்த அரசு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மேற்படி கூட்டுறவு வங்கியில் நெசவாளர்களுக்கும் வறுமை நீங்கிட கடன் உதவி அளித்து அதன் மூலம் நெசவாளர்கள் நல்ல முறையில் வாழ வழி வகை செய்ய வேண்டும் என்று கேட்டு, இந்தக் கூட்டுறவு மானியத்தின் மீது பேச வாய்ப்பளித்த தலைவருக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

*திரு. இரா. கருப்பையா: மாண்புமிகு சட்டப்பேரவை மாற்றுத் தலைவர்களே, 'நீதி-நிர்வாகம்' என்ற தலைப்பின் கீழ் கோரப்பட்டுள்ள மானியக் கோரிக்கை மீது என்னுடைய கருத்துக்களை முதலில் தெரிவிக்க விரும்புகிறேன். எங்கும் தமிழ், எதிலும் தமிழ், எல்லாவற்றிலும் தமிழ் என்று முழங்கிக் கொண்டு இருக்கிற இந்தக் காலத்திலே கூட, பல்வேறு நீதி மன்றங்களில் இன்றைக்கும் ஆங்கிலத்திலேயே தீர்ப்புகள் வழங்கு வது என்ற நிலை இருந்து வருகிறது. தமிழக அரசு கொள்கை அளவில் தமிழிலேயே தீர்ப்புகள் வழங்கவேண்டும் என்று ஏற்றுக் கொண்டு இருந்தாலும், இன்றைக்கு இந்த மாதிரி நிலை இருப் பதை மாற்றவேண்டும். அதை மாற்றி உடனடியாக தமிழிலேயே தீர்ப்புகள் வழங்குவதற்கு ஏற்பாடுகளைச் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நீதி சம்பந்தப்பட்டவரை, நீதி என்பது இன்றையதினம் சாதாரண மக்களுக்கு ஒரு மிகப்பெரும் கடினமான பொருளாக இருக்கிறது. அப்படி கடினமாக இருக்கிறது என்று சொல்லக் கூடிய நேரத்திலே, அது அவர்களுக்குக் கிடைக்கவில்லை என்ற அர்த்தத்தில் நான் கூறவில்லை. அதற்குப் பதிலாக, அவர்கள் நீதிமன்றங்களில் அலைக்கழிக்கபபடுகிறார்கள். எந்த வழக்காடு மன்றங்களுக்குச்சென்றாலும், அங்கே தீர்ப்புகளைப் பெறுவதற்குத் தாமதம் ஏற்படுகிறது. அந்த வழக்குகள் உடனடியாக பைசல் செய்யப்படுவது இல்லை. அதே மாதிரி தொழில் நீதி மன்றங் களாக இருந்தாலும், சாதாரண தொழிலாளி நீதி மன்றத் திற்குச் சென்றால், அந்த தாவா தீர்வதற்கு பல ஆண்டுகள் ஆகிறது. அது மட்டுமல்ல, தீர்ப்புப் பெறுவதற்கும் அலையாக அலைய வேண்டியிருக்கிறது. அதைப் போக்கக்கூடிய முறையில் துரிதமாக வழக்குகள் பைசல் ஆவதற்கு அரசு தகுந்த நடவடிக்கை களை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நீதி மக்களுக்கு அருகாமையில் கொண்டு செல்லும் வகையில், அதிகமான வழக்காடு மன்றங்களை ஏற்படுத்தவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். திருச்சியில் ஒரு தொழில் கோர்ட் ஏற்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையை இந்த நேரத்தில் நான் சமர்ப்பிக்க விரும்புகிறேன். குளித்தலை நகரம்—மணப் பாறை, முசிறி, துறையூர் தாலுக்காக்களுக்கு [illegible] இருக்

விஷேச நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்படி யா கின்றேன். அவர்களுடைய மனோபாவங்களில் மாற்றம் காணமுடியு றயில் கக்க பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே நேரத்தில் பல ஆண்டுகளாக சிறையிலே இருக்கக் களைத் கைதிகளுக்கு, அவர்கள் 5 ஆண்டுகளுக்கு மேல் சிறையில் ண்டும் தால், அவர்களுடைய விடுதலையைப் பரிசீலிக்க ஏற்கெனவே றனை. 'போர்டு' வைத்திருந்தார்கள்; இப்போது இல்லை. சமீபத்திலே அதைச் செயல்படுத்தாமல் விட்டிருக்கிறார்கள்; அதை மீண்டும் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நக்சலைட் என்ற பெயரால் இந்திய கம்யூனிஸ்ட்டுகள், மார்க் கிஸ்ட் கம்யூனிஸ்ட்டுகள், மற்ற அரசியல் கட்சிகளைச் சேர்ந்த வர்கள் எல்லாம் கைது செய்யப்பட்டு அவர்கள் சிறைக்கு செல்லக் கூடிய வாய்ப்பு இருக்கிறது. நக்சலைட் என்றால் அவர்கள் தனி ரகம் என்று கருதி, அவர்களுக்கு மிகுந்த தொல்லைகள் கொடுக்கப் படுகின்றன. அவர்களுக்கு இப்போது அளிக்கப்படுகின்ற 'ட்ரீட் மென்ட்' முறையை மாற்ற வேண்டும். நக்சலைட் என்ற பெய ரால் அவர்கள் பல்லாண்டுகளாக சிறையில் அடைக்கப்பட்டிருக் கிறார்கள். இன்றைக்கு சமூகத்தில் இருக்கிற மாற்றங்களைப் புரிந்துகொண்டு, அவர்களும் இந்த மாற்றங்களைப் புரிந்து கொண்டு வாழ்க்கை நடத்த வகை செய்ய வேண்டும். ஆகவே, பல்லாண்டுகளாக இருக்கிற நக்சலைட் கைதிகளை விடுதலை செய்ய ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[முற்பகல் 10-50]

அடுத்து கூட்டுறவு சம்பந்தமாக என்னுடைய கருத்தைத் தெரிவிக்க விரும்புகிறேன். கூட்டுறவு சங்கங்களும், கூட்டுறவு அமைப்புக்களும் பல ஆண்டுகளாகத் தனி அதிகாரிகளுடைய பொறுப்பிலே நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. உடனடியாக கூட்டுறவு அமைப்புக்களுக்கான தேர்தல்கள் நடத்தப்பட்டு ஜன நாயக முறையிலே அது செயல்படக்கூடிய நிலைமையை ஏற் படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். தனி அதிகாரி கள் இந்தக் கூட்டுறவு அமைப்புக்களை நடத்துகின்ற முறையே அலாதியானது. அவர்களுக்கு மக்களைப்பற்றிக் கவலை இல்லை. அங்குள்ள ஊழியர்களைப் பற்றிக் கவலை இல்லை. அந்த அமைப்புக்கள் லாபத்தில் நடைபெற வேண்டுமே என்ற கவலை யும் இல்லை. இதற்குக் காரணம் என்னவென்றால் அவர்களைப் பொறுத்தவரை மாதாமாதம் சம்பளம் வந்துவிடுகிறது. நான் பல அதிகாரிகளிடத்திலே நன்றாகப் பழகியிருக்கிறேன். அவர் களுடைய மனோபாவத்தை அறிந்திருக்கிறேன். அவர்களிடம் கேட்டால் அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்றால் எனக்கு



ஒவ்வொரு மாதமும் சம்பளம் கிடைத்துவிடுகின்றது, இந்தக் கூட்டுறவு அமைப்பு லாபத்திலே இயங்கினால் என்ன, இயங்கா விட்டால் என்ன என்று சொல்லுகின்ற நிலை இருக்கின்றது. கூட்டுறவு சொசைட்டியிலே தேவைப்படுகின்ற சாமான்கள் இருந்தால் என்ன, இல்லாவிட்டால் எனக்கென்ன என்று கருதுகின்ற நிலையில் தனி அதிகாரிகள் இருக்கின்றார்கள். ஆகவே பல இடங்களில் இவர்களுடைய திறமையின்மை காரணமாக கூட்டுறவு அமைப்புக்கள் பல சீரழியக்கூடிய நிலை இருக்கின்றது. ஆகவே இந்த நிலையை ஒரு முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கோவையிலே சிந்தாமணி சூப்பர் மார்க்கெட் இருக்கின்றது. இது தமிழகத்தில் மட்டுமல்ல, இந்தியா முழுமையிலும் பெயர் பெற்ற ஒரு சூப்பர் மார்க்கெட்டாக இயங்கி வந்தது. இலட்சக் கணக்கான ரூபாயை ஒவ்வொரு ஆண்டும் லாபமாக ஈட்டித் தந்தது. ஆனால் இன்றையதினம் அதன் நிலைமை என்ன? அது தொடர்ந்து பல இலட்சக்கணக்கான ரூபாய் நஷ்டத்திலே இயங்கிக் கொண்டு வருகின்றது. அதற்கான காரணம் என்ன? அதை நிர்வகிக்கக் கூடியது யார், இதைப் போக்குவதற்கு என்ன செய்ய வேண்டும் என்பதுபற்றிப் பரிசீலனை செய்ய வேண்டும்.

மேலும் தனி அதிகாரிகள் எதேச்சாதிகாரமாக நடந்து கொள்கிறார்கள். எதேச்சாதிகாரமாக ஊழியர்களை அவர்கள் நடத்தக் கூடிய நிலைமை இருக்கின்றது. ஆகவே அந்த மாதிரியான நிலைமையை மாற்ற தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்த வரையில் கடன் வழங்கக்கூடிய அமைப்புகள் பல இருக்கின்றன. அவர்கள் விவசாயிகளுக்குக் கொடுக்கின்ற கடனுக்கு வட்டி என்னவென்றால் 12 சதவீதம். சிறிய விவசாயிகளுக்கு 10½ சதவீதத்திற்குக் கடன் கொடுக்கிறார்கள். அந்தப் பணம் மாநில வங்கியிலே இருந்து பெறப்படுகின்றது. ஆறு சதவீதம் வட்டி தரப்படுகின்றது. மாநில வங்கியிலிருந்து மத்திய வங்கியிலே பெறுகின்ற போதும் வட்டி தரப்படுகின்றது. மத்திய வங்கி கிராம சங்கங்களுக்கு அளிக்கின்றது. இப்படி மாறி மாறி வட்டி கொடுத்து கொடுத்து கடைசியில் வருகின்றபோது கடன் வாங்குகின்றவனுக்கு 6 சதவீதம் வட்டி அதிகப்படுத்தி கொடுக்க வேண்டிய நிலைமை ஏற்படுகின்றது. ஆனால் விவசாயிகளுக்கு அதிகபட்சமான நன்மைகளைச் செய்ய வேண்டும் என்றும் அவர்களுடைய கடன் பளுவைக் குறைக்க வேண்டும் என்றும் நாம் ஆலோசித்துக் கொண்டிருக்கும் நேரத்தில்

[திரு. இரா. கருப்பையா] [1980 ஜூலை 14

கிறது. ஆகவே, குளித்தலை நகரத்தில் ஒரு சப்-கோர்ட் அமைக்க வேண்டும் என்ற கோரிக்கையை நான் வரவேற்கின்றேன். தொழில் கோர்ட்டுகள் துரிதமாகச் செயல்படும் முறையில் தக்க நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ள வேண்டும்.

சிறை நிர்வாகம் சம்பந்தமாக என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். சிறையில் சீர்திருத்தங்கள் வேண்டும் என்பதற்காக பல்வேறு குழுக்கள் அமைக்கப்பட்டு இருக்கின்றன. 1914-ல் இந்திய சிறைச்சாலைக் குழு அமைக்கப்பட்டது. 1950-ல் சிறைச்சாலை சீர்திருத்தக் குழு அமைக்கப்பட்டது. ஐக்கிய நாடுகள் சபையில் கூட, அதைப் பற்றிய சீர்திருத்தங்கள் பற்றி ஆலோசனைகளைப் பெறுவதற்காக நம்முடைய இந்திய சர்க்கார் நாடியது என்ற முறையில் ஒரு நிபுணர் —ரெக்லஸ் என்பவர்— ஒரு விசாரணை நடத்தி இருக்கிறார். கடைசியாக நம்முடைய மாநிலத்தில் தமிழ் நாடு சிறை சீர்திருத்தக் கமிஷன் அமைக்கப்பட்டு அதுவும் தன்னுடைய சிபாரிசை கொடுத்து இருக்கிறது. அந்தக் குழுக்களின் சிபாரிசுகள் அனைத்தும் இன்னும் அமல் செய்யப்படாமல் இருக்கிறது. அவற்றை முறையாக அமல் படுத்த நடவடிக்கை எடுத்து, சிறையில் வாடும் கைதியும் மனிதன் தான் என்ற அடிப்படையில் அந்தக் குழுக்களின் பரிந்துரைகள் இருப்பதால் அவற்றை நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கைதிகளைச் சீர்படுத்தி அவர்களை மனிதர்களாக்கி, மறு வாழ்வு அளித்து, அவர்கள் சமூகத்தில் மீண்டும் கலந்து வாழ்க்கை நடத்துகின்ற முறையில் சீர்படுத்துவதே முக்கியமான நோக்கமாகும். சாதாரண மனிதர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டிய மரியாதை அவர்களுக்கும் கொடுக்கப்பட வேண்டிய உரிமை படைத்தவர்கள் அவர்கள். இந்தக் கொள்கையை அமைத்து, எந்த அளவுக்கு சிறை நிர்வாகம் அமுல் நடத்துகிறது என்று சொல்வது பரிசீலனைக்கு உரியதாக இருக்கிறது. சிறை அதிகாரிகள் கைதிகளை சித்ரவதை செய்கிறார்கள்; அடிக்கிறார்கள்; கொடுமைப் படுத்துகிறார்கள். சாதாரண உரிமையைக் கேட்டால் கூட கொடுப்பதில்லை. குளிப்பதற்குக் தண்ணீர் இல்லை; குடிப்பதற்குக் கூட தண்ணீர் கிடைக்கவில்லை என்று கேட்டால் கூட அவர்களை அடிக்கிறார்கள்; சோப்பைக் கொடுப்பதில்லை; கேட்டாலே அடிக்கின்றார்கள். கக்கூசிலே தண்ணீர் அதிகமாக இருக்கிறது என்று சொன்னால் கூட, அவர்கள் மிருகத்தனமாக அடிக்கப்படுகிறார்கள். ஒரு கைதி மற்றொரு கைதியோடு பேசினால் கூட கடுமையான குற்றம் என நடவடிக்கை எடுக்கப் படுகிறது. அதே முறையில் திருச்சி சிறையில் நடைபெற்ற ஒரு சம்பவத்தைக் குறிப்பிட விரும்புகிறேன்.



1980 ஜூலை 14] [திரு. இரா. கருப்பையா]

1979 ஆம் ஆண்டு திருச்சி சிறையிலே நடந்த சம்பவத்தால் இலட்சுமணன் என்ற கைதி தாக்கப்பட்டு, இரண்டு கால்களிலும் முறிவு ஏற்பட்டு, இன்றைக்கும் நடக்க முடியாமல் இருக்கிறார். அவரை மருத்துவ மனைக்கு அழைத்துச் செல்வதற்காக அவருடைய சகோதரர் ஆறுமுகம் — அவரும் அதே சிறையில் தான் இருக்கிறார், பி.எஸ்ஸி. படித்தவர் — வண்டியில் வைத்து தள்ளிக்கொண்டு வரும்போது பக்கத்தில் உள்ள 'செல்' லில் இருக்கிற ஒருவரிடம் பேசினார் என்பதற்காக கடுமையாக தாக்கப்பட்டு, 3 மாதத்திற்கு மேலாகியும் அவரைத் தனியாக, தனிமைச் சிறையிலே கண்டெம் செல்லிலே அடைத்து வைத்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலைமைகள், சிறைக் கொடுமைகள் போக்கப்பட வேண்டும். கடந்தகால வரலாற்றைப்பற்றி நான் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை; அது எல்லோரும் அறிந்தது. இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் மேலும் தொடரக் கூடாது என்பதற்காக இதைக் குறிப்பிடுகிறேன்.

அடுத்தபடியாக, இந்தச் சிறைப் பணியாளர்களை இரு பிரிவாகப் பிரித்து, அவர்கள் செயல்படும்படி செய்ய வேண்டும். காவல் காக்கும் ஜெயில் வார்டன் என்று சொல்லும்போது அவர் காவல் பணியைச் செய்யக் கூடியவர். கைதிகளைச் சீர்திருத்தும் பணியை அவர் செய்ய முடியாது. காவல் செய்வதற்குத் தனியாகப் பணியாளர்களும், சீர்திருத்த நடைமுறைகளை மேற்கொள்வதற்குத் தனியாகப் பணியாளர்களும் என்று இரு பிரிவாக வைத்திருந்தால் பயனுள்ளதாக இருக்கும்.

இந்த சிறைச்சாலைகள் சீர்திருத்தத்திற்காக பல்வேறு குழுக்கள் அமைக்கப்பட்டு, அவர்கள் கொடுத்திருக்கிற சிபாரிசுகள் எல்லாம் இருக்கின்றன. அதிலே நன்னடத்தைப் பிரிவு பற்றிய சிபாரிசு ஒன்று இருக்கிறது. அதிலே பணியாற்றக்கூடியவர்கள் 'ப்ரபேஷன் ஆபீசர்ஸ்' என்று சொல்லக்கூடியவர்கள் கைதிகளை சீர்திருத்தும் பணியில் இருக்கக் கூடியவர்கள். அவர்களைக் கண்காணிக்கும் பொறுப்பு பணி சிறைகள் இன்ஸ்பெக்டர் ஜெனரல் அவர்களிடம் இருக்கிறது. தமிழ்நாடு சிறைகள் சீர்திருத்தக் குழு, சி. எஸ். நரசிம்மன் தலைமையில் அமைந்திருக்கக்கூடிய குழு கூட இந்த நன்னடத்தைப் பிரிவு அதிகாரிகளை தனிப் பிரிவாக அமைக்க வேண்டுமென்று சிபாரிசு கொடுத்திருந்தாலும் இன்றுவரையில் அதை அமுல்செய்யவில்லை.

சிறையில் வார்டர்கள் இருக்கிறார்கள். அவர்கள் ஆயுள் கைதிகள். அவர்களுடைய சர்வீஸ் கண்டிஷன், அவர்களுடைய நிலைமை மிகவும் மோசமாக இருக்கிறது. அவர்களுடைய காலம் முழுக்க இந்த வேலையைத்தான் செய்யவேண்டியிருக்கிறது. அவர்களுக்கு பொழுதுபோக்கு, மற்ற வேலைகள் சம்பந்தமாக

இவ்வாறு மேலும் மேலும் வட்டி அதிகமாக்கப்பட்டு விவசாயி களுக்குக் கொடுக்கும்போது வட்டி வீதம் அதிகமாகி வருகின்றது. ஆகவே விவசாயிகளுக்கு நேரடியாக கடன் கொடுக்கின்ற வகை யில் ஒரே அமைப்பின்கீழ் இந்த நிறுவனங்களைக் கொண்டுவர வேண்டும். ஒரே வட்டி வீதத்தில் அதிகபட்சம் பயன் அளிக்கக் கூடிய வகையில் கடன் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து கூட்டுறவு அமைப்புக்களிலே பணியாற்றக்கூடிய ஊழியர்கள் இருக்கின்றார்கள். அவர்கள் கிட்டத்தட்ட 2 இலட்சத்திற்கு மேற்பட்டவர்களாக இருக்கின்றார்கள். அவர்கள் நலன் பற்றி எதுவுமே இந்த அறிக்கையிலே கூறப் படாதது வருந்தத்தக்கது. அவர்களுக்கு எந்தவிதமான வேலை உத்தரவாதமும் கிடையாது. அவர்களுக்கு மிகக் குறைந்த சம்பளம் கொடுக்கப்படுகின்றது. சில இடங்களிலே 60 ரூபாய் கூட கொடுக்கின்றார்கள். இன்னும் சொல்லப்போனால் 30 ரூபாய் கூட கொடுக்கின்ற நிலைமையும், சம்பளமே இல்லாது வேலை வாங்கும் நிலைமையும் இருக்கின்றது. இந்த நிலைமை மாற்றப்பட வேண்டும். அந்த ஊழியர்களுக்குக் குறைந்த பட்சம் வேலை உத்தரவாதம், சம்பள உயர்வு அளிக்கக்கூடிய வகையிலே ஏற்பாடு செய்யவேண்டும். இன்றைக்குப் பஞ்சாயத்து யூனியன் ஆசிரியர்களை எல்லாம் அரசு ஊழியர்களாக ஏற்றுக் கொண்டிருக்கும் சூழ்நிலையில் இவர்களையும் அரசு ஊழியர் களாக ஆக்க ஏற்பாடு செய்ய வேண்டும். ஏனென்றால் இவர்கள் அரசாங்கத்தின் முக்கியமான திட்டங்களையும், உத்தரவுகளை யும்தான் நிறைவேற்றக்கூடிய பணியைச் செய்கிறார்கள். அவர்களுக்கென சர்வீஸ் கண்டிஷன் சம்பந்தப்பட்ட சட்டங்களை இயற்ற வேண்டும். பைலாக்கள் பல சொசைட்டிகளில் இல்லை. பாமணி உரத் தொழிற்சாலையில் இருக்கக்கூடிய புரொடக்ஷன் மேனேஜர், ஜெனரல் மானேஜர் போன்றவர்களால் உற்பத்தியே கெட்டு விட்டது, எதேச்சாதிகாரமான முறையில் நடக்கிறார் கள். திரு. அம்பிகாபதி அவர்கள் இன்று காலையிலே கூடச் சொன்னார்கள் அங்குள்ள நிலைமைகள் பற்றி. அப்படிப்பட்ட சூழ்நிலைகள் இருப்பதன் காரணமாக திடீரென்று அங்கு வேலை நிறுத்தங்களில் ஈடுபடக்கூடிய சூழ்நிலை இருக்கின்றது. இன்றைய தினம் வேலை நிறுத்தங்கள் பல வெடித்துக் கொண் டிருக்கின்றன. ஆகவே இவற்றையெல்லாம் தவிர்க்க நடவடிக் கைகளை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அவினாசியிலே 25,000 ஏக்கர் நிலப் பரப்பிலே முக கொட்டைப் பயிரிடப்படுகிறது. அந்த இடத்திலே பட்டு புழு வளர்க்கும் நிலையம் ஒன்றை ஏற்படுத்த வேண்டும் என் கேட்டுக் கொள்கிறேன்.





உதாரணமாக கடலோரப் பகுதி மீனவர்களுக்காக, 1978 ஆம் ஆண்டில், அவர்கள் புயலால் பாதிக்கப்பட்டபோது, பாதிக்கப் பட்டவர்களுக்கு மீன் பிடிக்கும் வலைகள் கொடுப்பதற்காக வலை வாங்கப்பட்டது. இன்றைய தினம் வரையில் அவர் களுக்கு அந்த வலைகள் கொடுக்கப் பெறவில்லை. குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமானால் திருப்பாலக்குடி என்ற கிராமத்திலே உள்ள மீனவர்களுக்கு, இம்மாதிரி வாங்கப்பட்ட வலைகள் வினி யோகிக்கப்பெறவில்லை.

அடுத்தபடியாக கூட்டுறவு அமைப்புகள் எல்லாம் மாநில ரீதியாக ஒரே அமைப்பின்கீழ் கொண்டு வரப்பெற வேண்டும் என்று கூறிக் கொள்கிறேன். அதாவது மாநிலக் கூட்டுறவு கொள் முதல் சங்கமாக இருந்தாலும், மாவட்டக் கூட்டுறவு வினியோக சங்கமாக இருந்தாலும் சரி, கன்ஸ்யூமர் கோவாப் ரேடிவ் சொசைட்டியாக இருந்தாலும் சரி, பிரைமரி மார்க் கெட்டிங் சொசைட்டியாக இருந்தாலும் சரி எல்லாம் ஒன்றாக ஒரே அமைப்பின்கீழ் கொண்டு வரப்பட வேண்டும். அப்படி இல்லாத காரணத்தினால்தான் ஒவ்வொரு இடத்திலும், 4 சதவீதம், 3 சதவீதம் என்று லாபம் வைத்து போடும்போது, கூட்டுறவுச் சங்கங்களில் விற்கப்படும் பொருட்களின் விலைகள் மொத்தத்தில் ஏறியதாக ஆகிவிடுகிறது. வெளியில் விற்பதை விட சில கூட்டுறவுச் சங்கங்களில் பொருட்களின் விலைகள் அதிகமாக இருப்பதற்கு இதுதான் காரணம். ஆகவே, இந்த அமைப்புகளை ஒரே அமைப்பின்கீழ் கொண்டு வரவேண்டும். அப்போதுதான் அவை மக்களுக்கு அதிகப் பயன் அளிக்கக் கூடிய முறையில் செயல்பட முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கூட்டுறவுச் சங்கங்களில் வேலை செய்யக் கூடிய ஊழியர்களின் நிலையை உயர்த்த வேண்டும். அவர்கள் தான் இந்த கூட்டுறவுத் துறையின் அஸ்திவாரங்களாக இருக்கிறார்கள். ஆகவே, அவர்கள் நிலையை உயர்த்தவேண்டும். அந்தக் கூட்டு றவுச் சங்கங்களில் வேலை செய்யக்கூடிய அனைத்து ஊழியர்களின் சம்பளம் ஒருபாதி என்றால், அரசாங்கத்திலிருந்து டெபுடேஷனில் அனுப்பப் பெறும் அதிகாரியின் சம்பளம் மறுபாதியாகி விடுகிறது. ஊழியர்கள் எல்லோரும் சேர்ந்து எவ்வளவு சம்பளம் வாங்கு கிறார்களோ, அவ்வளவு சம்பளம் அதிகாரி மட்டுமே வாங்கு கிறார். ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன், கூட்டுறவுத் துறையில் பணிபுரியும் ஊழியர் களின் நிலையை உயர்த்த வேண்டும். அவர்களுடைய சம்பளம் மாநில அரசு ஊழியர்களுக்கு கொடுக்கப்பெறும் சம்பள விகிதத்தினை அடிப்படையாகக் கொண்டிருத்தல் வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள் கிறேன், வணக்கம்.

வழக்கு மன்றங்களில் பப்ளிக் ப்ராஸிக்யூட்டர்ஸ், அரசாங்க வழக்கறிஞர்கள் என்று இருக்கிறார்கள். முன்பு அவர்கள் வழக் கறிஞர் மன்றத்திலிருந்து நியமிக்கப்பட்டார்கள். ஸீனியராக இருப்பவர்கள், அனுபவம் பெற்றவர்கள் நியமிக்கப்பட்டார்கள். எந்த அரசியல் கட்சி ஆட்சிக்கு வருகிறதோ அந்தக் கட்சியில் உள்ளவர்கள் நியமிக்கப்பட்டார்கள். அப்படிப்பட்ட ஒரு முறையை ஏற்படுத்திவிட்டார்கள். அது தவறு என்று நான் கருதவில்லை. சிறந்த வழக்கறிஞர்களை நியமிக்கும் ஒரு முறை இருந்தது. இதில் மத்திய அரசினால் ஏற்படுத்தப்பட்ட ஒரு மாறுதல் காரணமாக அஸிஸ்டெண்ட் பப்ளிக் ப்ராஸிக்யூட்டர் அரசாங்க ஊழியர், அவர்கள் பப்ளிக் ப்ராஸிக்யூட்டர் பதவி உயர்த்தப்படுகிற ஒரு நிலைமை இப்போதிருக்கிறது. ஆகவே பழையபடி அரசாங்க அதிகாரிகளை பப்ளிக் ப்ராஸிக்யூட்டர் களாக நியமிக்காமல் வழக்கறிஞர் மன்றத்தில் உள்ள வழக்கறிஞர் களை பப்ளிக் ப்ராஸிக்யூட்டர்களாக நியமிக்கிற முறையை நிலை நாட்ட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன் அப்படிச் செய்வ தால் வழக்கறிஞர்களுக்கு வாய்ப்பு கிடைப்பதோடு கூட, சிறந்த வழக்கறிஞர்களை நியமிக்கவும், தேவைக்கேற்ப அவர்களை நீக்க வும் செய்யலாம். அரசாங்க ஊழியர்களாக இருந்தால் அவர்கள் அதிகமாக போலீஸ் வழக்கறிஞர்களாக இருப்பார்களே தவிர, நீதி மன்றத்தின் தேவைக்குரிய வழக்கறிஞராக இருக்கமாட்டார்கள். இது நடைமுறையில்இருந்துகொண்டிருக்கிறது. ஆகவே இதில் அரசு தக்க கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, நீதிபதிகளுக்கு வாகன வசதி இல்லை. இன்றைக்கு பல நடுவர் நீதிமன்றத்தில் இருக்கிற நீதிபதிகள். சைக்கிளில் அல்லது நடந்து நீதிமன்றத்திற்கு வரக்கூடிய ஒரு நிலைதான் இருக்கிறது. ஆகவே குற்றவாளிகளைத் தண்டிக்கிற பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிற நீதிபதிகளுக்கு குடியிருப்பு வசதி ஏற்படுத் தித் தருவதோடு கூட, குறைந்த பட்சம் ஐந்து அல்லது பத்து பேர்கள் வருகிற அளவிற்கு ஒரு வாகனம் அமைத்துத் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இதைச் செய்ய வேண்டியது அரசின் கடமை.

அடுத்து கோவை மாவட்டத்தில், உயர்நீதி மன்றத்தின் ஒரு பெஞ்சை ஏற்படுத்த அரசு ஆவன செய்ய வேண்டும். அங்குதான் அதிகமாக வழக்குகள் இன்று இருக்கிறது. ஆகவே அங்கே உயர் நீதி மன்றத்தின் ஒரு பெஞ்சை ஏற்படுத்துவதற்கு அரசு முனைய வேண்டும். கோவை நகரில் பல நீதி மன்றங்கள் நகரின் பல பகுதிகளில் இருக்கின்றன. இதன் காரணமாக வழக்கறிஞர் கள் சிரமத்துக்குள்ளாகிறார்கள். ஆகவே எல்லாவற்றையும் ஒருங்கிணைத்து அனைத்தையும் ஒரு கட்டடத்திற்குள் கொண்டு வர ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.



உடுமலைப்பேட்டையிலே குடியிருப்பு வசதி இல்லை. நீதி மன்றங்களிலேபணியாற்றுகிறவர்களுக்கு வேலைப் பளு அதிகமாகி அவர்கள் அவதிப்படுகிறார்கள். எனவே, கூடுதலானஊழியர்களை அங்கே நியமித்து, அவர்கள் வேலைப் பளுவைக் குறைக்க வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

கோவை மாவட்ட நீதிமன்றத்தில் இன்று உயர் நீதிபதியாக இருக்கும் திரு. செங்குட்டுவன் அவர்கள் முயற்சியால் முன்மாதிரி யான கூட்டுறவுச்சங்கம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அங்கேயுள்ள வழக்கறிஞர்களின் அத்தனை தேவைகளையும் பூர்த்தி செய்யக் கூடிய வகையிலே அந்த கூட்டுறவு சங்க அமைப்பு ஏற்பட்டிருக் கிறது. அதைப் போன்று இந்த நாடு முழுவதும் வழக்கு மன்றங் களில் ஏற்படுத்தினால், அத்தகைய வழக்கு மன்றங்களிலே உள்ள வழக்கறிஞர்களுக்கும், அங்கே வருகின்ற பொதுமக்களுக்கும் வழங்கக்கூடிய நிலைமை ஏற்படும் என்பதைக் கூறிக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

*திரு. எஸ். ஆண்டித் தேவர்: பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, சட்ட அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற மானியக் கோரிக்கையின் மீது எனக்கு பேச அனுமதித்த தலைவர் அவர்களுக்கு நன்றி கூறிக் கொள்கிறேன். நீதித் துறையிலே நமது அரசு நீதி வழுவாது இருக்க வேண்டுமென்று, தலையீடு கூடாது என்ற அளவுக்கு நீதி நிர்வாகம் மற்ற நிர்வாகத்தைவிட மிகத் திறமையாக இருக்க வேண்டுமென்ற அந்த நல்லெண்ணத் தைப் பாராட்டுகின்ற நேரத்தில், நீதித் துறையிலே இரண்டாவது நடுவர் நீதி மன்றத்தில் நீதித் துறையின் அனுபவமே இல்லாத வேறுதுறையில் இருக்கின்றவர்களை நியமிப்பதன்மூலம், அனுபவ குறைவின் காரணமாக, அங்கே சிறப்பான நீதி செலுத்த முடிய வில்லை, என்பதை எனக்கு முன்னால் பேசிய நண்பர் இங்கே சுட்டிக் காட்டினார். அதற்கு மேலாக, அவர்களுடைய திறமையின்மை காரணமாகவும், அவர்கள் எங்கேயிருந்து—ஒரு இலாகாவிலே இருந்து இப்பொழுது கொடுக்கின்ற சலுகையை வைத்து, பகுதி நேரப் படிப்பு படித்துவிட்டு, எத்தகைய அனுபவமும் இல்லாமல் வந்து விடுகின்ற காரணத்தினால், இரண் டாவது நடுவர் நீதிமன்றத்தில் அதற்கு மேல் பதவி உயர்வு பெற வாய்ப்பு இல்லை என்ற நிலை இந்தத் துறையிலே நீண்ட நெடுங்காலமாக இருக்கின்ற காரணத்தினால், அவர்கள் [illegible] வேலையும் செய்வதில்லை, என்ற அளவுக்கு பொதுமக்கள் மத்தி யிலே ஒரு பெருத்த குறை இருக்கிறது. அந்தக் [illegible] நீக்கியே தீரவேண்டும். அதற்கு எந்தவிதமான [illegible] கெடுவும் கொடுக்ககூடாது. அப்படிப்பட்டவர்களை [illegible] துறையிலே வாய்ப்பு இருக்கின்ற காரணத்தினால், [illegible] துறையிலே இருந்து டெபுடேஷன் என்ற முறையில், [illegible] தான் அந்தந்தத் துறைக்கே திருப்பி அனுப்பவேண்டும்.

திரு. எம். சின்னராஜ் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இன்று ஏற்பட்டிருக்கிற புரட்சித் தலைவர் அவர்களின் ஆட்சி நீதி வழுவா நெறிமுறையின் அடிப்படையில் நடக்கிறது என்று நீதித் துறையைச் சேர்ந்த நீதிபதிகளும், வழக்கறிஞர்களும் மன்றத்திலே அங்கம் வகிக்கக்கூடிய வழக்கறிஞர்களும், மற்றும் உள்ளவர்களும், பொது மக்களும் போற்றுகின்ற வகையில் நடந்து கொண்டிருக்கிறது என்பதை இந்த மாமன்றத்தில் எடுத்துச் சொல்வது என்னுடைய கடமையாகக் கருதுகிறேன்.

அதே நேரத்தில் நீதிபதிகள் சுதந்திரமாக செயல்படுவதற்கு இன்னும் கூட சிறப்பான திட்டங்களை நமது அமைச்சர் அவர்கள் நிறைவேற்ற வேண்டும். நீதிபதிகளுக்குத் தேவைப்படுகிற வசதிகளை எல்லாம் அரசு அவர்களுக்கு செய்துதர வேண்டும்ற. அவர்களுடைய வசதிகள் நிறைவு பெறாமல் இருக்கும் நிலையில் தான் அவர்கள் மற்றவர்களை நாட வேண்டிய நிலைமை ஏற் படுகிறது. குறிப்பாகச் சொல்லவேண்டுமானால் அவர்களுக்கு இட மாற்றம் ஏற்படுகிறபோது எல்லாம், வீட்டு வசதி அமைப் பிற்காக வழக்கறிஞர்களைச் சந்திக்க வேண்டிய நிலைமை ஏற் படுகிறது. அது பின்னால், அந்த வழக்கறிஞர்களின் பின்னால் இருக்கும் கட்சிக்காரர்களுக்கு உதவ வேண்டிய நிலையை ஏற் படுத்துகிறது. ஆகவே நீதிபதிகளுக்கு அவர்களுடைய அந்தஸ் திற்கேற்ப அவர்கள் எங்கே மாற்றப் பெற்றாலும், அவர்களுக்குத் தேவையான வீட்டு வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க, அல்லது சொந்த வீடுகள் தேவைப்பட்டால் கட்டிக் கொடுக்க எல்லா ஏற்பாடுகளையும் அரசு ஏற்றுக் கொள்ள வேண்டும். அவர் களுக்குக் கட்டாயமாக வீட்டு வசதி ஏற்படுத்திக் கொடுக்க அரசு முன் வர வேண்டும். இது நீதித் துறையில் அரசு செயல் படுத்த வேண்டிய ஒரு சிறந்த திட்டம் என்று கூறிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

[முற்பகல் 11-00]

ஏற்கெனவே பல இடங்களில் வீட்டுவசதி ஏற்படுத்திக் கொடுக் கப்பட்டிருந்தாலும் அவை போதாது. ஆகவே, நீதித்துறைக்குச் செலவிடுவது என்று கணக்கிடாமல், இது அத்தியாவசியத் தேவை, நீதித்துறை செவ்வனே செயல்பட இது அவசியமான தேவை என்பதை அரசு கருத்தில் கொண்டு இந்த வசதியை அவர்களுக்கு ஏற்படுத்தித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள் கிறேன்.

அடுத்து நடுவர் மன்றங்கள். இரண்டாவது நிலை சப்-மாஜிஸ் ட்ரேட்டாக இருப்பவர்களை முதல் நிலை மாஜிஸ்ட்ரேட்டாக, பர்ஸ்ட் கிளாஸ் மாஜிஸ்ரேட்டுகளாக மாற்றியமைக்க வேண்டும்



என்று கேட்டுக் கொள்கிறேன். அந்நிலைக்கு உயர்த்த வேண்டும் என்ற திட்டம் நீண்டநாட்களாக அரசாங்கத்தின் பரிசீலனையில் இருந்துகொண்டிருக்கிறது. எனவே, சுறுசுறுப்புக்கும் வேகத் திற்கும் சிறப்பான இடத்தைப் பெற்றுள்ள ஒருவர் இன்று இத் துறைக்கு அமைச்சராக, சட்ட அமைச்சராக இருக்கிறார். அவர் கள் சட்டம் படித்தவர் வழக்கு மன்றத்தில் இருந்தவர், ஆகவே அவர்களது காலத்தில் இப்படிப்பட்ட திட்டங்களைச் செயல் படுத்த வேண்டும் என்று வழக்கறிஞர் என்ற முறையில் நான் கேட்டுக் கொள்கிறேன்.

அந்த மன்றங்களில் இன்று வழக்குகள் தேங்கிக் கிடக்கின்றன என்று எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவர் சுட்டிக்காட்டினார். அது உண்மைதான் அந்த நிலைக்குக் காரணம் செகண்ட் கிளாஸ் மாஜிஸ்ட்ரேட் பர்ஸ்ட் கிளாஸ் மாஜிஸ்ட்டிரேட்களால் நடத்தப்படுகிற வழக்குகளை நடத்த தகுதி இல்லாதவர்களாக இருக்கிறார்கள். ஆகவே, செகண்ட் க்ளாஸ் மாஜிஸ்ட்ரேட்களை முதல் வகுப்பு மாஜிஸ்ட்டிரேட்டுகளாக பதவி உயர்வு செய்யப் பட்டால் தேங்கிக் கிடக்கும் வழக்குகளை விரைவில் முடித்துவிட முடியும். ஆகவே அப்படி அவர்களை முதல் வகுப்பு மாஜிஸ்ட் ரேட்டுகளாக மாற்றுவதற்கு விரைவாகச் செயல் பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதோடு வழக்கறிஞர்களுக்கும் நல்ல வாய்ப்பினைப் பெற்றுத்தர முடியும்.

வழக்கு மன்றங்களில் எங்களைப் போன்ற வழக்கறிஞர்கள் எல்லாம் தேவைக்கு ஏற்ற முறையில் சம்பாதிக்க முடியாத நிலையில் இருக்கிறோம், என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார் கள். இளைஞர் சமுதாயத்தில் அவர்கள் ஒரு பிரிவினர் என்பதை உணர்ந்து அவர்களின் மேம்பாட்டிற்காக வேண்டிய திட்டங்களை வகுக்க வேண்டியது அரசின் கடமை. ஆகவே முதல் வகுப்பு நீதிமன்றங்களில் நியமிக்கப்படுகிற நீதிபதிகளை வழக் கறிஞர்கள் மன்றத்திலிருந்து வழக்குகளை நடத்திக் கொண்டிருக் கிற வழக்கறிஞர் களிடையேயிருந்துதேர்ந்தெடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அரசு இதில் தீவிர கவனம் செலுத்தவேண் டும் என்று கேட்டுக் கொள்கிறேன். நீதிமன்றங்களில் வாதாடும் அனுபவம் பெறாமல் ஏதோ ஏதோ துறைகளில் இருந்து; அனிமல் ஹஸ்பென்டரி துறையில் இருப்பவர்களை, அங்கு வேலை பார்க்கக் கூடிய பி. எல். படித்தவர்கள் நீதிபதியாக வந்துவிடுகிறார்கள். அவர்களால் ஏற்படுத்தப்படுகிற சிரமங்களையெல்லாம் வழக்கு மன்றத்தில் உள்ளவர்கள் அறிவார்கள். நான் அவற்றைச் சுட்டிக் காட்டுவது பேரவையில் சம்பந்தப் படாதவர்களை இழிவு படுத்துவதுபோலாகும். எனவே அதைப் பற்றி நான் மேலும் குறிப்பிட விரும்பவில்லை. ஆக, இந்த முறையை அறவே நீக்கிட இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்படிப்பட்டவர்கள் நீதிமன்றத்திற்கு வராமல் தடுப்பதற்கு அரசு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

வழக்கறிஞர்கள் சங்கத்திலே கூட எப்படி மாவட்ட நீதிபதி
களைத் தேர்ந்தெடுப்பதற்கு 10 ஆண்டுகள் அனுபவம் வேண்டு
மென்று சொல்லப்படுகின்றதோ, அதைப் போல் குறைந்த பட்ச
அனுபவம் உள்ளவர்களைத்தான் வழக்கறிஞர்கள் சங்கத்திலே
இருந்து தேர்வு செய்ய வேண்டும். அப்படிச் செய்வதன் மூலம்
தான், நீதித் துறையிலே கீழ்மட்டத்திலே இருந்து வருகின்ற,
நீதிமன்றங்களைச் சந்திக்கின்றவர்களுக்கு நாம் உதவ முடியும்.
கிரிமினல் குற்றங்களைப் புரிகின்றவர்கள் இந்த இடத்திற்குத்தான்
அதிகமாக வருகின்றார்கள். உயர்நீதி மன்றத்திற்குச்
சென்று வாதாடுகின்றவர்கள் பணக்காரர்கள். அல்லது அவர்களுக்
காக வாதாடுகின்றவர்களாகத்தான் இருப்பார்களே தவிர, சாதா
ரண மக்கள் அங்கு வருவதில்லை. எனவே, இந்த இடத்தில்
நீதி சரியாக வழங்கப்படவில்லை என்ற அபிப்பிராயத்தை நாம்
நீக்க வேண்டும் என்று கூறிக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, அங்கே இருக்கின்ற இரண்டாவது நடுவர்
நீதிபதிக்கு அடுத்தாற்போல் இருக்கின்ற முன்சீப்புகள் எல்லாம்
நேரடியாகத்தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்—எனவே, அவர்களுக்கு
பதவி உயர்வு இல்லை என்பதை அறிந்து, 20 ஆண்டுகளாக
இரண்டாவது நடுவர் நீதிபதிகளாகவே அவர்கள் இருக்கின்ற
காரணத்தினால், அவர்கள் எந்தவிதமான வேலையும் செய்வ
தில்லை. எனவே, அவர்கள் 20 ஆண்டுகளாக இதையே மாரடைத்
துக்கொண்டிருக்கிறோம். என்ன செய்யப் போகிறோம். பதவி
உயர்வு இல்லை. பணமும் இல்லை, ஊதியமும் உயரப் போவது
இல்லை என்று அவர்கள் வெறுப்படைந்திருக்கிறார்கள். ஆகவே,
இந்த முன்சீப்புகளை நேரடியாகத் தேர்ந்தெருடுப்பதை நிறுத்த
வேண்டும். அல்லது அவர்களை முதல் வகுப்பு அந்தஸ்திற்கு
உயர்த்த வேண்டும். பதவி உயர்வை நீண்ட நாட்களாக இந்த
அரசு ஏற்றுக் கொண்டிருந்தாலும் அதை இன்னும் செயல் படுத்தா
மல் இருக்கின்ற அந்த நிலையை மாற்ற வேண்டும். இது
கேரளாவிலே இருக்கிறது. மற்ற அண்டை மாநிலங்களிலே
இவர்களுக்கு முதல் வகுப்பு அந்தஸ்து கொடுத்து, அதன் மூலமாக
அவர்கள் அங்கே வழக்குகளை நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

இந்தக் குறைபாடுகள் இருப்பதன் காரணமாக, இப்போது
மதுவிலக்குச் சட்டத்தை முதல் வகுபபு மாஜிஸ்திரேட்டுகள்
தான் விசாரிக்க வேண்டுமென்று இருக்கின்ற காரணத்தினால்
நீண்ட நாட்களாக வழக்குகள் தேங்கி இருக்கின்றன. உதாரண
மாக, நான் ஒரு வழக்கைக் கூறுகிறேன். 1976 லே அன்றைய
தினம் தெரிந்தோ தெரியாமலோ போலீஸ் எப். ஐ. ஆர். போட்டு
நீதிமன்றத்திலே, வைத்துவிட்ட காரணத்தினால் அதைத் தள்ளு
படி செய்வதற்கு அங்கே முடியவில்லை என்பதால், செய்ய சட்டம்
இருந்தாலும், தாங்கள் செய்தால் போலீசார் தவறாக என்று



விடுவார்களோ என்று மாதம் ஒரு முறை ஹைக்கோர்ட் டைரக்
ஷன்படி 76 லே இருந்து இன்று வரை மாதம் ஒரு முறை நீதி
மன்றத்துக்குப் போய்க் கொண்டிருக்கிறார்கள்.

[முற்பகல் 11-10].

அதற்காக போலீஸ்காரரார்களால் நடவடிக்கை எடுக்கப்படு
கிறது. நீதிமன்றம் நேரடியாகச் செயல்பட முடியவில்லை.
என்னுடைய கட்சிக்காரர் எஞ்சினியராக இருந்து எம். எஸ்.
உயர்படிப்பு படித்துக் கொண்டிருக்கிறார். அவர்மேல் எஃப்.
ஐ. ஆர். 1978-ல் இருந்து இருக்கிறது. அவர் மாதம் ஒருமுறை
சென்னையிலிருந்து வழக்கு மன்றத்திற்கு மதுரைக்கு வரவேண்டிய
அவல நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. நீதிபதிகள்
போலீஸ்காரர்களுக்குப் பயந்து கொண்டிருக்கிறார்கள். அவர்
கள் போலீஸ் நீதிபதிகளாகவே ஆகிவிடுகிறார்கள். போலீசை
நம்பி வாழும் அளவுக்கு இருக்கிறார்கள். இதுபோன்ற அவல
நிலை நீதித் துறையில் இருக்கக்கூடாது.

மாவட்ட நீதிமன்றங்கள் ஒவ்வொரு மாவட்டத்திலும் அங்
கெங்கே ஒரே இடத்தில் இருக்கவேண்டுமென்று சொன்னாலும்
இராமநாதபுரம் மாவட்டத்தைப் பொறுத்தவரை அத்தனை
நீதிமன்றங்களும் மதுரையில் இருக்கின்றன. அந்த மாவட்டத்தி
லுள்ள அத்தனைபேரும் 60 மைல் தூரம் வந்து சேரவேண்டும்.
ஆகவே, துணை நீதிமன்றங்களையாவது அந்தப் பகுதிக்கு மாற்றி
யமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நமது தமிழகத்திலே உயர்நீதிமன்றம் மதுரையிலே வைக்க
வேண்டுமென்ற கோரிக்கை அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டு உயர்
நீதிமன்றத்தாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தும் நீண்ட நாட்
களாக அது அமைக்க முயற்சி எடுத்துக் கொள்ளப்படவில்லை.
அதை மதுரையில் அமைப்பதன் மூலம் கன்னியாகுமரியிலிருந்து
450 மைல் தூரம் சென்னைக்கு வரவேண்டியவர்களுக்கும்
மற்றும் திருநெல்வேலி, இராமநாதபுரம், மதுரை திருச்சி,
மாவட்டங்களில் இருக்கும் பொதுமக்களுக்கும் வசதி வாய்ப்பாக
இருக்கும். சென்னை, மாநிலத்தின் வடகோடியில் இருப்பதால்
மத்தியில் இருக்கும் மதுரை நகரில் உயர்நீதிமன்றத்தினை உட
னடியாக அமைத்திட அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நீதித்துறையிலே நீதி வழுவாது இருக்க வேண்டுமென்று
சொல்லும்போது காவல் துறையையும் சேர்த்துப் பேச வேண்டி
யிருக்கிறது. பிரிவு 41(2) என்பதன்கீழ் சந்தேகத்தின் காரண
மாக ஏழ்மையாக இருப்பவர்களை பிடிக்கக்கூடிய நிலைமை இருக்
கிறது. அப்படிப் பிடித்து ரிமாண்டில் 15 நாட்கள் வைக்கிறார்

தான் இருக்கிறது. அது மட்டுமல்ல அங்கே அதிகமாக திருட்டு நடக்கிறது. திருட்டு என்றால் உள்ளே இருந்து வெளியே எடுத்துச் செல்வதில்லை. பொருள்களை வாங்குகிறபோதே குறைத்து வாங்கிவிடுவது, அதை எடுத்துக் கொள்வது என்ற நிலைமை தான் இருக்கிறது. பல்வேறு சரக்குகளை வாங்க வேண்டுமென்று சொல்லி வெளியே போய் வாங்குகிறபோதே 6 மூடைகள் வாங்கவேண்டுமென்றால் 2 மூடைகள் அதிலே குறைத்துக்கொண்டு வாங்குகிறார்கள். அதைப் பிறகு அவர்கள் எடுத்துக் கொள்கிறார்கள். ஆனால் பில்லைப் பார்த்தால் 6 மூடை என்று தான் இருக்கும். வேண்டுமானால் அமைச்சர் அவர்கள் என்னுடன் மாறு வேடத்திலோ அல்லது கொடி கட்டாத காரிலோ வந்தால், எப்படி எடுத்துச் செல்கிறார்கள் என்பதைப் பார்க்க முடியும் அதைப் போலவே தச்சு வேலைக்காக மரம் வாங்குகிறபோது தேக்கு மரம் என்று எழுதியிருப்பார்கள். ஆனால் வேறு மரத்தைத் தான் வாங்குகிறார்கள், இந்த அளவுக்குத்தான் அங்கே நிலைமை இருக்கிறது. இவைகளையெல்லாம் திருத்தி, சீர்படுத்தாவிட்டால் சாதாரண கைதிகள் மட்டுமல்ல், எந்த கைதிகளும் வசதிகளைப் பெறமுடியாது.

அடுத்து சப்ஜெயிலைப்பற்றிச் சொல்ல விரும்புகிறேன். சப் ஜெயில் என்பது ஒரு ஆட்டுக்கொட்டம்போல் தான் இருக்கிறது. நேரிலே போய்ப் பார்த்தால் நிலைமையைப் புரிந்துகொள்ள முடியும். கைதிகள் அங்கே சிறுநீர் கழிக்க முடியவில்லை,. அது மட்டுமல்ல அவர்கள் சிறுநீர் கழிக்கிறபோது போலீசார் சுற்றி நின்றுகொண்டால் அவர்கள் எப்படி சிறுநீர் கழிக்க முடியும் என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும். அது மட்டுமல்ல, அவர்களை சீக்கிரமாக வாருங்கள் என்று போலீசார் அடித்து இழுத்துக்கொண்டு போகிற நிலைமை இருக்கிறது. எல்லா துணை சிறைச்சாலைகளிலேயும் சிறுநீர் கழிப்பிடங்கள் அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமர்கிறேன்.

[முற்பகல் 11-20]

*திரு. பி. முகமது இஸ்மாயில்: மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவரவர்களே, நீதி நிர்வாகத் துறையில் தமிழகத்திற்கென்று ஒரு தலைசிறந்த பாரம்பரியம் உண்டு. அந்தத் துறையில் நிலையான அமைப்புகளையும் நாம் ஏற்படுத்தியிருக்கிறோம். இருந்தாலும் நாம் காணுகின்ற சில [illegible] நான் இந்த மன்றத்தின் முன் வைக்க ஆசைப்படுகிறேன்.

பட்ட வழக்குகள் 39,023. முடிவாகாமல் தேங்கிக் கிடக்கும் வழக்குகள் 63,680 என்று சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறது. அதே போன்றே, அடுத்த ஆண்டில் தொடுக்கப்பட்ட வழக்கு களின் எண்ணிக்கை ஒரு இலட்சத்தைத் தாண்டி நிற்பதைப் பார்க்க முடிகிறது. முடிக்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை 77,113. முடிவுறாமல் தேங்கிக் கிடக்கின்ற வழக்குகளின் எண் ணிக்கை 87,219 என்பது நமக்குத் தெளிவாகத் தெரிகிறது. அதே போல, அதற்கு அடுத்த ஆண்டிலேயும், 1979 ஆம் ஆண்டி லேயும், பதிவான வழக்குகளின் எண்ணிக்கை 1,51,631 என்று சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறது. முடிக்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை 1,24,935 என்றும், எஞ்சி நிற்கின்ற வழக்குகளின் எண்ணிக்கை 1,13,915 என்றும் இந்தப் புள்ளி விவரங்கள் நமக்கு எடுத்துக் காட்டும் உண்மையாக இருக்கின்றது.

ஆண்டாண்டு தோறும் பதிவு செய்யப்படும் வழக்குகளின் எண்ணிக்கையும், முடிவு செய்யப்படாமல் இருக்கின்ற வழக்கு களின் எண்ணிக்கையும் மிக வேகமாக வளர்ந்து வருகின்றன. இருக்கின்ற முன்சீப் நீதிமன்றங்களின் எண்ணிக்கையோ 93. எனவே, இந்தப் புள்ளி விவரங்கள் அதிகமான நீதிமன்றங்கள் தேவை என்பதை நமக்குச் சுட்டிக் காட்டி இருக்கின்றன. அரசாங்கம் இன்றைய தினம் சில முக்கியமான முடிவுகளை மேற் கொள்ள இருப்பதாக அறிக்கை சுட்டிக் காட்டிக் கொண்டிருக் கிறது. இந்த மாநிலத்தில் இருக்கின்ற 135 இரண்டாம் வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டுகளை, இந்த ஆண்டிலே முதல் வகுப்பு மாஜிஸ்ட் ரேட்டுகளாக நிலை உயர்த்தப்பட்டு, அவர்கள் மாவட்ட முன்சீப் அந்தஸ்தோடு இணைக்கப்படுகின்ற புதிய முடிவு மேற் கொள்ளப் படும் என்று சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறது. அதை நான் மிகவும் பாராட்டுகிறேன். அதிகமான நீதிமன்றங்கள் தேவைப் படும் இந்த வேளையில், ஏற்கனவே உள்ள இரண்டாம் வகுப்பு மாஜிஸ்டிரேட் உள்ள 135 கோர்ட்டுகள் முன்சீப் அதிகாரம் பெற்று, அதிகார வரம்புகளை அதிகமாகப் பெறுகின்ற மன்றங் களாக மாறும் பொழுது தேக்கமாக உள்ள வழக்குகளை மிக விரைவில் பைசல் செய்யும் புதிய சூழல் உருவாக முடியும் என்பதை பார்த்து, அதற்காக சட்ட அமைச்சர் அவர்களை வெகுவாக நான் பாரட்டுகிறேன்.

இது தொடர்பான சட்டமும் இந்தக் கூட்டத் தொடரிலேயே கொண்டு வரப்படும் என்றும் அறிவித்திருக்கிறார்கள். மிக வேகமாக அதைச் செயல்படுத்த வேண்டுமென்று சட்ட அமைச் சர் அவர்களை வேண்டிக் கொள்வதோடு, இந்த நல்ல திட்டங் களை மேற்கொண்டிருக்கிற அரசாங்கம் என்னுடைய பாராட்டு சுலையும் இந்த சந்தர்ப்பத்தில் பெறுகிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.





நீதித் துறையைப் பற்றி பேசுகிற போது ஒன்றைச் சொல்ல
வேண்டும். என்னுடைய குமரி மாவட்டத்தில், குறிப்பாக,
என்னுடைய தொகுதியில், முதல் வகுப்பு மாஜிஸ்திரேட் கோர்ட்
ஒன்று இயங்கி வருகிறது. அங்கு வேலைப் பளுவை நாம்
பார்க்கிறோம். அங்கே வேலைப் பளு ஏற்படுவதற்குக் காரணம்
நீதிபதிகள் மிக சுறுசுறுப்பாகச் செயல்பட்டாலும், சான்றிதழ்
போன்றவைகள் வழங்குவதற்குச் சில காலதாமதம் ஏற்படுகிறது.
காரணம், போதுமான ஸ்டாஃப்கள் இல்லை என்ற குறை
சுட்டிக் காட்டப்படுகிறது. அங்கே இருக்கிற பணியாளர்கள்,
பதவியிலே இருக்கின்றவர்கள், அந்தக் குறைபாட்டை அரசாங்
கத்தின் கவனத்திற்குப் பல்முறை எடுத்துக்காட்டி இருக்கிறார்
கள். அந்தக் குறை இன்று வரை நிறைவேற்றப்படாமல்
இருக்கின்ற காரணத்தால், அங்கே வழக்குகளை பைசல் செய்
வதில் கால தாமதம் ஏற்படுகிறது. பைசல் செய்த வழக்கு
களை, உயர்நீதிமன்றத்திற்கு மேல் முறையீடு செய்ய எடுத்துச்
செல்ல அனுமதி வாங்குவதிலும் காலதாமதம் ஏற்படுகிறது
என்பதைச் சுட்டிக் காட்டி, எடுத்துக் காட்டப்படுகிற அந்தக்
குறைபாடுகளை நீக்குவதற்கான வழி முறைகளை மிகத் துரித
மாக மேற்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கி
றேன்.

வழக்குகள் தீர்க்கப்படுவதில் சுணக்கம் வருவதற்கு இன்னும்
ஒரு காரணம் சொல்லப்படுகிறது. நீதிமன்றங்களுக்குத் தேவை
யான, காகிதங்கள், எழுது பொருள்கள் போன்ற ஸ்டேஷனரிகள்
குறிப்பிட்ட சமயங்களில் அவர்களுக்கு வழங்கப்படுவதில்லை
என்ற குறை பாட்டையும் சுட்டிக் காட்டுகிறார்கள். மிகச்
சிறிய குறைபாடுகளாக இருந்தாலும் கூட, வேலையில் சுணக்கம்
ஏற்படுத்துகின்ற குறைபாடுகளாக இருக்கிற காரணத்தால் அவற்
றையும் அரசாங்கம் எளிதில் போக்குவதற்கான வழி முறை
களைக் கண்டுபிடிக்க வேண்டுமென்றும், அதற்கு ஆவன செய்ய
வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

இன்னும், மதுராந்தகம் பகுதியில் வாழ்கிற எங்களுடைய
தோழர்கள் ஒரு குறையைச் சொல்லி இருக்கிறார்கள். அங்கு
ஒரு இரண்டாவது வகுப்பு மாஜிஸ்டிரேட் கோர்ட் இயங்கி
வருகிறது. ஒரு முன்சீப் கோர்ட்டாக அதை உயர்த்த வேண்டு
மென்று பல காலமாக, அரசாங்கத்திற்குக் கோரிக்கை தந்து
இருக்கிறோம் என்று சொன்னார்கள். மதுராந்தகம் தென்
கோடியிலே வாழ்கிற மக்கள், நீதி தேடி செங்கல்பட்டு வர
வேண்டிய நிலை இருக்கிறது. எனவே, நீதி மக்களுக்கு மிக
அருகாமையிலிருந்து அளிக்கப்பட வேண்டுமென்ற தத்துவத்தின்
அடிப்படையில் இயங்கும் அரசு, எங்களுடைய கோரிக்கையை
நிறைவேற்ற வேண்டுமென்று அவர்கள் சொல்கிறார்கள். ஏற்
கனவே சுட்டிக்காட்டியதைப் போல், இரண்டாவது மாஜிஸ்டி

ரேட் கோர்ட்டுகள் முன்சீப் கோர்ட்டுகளாக மாற்றப்படும் போது, அந்தக் குறைபாடுகள் நீங்கும் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

கூட்டுறவுத் துறை பற்றி ஒரு வார்த்தை சொல்வேன். கூட்டுறவுத் துறை அமைப்புகள் தேர்வுபெற்ற அமைப்புகள் என்ற நிலை மாறி, விசேஷ அதிகாரிகளின் அதிகார வரம்புக்குக் கொண்டு வரப்பட்டு, ஆண்டுகள் பல ஆகிவிட்டன. அதை மாற்றுவதற்கான சந்தர்ப்பம் இந்த அரசுக்கு மீண்டும் கிடைத் தது, இன்றைய தினமும் தரப்பட்டிருக்கிறது. ஜனநாயக அடிப்படையில் கூட்டுறவுத் துறை இயங்க வேண்டுமென்ற தத்துவத்தை அமைத்துக் கொண்டிருக்கும் போது, அதற்கான தேர்தலை தள்ளிப் போடுவதில் எந்தப் பொருளும் இல்லை என்பதை உணர்ந்து விரைவாகத் தேர்தலை நடத்துவதற்கான ஏற்பாடுகளை அரசு நிச்சயமாகச் செய்யும் என்று நான் நம்பு கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்த வரையில், கூட்டுறவு மத்திய வங்கி ஒன்று இயங்கி வருகிறது. விளவங் கோட்டில் அதனுடைய கிளை வங்கி செயல்பட்டு வந்தது. அது இன்றைய தினம் நிறுத்தப்பட்டு இருக்கிறது. விளவங்கோடு தொகுதியிலும், கல்குளம் தாலூகாவிலும் வாழ்கிற ஏழை, விவசாய மக்கள் பயன் பெறும் வகையில், அதனை மீண்டும் அங்கே நிறுவ வேண்டுமென்று என்னுடைய வேண்டுகோளையும் தெரிவித்து, சுட்டிக் காட்டிய சில குறைபாடுகளை நிறை செய் வதற்கு அரசு முயற்சிக்க வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன், வணக்கம்.

(முற்பகல் 11-30)

*<u>திரு. ந. குலசேகர பாண்டியன் :</u> மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் நீதி—நிர்வாகம், கூட்டுறவுத் துறை, சிறைச்சாலைகள் போன்ற மானியக் கோரிக்கைகளின் மீது எனக்குப் பேச வாய்ப்பு அளித்தமைக்கு முதற்கண் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நமது சமுதாயத்தின் அடித்தளத்தில் இருப்பவர்களும், நடுத் தர வகுப்பினரும் அன்றாடம் சந்தித்துப் போராடி வரும் பொருளாதாரப் போராட்டத்தில் பெரிய அளவுக்கு என்று சொல்லுவதற்கு இல்லை என்றாலும் போதிய அளவுக்கு உதவி புரியும் சாதனங்களில் இருந்த பங்கினை படாடோபமின்றி, ஓசை இன்றி தனது பங்கினை செய்து வந்திருப்பது கூட்டுறவு என்று சொன்னால் அது மிகையாகாது. முதலாளித்துவத்திற்கும் பொதுவுடமை சமுதாயத்திற்கும் இந்த இரண்டுக்கும் எட்டாத படி அமைந்துள்ள நமது சமுதாயத்தில் எளியவர், நடுத்தர





வகுப்பினர் வாழ்வில் செல்வச் செழிப்பு மலர முடியாவிட்டாலும் உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க வீடு இது போன்ற அத்தியாவசிய வசதிகள் எல்லாருக்கும் கிடைக்கும்படி இந்த இயக்கம் செய்து வருகிறது. கூட்டுறவு இயக்கம் இந்த நாட்டில் ஆரம்பிக்கப்பட்டதில் இருந்து அதாவது 1904 ஆம் ஆண்டில் இருந்து இன்று வரை மிகவும் விரிந்து வளர்ந்து தன் பணியைச் செய்து வருகிறது. சுருங்கச் சொன்னால் இன்றைய சூழ் நிலையில் ஒரு மனிதனின் வாழ்க்கையில் காலையில் எழுந்ததில் இருந்து இரவில் படுக்கும் வரையில் கூட்டுறவு இயக்கம் அவனது வாழ்வில் பின்னிப் பிணைந்து செயல்பட்டு வருகிறது என்று சொன்னால் அது மிகையாகாது. அன்றாடம் உண்ணும் உணவுப் பொருட்கள், பால், விவசாயம், வீடு கட்டுதல், கைத் தறி ஆடை, தொழில், கதர், சிறு தொழில், மலைவாழ் மக்களின் மேம்பாடு, தொழிலாளிகள் நலன், தொழிலில் நலிந்தோர், சலவைத் தொழிலாளர்கள், சவரத் தொழிலாளர்கள் நலன், பொன் நகைத் தொழிலாளர் நலன் இத்தனை நலன்களையும் காத்து வளர்த்து போற்றுதலில் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற் படுத்தப்பட்டு அத்தனைச் சங்கங்களும் செயல்பட்டு, சமு தாயத்திற்குச் சேவை செய்து வருகின்றது.

இத்துணைச் சிறந்த இயக்கத்தைச் சீர்பட செயல்படுத்த தமிழ்நாடு அரசு தனி கவனம் செலுத்தி செயல்பட்டு வந்து இருப்பது போற்றத் தக்கது ஆகும். அரசு நிதியில் இருந்து விவசாயத்திற்காக குறுகிய காலக் கடன், மத்திய காலக் கடன், விவசாய கிடங்கு கட்டுவதற்காக கடனும், மானியமும் வழங்கி விவசாயத் துறையில் உணவுப் பொருள் உற்பத்தி பெருக் கத்தையும் விவசாயப் பெருமக்களின் வாழ்வின் நலனையும் மொத்தமாக நாட்டின் பொருளாதாரத்திற்கு உறுதுணை புரியும் வகையில் தமிழ்நாடு அரசு செயல்பட்டு வருகிறது. ஏற் கனவே 40 கோடி ரூபாய், அண்மையில் தமிழ்நாடு அரசு அளித்து உள்ள 60 கோடி ரூபாய் சேர்த்து ரூ. 100 கோடிக்கு விவசாயக் கடன் தள்ளுபடி செய்திருப்பது சிறு விவசாய மக்களுக்கு நல்வாழ்வளிக்க வேண்டும் என்கிற தனி அக்கறையை அது எடுத்துக்காட்டுகிறது.

சிறு விவசாயிகளுக்கு நீண்ட கால கடனுதவியில் புதிய கிணறு களுக்கு ரூ. 500 மானியமும், பொய்த்துவிட்ட கிணறுகளுக்கு ரூ. 10,000 வரையில் மானியமும் வழங்கப்பட்டு வருவது விவசாய பெருமக்களுக்குத் தமிழ்நாடு அரசு அளித்து வரும் சார்பு உதவி யாகும். இன்னும் எத்தனையோ கூட்டுறவு மானியங்கள் வழங்கப்படுகின்றன. மலைவாழ் மக்களுக்கு நபர் ஒன்றுக்கு ரூ. 3,000 மானியம் இன்னும் எத்தனையோ மானியம் சிறு விவசாயிகள் ஒன்று சேர்ந்து கட்டியுள்ள சமுதாயக் கிணறுகளுக்கு 25 சதவிகிதம் மானியம், மலிவு விலையில் பள்ளிப் பிள்ளை களுக்குப் பாட புத்தகங்கள் இன்னும் பல.

இருக்கிறது. வழக்கு மன்றங்கள் மிக விரைவில் நீதி கொடுக்கும் என்ற அளவிற்கு நிலைமைகள் இருந்தால் தான், அப்படி நடந்து கொண்டால் தான், அரசாங்கம் நீதியினை உரிய நேரத்தில் நேர்மையான முறையோடு மக்களுக்கு வழங்கமுடியும் என்பதை நான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். காலத்தோடு செய்யாத எந்த ஒரு தீர்ப்பும் சரியான தீர்ப்பாக இருக்காது. மக்களுக்குப் பயன்படாத தீர்ப்பாகத் தான் இருக்கும் என்றும் சொல்லிக்கொள்கிறேன்.

அதே நேரத்தில் பல்வேறு குறைகள் அங்கே இருக்கின்றன. குறிப்பாக கிராமப்புறங்களில் இருக்கின்ற மேஜிஸ்ட்டிரேட், முன்சீப் கோர்ட்டுகளுக்கு கட்டிட வசதிகள் இல்லாமல் இருக்கின்றன. அதோடு, செகண்ட் கிளாஸ் மேஜிஸ்ட்டிரேட் கோர்ட்டுகளில் எல்லா வழக்குகளும் நடைபெற வாய்ப்பு இல்லாததால் செஞ்சியில் இருக்கின்றவர்கள் விழுப்புரம் செல்லவேண்டியிருக்கிறது. அதேபோன்று ஒவ்வொரு பகுதியில் உள்ள கோர்ட்டுகளிலும் இருப்பதால், செகண்ட் கிளாஸ் மேஜிஸ்ட்டிரெட் பதவிகளை, பர்ஸ்ட் கிளாஸ் மாஜிஸ்ட்டிரேட் பதவிகளாக உயர்த்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[முற்பகல் 11-40]

அதே நேரத்தில் ஆந்திர மாநிலம், மற்ற மாநிலங்களில் இன்டகிரேட்டட் கோர்ட் என்ற முறையில் முன்சீப் கோர்ட், மாஜிஸ்ட்டிரேட் கோர்ட் இரண்டும் 6 மாதத்திற்கு மாறி மாறி, மாஜிஸ்ட்டிரேட்டும் முன்சீப்பும் உட்கார்ந்து வழக்குகளை விசாரித்து, தீர்ப்பு வழங்கும் நிலைமை இருக்கிறது. இந்த அரசு அதைக் கவனித்து, அந்த முறையை இங்கும் செயல்படுத்தினால் கிராமப்புற மக்களுக்கும், வழக்கு மன்றங்களுக்குச் செல்கின்ற வழக்கறிஞர்களுக்கும் அது சாதகமாக இருக்கும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

குறிப்பாக என்னுடைய தொகுதியில் முன்சீப் கோர்ட் இப்போதுதான் தொடங்கப்பட்டிருக்கிறது என்றாலும் அதற்கு தனி கட்டிடம் இல்லை. மாஜிஸ்ட்டிரேட் கோர்ட்டுக்கும் கட்டிடம் இல்லை. ஆகவே, செஞ்சி பகுதியில் இருக்கிற இந்த இரண்டு கோர்ட்டுகளுக்கும் தனித் தனியாக கட்டிடம் கட்ட ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே நேரத்தில், இன்றைக்கு வழக்கு மன்றத்தில் இருக்கிற பல்வேறு வழக்குகளை சீக்கிரம் நடத்தி முடிக்க முயற்சி செய்ய வேண்டும். குறிப்பாக வேலூரில் அரசு சார்பில் ஒரு சட்டக் கல்லூரி தொடங்குவதற்கு அரசுக்கு குறிப்பு வந்திருப்ப





தாகக் கேள்விப்படுகிறேன். ஆனால் அரசியல் உள் நோக்கத்தின் காரணமாக அந்த சட்டக் கல்லூரியை வேலூரில் தொடங்காமல் வேறு இடத்திற்கு மாற்றப்போவதாகவும் கேள்விப்படுகிறேன். அப்படி இருக்காது என்று கருதுகிறேன். மாற்றப்போவது உண்மையாக இருந்தால், அதை கைவிட்டு, வேலூரிலேயே சட்டக் கல்லூரியை ஏற்படுத்த ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, முன்சீப் கோர்ட்டில் ஏறத்தாழ 5,000 ரூபாய் மதிப்புள்ள வழக்குகள் மட்டும்தான் வழக்காடப்படலாம் என்று இருக்கிறது. இது பழங்காலத்தில் இருந்த நிலை. இன்றைக்கு 5,000 ரூபாய் என்று சொல்வது அந்தக் காலத்திலுள்ள 500 ரூபாய்க்குத்தான் சமமாக இருக்கும். ஆகவே, இந்த 5,000 ரூபாய் என்பதை 10,000 என்ற அளவுக்கு உயர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல. மாஜிஸ்ட்டிரேட்டினுடைய சம்பளம் 750 ரூபாய் என்றிருக்கிறது. சாதாரணமாக மருத்துவத்துறையில் பணியாற்றும் ஒரு ''நர்சுக்கு'' கூட 700 ரூபாய்க்கு மேல் சம்பளம் கிடைக்கிறது. அப்படி இருக்கும்போது சமுதாயத்தில் உயர்ந்த அந்தஸ்தில் இருந்து, நியாயம் வழங்கி, நீதிபரிபாலனம் செய்கின்ற மாஜிஸ்ட்டிரேட்டுக்கு இந்த 750 ரூபாய் சம்பளம் என்பது சரியல்ல. அவர்களுடைய அந்தஸ்துக்கு தகுந்த முறையில் வாழ்க்கை நடத்த அவர்களுக்கு சம்பளத்தை உயர்த்திக்கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக சிறைத் துறையைப் பற்றி பல்வேறு குறிப்புகள் இங்கே தரப்பட்டிருக்கின்றன என்றாலும் என்னுடைய மவட்டத்தில் கடலூரில் ஒரு ஜெயில் இருக்கிறது. திருட்டுக் குற்றங்கள் சம்பந்தமாக வருகிற கைதிகளைத்தான் அங்கே அடைத்து வைப்பார்கள். ஆனால் எங்களைப் போன்ற அரசியல் கைதிகளையும் அங்கே அடைத்து வைத்தார்கள். அப்போது எங்களுக்காக தனியாக எந்த வசதியும் செய்து தரவில்லை. அரசியல் கைதியாக நான் இரண்டு தடவை அங்கே செல்ல வேண்டியிருந்தது. அதனால் அங்கே உள்ள விவரங்கள் முழுவதும் எனக்கு தெரிந்துகொள்ளும் வாய்ப்பு ஏற்பட்டது. நான் அரசியல் கைதியாக சென்றபோதிலும் எந்தவிதமான சிறப்பான வசதிகளோ, தனிப்பட்ட சலுகைகளோ எனக்கு செய்து தரப்படவில்லை. நான் அங்கே கேட்டபோது, இது அரசியல் கைதிகளுக்காக ஏற்படுத்தப்பட்டதல்ல; அரசியல் கைதிகளுக்கு வேண்டிய வசதிகளும் இங்கே கிடையாது; எப்போதும் வருகின்ற திருட்டுக் குற்றங்கள் சம்பந்தப்பட்ட கைதிகளுக்காக உருவாக்கப்பட்ட சிறை இது; வேறு எந்த வசதிகளையும் உங்களுக்குச் செய்து தர எங்களுக்கு எந்தவிதமான அதிகாரமும் தரப்படவில்லை என்று சொன்னார்கள்,

இத்தகைய சீரிய சேவையைச் செய்து வரும் கூட்டுறவு இயக்கத்தை நிர்வகித்து வரும் இந்த இலாகா, திருத்தப்பட இருக்கும் கூட்டுறவுச் சட்டம் விரைவில் திருத்தம் செய்யப்பட்டு புதிய வேகத்துடன் நல்ல முறையில் கடந்து போன காலத்தில் நடந்த தவறுகள் ஏதும் இதில் புகா வண்ணம் சீர்தூக்கிப் பார்த்து செயல்பட ஆவன புரிய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். கூட்டுறவுத் துறை என்பது மிகவும் பாது காக்கப்பட வேண்டிய ஒரு சீரிய துறையாகும். பொது வாழ்வில் சேவை மனப்பான்மையைக் கொண்டவர்கள் தன்னலமற்ற சேவை ஆற்றக் கூடியவர்கள் மட்டுமே பொறுப்பில் வந்த கடந்த காலங்களில் கூட்டுறவு மக்களுக்கு நல்ல பலனையும், நல்ல சேவையையும், நாட்டுக்கு நல்ல உயர்வையும் மதிப்பையும் மரியாதையும் அளித்து வந்தது. ஆனால் பேரறிஞர் அண்ணா அவர்கள் காலத்துக்குப் பின்னாலே வந்தவர்களாலே இந்தக் கூட்டுறவின் தத்துவம் சிதைக்கப்பட்டு, அது கொள்ளையர் கூடாரமாக மாறும் அளவுக்குத் தரம் தாழ்ந்து போனது. அதற்கு மரியாதைப் போய் விட்டது. ஆகவே நான் அரசைக் கேட்டுக் கொள்வதெல்லாம் அந்தச் சட்டத்தில் உள்ள ஓட்டைகள் அடைக் கப்பட்டு விரைவாக கூட்டுறவுத்துறையில் அதிகாரபற்றற்றவர் கள் பொறுப்புக்கு வர ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

கூட்டுறவுத் துறை தனி அதிகாரிகளின் பொறுப்பில் இருப்ப தால்தான் கூட்டுறவுத் துறையால் நாட்டு மக்களுக்கு எந்த வித மான பலனும் இல்லை, முன்னேற்றமும் இல்லை. சட்டம் திருத்தப்பட்டு இத்துறைக்கு தேர்தல்கள் நடத்தப்படும் வரையி லாவது இடைக்கால நிர்வாகக் குழுவினை கூட்டுறவுத் துறைக்கு நியமனம் செய்ய இத்துறையின் வளர்ச்சியையும், மக்களின் நலனையும் மனதில் கொண்டு அரசு இதனைக் கருணையோடு பரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பாக நிலவளவங்கிகளில் தனி அதிகாரிகள் கார் எடுத்துக்கொண்டு கடன் வசூலிக்கப் போவது பற்றி இங்கே பலரும் குறிப்பிட்டார்கள். வசூலுக்குக் கார் எடுத்துக் கொண்டு போவதால் அந்தக் கார் செலவிற்கே கூட பணம் வசூலாவது இல்லை. நிலவள வங்கிகள் அதனால் மிகவும் மோசமான நிலைக்குப் போய்க்கொண்டு இருக்கிறது என் பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வீடுகள் கட்டுவதற்குக் கடன் வழங்கும் சங்கம் கிராமப்புறங் களில் புரட்சித் தலைவர் அரசு டிஸ்மிஸ் செய்யப்பட்ட பிறகு நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது என்பதை அரசின் கவனத்திற்குக்



கொண்டு வருகிறேன். மக்களின் தீர்ப்பைப் பெற்று புரட்சி கரமாக மீண்டும் அமைந்துள்ள இந்த அரசு, புரட்சி தலைவரி ரின் அண்ணாவின் அரசு, உடனடியாக கடன் வழங்கும் என கிராமப்புற மக்கள் எதிர்பார்த்துக்கொண்டு இருக்கிறார்கள். ஆகவே, அரசு இதில் விரைவாக கவனம் செலுத்த வேண் டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

வேலூர்—மாநில மகளிர் சிறை, சிறைவாசிகளின் பயனுக் கென திறந்தவெளிக் கலையரங்கம் கட்டுதல் மற்றும் சிறை யினுள் உலர் கழிப்பிடத்தை அகற்றி அலுவலகத்திற்கு நீரடிக் கழிப்பிடம் அமைத்தல் ஆகியவற்றிற்காக அரசு நிதி ஒதுக்கி யுள்ளதற்காக நான் பாராட்டுகிறேன். அந்த வேலைகள் விரைவாக நிறைவேற்றப்படவேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன்.

ஏழாவது நிதிக் குழுவின் பரிந்துரைப்படி, தயாரிக்கப்பட்டுள்ள திட்டங்கள் விரைவாக நிறைவேற்ற அரசு ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, ஆயுள் தண்டனை அடைந்த கைதிகள் விடுமுறையில் வெளியில் வர போலீஸ் சிரமங்களுக்கு உள்ளாக்கப்படுவதால், அதைப் போக்குவதற்கு நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டு, வாய்ப்பளித்ததற்கு நன்றி தெரிவித்து முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

*திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசால் அளிக்கப்பட்டு இருக்கின்ற நீதி- நிர்வாகம், கூட்டுறவு, சிறைச்சாலை ஆகிய மானியக்கோரிக்கை கள் மீது திராவிட முன்னேற்றக்கழகத்தின் சார்பில் என்னு டைய கருத்துகளைச் சொல்ல விரும்புகிறேன்.

குறிப்பாக, இன்றைய தினம் ஆட்சிப் பொறுப்புக்கு வந்து இருக் கின்ற அண்ணா திராவிட முன்னேற்றக்கழக ஆட்சியின் நீதி-நிர்வா கம் எந்த அளவிற்குச் சீர்கெட்டு இருக்கிறது என்பதை எடுத்துக் காட்டுகிற வகையில் இங்கே கொடுக்கப்பட்டுள்ள புள்ளிவிவரங் கள், அறிக்கை இருக்கிறது என்பதை நான் முதலில் தெரிவித் துக்கொள்கிறேன். பல்வேறு வழக்குகள் 1979 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டு இன்னும் முடிவுறாமல் சிவில்-கிரிமினல் வழக்கு கள் நீதி மன்றத்தில் தேங்கிக் கிடக்கின்றன என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். உயர்நீதி மன்றத்தில் ஏறக்குறைய முடிவுறாத வழக்குகள் என்ற குறிப்பில் 3,854 வழக்குகள் என்று குறிப்பிடப்பட்டு இருக்கின்றன. அதேபோன்று பல்வேறு சிவில் பல்வகை மேல்முறையீடுகள் 1,086 இன்னும் முடிவுறாத நிலையில் இருக்கின்றன என்று குறிப்பிடப்பட்டு

நான் பலமுறை கேட்டுக்கொண்டும் கூட, உணவு போன்றவை
கள் கூட சரியாக வழங்கப்படவில்லை என்பதை இந்த
மன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.
ஆகவே, கடலூரில் அரசியல் கைதிகளுக்கு சிறப்பான முறை
யில் உணவு, மற்ற வசதிகள் செய்து தர வேண்டிய நடவ
டிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.
அதைப் போன்று மற்ற சிறைச்சாலைகளிலும் செய்து
கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கூட்டுறவுத் துறையைப் பொறுத்த மட்டில் பல்வேறு கருத்துக்
களை எல்லாம் மன்ற உறுப்பினர்கள் சொன்னார்கள். இருந்
தாலும் இன்றைக்கு ஆட்சிப் பொறுப்பில் வந்திருக்கிற ஆட்சி
யாளர்கள் கூட்டுறவுக் கடனை ரத்து செய்வோம், விவசாயிகள்
வாழ்க்கையில் மறுமலர்ச்சி ஏற்படுத்துவோம் என்று சொல்லி
பொறுப்புக்கு வந்தார்கள். ஆனால் இந்த அறிக்கைகளைப்
பார்க்கும்போது அது வெறும் ஏமாற்று வார்த்தை, மக்களை
ஏமாற்றுகின்ற வெற்று ஆரவாரம் என்பதைத்தான் காணமுடி
கிறது. கூட்டுறவுத் துறையின் அறிக்கையிலுள்ள புள்ளி விவரங்
களைப் பார்த்தால் கூட ''ஷார்ட்டெர்ம்'', ''மிட் டெர்ம்''
கடன்கள் படிப்படியாக குறைந்து வந்திருப்பதை சுட்டிக்காட்ட
விரும்புகிறேன்.

1977–78-லே 127·13 கோடியாக இருந்தது. 1978–79 ஆம்
ஆண்டு 42·70 ஆகக் குறைந்திருக்கின்றது. இதே போன்று
நீண்டகாலக் கடன்களும் மிகக் குறைந்திருக்கிறது. இவ்
வாறு கடன்கள் குறைக்கப்படுவதற்கான காரணம் என்ன ?
விவசாயிகள் அதிகமாக நிலவள வங்கியின் மூலமாகக் கடன் வாங்கு
கிறார்கள். அந்தக் கடன்களை எல்லாம் நீண்டகாலக் கடன்
களாக மாற்றுவதில் தவறேதும் இல்லை. அவர்களுடைய
கடன்களை ஒரு சில ஆண்டுகளுக்கு நீடித்து பிறகு வசூல்
பண்ணுவது என்பது நியாயமே ஆகும். விவசாயிகளுக்கு நன்மை
செய்வது உண்மையானால் ஏன் குறைந்த அளவிலே அதாவது
8·5 கோடி என்ற அளவிலே கொடுத்திருக்கிறார்கள். இதை
அரசு ஆராய்ந்து செய்து பார்க்க வேண்டும்.

அடுத்து, ஆறாவது திட்ட அறிக்கையில் ஒவ்வொரு குடும்ப
உறுப்பினர்களையும் கூட்டுறவு இயக்கத்திற்குக் கொண்டு
வருவோம் என்று சொல்லியிருக்கிறார்கள். அதிலே எங்க
களுக்கு ஒன்றும் ஆட்சேபணை இல்லை. அதை எங்களுடைய
இயக்கமும் கண்டிப்பாக ஒத்துக் கொள்ளும். அந்த முறையில்
அரசு கொண்டுவரவேண்டும் என்பது வெறும் ஏட்டளவோடு
நின்றுவிடாமல் அதை நடைமுறைப்படுத்துகின்ற வகையில்
அரசு தெளிவாக எதுவும் சொல்லவில்லை என்பதைத் தெரி
வித்துக் கொள்கிறேன்.





அடுத்து, இன்றைக்கு இருக்கின்ற கூட்டுறவு சங்கங்களில்
எல்லாம் தேர்தல் முறையில் உள்ள அதிகாரிகள் இல்லாமல்
ஸ்பெஷல் ஆபீஸர்கள் என்ற அதிகாரிகள் இருக்கின்றனர்.
அவர்களால் அந்த அமைப்புக்களின் நிர்வாகம் எந்த அளவுக்கு
நடந்து கொண்டிருக்கிறது, எவ்வளவு ஊழல் மலிந்து வரு
கின்றது என்பதைக் கண்டறியும் வாய்ப்புக்கள் இல்லை
என்பதைத் தெரியப்படுத்த விரும்புகிறேன். கூட்டுறவு சுகர்
மில்ஸ் போன்ற இடங்களில் எல்லாம் கலெக்டர் மூலம்
நிர்வாகம் செய்யப்பட்டு வருகின்றது. இன்றைக்கு பல்
வேறு நிறுவனங்களிலே பொது மக்களின் பிரதிநிதிகள்
இல்லாமல் தனி அதிகாரிகள் மூலம் நிர்வாகம் செய்யப்பட்டு
வருகின்றது. அங்குள்ள பணியாட்களின் குறைகள் போக்கப்
படாமல் அவர்கள் கோரிக்கைகள் பல வைக்கின்ற நிலைமை
இன்றைக்கு இருந்துக் கொண்டிருக்கின்றது. இதை எல்லாம்
அரசு கவனித்து அந்த கூட்டுறவுத் துறையில் வெகு சீக்கிர
மாக தேர்தல் நடத்தி மக்களுடைய பிரதிநிதிகள் வருவதற்
கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று திராவிட
முன்னேற்றக் கழகத்தின் சார்பாக நான் கோரிக்கை விட்டு
அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

*<u>திரு. நன்னிலம் ஆ. கலையரசன் :</u> மாண்புமிகு பேரவை
தலைவரவர்களே, சட்ட—கூட்டுறவுத் துறை
அமைச்சர் அவர்கள் 13, 14, 23 ஆகிய எண்களின் கீழ் அர
சிடம் வேண்டி இருக்கக்கூடிய மானியத் தொகையை அரசு
வழங்க வேண்டும் என்று கேட்டு சில கருத்துக்களை இந்த
அவையின் முன்னாலே வைக்க ஆசைப்படுகின்றேன்.

குறிப்பாக நீதித்துறையைப் பொறுத்தவரையில் தஞ்சை
மாவட்டத்திலே இருக்கக்கூடிய நன்னிலம் தாலுக்கா அந்த
மாவட்டத்திலேயே மிகப் பெரிய தாலுக்காவாகும். அங்கே
கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்னாலே ஒரு முன்சீப் கோர்ட்
டும், ஒரு இரண்டாம் தர மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டும் இருந்
தது. அந்த கோர்ட்டுகள் மாற்றப்பட்டு திருவாரூருக்குச்
சென்றுவிட்டது. அந்த நிலையில் அங்குள்ள மக்கள் ஒரு
புறத்திலே திருவாரூருக்கும், இன்னொரு புறத்திலே மாய
வரத்திற்கும், நாகப்பட்டினத்திற்கும் நீதி தேடிச் செல்ல
வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருப்பதை மாண்புமிகு
புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு மாற்றியமைத்து
கூடிய விரைவிலே அங்கே நீதிமன்றம் அமைவதற்கான
வாய்ப்பை உருவாக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, இங்கே பல உறுப்பினர்கள் பேசுகின்ற போது
தனி அதிகாரிகள் அமைக்கப்பட்டு ஏறத்தாழ இரண்டரை
ஆண்டு காலமாக நிர்வாகம் கெட்டிருக்கின்றதும் விவசாயப்

ஆனால், விவசாய சங்கங்களின், நாணயச் சங்கங்களின் தலைமைப் பொறுப்பில் உள்ளவர்கள், தங்கள் நிலங்களை ஐந்து ஏக்கர்களாக பிரித்து, மனைவி, பிள்ளைகள் பெயரில் பினாமியாக எழுதிவைத்து, அவற்றிற்கு விவசாயக் கடன்கள் வாங்கிவிடுகிறார்கள். அப்படி வாங்கப்பெற்ற விவசாயக் கடன்கள் அத்தனையும் ரத்து செய்ய வேண்டும் என்று போராட்டம் நடத்துகிறார்கள். வங்கியைச் சேர்ந்தவர்கள் கடனை வசூல் செய்ய, அல்லது ஜப்தி செய்ய வந்தால் இவர்கள் தங்களுடைய அம்பாசிடர் கார்களில் அங்கேபோய் நின்று கொண்டு ஜப்தியை தடுக்கிறார்கள், அல்லது பத்து மோட்டார் சைக்கிள்களில் ஊரையே திரட்டிக் கொண்டு வந்து நின்று, ஜப்தி செய்வதை தடுக்கிறார்கள்.

இப்படி இவர்கள் கொடுக்காததின் காரணமாக, வர வேண்டிய கடன் பணம் வராததன் காரணமாக, சிறு விவ சாயி உண்மையாக பயன் பெறுவதில்லை. இச்சங்கங்களால், அவர்களுக்கு நிலம் வாங்குவதற்கு பணம் கொடுக்க முடிய வில்லை. இதனால் பாதிக்கப்படுபவர்கள் சிறு விவசாயிகள் தான்.

நமது மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் கூட சொல்லி இருக்கிறார்கள் '' பினாமி நிலங்களை எடுப் போம் '' என்று. தஞ்சாவூரிலே கூட்டுறவு விவசாய நாணயச் சங்கத்தில் ஐந்து ஏக்கர் நிலம் வைத்திருப்பவர்களுக்குத் தான் கடன் என்று சொல்கிறார்கள். ஆனால், நெய்வேலியில் வேலை செய்யும் பிள்ளையின் பெயரில் இருக்கும் நிலங்களுக்கு கடன் வழங்கப் பெற்றிருக்கிறது. திருவரம்பூர் ஹெவி பாய்லர்ஸ்ஸில் வேலை செய்கிற ஒரு பிள்ளையின் பெயரில் இருக்கும் நிலங் களுக்கு கூட்டுறவுக் கடன்கள் வழங்கப் பெற்றிருக்கிறது. இந்த சங்கத்தின் தலைமை ஸ்தானத்தில் இருப்பவர்கள் தங்களுடைய நிலங்களை இப்படி தங்கள் சொந்தக்காரர்களின் பெயர்களில் எழுதி வைத்திருக்கிறார்கள்....

திரு. மு. அம்பிகாபதி : பினாமி டிரான்ஸ்ஸாக்ஷன்ஸ் இருக்கிறது என்று சொல்கிறீர்களா ? அதை மாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சொல்கிறீர்களா? நீங்கள் சொல்வது எனக்குப் புரியவில்லை.

திரு. நன்னிலம் ஆ. கலையரசன் : கூட்டுறவு விவசாயப் பண்ணைச் சங்கத்தின் சார்பாக திருப்பூரில் உள்ள பண்ணை சங்கத்தின் உபரி நிலங்களை யார் யார் விவசாயத் தொழிலாளர் களாக இருந்து மனு போட்டிருக்கிறார்களோ அவர்களுக்கு, சங்க உறுப்பினர்களுக்கு, தர வேண்டும். ஆனால், அப்படித் தரப்





படாமல் அந்த இடங்களை அத்துறையின் தலைமையை ஏற்றி ருக்கும் தலைவர் தனக்கு வேண்டியவர்களுக்கு, ஒரே குடும்பத்தில் உள்ளவர்களுக்குத்தான் தந்து கொண்டிருக்கிறார்கள். எனவே, இப்படிப்பட்ட முறைகேடான செயல்கள் மாற வேண்டும் என்றால் அரசு கொண்டு வர இருக்கும் புதிய மாற்றுத் திட்டங் களை உடனடியாக அமலுக்குக் கொண்டு வர வேண்டும்.

கிராம கூட்டுறவு நாணயச் சங்கங்களுக்கு ஆலோசனைக் குழுக்களை அமைத்து, கடன் வாங்கியதை திருப்பிக் கட்டும் மனோபாவம் உள்ளவர்களை அதில் உறுப்பினர்களாக நியமிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு விடை பெறுகிறேன். நன்றி. வணக்கம்.

திரு. கே. நாராயணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு இங்கே பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு திருவண்ணாமலை தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும், காங்கிரஸ் கமிட்டித் தலைவர் திரு. எம். பி. சுப்பிரமண்யம் அவர்களுக்கும், திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் டாக்டர் மு. கருணாநிதி அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியை இந்தப் பேரவையில் தெரிவித்துக் கொள்கிறேன்.

கூட்டுறவுத்துறை பற்றி நான் ஒரு சில கருத்துகளைச் சொல்ல விரும்புகிறேன். விவசாயிகளுக்கு பணம் உடனடியாகத் தேவைப்பட்டால் தாங்கள் உற்பத்தி செய்திருக்கும் நெல்லை அன்றைய தினம் மார்க்கட்டுக்குக் கொண்டு போய் விற்றால் குறைந்த விலைக்குத்தான் விற்க முடிகிறது. ஆகவே, பத்து கிராமங்களுக்கு ஒரு கூட்டுறவு சொஸைட்டி என்று வைத்து அரசாங்கம் நிர்ணயித்திருக்கும் விலைக்கு அவர்கள் விற்றால் நெல்லை எடுத்துக் கொள்ள வேண்டும். அப்படிச் செய்தால் விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைப்பதோடு அவர்கள் முன்னுக்கு வர வாய்ப்புமிருக்கிறது. ஆகவே, அப்படிச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்போது சர்க்கார், விவசாயிகள் வாங்கிய கடன்களை கொடுக்க வேண்டாம் என்று அறிவித்து விட்டார்கள். அதன் காரணமாக கூட்டுறவுச் சங்கங்கள் சரியாக நடக்க முடியாத ஒரு நிலை உருவாகியிருக்கிறது.

கிராமங்களில் பத்து, இருபது பேர்கள் ஒன்றாகச் சேர்ந்து நூறு ஏக்கர் நிலத்தை பயிர் செய்ய மோட்டார்கள் கொடுத்து, கடன் வசதி கொடுத்து ஊக்கமளித்தால் விவசாயிகளுக்கு நல்ல லாபம் கிடைக்கும்.

பெருமக்களுக்குக் கடன் தரமுடியவில்லை என்றும் பல பிரச்
சினைகளைத் தீர்க்க முடியவில்லை என்றும் பல பிரச்
கிறார்கள். என்னைப் பொறுத்த வரையில் குறிப்பிட்டிருக்
4,742 கிராம விவசாயக் கூட்டுறவுச் சங்கங்கள் தமிழகத்தில்
என்பதைத் தெரிவித்துக் கொண்டு அந்த கிராம இருக்கின்றன
சங்கங்களை 16 மத்திய கூட்டுறவு வங்கிகள் கூட்டுறவுச்
கொண்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் நிர்வகித்துக்
இந்த 16 மத்திய கூட்டுறவு வங்கிகளின் கட்டிடங்கள் கொள்கிறேன்.
உயரமோ அவ்வளவு உயரத்தையும் தாண்டி ஒவ்வொரு எவ்வளவு
யிலேயும் ஒவ்வொரு வரலாறு மிக்க பெரிய கதைகள் வங்கி
கூடிய நிலை இருக்கின்றன. இப்படிப்பட்ட நிலைகளில் இருக்கக்
மத்திய வங்கிகள் பல இருந்தமையின் காரணமாகத்தான் அந்த
திருமதி இந்திராகாந்தி அவர்கள் அவசரகால சட்டத்தை
உருவாக்கி அங்கே தனி அதிகாரிகளை, திராவிட முன்னேற்ற
கழக ஆட்சியைக் கலைத்த காலத்திலே, நியமித்தார்கள்.
அதற்குப் பிறகு புரட்சித் தலைவர் ஆட்சி ஏற்பட்ட பிறகு
அவர்கள் தக்க நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்கள்.
முன்பு ஒவ்வொரு மத்திய வங்கியும் ஒவ்வொரு கதையினைக்
கூற ஆரம்பித்த காரணத்தாலே, அப்படிப்பட்ட நிலை
எதிர்காலத்திலே உருவாகக்கூடாது என்ற காரணத்தாலே
கூட்டுறவுத் துறையிலே ஒரு புதிய சட்டத்தை உருவாக்கிட
வேண்டும் என்று ஒரு மையமான கருத்தை வைத்து
இன்றைக்கு அது ஆய்விலே இருக்கிறன்து. அந்த ஆய்வினுடைய
முடிவு தேவையான முறையிலே மிக சீக்கிரத்திலே வர
வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்
கொள்கிறேன்.

[முற்பகல் 11-50]

இந்த நேரத்தில் கூட்டுறவுத் துறையின் வங்கிகளிலிருந்து
கடன் வாங்கக் கூடியவர்கள் உண்மையாகவே அவர்களுக்கு
அது தேவைப்படுவதாக, அல்லது உண்மையாகவே சிறு விவ
சாயிகளாக இருக்கிறார்களா என்பதைப் பார்க்க வேண்டும்,
அப்படிப் பார்த்து நிச்சயம் செய்து கொண்ட பிறகு கடன்
வழங்கப் பெற வேண்டும் என்பதைக் கூறிக் கொள்கிறேன்.
ஏனென்றால் பணம் கடன் வாங்குபவர்கள் உண்மையிலேயே
சேற்றில் இறங்கி விவசாயம் செய்பவர்களாக இருப்பதில்லை.
இங்கே கூட இம்மன்றத்தில் ஒரு உறுப்பினர் பேசுகிறபோது,
'உண்மையான விவசாயிக்கு, சேற்றில் இறங்கி வேலை செய்யக்
கூடிய விவசாயிக்கு அந்தக் கடன் போய்ச் சேர வேண்டும்
தவிர நிலத்தை வைத்துக் கொண்டிருப்பவர்களுக்கு, அந்த
நிலத்தின் சொந்தக்காரர்களாக இருப்பவர்களுக்கு கடன்
வழங்கிடுவதில் கூடாது' என்று பேசிக் கொண்டு வரும்போது,
மற்றொரு உறுப்பினர், 'வக்கீல் தொழில் புரியும் நீங்கள்
மாலை நேரத்திலே விவசாயத் தொழில் செய்கிறீர்களா'



என்றெல்லாம் கேட்டார்கள். எதற்கு இதைக் குறிப்பிட்டுச் சொல்கிறேன் என்றால், உண்மையாக விவசாயம் செய்யும் விவசாயிக்கு அவன் பயன் பெறும் வண்ணம் கடன்கள் வழங்கப்பெற வேண்டும்.

நமது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு தஞ்சை மாவட்டத்திலே இருக்கக் கூடிய நிலைமையைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அங்கே கூட்டுறவு விவசாய நாணயச் சங்கம் என்ற ஒன்று இருக்கிறது. கோவில் குத்தகையை எடுத்திருப்பவர்கள், மற்ற குத்தகைதாரர்கள் எல்லோரும் சேர்ந்து இந்தக் கூட்டுறவுச் சங்கத்தை நிறுவியிருக்கிறார்கள். அந்தக் கூட்டுறவு நாணய சங்கத்தின் தலைவரின் மூலமாகத்தான் கடன்கள் பெற முடியும். அங்கே நிலம் ஒருவரின் பெயரில் இருக்கிறது. கடன் வேறு ஒருவரின் பெயரில் இருக்கிறது. கடனை, அந்த நிலத்தில் வேலை செய்யக் கூடிய குத்தகைகாரர்களின் பெயர்களில் வழங்குகிறார்கள். நிலம் வேறு ஒருவரின் பெயரில் இருக்கிறது.

அதுமட்டுமல்ல, ஒரே சர்வே நெம்பரில் இரண்டு வங்கிகளில் இருந்து கடன் பெற்றிருக்கிறார்கள். கடன் வழங்க 5 ஏக்கர் குறைந்த பட்சம் என்று வரையரை செய்யப்பட்டிருக்கிறது. அதற்கு மேல் வைத்துக் கொண்டிருப்பவர்களுக்கு கிடையாது. ஆனால் இந்தத் தலைவர்கள், 5 ஏக்கர் தன்னுடைய பெயரில், 5 ஏக்கர் மனைவியின் பெயரில், 5 ஏக்கர் பிள்ளையின் பெயரில், அதிலே நெய்வேலியில் ஒரு பையன் வேலை செய்துக் கொண்டிருப்பான், அவன் பெயரில் இருக்கும் நிலத்தில் கடன் வழங்கப்பட்டிருக்கும். திருவெரம்பூரில் ஹெவி பாய்லர்ஸ்ஸில் ஒரு பையன் வேலை செய்துக் கொண்டிருப்பான். அவன் பெயரில் இங்கே நிலத்திற்கு கடன் வழங்கப்பட்டிருக்கும்.

இப்படிப்பட்ட நிலைமைகள் தவிர்க்கப்பெற வேண்டும். பினாமி நிலங்களை வைத்திருப்பதும், பினாமி நிலங்களுக்கு விவசாய கடன் உதவி செய்வதும் தவிர்க்கப்பட வேண்டும்.

விவசாய வேலைகளுக்கு 100 ரூபாய் தேவைப்படுகிறது, அந்த வட்டிக்கு நெல்லாக அளந்து விடுகிறேன் என்று சொல்கிற விவசாயிக்கும், விவசாயப் பயிர் இல்லை ஒரு மரக்கால் விதைப் பயிர் கொடு அதை இரண்டு மரக்காலாக திருப்பித் தருகிறேன் என்று சொல்கிற விவசாயிக்கும் உதவி செய்வதற்காகத்தான் இந்த கூட்டுறவு வங்கிகள் உண்மையாகவே ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

[திரு. கே. நாராயணசாமி] [1980 ஜூலை 4

கூட்டுறவு லேபர் சொஸைட்டிஸ் வைத்து வேலை செய்பவர்
களுககு கான்ட்ராக்ட்களில் முன் உரிமை கொடுத்தால் அந்த
கான்ட்ராக்ட் மூலம் கிடைக்கும் லாபம் அந்தத் தொழிலாளர்
களுக்கு, அந்தக் கூலி ஆட்களுக்குக் கிடைக்கும்.

விவசாயக் கூலிகளுக்கு கிராமங்களில் ஆறு மாதம்தான் வேலை
கிடைக்கிறது. மீதி நாட்களில் அவர்களுக்கு வேலை கிடைப்ப
தில்லை. எட்டணாவிற்குக் கூட வேலை செய்ய வருகிறார்கள்.
அந்த நிலையைப் போக்க கூட்டுறவு சங்கங்கள் வைத்து ஆடுகள்
வாங்கிக் கொடுப்பது, கோழிப் பண்ணை வைத்துக் கொடுப்பது,
கறவை மாடுகள் வாங்கிக் கொடுப்பது போன்றதொரு நிலையை
உருவாக்கினால் அந்த விவசாயக் கூலிகள் நல்ல முறையில்
வாழ்க்கை நடத்த முடியும். அதற்கு ஆவன செய்ய வேண்டும்
என்று கேட்டுக் கொள்கிறேன்.

குறைந்த வருமானம் உள்ளவர்கள் கடனை திருப்பிக் கட்ட
வேண்டாம் என்று சொல்லி விட்டார்கள். எங்கள் கிராமத்தில்
விவசாயிகள் கடன் வாங்க வருகிறான் என்றால் கையை
நீட்டிக் கொண்டுதான் வருவான். ஸ்டாம்ப் கூட
இருக்காது. நாங்கள்தான் ஸ்டாம்ப் ஒட்டி பணம் கொடுப்
போம். இப்போது அவர்கள் கடன் பெற வாய்ப்பில்லை.
ஆகவே, கூட்டுறவுச் சங்கங்கள் கடன் இல்லாத விவசாயிகளுக்கு
கடன் கொடுக்க முன் வந்தால் அவர்கள் நல்ல முறையில்
விவசாயம் செய்ய வாய்ப்பிருக்கும் என்று கூறிக் கொள்ள
விரும்புகிறேன்.

[நண்பகல் 12-00.]

எண்பது ஆண்டுகளுக்கு மேலாக தமிழ்நாட்டில்
கூட்டுறவு இயக்கம் சிறப்பாக செயலாற்றி வந்தது. பத்து,
இருபது ஆண்டுகளுக்கு முன்னேயே அன்றைய சென்னை
பூர்காணமாக இருந்த இம்மாநிலம் இந்தியாவிலேயே கூட்டுறவுத்
துறையில் முன்னோடியாகத் திகழ்ந்தது. வெளி மாநிலத்தி
லுள்ளவர்கள் மட்டுமின்றி, அண்டை நாட்டிலிருந்து குறிப்பாக,
மலேசியா, சிங்கப்பூர், இலங்கை, தாய்லாந்து மற்றும் ஆப்பிரிக்க
நாட்டு மக்களும் சென்னைக்கு விஜயம் செய்து கூட்டுறவுத்
துறையில் ஏற்பட்டுள்ள வியக்கத்தக்க முன்னேற்றம் பற்றி அறிந்து
சென்றனர். ஆனால், இன்றைய நிலை என்ன? கூட்டுறவு
சங்கங்களில் என்றும் இல்லாதபடி 90 சதவீதத்துக்கு மேலாக
தவணை கடந்த வட்டியும், அசலும் நிலுவையாக உள்ளன.
குறிப்பாக, கடந்த மூன்று, நான்கு ஆண்டுகளாக கூட்டுறவு
கடனைத் திருப்பிச் செலுத்த வேண்டுமென்று நினைப்பதுகூட
கேவலமாகப் போய் விட்டது.



1980 ஜூலை 14] [திரு. கே. நாராயணசாமி]

முதலாளித்துவமோ அல்லது கம்யூனிசமோ செய்ய முடியாத
சமூக மாற்றத்தை கூட்டுறவு இயக்கம் மூலம் சாதிக்க முடியும்.
ஆனால், இவ்வியக்கத்தையே பாழ்படுத்தி விட்டால் ஏழை,
நடுத்தரப் பிரிவினர் மட்டுமல்லாது, நாட்டின் பலதரப்பட்ட
மக்களும் பாதிக்கப்படுவார்கள். ஆகவே, கூட்டுறவு இயக்கத்தை
பலப்படுத்த இந்த அரசு எல்லா வகைகளிலும் பணியாற்ற
வேண்டும்.

கூட்டுறவுக் கடனை வஜா செய்வது என்று போனால், இனி
கூட்டுறவு இயக்கத்தையே மூடிவிட வேண்டிய நிலை ஏற்படும்.
இந்த நிலையை நாம் ஆதரிக்கக் கூடாது. இயற்கையின்
சீற்றத்தால் பாதிக்கப்படும்போது அதற்குரிய முறையில் நட்டம்
அடைந்த விவசாயிகளுக்கோ அல்லது வேறு பிரிவினர்களுக்கோ
தகுந்த நஷ்ட ஈடு கொடுப்பதே சிறந்தது. அதற்குப் பதில்
கடனை வஜா செய்து விட்டால், விவசாயி மறுபடியும் கடன்
வாங்குவது கஷ்டமாகிவிடும். மற்றும், இதே காரணம் கூறி
சமூகத்தின் மற்ற பிரிவினர்களும் தங்கள் தங்கள் கடன்களை
வஜா செய்யுமாறு அரசை வற்புறுத்துவர்.

கூட்டுறவு சங்கங்களில் தணிக்கை முறை இந்த இயக்கத்தின்
தொடக்க காலத்திலிருந்து கூட்டுறவு பதிவாளரின்கீழ் நடந்து
வருகிறது. இந்த முறையை மாற்றி தணிக்கையைத் தனியாகப்
பிரிக்கப் போவதாக அரசு ஆணை வெளியிட்டுள்ளது. இது
சரியல்ல. கூட்டுறவு இயக்கம் ஒரு வியாபார ஸ்தாபனம் அல்ல.
இது ஒரு மக்கள் நல்வாழ்வு இயக்கம். ஆகவே, கூட்டுறவு
இயக்கம் சரியான முறையிலே நடக்க வேண்டுமென்றால்
கூட்டுறவுத் துறையிலே அனுபவம் பெற்ற பெரிய அதிகாரிகளை
நியமிக்க வேண்டும். அனுபவம் இல்லாதவர்களை இந்த
கூட்டுறவு இயக்கத் துறையிலே நியமிக்கக் கூடாது. அனுபவம்
உள்ளவர்களை இதிலே நியமித்தால் தான், கூட்டுறவுச் சங்கங்
களுக்கு நன்மை ஏற்படும்.

அடுத்து ஒரு சின்ன விஷயம். கள்ளக்குறிச்சியிலே கூட்டு
சர்க்கரை ஆலை ஒன்று இருக்கிறது. அதிலே விவசாயிகள் பங்கு
போட்டிருக்கிறார்கள். அந்த விவசாயிகள் 10, 15 வருடங்களாக
என்ன லாபம் வரப் போகின்றது என்பது தெரியாமல்
இருக்கிறார்கள். அங்கே ஸ்பேர் பார்ட்ஸ் நிறைய கிடக்கிறது.
மறுபடியும், அந்த அதிகாரிகள் தங்களுக்கு கமிஷன் கிடைக்க
வேண்டுமென்பதற்காக ஸ்பேர் பார்ட்ஸ் வாங்குகிறார்கள். இந்த
மேலதிகாரிகளுக்கு மெக்கானிகல் விஷயத்தில் எந்தவிதமான
அனுபவமும் இல்லாத காரணத்தினால், வாங்குவதற்கு பில்
இருக்கிறதா, சாமான்கள் இருக்கிறதா என்றுதான் பார்க்கிறார்
களே தவிர, ஏன் வாங்குகிறோம் என்பது அவர்களுக்குத்
தெரியாது. அதனால்தான், இங்கே இந்த நஷ்டம் எல்லாம்.

லாபம் வருவதற்கே வாய்ப்பு இல்லை. எனவே, இப்படிப்பட்ட
நிலைமைகளை யெல்லாம் நீக்கி, லாபம் உண்டாக்குவதற்கு
இந்த அரசு முன் வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.
இப்போதும் அங்கே அதிகமான ஸ்பேர் பார்ட்ஸ் இருக்கின்றது.
கள்ளக்குறிச்சியிலே இருந்து, பாலக்கோட்டிற்கு லட்சக் கணக்காக
கொடுத்து விட்டு, இதுவரையில் அதை வாங்கியதாகத் தெரிய
வில்லை. அதனால்தான் இந்த குறைபாடுகள். லாபம்
காண வேண்டும் என்று எழுதிக் கொண்டிருக்கிறார்கள். இதே
மாதிரியான முறைகேடுகளைத் தவிர்க்க இந்த சர்க்கார்
நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, என்
உரையை முடித்துக் கொள்கிறேன்.

*<u>திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :</u> மாண்புமிகு மாற்றுத்
தலைவர் அவர்களே, கூட்டுறவு மானியக் கோரிக்கையை ஆதரித்து
ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். நம்முடைய
கூட்டுறவுத் துறை உண்மையிலேயே நம்முடைய புரட்சித்
தலைவர் அவர்கள் ஆட்சிக்கு வந்த பிறகு, அவருடைய ஆட்சி
காலத்திலே எல்லாத் துறைகளிலும் 2,000 ரூபாய் கடன்
கொடுத்தால், 500 ரூபாய் இனாம் என்று சொல்லி, மாடு
வாங்குவது, ஆடு வாங்குவது, கோழி வாங்குவது என்று சொல்லி
ஏழை மக்களின் வாழ்வை உயர்த்துவதற்கு இந்த மானியம்
இங்கே வைக்கப்பட்டு இத்துறை நல்ல முறையிலே தொண்டு
செய்வதைப் பார்த்து நான் பாராட்டுகிறேன். மனதார அந்த
ஏழை மக்களின் சார்பாக வரவேற்கிறேன்.

இந்தப் பணம் விநியோகம் செய்வதிலே சில குறைபாடுகள்
நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அந்தக் குறையைத் தவிர்க்க
நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக
நடவடிக்கை எடுப்பார்கள் என்ற நம்பிக்கை இருக்கின்ற
காரணத்தினால், இதைச் சொல்கிறேன். என்னுடைய
தொகுதியிலே, சிவஞானபுரத்திலே 2 இலட்சம் பணம் வழங்கப்
பட்டிருக்கிறது.

அந்த இரண்டு இலட்சம் ரூபாயை 130 நபர்களுக்கு ஒரு
நபருக்கு இரண்டாயிரம் ரூபாய் வீதம் கொடுத்து ஆடு மாடுகள்
வாங்க மத்திய வங்கி கொடுத்திருக்கின்றது. அந்தப் பணம் முறை
யாக விநியோகம் செய்யப்படவில்லை. அதற்கு எந்தவிதமான
நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. கீழே இருக்கும் அதிகாரி
கள் அவ்வாறு நடவடிக்கை எடுக்காமல் இருக்கிறார்கள்.
இப்படிப்பட்ட குறைபாடுகள் இருக்குமானால் நாம் செய்யக்கூடிய
மிகப் பெரிய நல்ல காரியங்களுக்குக் கூட கெட்ட பெயர் வரும்
சூழ்நிலை ஏற்படும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்
குத் தெரிவித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக





அதிலே யார் சம்பந்தப்பட்டிருந்தாலும், அதிகாரிகளாக இருந்
தாலும் சங்கத் தலைவராக இருந்தாலும் தண்டிக்க வேண்டும்.
ஜெயிலுக்கு அனுப்ப வேண்டும், அவர்கள் பணத்தை எடுத்துக்
கொண்டிருந்தால் அதை வசூலிக்க நடவடிக்கை எடுக்க வேண்டு
மென்று கேட்டுக் கொள்கிறேன்.

கிணறுகள் வெட்டிக் கொடுக்க அதிகப்படியாக மானியம்
கொடுக்கிறோம். புதுக் கிணறுகளுக்கு அதிகமாகக் கொடுக்
கிறோம். ஆயினும் இன்று நிறைய நிலங்கள் 'அன்-கல்டிவ பிள்
லாண்ட்ஸ்' ஆக இருக்கின்றன. இப்பேர்ப்பட்ட நிலங்களை
எல்லாம் எடுத்து சிறு சிறு பண்ணைகளாக கூட்டுறவு முறையில்
வைத்து 100 ஏக்கர், 150 ஏக்கருக்கு ஒரு பெரிய கிணறைப்
போட்டு பம்ப் செட் மூலம் தண்ணீர் வசதி செய்து கொடுப்பார்
களானால் நிச்சயமாக ஏழை எளிய மக்களுக்குப் பயன் கிடைக்
கும், தரிசான நிலங்களில் சாகுபடி செய்யவும் வழி வகை செய்த
வர்களாவோம். காலையில் கூட சபையில் மாண்புமிகு வரு
வாய்த் துறை அமைச்சர் அவர்கள் ஒரு சட்ட முன்வடிவைக்
கொண்டு வந்தார்கள். ஏழைகளின் பெயரில் பினாமி நிலங்
களை சில வசதி படைத்தவர்கள் வைத்துக் கொண்டிருக்
கிறார்கள், அதை எடுத்து ஏழைகளுக்குக் கொடுக்க வேண்டு
மென்ற அடிப்படையில் ஒரு சட்ட முன்வடிவைக் கொண்டு வந்
தார்கள். அதைக் கூட அனுபவசாலி, திறமைசாலியான ஒரு
கனம் அங்கத்தினர் வேண்டாமென்று கூறுவதை நினைத்து மன
தில் கவலைப்பட்டேன். இப்படி யார் யார் பினாமி நிலத்தை
வைத்து உழுது கொண்டிருக்கிறார்களோ அந்த நிலங்களை எல்
லாம் எடுத்து அது உடனடியாக ஏழை எளிய மக்களுக்குக்
கிடைக்க வழிவகைகள் செய்யவேண்டுமென்று பணிவோடு
கேட்டுக் கொள்கிறேன்.

<u>மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :</u> மாற்றுத் தலை
வர் அவர்களே, காலையிலே அந்தச் சட்ட முன்வடிவை நாம்
கொண்டு வருகிறபோது எதிர்க்கட்சியைச் சார்ந்தவர்கள் அதை
முகப்படுத்த அனுமதி தரக்கூடாது என்று சொன்னார்கள்.....

<u>திரு. மு. அம்பிகாபதி :</u> பாயின்ட் ஆப் ஆர்டர். மாண்பு
மிகு அமைச்சர் அவர்கள் எதிர்க்கட்சியைச் சார்ந்தவர்கள்
என்று பொதுவாகச் சொல்லுகிறார்கள். நாங்கள் எல்லாம்
எதிர்க்கட்சியில் உட்கார்ந்து கொண்டிருக்கிறோம். எந்தக்
கட்சி என்று தெளிவாக விளக்க வேண்டும்.

<u>திரு. வி. கிருஷ்ணமூர்த்தி :</u> திராவிட முன்னேற்றக் கழகத்
தின் சார்பில் நான் எதிர்த்தேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் ; மாண்புமிகு
உறுப்பினர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் அந்தச் சட்ட
முன்வடிவை அறிமுகம செய்யக்கூடாது என்று எண்ணத்தைத்
தெரிவித்தார்கள். நான் அவையின் முன் அறிமுகம் செய்திருக்
கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திருமதி பொன்னம்மாள்
அவர்கள் இங்கே எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டாலும் தாமதப்
படுத்தாமல் கொண்டு வரவேண்டு மென்ற ஆசையைத் தெரி
வித்திருக்கிறார்கள்.

நான் இந்த அரசின் சார்பில் தெரிவித்துக் கொள்வேன் —
மக்களுடைய எண்ணங்களை அறிந்துதான் நாங்கள் அதைக்
கொண்டு வந்திருக்கிறோம். அந்தச் சட்ட முன்வடிவு அவைக்கு
முன்னால் விவாத்திற்கு வரும்போது உங்களுடைய எண்ணங்
களைச் சொல்லுவது மட்டும் போதாது. இங்கிருக்கும் சட்ட
மன்ற உறுப்பினர்கள் மக்களுடைய எண்ணங்களைத் தெரிந்து
சட்ட நுணுக்கங்களை அறிந்து முன்னாலேயே எனக்கு அதுபற்றி
தங்கள் கருத்துக்களைத் தெரிவிக்கவேண்டும். 234 சட்டமன்ற
உறுப்பினர்களிடமும் கலந்து பேசுவதற்கு எனக்கு நேரம்
போதாது. ஆகவே, மக்கள் நலன் கருதி ஒவ்வொரு கட்சியிலும்
மூன்று பேர் கொண்ட குழுவாக இருந்து அவரவர்கள் கட்சியின்
கருத்துக்களையும் அவர்கள் உறுப்பினர்கள் கூறும் கருத்துக்களை
யும் அந்தச் சட்ட முன்வடிவிலே உள்ள குறைபாடுகளையும்
பற்றி என்னுடன் பேசுவதற்கு நான் வாய்ப்பைத் தருகிறேன்.
அப்படிப் பேசினால் இன்னும் அதிலே இருக்கும் குறைபாடுகளை
நீக்க வாய்ப்பாக இருக்குமென்று கருதுகிறேன். திராவிட முன்
னேற்றக் கழகத்தைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர் திரு.
கிருஷ்ணமூர்த்தி அதை எதிர்த்தார்கள். ஆனால் எதிர்க்கட்சித்
தலைவர் டாக்டர் கலைஞர் கருணாநிதி, பேராசிரியர் ஆகியவர்
களுடைய கருத்துக்களையும் அறிந்து கொள்ள விரும்புகிறேன்.
1961-ல் நிலச் சீர்திருத்தச் சட்டம் வந்தபோது பேரறிஞர்
அண்ணா அவர்கள் இங்கே பேசுகிறபோது ' இது உச்ச வரம்புச்
சட்டம் அல்ல ; இது மிச்ச வரம்புச் சட்டம் ' என்று
சொல்லியிருக்கிறார்கள். இது உறுப்பினர் கிருஷ்ணமூர்த்தி
அவர்களுக்கு நன்றாகத் தெரியும். அண்ணா அவர்கள் என்ன பேசி
யிருக்கிறார்கள் என்ற கருத்தைப் படித்துவிட்டு அதையும் அறிந்து
கொண்டு பேசவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[பிற்பகல் 12–10]

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : மற்ற உறுப்பினர்கள் ஏதோ
பேசுகின்ற சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு நான்
எதிர்க்கிறேன், அதாவது, திராவிட முன்னேற்றக் கழகத்தின்
சார்பிலே நெல்லிக்குப்பம் கிருஷ்ணமூர்த்தி எதிர்க்கிறார் என்று
சொல்லி, கலைஞர் கருத்து என்ன, பேராசிரியர் கருத்து
என்ன என்று கேட்கிறார்கள், நான் சொல்கிறேன், எங்கள் எல்
லோருடைய கருத்தும் ஒரே கருத்துதான், அதிலே எந்தவிதமான



வேறுபாடும் கிடையாது. நிலத்தை 20 வருஷமாக வாங்கி வைத்
துக்கொண்டிருக்கிறவனிடம் அந்த நிலம் இன்றைக்கு அவனுக்குச்
சொந்தம் இல்லை என்று சொன்னால் என்ன நியாயம் ? 1979
ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 1 ஆம் நாளைக்கு முன் என்று
அந்தத் தேதியை வைத்திருக்கிறீர்கள், 1979 ஆம் ஆண்டு
ஜூலைத் திங்கள் 1 ஆம் நாள் என்று ஏன் வைத்தீர்கள், அந்தத்
தேதியின் மகிமை என்ன ? அதற்கு முன்னாலே அந்த நிலத்தை
வேறு ஒருவருக்கு மாற்றியிருந்தால் செல்லும் என்று சொல்
கிறீர்கள். இதிலே அரசியல் உள்நோக்கம் இல்லையா ? சந்
தர்ப்பம் வருகிறபோது நீங்கள் விளக்கம் சொல்லுவீர்கள், நாங்
களும் விளக்கமாகப் பேசப்போகிறோம், அப்போது செலக்ட்
கமிட்டிக்கு போகலாம், ஆகவே அப்போது பேசிக்கொள்வோம்,
இப்போது இன்ட்ரொடக்ஷ்ன் ஸ்டேஜிலே அதிலே இருக்கிற
குறைபாட்டின் காரணமாகத்தான் நான் எதிர்த்து இருக்கிறேன்
என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : 20 ஆண்டுக்
காலமாக இல்லாமல் இன்றைய தினம் புரட்சித் தலைவர்
அவர்கள் நம்முடைய தமிழ்நாட்டின் முதல்வராக ஆகியிருக்
கிறார்கள், ஆகவே அன்றைக்குத்தான் சட்டம் கொண்டுவர
வாய்ப்பு இருக்கிறது, அதற்கு முன்னாலே அந்த வாய்ப்பு
இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. மு. அம்பிகாபதி : தலைவர் அவர்களே, இந்தச்
சட்டம் வேண்டாம் என்பது தி.மு.க.வின் கருத்தா ?

மாண்புமிகு பேரவைத் மாற்றுத் தலைவர் (திரு. பெ. சு.
திருவேங்கடம்) : காலையிலே பேரவைத் தலைவர் அவர்கள் இது
பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே அதைப்பற்றி இப்
போது விவாதிக்கவேண்டாம். தனியாக அதுபற்றி வரும்போது
விவாதிக்கலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி எ. எஸ். பொன்னம்மாள் : அமைச்சர் அவர்க
ளுக்கு நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தச்
சட்டத்தை விரைவிலே அமல்படுத்தவேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன்.....................

மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் : (திரு. பெ. சு.
திருவேங்கடம்) : தயவுசெய்து மானியக் கோரிக்கையின்
மீது பேசவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : பினாமி நிலங்களிலே
பம்புசெட்டுகளை போட்டுக்கொண்டு இருக்கிறார்கள்—இந்தத்
துறையிலே அதுவும் வருவதால் தான் சொல்கிறேன் — கனம்

அமைச்சர் அவர்கள் இதையெல்லாம் கவனித்து மக்களுக்கு நல்ல தைச் செய்ய வேண்டுமென்ற அளவிலேதான் நான் இதைச் சொன்னேன்.

அடுத்து கூட்டுறவுத் துறையைப் பொறுத்தவரையிலே என் னுடைய தொகுதியிலே பல விஷயங்கள் இருக்கின்றன. நான் முன்பேகூட சொல்லி இருக்கிறேன். என்னுடைய தொகுதியிலே திராட்சை, தக்காளி இவைகள் அதிகமாக பயிராகின்றன. அங்கே கூட்டுறவு முறையிலே பழப் பண்ணைகளை ஏற்படுத்த வேண்டும், அதோடுகூட அவைகளிலிருந்து ஜாம் செய்வதற்கான முறையிலே ஏற்பாடுகளையும் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதைப்போலவே பருத்திக் கொட்டையிலிருந்து எண்ணெய் எடுக்கிற முறையிலே கூட்டுறவுத் துறையிலே ஒரு ஜின்னிங் பேக்டரி ஏற்படுத்தித்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து வீட்டு வசதியைப் பொறுத்தவரையிலே நாம் நிறைய வீடுகளைக் கட்டிக்கொடுக்கிறோம், ஆண்டுக்கு 20 ஆயிரம் 30 ஆயிரம் என்று சொன்னால் போதாது, 1 லட்சம் என்ற அள விலே உயர்த்த வேண்டும், அப்படிச் செய்வதன் மூலமாக தீப் பிடித்துவிட்டால் அவர்களுக்கு உதவி செய்ய வேண்டிய நிலைமை கூட இருக்காது. வீட்டுப் பிரச்சினைகள் தீர்க்கப்படும். அதைப் போலவே கிராமங்களிலே திருப்பிக் கட்டும் சக்தி படைத்தவர் களுக்கு 10 ஆயிரம் வரை கொடுத்தால் வீடுகள் கட்டுவதற்கு வாய்ப்பு இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, சிறைச்சாலையிலே வேலை செய்யக்கூடியவர்கள் முழு நேரமும் வேலைசெய்து கொண்டிருக்கிறார்கள். அவர் களுக்கு 8 மணி நேரம் வேலை என்று நிர்ணயித்து அவர்களுக்கு வேலைப்பளுவைக் குறைப்பதன்மூலம் அதிகமான வேலைவாய்ப் பையும் ஏற்படுத்தமுடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மதுரையிலே உயர்நீதி மன்றத்தின் ஒரு பகுதியை வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்து ஜெயில் விசிட் டர்களை நியமிக்கும்போது, — எல்லா இடங்களிலேயும் ஆண் களைப் போடுகிறீர்கள் — இந்தப் பதவிகளிலேயாவது பெண் களைப் போடவேண்டும். அப்படிப் போட்டால் அவர்கள் கருணையோடு, தாயுள்ளத்தோடு கைதிகளின் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு வசதியாக இருக்கும். ஆகவே ஜெயில் விசிட்டர்களை பெண்களாகப் போடவேண்டுமென்று கேட்டுக் கொண்டு உரையை முடித்துக் கொள்கிறேன்.

டாக்டர் கே. சௌரிராஜன் : மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, சட்டம், கூட்டுறவு அமைச்சர் மாண்புமிகு பொன்னையன் அவர்கள் கொண்டுவந்துள்ள மானியக் கோரிக் கைகளின்மீது நடக்கும் விவாதத்தில் பங்கு கொள்ள வாய்ப் பளித்தமைக்கு நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள் கிறேன்.





ஆங்கிலத்தில் சொல்வார்கள், Justice delayed is Justice denied என்று. தாமதமாக வழங்கப்படும் நீதி மறுக்கப்பட்ட நீதி என்று அடிக்கடி சொல்வார்கள். அதைப்போல தமிழகத்திலே இன் றைக்கு அதிகமான அளவிற்கு நீதிமன்றங்களிலே வழக்குகள் நீதி வழங்கப்படாமல் இருப்பது நிச்சயமாக மக்களுக்கு நீதி மறுக்கப் பட்டது என்ற கருத்தை இங்கே நான் சொல்லிக் கொள்ள விரும்பு கிறேன். ஆகவே, அதற்கான நடவடிக்கைகளில் மாண்புமிகு அமைச்சரவர்கள் அதிகமான அளவிற்குக் கவனம் செலுத்த வேண்டுமென்ற யோசனையைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்கு அடிப்படையான காரணம், நீதிமன்றங்கள் அதிகமாக இல்லாத காரணத்தினாலா அல்லது நீதிமன்றங்கள் சரியான முறையில் இயங்காத காரணத்தினாலா என்பது போன்ற பல காரணங்கள் இருக்கின்றன. எனவே, உண்மையான காரணத்தை ஆராய்ந்து அதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று தாழ்மையோடு நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, சிறைச்சாலைகளைப் பொறுத்த வரையில், இங்கே வந்துள்ள அந்த அறிக்கைகளைப் படிக்கின்ற நேரத்திலே, சிறைச்சாலைகளிலே அதிகமான அளவிற்கு நாம் கவனம் செலுத்த வேண்டுமென்ற கட்டாயமான ஒரு நிலையிலே இருக்கிறோம். குறிப்பாக, வளர்ந்து வரும் சூழ்நிலையில், அதிகமான அளவிற்கு— நான் இந்த நேரத்தில் தாழ்மையோடு ஒரு கருத்தைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன், யாருடைய மனத்தையும் புண்படுத்துவ தற்காகச் சொல்லவில்லை—பெண் குற்றவாளிகள் நாளுக்குநாள் அதிகமாகிக் கொண்டு இருக்கிறார்கள். ஆகவே, பெண் குற்ற வாளிகளுக்கென்று தனியாக சிறைச்சாலைப் பிரிவினை ஏற்படுத்தி வசதி செய்து கொடுத்து இவர்களையும் நல்லமுறையில் பரா மரிக்க வேண்டிய கடமை அரசுக்கு இருக்கிறது என்ற யோசனை யையும் நான் இந்த நேரத்தில் வழங்குகின்றேன்.

சிறைச்சாலைக்குச் சென்றவன் மீண்டு வருகின்ற நேரத்திலே, அவன் முத்திரை குத்தப்பட்டு, பச்சை குத்திய குற்றவாளியாகத் தான் வருகின்றானே தவிர, எந்த விதமான சீர்திருத்தமும் அவ னிடத்தில் இருப்பதாகத் தெரியவில்லை. ஜெயில் ரிஃபார்ம்ஸ் கமிட்டியில் பரிந்துரை சொல்லியிருக்கிறார்கள். அந்தப் பரிந் துரைகள் மேல் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற என்னு டைய தாழ்மையான அபிப்பிராயத்தைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். சிறைச்சாலைகளில் இருக்கின்ற குற்றம் புரிந் தவர்களின் மன நிலையை ஆராய வேண்டியது மிகவும் அவசிய மானது. சந்தர்ப்ப, சூழ்நிலைகளின் காரணமாக குற்றம் செய் பவர்கள் மனோ நிலையிலே நல்லவர்களாக இருந்திருக்கலாம். ஆனால் மீண்டும் சிறைச்சாலையை விட்டு வெளியே வருகின்ற நேரத்தில், எந்தக் காரணத்திற்காகக் குறிப்பிட்ட அந்தக் குற் றத்தை அவர்கள் செய்தார்கள், அவர்களுடைய மனோ, நிலை என்ன, அதை மாற்றுவதற்கு ஏதாவது வகை உண்டா என்பது

போன்றவைகளை ஆராய்வதற்கு மனோ தத்துவ நிபுணர்களை சிறைச்சாலை அதிகாரிகளாக நியமிக்க வேண்டும் அல்லது சிறை அதிகாரிகளுக்கு மனோ தத்துவப் பயிற்சி அளிக்க வேண்டுமென்று தாழ்மையோடு இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

கடைசியாக ஒரு வார்த்தை கூட்டுறவுத் துறையைப்பற்றிச் சொல்ல விரும்புகிறேன். கூட்டுறவுத் துறையின் தத்துவமே, மக்கள் தாங்களாகவே, தங்களுக்குள்ளேயே இயங்க வேண்டும், அரசாங்கத்தின் கையை எதற்கும் எதிர்ப்பார்க்கக்கூடாது என்பதுதான். அதற்காகத்தான் கூட்டுறவு முறைகளை வளர்க்க வேண்டும் என்பதுதான் அதன் அடிப்படைத் தத்துவம். ஆனால் வருகின்ற சமுதாயத்தில், மக்கள் அதிகமாக அரசாங்கத்தைத் தான் எதிர்ப்பார்க்கிறார்களே தவிர, கூட்டுறவு இயக்கத்தை வளர்ப்பதற்காகத் தெரியவில்லை. உதாரணமாக, ரேஷன் கார்டு முறை, பங்கீட்டு முறையை எடுத்துக்கொண்டால், டி.யூ. சி.எஸ்., டி. என். சி. எஃப்., கூட்டுறவு நுகர் பொருள் வாணி பத்தில் ஈடுபட்டவர்கள், நல்ல பலன் அடைந்து கொண்டிருந் தார்கள். ஆனால் இப்பொழுது எதற்கெடுத்தாலும் அரசாங் கம்தான் எங்களுக்கு வழங்க வேண்டும். அரசாங்கம்தான் எங் களுக்கு வழங்க வேண்டும் என்ற அளவிற்கு ரேஷன் கார்டு கையிலே இருப்பதைப் பார்க்கிறோம். கன்ஸ்யூமர்ஸ் கோவாப்ப ரேட்டிவ்ஸ்—இல் அரசாங்கம் அதிக அளவிற்கு அக்கறை செலுத்தி, அதிக நிதியை ஒதுக்கி, அந்த முறையை அதிகமாகப் புகுத்தினால் அரசாங்கத்தின் சுமை குறையும் என்று கூறி, எனக்கு வாய்ப்பளித் தமைக்காக நன்றி கூறி விடைபெறுகிறேன்.

திரு. சேலம் மு. ஆறுமுகம்: பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, கூட்டுறவு-சட்ட அமைச்சரவர்களால் கொண்டுவரப் பட்ட மானியக் கோரிக்கைகள் 13, 14, 23 ஆகியவைகளின்மீது ஒரு சில கருத்துக்களைச் கூற விரும்புகிறேன். நம்முடைய நாடு ஒரு விவசாய நாடு. ஆகவே, இந்தியாவில், விவசாயத் துறையில் இருப்பவர்களைப் பாதுகாப்பதற்காகவே, விவசாயத் துறையில் ஒரு பசுமைப் புரட்சியை ஏற்படுத்த வேண்டுமென்பதற்காக விவசாயத் துறையில்தான், இந்திய நாட்டில் இந்தச் கூட்டுறவு இயக்கமே தோன்றியது. இன்றைக்குத் தமிழ்நாட்டில் மட்டு மல்ல, இந்தியத் துணைக்கண்டம் முழுவதும் பசுமைப்புரட்சி ஏற்பட்டிருக்கிறது என்றால் அதற்கு மூலகாரணம் கூட்டுறவு வங்கிகள் மூலம் விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட கடன்களும், உதவிகளும்தான்.

ஆனால், இங்கே எனக்கு முன்பு பேசிய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் திரு. நாராயணசாமி ரெட்டியார் அவர்கள் இன்றைக்கு விவசாயிகள் வாங்கிய கடன்கள் முழுவதையும் வஜா





செய்ய வேண்டும், தள்ளுபடி செய்ய வேண்டும் என்று கேட்டிருக் கிறார்கள். அப்படித் தள்ளுபடி செய்தால் இந்தக் கூட்டுறவு இயக்கமே நசிந்து விடும், இந்தக் கூட்டுறவு இயக்கமே செத்து விடும். இந்தக் கூட்டுறவு இயக்கமே அழிந்து விடும் என்றும் தெரிவித்துக்கொள்கிறேன்.

[பிற்பகல் 12·20]

ஆனால், அதே இந்திரா காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த மாண்பு மிகு உறுப்பினர் திரு. என். எஸ். வி. சித்தன் அவர்கள் நிதி நிலை அறிக்கையின் மீது பேசிய நேரத்தில், விவசாயிகளுக்காக, சிறிய ஏழை விவசாயிகளுக்காக, புரட்சித் தலைவருடைய அரசு வழங்கிய ரூ. 60 கோடி தள்ளுபடி செய்த அந்த உதவியை யானைப் பசிக்கு சோளப் பொரி என்று வர்ணித்தார்கள். ஆனால், அதே கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு நாராயணசாமி ரெட்டியார் அவர்கள் கடன்களை ரத்து செய்து கூட்டுறவுத் தத்துவத்தின் அடிப்படையையே தகர்த்து விடும், கூட்டுறவு சங்கங்களையே மூடவேண்டிய நிலைமைக்கு ஆளாக்கும் என்று சொன்னார்கள். இப்படி, மாறுபட்ட கருத்தை உடையவர்கள்தான் கடந்த தேர்தலிலே, விவசாயிகளுடைய கடனை ரத்து செய்வோம்; ரத்து செய்ய வேண்டும் என்று கூறினார்கள். அப்படிப்பட்ட அவர்களுடைய மாறுபட்ட கருத்துக்களை அவர்களுக்கே சமர்ப் பணம் செய்கிறேன்.

கடந்த காலத்திலே, இந்திய நாட்டில், தமிழகம்தான் கூட் டுறவுத் துறையில் முன்னணியில் இருந்து வந்தது. ஆனால், சில பல ஆண்டுகளாக, இந்தியாவில் கூட்டுறவுத் துறையில் தழைத்து ஓங்கிய தமிழகம், கூட்டுறவுத் துறையின் மூலம் வாங்கிய கடன்கள் திருப்பிக் கொடுக்கப்படாததன் காரணமாக கூட்டுறவு துறையில் ஒரு தேக்க நிலையை அடைந்திருக்கிறது. கூட்டுறவு களே செயல்படாத ஒரு நிலையை அடைந்திருக்கிறது.

இன்றைக்குக் கடன் கொடுத்த எந்த ஒரு கூட்டுறவு வங்கியும், அந்தக் கடனைத் திரும்பப் பெறாவிட்டால், நிச்சயமாக தொடர்ந்து செயலாற்ற முடியாது என்பதை எல்லோரும் நன்றாக அறிவார்கள். அப்படி அறிந்தவர்கள்தான் கூட்டுறவு மூலம் எவ்வளவு கடனை வேண்டுமானாலும் வாங்கிக் கொண்டு, வாங் கிய கடனைத் திருப்பிச் செலுத்தாமல், கூட்டுறவு செயல்படாத நிலையை ஏற்படுத்துகிறார்கள். இன்றையதினம் ஏழை பணக் காரன் என்ற ஏற்றத்தாழ்வற்ற ஒரே ஒரு அமைப்பு கூட்டுறவுத் துறைதான். கூட்டுறவுத் துறையில்தான் எல்லோரும் ஓர் இனம் என்பதை எடுத்துக்காட்டுகிறார்கள். ஏழைதான் தன்னுடைய கடனை தள்ளுபடி செய்ய வேண்டும், வஜா, செய்ய வேண்டும் மென்று கேட்கிறானென்றால், அவனுடைய குரலில் நியாயம் இருக்கிறது என்றால், பணக்காரர்களும் ஏழை விவசாயி பின்னால் ஒளிந்து கொண்டு, அவர்களும் அந்தப் பலனை அடைய முயற்சிக்

றார்கள், விரும்புகிறார்கள். இன்றைய தினம் டிராக்டர்கள்
வைத்திருக்கிறவர்கள் ஏழைகளா? அல்லது பம்ப் செட் வைத்து,
பல ஏக்கர்கள் நிலம் வைத்திருப்பவர்கள் ஏழைகளா என்பதை
எண்ணிப்பார்க்க வேண்டும்.

இன்றைக்கு அரசியல் ஆதாயங்களுக்காக, விவசாயிகள்
கடனை ஒட்டுமொத்தமாக தள்ளுபடி செய்ய வேண்டுமென்பதை
அவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். யார் ஆட்சிக்கு வந்தா
லும், எந்தவித நிதி ஆதாயம் இல்லாமல் ஆட்சியை நடத்த முடி
யாது என்பதையும், கொடுக்கப்பட்ட கடன்களைத் திருப்பிக்
பெற்றால்தான், மக்களுக்குக் பல ஆதாயமான திட்டங்களை
நிறைவேற்ற முடியும், ஆட்சியையும் நடத்த முடியும் என்பதை
அவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். இன்றையதினம் கூட்
டுறவு இயக்கத்தின் மூலமாக . . . . . . . . . .

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

திருமதி. த. இராசாம்பாள் : தற்பொழுது இந்த அரசு
ரூ.60 கோடி தள்ளுபடி செய்தது எந்த ஆதாயத்தை அடிப்படை
யாக கொண்டது என்பதை உறுப்பினர் விளக்குவாரா என்று
கேட்கவிரும்புகிறேன்.

திரு. சேலம் மு. ஆறுமுகம் : இன்றைக்குக் கடன் பளுவி
னால் அமிழ்த்தப்பட்டு, புழுக்களாய் துடித்துக் கொண்டிருக்கிற
ஏழை, எளிய, சிறு விவசாயிகளுக்கு உதவ வேண்டுமென்ற நல்ல
நோக்கத்தோடுதான் கடன் சலுகை புரட்சித் தலைவரால் அளிக்
கப்பட்டது என்பதை அம்மையார் அறிய வேண்டுமென்று அடித்து
கூற விரும்புகிறேன்.

திருமதி த. இராசம்மாள்: அதே வகையிலேதான் மற்ற
அரசியல் கட்சிகளிலே உள்ள அங்கத்தினர்களும் தலைவர்களும்
கடன்களைத் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று கோருகிறார்கள்.
அதை ஒரு குற்றச்சாட்டாகக் கூறி, எந்த ஆதாயத்தின் அடிப்
படையில் கோருகிறார்கள், என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்
கள் இந்த மன்றத்தில் கேட்பது சரியா என்று கேட்கிறேன்.

திரு. வி. பி. பாலசுப்பிரமணியம்:—தலைவரவர்களே. . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர்
தான் பதில் சொல்ல முடியுமே தவிர, இந்த உறுப்பினருக்கு அந்த
உறுப்பினர், அந்த உறுப்பினருக்கு இந்த உறுப்பினர் என்று
பதில் சொல்லிக் கொண்டிருந்தால், சபையில் அலுவல்களை
நடத்த முடியாது. (குறுக்கீடு)



திரு. சேலம் மு. ஆறுமுகம் : ஆகவே, இன்றைய தினம் நாட்டில் கூட்டுறவுச் சங்கங்கள் செழித்து வாழ்ந்தால்தான் சிறு சிறு விவசாயிகள் வாழமுடியும் என்பதை நாம் உணரவேண்டும். இன்றைய தினம் கூட்டுறவுச் சங்கங்கள் அழிந்து விட்டால் நிச்சயமாக சிறுசிறு விவசாயிகள் தங்களுடைய வாழ்வை நடத்த முடியாது. அவர்கள் கடந்த காலத்தில் உதவிக்காக, தனியாரை நாடி, அதிகயான வட்டியில் கடனைப் பெற்று, பட்ட அவதியை நாம் நன்றாக அறிவோம்.

ஆகவேதான் இன்றைய தினம் எல்லா அரசியல் கட்சிகளும் விவசாயிகளுக்கு நல்ல ஆலோசனையை எடுத்துக் கூறவேண்டும். விவசாயிகளுக்கு அளிக்கக் கூடிய சலுகைகள் உண்மையான ஏழை விவசாயிகளுக்கு—5 ஏக்கர் புன்செய் நிலம் வைத்திருக்கின்றவர்களுக்கும் 2½ ஏக்கர் நஞ்சை நிலங்கள் வைத்திருக்கின்றவர்களுக்கும்—இந்தக் கடன் சலுகைகள் பூரணமாக உதவவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். சில நிலப் பிரபுக்கள், பண முதலைகள் விவசாயிகளை முன்னாலே தள்ளி, பின்னால் இருந்து செயல்படுவதை அரசு கண்காணிக்கவேண்டும். அப்படி அவர்கள் வாங்கிய கடன்களை அந்தப் பணக்காரர்களிடம் இருந்து வசூல் செய்யவேண்டும்.

இன்றைய தினம் சொல்லுகிறோம், ஆண்களும் பெண்களும் சரிநிகர், சமானமாக வாழ்வோமிந்த நாட்டிலே என்று பாரதியார் பாடினார். ஆனால் அந்த சமம் பாட்டளவிலேதான் இருக்கிறதே தவிர, எட்டளவில் எந்த விதமான பாதுகாப்பும் பெண்களுக்குக் கிடையாது.

மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். விபசாரத் தொழிலை மேற்கொண்ட பெண்கள்தான் இன்றைக்குத் தண்டிக்கப்படுகிறார்களே தவிர, ஆண்கள் தப்பித்துக் கொள்கிறார்கள். அதற்கான சட்டத்தைத் திருத்த வண்டும் ஏன்றார். ஒரு வெள்ளாடு தண்டனையை அனுபவிக்கிறது, ஆனால் அந்த வெள்ளாட்டை மேய்ந்த வேங்கை தண்டனையிலே இருந்து தப்பித்துக் கொள்கிற சூழ்நிலை இன்று இருக்கிறது. எனவே இந்த சமூக விரோதக் குற்றங்களைச் செய்யக் கூடிய ஆண்களுக்கும் தண்டனை வழங்கக் கூடிய வகையில் இந்தச் சட்டத்தை திருத்தி அமைக்கவேண்டும்.

அடுத்து இன்றைக்குச் சில காவல் நிலையங்களில் மாலை 6 மணிக்கு மேல் பெண்களை அழைத்துச் செல்லும் பழக்கம் இருக்கிறது. மாலை 6 மணிக்கு மேலும், விடியற்காலை 6 மணிக்குள்ளாகவும் பெண்களை காவல் நிலையங்களுக்கு அழைத்துச் செல்லக் கூடாது என்று ஒரு சுற்றறிக்கை இருக்கிறது. ஆனாலும் அந்தச் சுற்றறிக்கை பூரணமாக அமல்படுத்தப்படாமல் இருக்கிறது. அப்படியும் இரவு நேரங்களில் ஏன் பெண்களை

அழைத்துச் செல்லுகிறீர்கள் என்று கேட்டால் அவர்களைக் கைது செய்யவில்லை, விசாரணைக்கு அழைத்துச் செல்கிறோம் என்று சொல்லுகிறார்கள். அப்படி விசாரணைக்கு அழைத்துச் செல்லுகின்ற பெண்களிடம் தவறாக நடந்து கொள்கிறார்கள் என்றெல்லாம் பத்திரிகையிலே படிக்கின்றோம். எனவே நான் கேட்டுக் கொள்வதெல்லாம் பெண்களை காவல் நிலையத்தில் கைது செய்யப்பட்டு வைத்திருப்பார்களானால், அவர்கள் கைது செய்யப்பட்டு ஒரு மணி நேரத்திற்குள் தந்தி மூலமாக பக்கத்திலே உள்ள மாஜிஸ்டிரேட்டுக்குத் தகவல் கொடுக்க வேண்டும். (மணி அடிக்கப்பட்டது) அந்தப் பெண் கைது செய்யப்பட்ட 12 மணி நேரத்திற்குள் அந்த எல்லையில் உள்ள மாஜிஸ்டிரேட் கோர்ட்டுக்கு முன்னால் நிறுத்தப்பட வேண்டும் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து இருதார தடைச் சட்டம் என்று இருந்தாலும் பல கணவன்மார்கள் இரண்டு தாரங்களைக் கட்டிக் கொண்டு இருக்கிறார்கள். அதிலே முதல் மனைவி புகார் கொடுத்தால்தான் விசாரிக்கிறார்கள். இல்லை என்றால் குற்றம் செய்தவர்கள் தப்பித்துக் கொள்கிறார்கள். எனவே இந்த சட்டத்தைத் தீவிரமாக்கவேண்டும்.

அடுத்து சிறையிலேயும், பல கொடுமைகள் நடைபெறுகின்றன. காவல் துறையிலே அளிக்கப்படுகின்ற தண்டனை காரணமாக சிறைக்குப் போகிறார்கள். ஆனால் அந்தச் சிறைகள் தண்டனையை நிறைவேற்றுகின்ற கூடமாக மட்டும் இல்லாமல், சீர்திருத்தப் பள்ளியாகவும் இருக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மேலும் அங்கே இருந்து கொண்டிருக்கிற வார்டர்களை 3 ஆண்டுகளுக்கு ஒரு முறை மாற்ற வேண்டும். 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை அவர்களுக்குப் பயிற்சி அளிக்கவேண்டும். மாநிலத் தலைவர்கள், சிறை அதிகாரிகள் கொண்ட குழுக்கள் வைத்து அவைகளை மேலும் பராமரிக்கக் கூடிய மாதிரி சிறைச்சாலை வார்டர்களுக்கு பயிற்சி அளிக்க வேண்டும்.

அடுத்து சிறைச்சாலைகளிலும், காவல் நிலையங்களிலும் ஏற்படுகின்ற மரணங்களைப் பற்றி விசாரிப்பதற்கு ரெவின்யு இலாகா அதிகாரிகள்தான் போடுகிறார்கள். உதவிக் கலெக்டர்கள் போடப்படுகிறார்கள். இது மிகவும் தவறு. இனிமேல் காவல் நிலையங்களிலும், சிறைச்சாலைகளிலும் மரணமடைகின்றவர்களைப் பற்றி விசாரிப்பதற்கு நீதிபதிகளை நியமிக்க வேண்டும் அல்லது மருத்துவக் குழுவில் இருப்பவர்கள் விசாரணை செய்ய வேண்டும். இந்த மாதிரி சம்பவங்கள் அடிக்கடி நடக்கின்றபடியாலும்—கொலைகள் தற்கொலைகளாக மறைக்கப்பட்டு வெளியிடப்படுகின்றன. (மணி அடிக்கப்பட்டது).





[பிற்பகல் 12-30]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : காவல் நிலையத்தில் நடப்பதற்கும், ஜெயிலுக்கும் சம்பந்தம் இல்லை. திரு. ஆறுமுகம் உட்காருங்கள்.

*திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்திலே பேசுவதற்கு ஒரு வாய்ப்பினை நல்கியதற்காக இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களுக்கும் காஞ்சி நகரத்து வாக்காளப்பெருமக்களுக்கும் என்னுடைய இதயம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

''தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலார்
செல்வம் சேர்வது நாடு''

என்று வள்ளுவப் பெருந்தகை கூறிய கருத்துக்கு இணங்க மக்களின் நலனுக்காகச் செயல்பட்டு வருகின்ற எங்களுடைய இதய தெய்வம் புரட்சித் தலைவர் தலைமையில் இயங்குகின்ற இந்த அமைச்சரவை சமர்ப்பித்துள்ள மானியக் கோரிக்கைகளில் ஒன்றான ''நீதித் துறை'' குறித்து ஒரு சில கருத்துக்களைக் கூறலாம் என்று நினைக்கிறேன். இங்கே கொடுக்கப்பட்டுள்ள மானியக்கோரிக்கை கொள்கை விளக்கக்குறிப்பின் '8-வது பக்கத்திலே' வெளியூரில் உள்ள சிவில் நீதி மன்றங்கள் பற்றி குறிப்பிடப்பட்டு இருக்கிறது. என்னுடைய தொகுதியான காஞ்சீபுரத்தில், அண்ணா பிறந்த திருத்தலத்தில் ஒரு மாவட்ட நீதிமன்றம் அமைக்கவேண்டும் என்று புரட்சித் தலைவர் அவர்களை நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். தமிழகத்தில் உள்ள எல்லா மாவட்டத் தலைநகரங்களிலும் மாவட்ட நீதிமன்றங்கள் இருக்கின்றன. ஆனால், காஞ்சிபுரத்தில் இல்லை. ஆகவே, அண்ணா பிறந்த அந்த திருத்தலத்தில் ஒரு மாவட்ட நீதிமன்றம் அமைக்க வேண்டும் என்று மீண்டும் ஒருமுறை புரட்சித் தலைவர் அவர்களை நான் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்

சபார்டினேட் ஜட்ஜ்ஸ் கோர்ட்டில், சார்நிலை நீதி மன்றங்களில் உள்ள நீதிபதிகள் மோட்டார் வெகிகில்ஸ் பற்றிய வழக்குகளை விசாரிக்க அதிகாரம் தற்போது இல்லை என்று சொல்லப்படுகிறது. அவர்களுக்கு அந்த அதிகாரத்தை வழங்க அரசாங்கம் முன் வரவேண்டும் என்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். தற்போது வழங்கப்பட்டுள்ள அறிக்கையில் இந்தக் கொள்கை அறிவிக்கப்படவில்லை என்பதையும் நான் சுட்டிக் காட்டவிரும்புகிறேன்.

அடுத்ததாக, குற்றவியல் நீதிமன்றங்களைப் பற்றி இதிலே குறிப்பிட்டு இருக்கிறார்கள். அதை நான் மனதாரப் பாராட்டுகிறேன். பேரறிஞர் அண்ணா பிறந்த திருத்தலமான காஞ்சீ

[திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்] [1980 ஜூலை 14

புரத்தில் தலைமை குற்றவியல் நீதிமன்றம் (Chief Judicial Magist at:) ஒன்றை நிறுவவேண்டும் என்றும், முதல் வகுப்பு நீதிமன்றம் ஒன்று நிறுவவேண்டும் என்றும், புரட்சித் தலைவர் அவர்களை என் தொகுதி மக்கள் சார்பாக விரும்பி வேண்டி கேட்டுக்கொள்கிறேன்.

இரண்டாவது வகுப்பு குற்றவியல் நீதிபதிகளை முதல் வகுப்பு குற்றவியல் நீதிபதிகளாக மாற்றுவதற்கான திட்டம் இதிலே குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தக் கருத்து நீண்டகால மாக இருந்து வருகிறது. ஆனால் இன்று வரையில் நிறைவேற்று வதற்கு நடவடிக்கை எடுத்ததாகத் தெரியவில்லை. மற்ற மாநிலங்க்ளில் இது நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது. அந்த முறையில் இரண்டாவதுவகுப்புநீதிபதிகளை முதல்வகுப்புநீதிபதி களாக மாற்றிட அரசாங்கம் ஊக்கத்தோடும், ஆக்கத்தோடும் நடவடிக்கை துரிதமாக எடுக்கவேண்டும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

நீதித் துறையில் லஞ்சம் லாவண்யம் ஏற்படாமல் இருக்க நீதிபதிகளுக்கு அவசியத் தேவையான வீட்டு வசதி, போக்கு வரத்து வசதி போன்றவற்றையும் செய்து தந்து, அவர்களுடைய அத்தியாவசியத் தேவைகளைப் பூர்த்தி செய்வதன் மூலம் லஞ்சம் லாவண்யத்தை ஒழிக்கலாம் என்றும் கூறிக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியான காஞ்சீபுரத்தில் உள்ள நீதி மன்றக் கட்டிடங்கள் மிகவும் பாழடைந்த நிலையில் இருக்கின் றன. ஏற்கனவே நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலை வர் அவர்கள் அந்த இடத்தைப் பார்வையிட்டு அதை செம்மை படுத்துவதற்கான திட்டம் அறிவித்தார்கள். ஆனால் இடைக் காலத்தில் ஆட்சி கலைக்கப்பட்டு விட்டதால், அந்தத் திட்டம் செயல்படுத்தப்படவில்லை. அந்தத் திட்டத்தை நிச்சயமாக இந்த அரசு நிறைவேற்றித் தரும் என்று நான் நம்புகிறேன்.

கூட்டுறவுத் துறை பற்றி எனக்கு முன்னாலே பேசிய உறுப் பினர்கள் அதிகமாகச் சொன்னார்கள். குறிப்பாக கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக விவசாயிகள் நிறைய கடன்பட்டு இருக் கிறார்கள். அந்தக் கடன்களை எல்லாம் அவர்கள் திருப்பிச் செலுத்த முடியாமல் இருக்கிறார்கள் என்பதை அறிந்து. விவ சாயிகள் வாழ்வு மலர கடன்களை ரத்து செய்து விட்டதோடு மட்டுமல்லாமல், நிலவள வங்கிகளைப் பொறுத்தவரையில், தவணை தவறிய கடன்கள் அதிகமாக இருந்ததின் காரணமாகக் கடன் வழங்கும் தகுதியை இழந்திருந்த 169 வங்கிகளில் 38 வங்கிகளுக்கு அரசு 40·16 இலட்சம் ரூபாய் அளவிற்கு பங்குத் தொகை செலுத்தி, அந்தச் சங்கங்களை மீண்டும் எழுச்சி பெறச் செய்ததற்காக நான் இந்த அரசைப் பாராட்டுகிறேன்.



1980 ஜூலை 14] [திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்]

அடுத்தபடியாக இந்த பயிர் பாதுகாப்புத் திட்டத்தை மாண்பு மிகு புரட்சித் தலைவரவர்கள் தன்னுடைய ஆட்சிக் காலத்தில் அறிமுகப்படுத்த இருக்கிறார்கள். அதிலும் குறிப்பாக ஒரு சில மாவட்டங்களில் அறிமுகப்படுத்த இருக்கிறார்கள் என்று அறி கிறேன். இந்த நல்ல திட்டத்தை தமிழ்நாட்டிலுள்ள எல்லா மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்த வேண்டுமென்று மெத்த பணி வோடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக என்னுடைய தொகுதியின் சார்பிலே ஒரு சில வேண்டுகோள்களை இந்த மாமன்றத்தில் வைக்கலாம் என்று கருதுகிறேன். செங்கற்பட்டு மாவட்டத்தை பேரறிஞர் அண்ணா மாவட்டம் என்று பெயர் மாற்றம் செய்ய வேண்டுமென்று நாங்கள் நெடுநாட்களாகப் போராடி வருகிறோம். அந்தக் கோரிக் கையை நம்முடைய புரட்சித் தலைவரவர்கள் பரிவுடன் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, காஞ்சிபுரத்தில் இருக்கிற புற்றுநோய் ஆராய்ச்சி மருத்துவ மனையை ஆசியாவிலேயே சிறந்ததாகச் செய்ய வேண்டும். . . .

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> புற்றுநோய் மருத்துவ மனையைப் பற்றி மருத்துவ மானியத்திலே வைத்துக்கொள்ள லாம் ; உட்காருங்கள். அடுத்து திரு.வி.பி. பாலசுப்பிரமணி யன்.

*<u>திரு. வேடசெந்தூர் வி.பி. பாலசுப்பிரமணியன்</u> : மாண்பு மிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு கூட்டுறவு மற்றும் சட்டத் துறை அமைச்சரவர்களால் இந்த மாமன்றத்தில் வைக்கப்பட்டிருக்கிற மூன்று மானியக் கோரிக்கைகளையும் ஆதரித்து சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

வழக்குகளை பைசல் செய்வதில் காலதாமதம் ஏற்படுகிறது. நீண்டகாலமாக வழக்குகள் பைசலாகாமல் இருக்கின்றன என்று இங்கே சொன்னார்கள். இந்தியத் துணைக்கண்டத்தை கணக் கிட்டுப் பார்த்தால், ஒட்டுமொத்தமாகப் பார்த்தால், நம் முடைய தமிழ்நாட்டில் பைசல் ஆகாமல் இருக்கின்ற வழக்கு களின் எண்ணிக்கையைப் பார்த்தால் மற்ற மாநிலங்களை விட குறைவாக இருக்கிறது என்பதை பெருமையோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அதே நேரத்தில் இன்னும் துரித நடவடிக்கை எடுத்து, பைசல் ஆகாமல் இருக்கின்ற வழக்கு களை விரைவிலே பைசல் செய்து, இந்தியத் துணைக் கண்டத் திலேயே தமிழகம் சிறப்பான முதல் இடத்தைப் பெற ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிற நான் சில கருத் துக்களை அரசு தனது சீரிய பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

வழக்குகள் பைசலில் காலதாமதம் ஏற்படுவதற்கான முக்கிய காரணங்களில் ஒன்று, மாவட்டத்தில் இருக்கிற நீதிமன்றத்தில் நீதிபதி தீர்ப்பைச் சொல்லி விட்டாலும் அந்த தீர்ப்பு அச்சடிக்கப்பட வேண்டுமென்ற விதி இருக்கிறது. நீதிபதி அளிக்கின்ற தீர்ப்புகளை அச்சடிக்க தனிப்பட்ட அச்சகத்திடம் கொடுக்கப்படுகிறது. அச்சடிப்பதற்கு நிர்ணயித்திருக்கிற கூலி 20 ஆண்டுகளுக்கு முன்னால் நிர்ணயிக்கப்பட்டது. இந்தக் கூலி குறைவினால் அவர்கள் அதிக ஆர்வம் காட்டாமல், தனிப்பட்ட அச்சகங்களில் அச்சிட கொடுக்கின்ற தீர்ப்புகள் 2 ஆண்டு, 3 ஆண்டு ஆனாலும் அச்சிட்டு முடியாத நிலை ஏற்படுகிறது. ஆகவே, மாவட்டத்தில் இருக்கிற நீதிமன்றத்தில் நீதிபதி வழங்குகின்ற தீர்ப்புகளை அச்சடிக்கின்ற பொறுப்பினை அந்த மாவட்டத்தில் இருக்கிற கூட்டுறவு அச்சகத்திற்கு வழங்க வேண்டும் அல்லது அரசாங்கமே இரண்டு, மூன்று மாவட்டங்களுக்கு ஒரு அச்சகத்தை ஏற்படுத்தி அந்த அச்சகத்தில் அச்சடிக்க வேண்டிய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, 1969ஆம் ஆண்டு குத்தகை பதிவாளர் சட்டத்திலும் 1976-ல் பிறப்பிக்கப்பட்ட Act 31/76-ம் சட்டத்திலும் கருத்து வேறுபாடு இருந்துவருகிறது. 1969ஆம் ஆண்டு குத்தகைப் பதிவாளர் சட்டத்தின்படி ஏற்படுகின்ற தகராறுகளை தீர்த்துவைப்பதுயார்? ரெவின்யூ கோர்ட்டா அல்லது சிவில் கோர்ட்டா என்று உயர்நீதிமன்றத்திற்கு சென்றும் முடிவு செய்யப்படவில்லை. இந்த குத்தகை பதிவாளர் சட்டத்தின்படி ரெவின்யூ கோர்ட்டிலும் வழக்கு இருக்கிறது. சிவில் கோர்ட்டிலும் வழக்கு இருக்கிறது. இந்த இரண்டு கோர்ட்டுகளுக்கும் ஒரு சர்ச்சை இருந்து வருகிறது ; 'சாடோ ஆஃப் பைட்' இருந்துவருகிறது. இந்த நிலையை உடனடியாக மாற்றியாக வேண்டும். இன்றைக்கு 10 ரூபாய், 20 ரூபாய்க்கான வாடகை மதிப்புள்ள, வீட்டு வாடகை' வழக்குகளையே விசாரிப்பதற்கு டிஸ்டிரிக்ட் முன்சீப் கோர்ட்டுக்குத்தான் அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது. அப்படி இருக்கும்போது 10 இலட்சம் ரூபாய், 20 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள நிலங்களைப் பற்றி முடிவு செய்யும் அதிகாரத்தை ஏன் சிவில் கோர்ட்டுக்கு கொடுக்கக் கூடாது? ஆகவே, இந்த வழக்குகளை ரெவின்யூ கோர்ட்டிலிருந்து சிவில் கோர்ட்டுக்கு மாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு 1969ஆம் ஆண்டுச் சட்டம் 1976ஆம் ஆண்டுச் சட்டம்—இந்த சட்டங்களில் இடையிலே 'லக்குனே' இருக்கிறது ; அதற்கு ஒரு திருத்தம் கொண்டு வந்து இந்த 'லக்குனே' அகற்றப்பட வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.





எங்களுடைய திண்டுக்கல் பகுதியில் நீதிமன்றங்கள் பல இடங்களில் இருக்கின்றன. கடந்த காலத்தில் ஒரு நீதிமன்றத்திற்கு ஒரு இடத்தில் கட்டப்பட்டது. இப்போது நான்கு நீதிமன்றங்கள் அந்த ஒரு நீதிமன்றத்துக்கான இடத்தில் இருக்கின்றன. ஒரு குற்ற இயல் நீதிமன்றம் நகருக்கு கிழக்குப் பக்கத்திலும், ஒரு குற்ற இயல் நீதிமன்றம் நகருக்கு மேற்குப் பக்கத்திலும் இன்னொரு Authorised Officer நீதிமன்றம் நகருக்கு தெற்குப் பக்கத்திலும் இருக்கிறது. அந்த நான்கு நீதிமன்றங்களையும் ஒரே இடத்தில் அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு மதுரையில் இருக்கின்ற மாவட்ட நீதிமன்றத்தின் பிரிவு ஒன்று திண்டுக்கல்லில் அமைக்கப்பட வேண்டும்.

[பிற்பகல் 12–40]

மற்ற மாநிலங்களில் அளிப்பதுபோல், கேரள மாநிலத்திலே இருப்பது போல், வழக்கறிஞர்களுக்கு ஓய்வூதியம், போக்குவரத்து வசதி, பிராவிடண்ட் ஃபண்ட், அரசு ஊழியர்களுக்குள்ள இறந்தால் ரூ. 10,000 போன்ற பல சலுகைகளை அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து கூட்டுறவு மானியக் கோரிக்கை பற்றி சில வார்த்தைகள் சொல்லி விடைபெறுகிறேன்.

பேரவைத் தலைவரவர்களே, சிறு விவசாயிகளுக்கு கடன் ரத்து செய்திருப்பதை நான் இந்த நேரத்தில் வரவேற்கிறேன். சிறு விவசாயிகளுக்குக் கடனை ரத்து செய்தால் போதுமா மேலும் இது குறித்து நடவடிக்கை எடுத்து அனைத்துக் கடன்களையும் ரத்து செய்யவேண்டும் என்று காங்கிரஸ் கட்சியில் இருக்கின்ற உறுப்பினர்கள் வெட்டுப் பிரேரணை கொடுத்துள்ளனர். ஆனால் காங்கிரஸ் நிலை வேறாக உள்ளது. ஏனென்றால் பிப்ரவரி மாதம் 18ஆம் தேதி ஆர்.வி. சுவாமிநாதன் அவர்கள் விவசாயக் கடன் ரத்து செய்யப்படும் என்று கூறினார்கள். ஆனால் பிப்ரவரி 25ஆம் தேதி முழுக் கடனையும் ரத்து செய்ய முடியாது. 5 ஏக்கருக்குக் குறைவாக நிலம் வைத்திருப்பவர்களுக்கு மட்டுமே ரத்து செய்ய முடியும் என்று அறிவித்தார்கள். ஏப்ரல் 1-ம் தேதி விவசாயிகளுக்கு கடனை ரத்து செய்வது ஃபேர் அன்ட் ரீசனபிள் என்று கூறி இருக்கிறார்கள். ஏப்ரல் 3-ம் தேதி கர்நாடக மாநில கூட்டுறவுத்துறை அமைச்சரவர்கள் கூட்டுறவுக் கடனை ரத்துச் செய்வது தவறு என்று கூறியிருக்கிறார்கள். 23—6—1980 அன்று மத்திய டெபுட்டி ஃபைனான்ஸ் மினிஸ்டர் அவர்கள் கூட்டுறவுக் கடனை ரத்து செய்வது விவசாயிகளுக்குப் பயன் அளிக்காது என்று கூறியிருக்கிறார்கள். கூட்டுறவுக் கடனை ரத்துச் செய்வது கூட்டுறவு அமைப்பின் தத்துவத்தையே சிதைத்துவிடும், கெடுத்துவிடும் என்று பாராளுமன்றத்திலே இந்திய துணை கண்டத்து துணை நிதியமைச்சர் அவர்கள் தெரிவித்துக் கொண்டுள்ளார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சீக்கிரம் முடியுங்கள். நேரம் ஆகிறது.

திரு. வேடசெந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : அடுத்து, தஞ்சை மாவட்டத்தை அடுத்து நெல் அதிகமாக உற்பத்தி செய்கின்ற மாவட்டம் வடாற்காடு மாவட்டம். அங்கே இருக்கின்ற மொத்த விவசாயிகள் அதாவது நில உடைமையாளர்கள் 6,66,302 பேர் மொத்த நிலம் 6,33,504 ஹெக்டேர் அவர்களில் ஒரு ஹெக்டேருக்குக் குறைவான நிலம் வைத்திருப்பவர்கள் 4,65,095. இது மொத்த விவசாயிகளில் 69·8 சதவீதம். 2 ஹெக்டேருக்குக் குறைவாக நிலம் வைத்திருப்பவர்கள் 78,748 பேர். இது மொத்தத்தில் 11·82 சதவீதம். 2 ஹெக்டேரிலிருந்து 4 ஹெக்டேர் வரை நிலம் வைத்திருப்பவர்களின் எண்ணிக்கை 70,635. இது 10·06 சதவீதம். 4 ஹெக்டேருக்கு மேல் நிலம் வைத்திருப்பவர்கள் 51,824. இது 7·78 சதவீதம். அதாவது 5 ஏக்கருக்கு கீழே நிலம் உள்ள விவசாயிகள் இந்தக் கடன் ரத்து செய்யப்படுவதன் காரணமாக 80 சதவீதம் பேர் பயனடைகிறார்கள். பெரிய விவசாயிகள் வாங்கிய கடன் 6½ கோடி ரூபாய். ஆகவே தற்போது கடன் ரத்து செய்ததன் மூலம் சிறிய விவசாயிகள் பெரும்பாலோர் பயன் அடைந்திருக்கிறார்கள். மற்றவர்களைப்போல வெறும் வாக்குறுதியை மட்டும் கொடுத்துவிட்டு ஒன்றுமே செய்யாமல் புதுவையில் கடனை ஒரு வருடம் ஒத்திவைத்து மட்டும் இருப்பதுபோல் இல்லாமல் முடிந்த அளவுக்கு முதல் தவணையில் 60 கோடி ரூபாயை இந்த அரசு ரத்து செய்திருப்பதை வரவேற்று அமைகிறேன்.

திரு. அ. ரகுமான்கான்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த மாமன்றத்தில் சிறைச்சாலை, நீதி, நிர்வாகம், கூட்டுறவுத்துறை ஆகிய மானியங்கள் மீது நான் சார்ந்திருக்கின்ற திராவிட முன்னேற்றக்கழகத்தின் சார்பாக சில கருத்துக்களை இங்கே சொல்ல விரும்புகிறேன். சிறைச்சாலை மானியம் குறிப்பாக ரொம்பவும் முக்கியமான ஒரு மானியமாகும். காரணம் விவசாயிகள், தொழிலாளர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், இன்ஜினீயர்கள், டாக்டர்கள், வக்கீல்கள் இப்படி எல்லோருமே, இன்றைக்கு இருக்கக்கூடிய ஆட்சியிலே சிறைக்கு அடிக்கடி சென்று வரவேண்டிய நிலைமை இருக்கின்றது. அது மட்டுமல்லாமல் இந்த மாமன்றத்திலே பல்வேறு அரசியல் கட்சியைச் சார்ந்த உறுப்பினர்கள் கூட விரைவிலே இந்த ஆட்சியிலே சிறைக்குப் போகக் கூடிய ஒரு சூழ்நிலை ஏற்படலாம். பதவி நாற்காலி நிரந்தரமானதல்ல. அவை ஆடும் நாற்காலிகள். ஆளும் கட்சியிலே இருக்கின்ற நிலைமை மாறி காலப்போக்கில் சிறைக்குப் போகலாம். ஆக மொத்தத்தில் சமுதாயத்திலுடைய எல்லா தரப்பு மக்களும் தரிசித்துத் தீர வேண்டிய தரிசன இடமாக புனித மெக்காவாக இன்றைக்கு சிறைச்





சாலைகள் அமைந்திருக்கின்றன. எனவே அது குறித்து இங்கே இருக்கக்கூடிய மாமன்ற உறுப்பினர்களும் இந்த சர்க்காரும் மிகக் கவனத்துடன் பரிசீலிக்கவேண்டும் என்று நான் உங்கள் மூலம் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக நம்முடைய முதலமைச்சரவர்கள் இங்கே அமர்ந்திருக்கிறார்கள். இங்கே சொல்லப்படுகிற கருத்தை எதிர்க்கட்சிக்காரர்கள் சொல்லுகிறார்கள் என்பதாகக் கருதாமல் நம்முடைய முதலமைச்சரவர்கள் அரசாங்கத்தின் மூலமாக செய்ய முயற்சி செய்வார் என்று நான் மனப்பூர்வமாக நம்புகிறேன். சிறைச்சாலை மானியத்திற்கு அதிகமான நிதி ஒதுக்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதற்கு எவ்வளவு ஒதுக்கினாலும் போதாது. காரணம் இந்தச் சிறைச்சாலை மானியத்திற்காக அதிக நிதி ஒதுக்குவது வருமானத்திற்கு உட்பட்டது அல்ல என்ற ஒரு கருத்து பரவிவருகிறது. அது மிக மிக தவறு. இது பற்றி இங்கே ''ரிப்போர்ட் ஆப் தி தமிழ்நாடு பிரிசென்ஸ் ரிஃபார்ம்ஸ் கமிஷன்'' 1978–79-ல் கொடுக்கப்பட்டிருக்கிற அந்த கமிஷன் ரிப்போர்ட்டில் பக்கம் 13–ல் மிகத் தெளிவாகத் கமிஷனின் தலைவர் நரசிம்மன் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

> ''Any expenses incurred for the reform and rehabilitation will be on the whole a profitable investment for the Government. We fervently hope and trust that this aspect will be fully appreciated by the Government in sanctioning adequate funds.''

என்று சொல்லியிருக்கிறார்.

அரசாங்கத்தைப் பொருத்தமட்டிலே சிறைச்சாலை மானியத்திற்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்வது என்பது லாபகரமானது. காரணம் குற்றவாளிகள் சிறையிலே இருக்கிறார்கள். விடுதலை பெற்று மீண்டும் வெளியே வருகிறார்கள். மீண்டும் அவர்கள் தவறு செய்கிறபோது சிறைச்சாலைக்குப் போகிற சூழ்நிலை ஏற்படுகிறது. எனவே, குற்றவாளிகளை சீர்திருத்துவதற்கு அவர்கள் மறு வாழ்வை பெறுவதற்காக, செலவழிக்கப்படுகிற ஒவ்வொரு பணமும் சர்க்காருக்கு லாபகரமான காரியத்திற்கே பயன்படுகிறது என்று நீங்கள் அமைத்த கமிட்டியிலே நரசிம்மன் அவர்கள் மிகத் தெளிவாக குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆக '' financial commitments '' அதற்கு பணவசதி கிடையாது என்ற குற்றச்சாட்டு இருக்கக் கூடாது. காரணம், ராஜ நர்த்தகிகளுக்கெல்லாம் நம்முடைய சர்க்காரிடத்திலிருந்து பணம் செல்கிறது. ஆஸ்தான கவிகளுக்கெல்லாம் நம்முடைய சர்க்காரிடத்திலேயிருந்து பணம் செல்கிறது. ஒரு சில நடிகைகளுக்குக் கூட சிறப்புக்குரியவர்கள் என்று காரணம் காட்டி அவர்களுக்கெல்லாம் பணம் செல்கிறது என்று பார்க்கிறபோது, சிறையிலே வாடிக்கொண்டிருக்கிற, சூழ்நிலையின் காரணமாக தவறு செய்து விட்டு, அதற்

காக வருந்திக் கொண்டிருக்கிற அந்த கைதிகளுக்கு மறு வாழ்வு
பெற, அவர்களை திருத்த இந்த அரசு அதிகமான மானியத்தை
ஒதுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதற்கு இடையில் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்
களே உங்கள் மூலமாக இந்த அரசாங்கத்தினுடைய கவனத்
திற்கு ஒன்றை கொண்டு வருகிறேன். பல்வேறு கமிட்டிகள்
இந்த சிறை இருப்பவர்களை சீர் திருத்தி மறுவாழ்வு வழங்க
வேண்டும் என்று போடப்பட்டன. சிறையில் இருக்கக்
கூடியவர்களுக்கு நல்ல வாய்ப்பு வசதிகள், நல்ல கழிப்பிடங்
கள், சிறு நீர்கழிக்க இடங்கள் மின்சார வசதிகள்,
படுக்கை வசதிகள் சத்துணவு மருத்துவ வசதிகள் போன்றவை
எல்லாம் தரப்பட வேண்டும். சீர் திருத்தப் வேண்டுமென்று
பல்வேறு கமிட்டிகள் தொடர்ந்து போடப்பட்டிருக்கின்றன.

வெள்ளைக்காரன் இந்த நாட்டை ஆண்டபோது லார்டு மெக்
காலே உறுப்பினராகக் கொண்டு ஒரு கமிட்டி 1836 ஆம் ஆண்டி
டிலே போடப்பட்டிருக்கிறது. அதற்குப்பிறகு 1919-20 ஆம்
ஆண்டிலே இந்தியன் ஜெயில் கமிஷன் என்ற ஒன்று போடப்
பட்டிருக்கிறது. அதற்குப் பிறகு சென்னை உயர்நீதிமன்றத்
திலே பணியாற்றி ஓய்வு பெற்ற நீதிபதி கிருஷ்ணசாமி ஐயங்கார்
அவர்கள் தலைமையிலே தமிழ்நாடு ஜெயில் ரிஃபார்ம் கமிட்டி
போடப்பட்டது. அதற்குப் பிறகு 1956-லே ஆல் இந்தியா
ஜெயில் மேன்யுவல்'' தரப்பட்டது. அதற்குப்பிறகு நம்முடைய
இந்திய சர்க்கார் 1972-ல் வொர்க்கிங் குரூப் என்ற ஒரு
அமைப்பை செட் அப் செய்தது. அதற்குப் பிறகு இன்
றைக்கு உயர் நீதிமன்ற நீதிபதியாக இருக்கக்கூடிய ஜஸ்டிஸ்
இஸ்மாயில் அவர்களுடைய தலைமையில் விசாரணைக் கமிஷன்
நபாட்டிருக்கிறது. அதற்குப் பிறகு நரசிம்மன், வெங்கோப
ரோவ்டயஸ் போன்றவர்களை உறுப்பினர்களாகக் கொண்டு,
ரரசிம்மன் அவர்களை தலைவராகக் கொண்ட ஒரு கமிட்டியைப்
பாட்டார்கள்.

இதிலே ஒரு வேடிக்கை என்னவென்று கேட்டால், நீதிபதி
இஸ்மாயில் அவர்கள் இது பற்றி சொல்லுகிறபோது மிகவும்
வேதனையோடு சொல்லியிருக்கிறார்கள். அவர் குறிப்பிடுகிற
போது சொல்லுகிறார். ''எத்தனையோ கமிட்டிகள் போடப்
பட்டிருக்கின்றன. எத்தனையோ கமிட்டிகள் எல்லாம்
சிபாரிசுகள் செய்தன. ஆனால் அவைகள் எல்லாம் இன்
றைக்கு பயன்பெறத் தக்கவைகளாக இருக்கின்றனவா?
அவைகள் கானல் நீரிலே மீன்பிடிக்கப் பார்த்து பிடிக்க முடி
யாதவைகளாக, காகிதப் பூக்களிலே தேனெடுக்கப் பார்த்து
எடுக்கமுடியாதவைகளாக இருக்கின்றன'' என்ற கருத்தை
அவர் தமக்கே உரிய முறையில் தெளிவாகச் சொல்லியிருக்
ிறார்கள்.





"Looking at the recomendation of this Committee more than 50 years later we are struck by the fact that although the correct perspective was provided so long ago, not much has been done to transform it into a reality.''

என்று சொல்லி, '' அதைப்பார்த்தால் எனக்கு எரிச்சலாக வருகிறது. இப்பொழுது இருக்கக்கூடிய அரசாங்கம் ஒரு கமிட்டியைப் போட்டிருக்கிறார்கள். நான் அதற்காக மகிழ்ச்சியடைகிறேன். ஆனால் அந்த சிபாரிசுகளையாவது நிறைவேற்றுவார்களா?'' என்று ஏக்கத்தோடு தனது விசாரணை கமிஷனின் ரிப்போர்ட்டிலே கூறியிருக்கிறார்கள்.

நானும் அவருடைய கருத்தைப் போலவே அந்தக் கமிஷனின் ரிப்போர்ட்டுக்களை மிகவும் சிரமப்பட்டு இரண்டு வால்யூம்களையும் படித்துப் பார்த்தேன். அதில் 178 சிபாரிசுகள் செய்யப்பட்டிருக்கின்றன. நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், சட்ட அமைச்சர் அவர்களும் இங்கே இருக்கிறார்கள். அந்தக் கமிஷனிலே மிக நல்ல சிபாரிசுகளை தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அதிலே 22 சிபார்சுகள் நாம் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கின்றன. 22 சிபாரிசுகளையாவது ஏற்றுக் கொண்டிருக்கிறோமே அதற்கு பாராட்டக் கூடாதா, எதிர்க் கட்சியாக இருக்கிறார்கள் எதிரிக் கட்சியாக இருக்கலாமா என்று கூட கேட்கலாம்.

[பிற்பகல் 12-50]

பாராட்டத்தான் எனக்கு மனம் இருக்கிறது. ஆனால் பாராட்டுகிற அளவில் அவர்களுடைய சிபார்சுகள் இங்கே ஏற்றுக் கொள்ளப்படவில்லை. என்ன சிபாரிசுகளை நீங்கள் ஏற்றுக் கொண்டிருக்கிறீர்கள்? கைதிகளுக்கெல்லாம் சிறைச்சாலைகளில் உடற்பயிற்சி செய்வதற்கு, யோகாசனம் பயிற்சி செய்வதற்கு இனிமேல் வசதி செய்து தரப்படும். தலைகாணி வைத்துக் கொள்ள புதுக்கோட்டையில் உள்ள சிறுவர் சிறைச்சாலையில் ஏற்பாடு செய்யப்படும். இதுபோன்ற சாதாரண சிறிய சீர்திருத்தங்களைத்தான் ஏற்றுக் கொண்டிருக்கிறீர்கள், நீதிபதி இஸ்மாயில் அவர்கள் சொன்னதுபோல் அவர்களுக்காவது எரிச்சல்தான் வந்தது. எனக்கு ரொம்பரொம்ப எரிச்சலாக இருக்கிறது. காரணம், இன்றையதினம் நீங்கள் கொடுத்திருக்கக்கூடிய பாலிஸி நோட்டில், நரசிம்மன் கமிட்டி கொடுத்திருக்கிற 178 சிபாரிசுகளில் மிகமிகச் சாதாரண சிபார்சுகளைத்தான் நீங்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறீர்கள்.

நான் இங்கே பேசுகிறபோது நீதி நிர்வாகம் பற்றியும், கூட்டுறவுத் துறை பற்றியும், அதே நேரத்தில் சிறைச்சாலைகள் பற்றியும் பேசுகிறேன். நான் இவைகளைப்பற்றி தொடர்பாகப் பேசிக்கொண்டிருக்கும்போது சில விஷயங்கள்,

மறந்துவிடும் என்பதற்காக நான் இந்தச் சர்க்காரின் மீது எடுத்தவுடனே சில குற்றச்சாட்டுக்களைத் சுமத்த விரும்புகிறேன். அதற்குள்ளாகவா குற்றச்சாட்டு என்று கேட்கலாம். இப்போதுதானே வந்தோம். அதற்குள்ளே குற்றச்சாட்டுகளா என்று கேட்க கூடும். நான் சொல்கிற குற்றச்சாட்டு, மூன்றாவது குற்றச்சாட்டாக வைக்கிறேன். கூட்டுறவுத் துறை சம்பந்தமாக.

சிறைச்சாலைகள் சம்பந்தமாகப் பார்க்கிறேன். இங்கிருக்கக்கூடிய இந்தப் புத்தகத்தைப் படித்துப் பார்க்கிறபோது அதிலே ''பி'' கைதிகளுக்கு சிறைச்சாலைகளில் பத்திரிகைகள் கொடுக்கிறார்கள். என்ன பத்திரிக்கைகள் கொடுக்கிறார்கள்? அண்ணா பத்திரிக்கை கொடுக்கிறார்கள். இன்று ஆட்சியில் இருக்கக்கூடிய அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் அதிகாரபூர்வமான ஏடு அண்ணா பத்திரிக்கை. தென்னகம் பத்திரிக்கை கொடுக்கிறீர்கள். நமது மாண்புமிகு அமைச்சர் திரு. கிருஷ்ணசாமி அவர்களை முன்னாள் நிறுவனராகக் கொண்ட பத்திரிக்கை அது இப்போது நின்றுவிட்டது என்று அதில் போட்டிருக்கிறார்கள். நவசக்தி பத்திரிக்கை கொடுக்கிறீர்கள். அதுவும் நின்றுவிட்டது என்று கொடுத்திருக்கிறார்கள். அடுத்து, தினமணி கொடுக்கிறார்கள். சுதேசமித்திரன் கொடுக்கிறார்கள். தினமணி கொடுக்காமல், சுதேசமித்திரன் கொடுக்காமல் வேறு யாருக்கு என்ன கொடுப்பார்கள்? உங்களுடைய ஆளும் கட்சிப் பத்திரிக்கைகள் சிறைச்சாலைகளில் உள்ளவர்களுக்கு படிப்பதற்காகக் கொடுக்கப் படுகின்றன. அது வரவேற்கத்தக்கது. ஆனால், நான் கேட்கிற கேள்வி என்னவென்றால், இது போன்ற பத்திரிக்கைகள் பல இருக்கின்றன. அந்தப் பத்திரிக்கைகள் மட்டும் ஏன் தரப்படவில்லை? அதற்கு என்ன காரணம்? சிறைச்சாலைகளில் இருக்கக்கூடிய கைதிகள் அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக கட்சிக்காரர்களா? அல்லது நமது புரட்சித் தலைவர் திரு எம்.ஜி.ஆர். ரசிகமன்றத்தைச் சார்ந்தவர்களா? அவர்கள் அதைத்தான் படிக்க வேண்டுமா? இதை இன்றைக்கு அமைச்சர் அவர்கள் மானியப் புத்தகத்திலேயே ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். இதற்கு அமைச்சர் அவர்கள் குறித்துவைத்து பதில் சொல்ல வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் நான் ஏற்கனவே சொன்னேன். மறந்துவிடும் என்பதற்காக அந்தக் குற்றச்சாட்டை நான் மீண்டும் நினைவுபடுத்த விரும்புகிறேன். இந்த விசாரணைக் கமிஷன் ரிப்போர்ட்டில், நீதிபதி இஸ்மாயில் அவர்கள் கூறியிருக்கிறார்கள். அந்த விசாரணைக் கமிஷன் மத்திய சிறையில் நடைபெற்ற அத்து மீறல்கள் பற்றி விசாரிப்பதற்காக போடப்பட்டது. அதிகாரிகள் மீது குற்றம் சுமத்தி குற்றஞ்சாட்டப்பட்டது.





பல அதிகாரிகளைப் பற்றிக் சொல்லியிருக்கிறார்கள். ஒரு குறிப்பிட்ட அதிகாரியைப்பற்றி, அந்த அதிகாரி பற்றி குறிப்பிட்டுச் சொல்லி கடமை உணர்ச்சி அற்றவர், பொறுப்பற்றவர் என்று சொல்லியிருக்கிறார்கள். அதுபற்றி விவாதம் எல்லாம் நடைபெற்றது. கடந்து கூட்டத்தொடரில் நான் முதல் அமைச்சர் அவர்களிடம் கேட்டேன். அந்த விசாரணைக் கமிஷன் ரிப்போர்ட்டின் பேரில் குற்றம். பைன்டிங்ஸ் இருக்குமானால் அவர்மீது நடவடிக்கை எடுப்போம், அவருக்கு பதவி உயர்வு தரமாட்டோம் என்று சொன்னார்கள். ப்ரோஸ்டிங்ஸைப் புரட்டிப் பார்த்தால் நான் சொல்வது எந்த அளவிற்கு உண்மை என்பதைப் புரிந்துகொள்ள முடியும்? இப்போது நிலை என்ன? இஸ்மாயில் கமிஷன், பொறுப்பற்றவர். கடைமையுணர்ச்சியற்றவர் என்று பகிரங்கமாக சொல்லியிருக்கிறார்கள். அந்த நபர்மீது, அந்த போலீஸ் அதிகாரி மீது எனக்கு தனிப்பட்ட முறையில் எந்தக் கோபமும் இல்லை. யார் மீதும் கோபமில்லை. நியாயத்தைக் கேட்கிற எதிர்க் கட்சியில் நான் இருக்கிறேன். நியாயத்தைத் தரவேண்டிய இடத்தில் நீங்கள் இருக்கிறீர்கள் என்பதால் கேட்கிறேன். நீங்கள் அவருக்கு பதவி உயர்வு கொடுக்கலாமா? இதற்கு அந்தச் சர்க்கார் என்ன பதில் சொல்கிறது என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

இன்னொரு முக்கியமான விஷயம் இப்போதுதான் ஆட்சிக்கு வந்தீர்கள். நமது அமைச்சர் திரு. பொன்னையன் திறமையானவர். ஒப்புக்கொள்ளுகிறேன். தவறுகள் செய்வதில் கூட சில திறமைகள் வெளியிடப்பட்டிருக்கின்றன. இன்று நான் சொல்கிற குற்றச்சாட்டு ஈரோடில் நேதாஜி வீதியில் இருக்கும் தங்க சிந்தாமணி கூட்டுறவு அங்காடி முன்புறம் 20, 21, 22, 27 ஆகிய வார்டுகளுக்கு மாண்புமிகு போக்குவரதுத் துறை அமைச்சர் அலுவலகத்தில் மாணிக்கம் தியேட்டர் அருகில் அஸ்கா விநியோகிக்கப்படுகிறது. சிந்தாமணி என்று போர்ட் போடப்பட்டிருக்கிறது. இதற்கு ஆதாரம் உண்டா, எப்படிச் சொல்லலாம் என்று கேட்கக்கூடும்.

முதலமைச்சர் அவர்கள் கேட்பார்களானால், நான் ஆதாரத்தை இந்தச் சபையிலே சமர்ப்பிக்கத் தயாரர்க இருக்கிறேன். அதற்கான போட்டோவை இந்த அவைக்கு கொண்டு வந்திருக்கிறேன். ஆகவே, முதலமைச்சர் அவர்கள் விரும்பினால் அதைக் காட்டத் தயாராக இருக்கிறேன்.

அடுத்து நான் கேட்க விரும்புவது, இந்த ஈரோடு நகரிலே போக்குவரத்து அமைச்சர் அலுவலகம் என்று ஒன்றிருக்கிறதா ? இங்கேதான் அந்த அலுவலகம் இருக்கிறது. அங்கே எப்படி வந்தது ? அப்படி ஒரு அலுவலகம் அங்கே இருக்கின்றதா என்று நான் கேட்கிறேன். அஸ்கா போன்ற உணவுப் பண்டங்

[திரு. அ. ரகுமான்கான்] [1980 ஜூலை 14

(பிற்பகல் 1-00)

நக்சல்பாரிகளின் லட்சியங்கள் தூய்மையானவை. அவர் களுடைய வழிமுறைகள் தவறானவை. இருந்தாலும் அவர்கள் அரசியல் கைதிகளாக கருதப்பட, நடத்தப்பட வேண்டும். அவர் கள் விடுதலை செய்யப்பட வேண்டும். மேற்கு வங்கத்திலும், கேரளத்திலும் இந்த நல்ல காரியத்தைச் செய்திருக்கிறார்கள். தோழமைக் கட்சியான கம்யூனிஸ்டு நண்பர்கள் இப்போது கேட்காவிட்டாலும் ஆறு மாதங்கள் இடைவெளிக்குப் பிறகு சந்தர்ப்பம் ஏற்படும்போது இந்த மாமன்றத்தில் கிளப்பக் கூடும் என்று நம்புகிறேன்.

பொலிடிகல் பிரிசினர்ஸ்—அரசியல் கைதிகள் என்று சொல்லு கிறபோது அவர்களையும் ஏற்கனவே தண்டிக்கப்பட்டு கிரிமினல் கைதிகளாக சிறையிலே இருக்கக்கூடிய கைதிகளோடு கலக்கின்ற நிலைமை இருக்கக் கூடாது: பொலிடிகல் பிரிசினர்ஸ் லாக் கப்பிலேயே இருக்கக் கூடாது.

யார் அரசியல் கைதிகள் என்பதே தீர்மானிக்கப்படாமல் இருக்கிறது. நரசிம்மன் கமிட்டி ரிப்போர்ட்டில் யார் வன் முறையைத் தூண்டவில்லையோ, யார் அகிம்சா முறையில் போராட்டம் நடத்துகிறார்களோ அவர்கள் தான் பொலிடிகல் பிரிசினர்ஸ் என்ற விளக்கத்தைக் கொடுத்திருக்கிறார்கள். அதை குறித்து அரசு முடிவு எடுக்க வேண்டும். நரசிம்மன் கமிட்டி ரிப்போர்ட்படி இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டவர் கள் அரசியல் கைதிகளா இல்லையா? எல்லைப் போராட்டத் தில் அரும்பாடு பட்டவர்கள் அரசியல் கைதிகளா இல்லையா? விவசாயப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் அரசியல் கைதி களா இல்லையா? தொழிலாளர்கள் போராட்டத்தில், வேறு போராட்டங்களில் ஈடுபடுகிறவர்கள் எல்லாம் அரசியல் கைதிகளாகக் கருதப்படுகிறார்களா அல்லது கிரிமினல் கைதி களாகக் கருதப்படுகிறார்களா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். அவர்களுக்கு ஸ்பெஷல் ட்ரீட்மெண்ட்—தனி யான பாதுகாப்புகள், வசதிகள் செய்து தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சப் ஜெயில்களைப் பொருத்தவரை 119 சப் ஜெயில்கள் இருக்கின்றன. அவற்றிலே 10 தான் பிரிசன் டிப்பார்ட்மெண் டின் கன்ட்ரோலில் இருக்கின்றன. 109 சப் ஜெயில்கள் ரெவின்யூ டிப்பார்ட்மெண்டின் கன்ட்ரோலில் இருக்கின்றன. அமைச்சர் பொன்னையன் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். ரெவின்யூ டிப்பார்ட்மெண்ட் மேற்பார்வையிலுள்ள ஜெயில்கள் மோசமாக இருக்கின்றன; அவற்றை ஜெயில் டிப்பார்ட்மெண் டின் கீழ் கொண்டு வர வேண்டும்.



1980 ஜூலை 14] [திரு. அ. ரகுமான்கான்]

ஒரு முக்கியமான விஷயத்தை அரசாங்கத்தின் கவனத்திற்கு உங்கள் மூலமாகக் கொண்டு வருகிறேன். கலைஞர் முதல்வராக இருந்தபோது—ஒரு குற்றவாளி சிறைக்கு அனுப்பப்படுகிற நேரத்தில் தண்டிக்கப்படுகிற நிலையில் சிறைக் கைதியாக இருக்கும் போது, அந்த ரிமாண்ட் பீரியடை கன்விக்ஷன் கழித்துக் கொள்ள வேண்டுமென்று செய்தார்கள். இப்போது அந்த முறையை அரசு வைத்திருக்கிறதா? இல்லை என்றால் என்ன காரணம்?

சில தவிர்க்க முடியாத சூழ்நிலைகளில் கொலை செய்து விடுகிறார்கள். அப்படிக் கொலை செய்து விடுகிற சூழ்நிலை ஏற்பட்டுவிட்ட பிறகு அதற்காக வருந்துகிறார்கள், வேதனைப் படுகிறார்கள். தவறு செய்து விட்டோமே என்று வருத்தப் படுகிறார்கள்—இப்படி பல்வேறு காட்சிகளைப் பார்க்கிறோம் அவர்கள் எல்லாம் பத்தாண்டு சிறை வாசம் அனுபவித்தால் போர்டின் சிபாரிசின் பேரிலே வெளியே அனுப்பலாம். இன்றைக்கு அந்த முறை இல்லை. அரசு சார்பில் சொல்லப் படுகிற காரணம்—இந்தியன் கிரிமினல் ப்ரொசிஜர் கோர்ட்டில் மத்திய சர்க்கார் ஒரிஜினல் பிரிவு 433-க்கு 433—இ என்ற அமெண்ட்மெண்டைக் கொண்டு வந்திருக்கின்ற காரணத்தால் அரசாங்கத்திற்கு டிஸ்க்ரிஷன் பவர் இல்லை, 14 ஆண்டு களுக்கு முன்னால் விடுதலை செய்ய முடியாத சூழ்நிலை இருக் கிறது எனவே, எங்களால் விடுதலை செய்ய முடியாது என்று சொல்லக் கூடும். ஆனால் மத்திய சர்க்காரைச் சுட்டிக்காட்டி அப்படிச் சொல்லக் கூடாது. இந்த உத்தரவு வந்திருப்பது அண்மையிலேதான். மேற்கு வங்கத்திலும், கேரளத்திலும் இது போன்று பலர் சமீபத்தில் விடுதலை செய்யப்பட்டிருக்கிறார் கள். அவர்கள் எப்படி விடுதலை செய்திருக்கிறார்கள் என்று பார்த்து அதே முறையைப் பின்பற்றி விடுதலை செய்ய இந்த அரசு முன்வர வேண்டும்.

முக்கியமான ஒரு பிரச்சினை—ரிமாண்ட் கைதிகள், விசார ணைக் கைதிகள் குற்றவாளிகள் அல்ல—வக்கீல் என்ற முறையில் சொல்லுகிறேன். அவர்கள் குற்றம் சுமத்தப்பட்டவர்கள். ரிமாண்டு கைதிகளை ஜெயிலில் வைத்திருக்கும்போது ஏற்கனவே குற்றம் செய்தவர்களோடு அவர்களைக் கலக்க விடக் கூடாது ஹைகோர்ட்டில் ஜட்ஜ்மெண்ட் கொடுத்திருக்கிறார்கள்—ரிமாண்ட் கைதிகளை தங்கள் சொந்தப் பொறுப்பில் வெளியே போக அனுமதிக்க வேண்டும். பெயிலில் தான் போக வேண்டு மென்று சொல்லக் கூடாது. பெயிலில்தான் போக வேண்டு மென்று சொல்லுவது தவறான கருத்து என்று சொல்லியிருக்கி றார்கள். அதையும் அமைச்சர் அவர்கள் தெளிவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

கள் அங்கீகாரம் பெற்ற கூட்டுறவு அங்காடிகளிலே தான் விற்கப் படவேண்டுமே தவிர, தனிப்பட்ட அரசியல் கட்சியைச் சார்ந்த ஒரு தனி நபர் அல்லது விநியோகிப்பது முறைதானா? இது மிஸ் யூஸ் ஆப் பவர் இல்லையா? இது அதிகார மாற்றம் இல்லையா? இது குறித்து தயவு செய்து அமைச்சர் அவர்கள் பதில் சொன்னால், ஒரு கிளீன் அட்மினிஸ்ட்ரேஷன் நடத்துகிறோம் என்று மக்கள் புரிந்து கொள்வதற்கு உதவியாக இருக்கும் என்பதற்காக நான் கேட்கிறேன். தங்கள் கட்சிக்காரர்களுக்கு வாய்ப்பு ஏற்படுத்துவதற்கு இந்த மாதிரியான காரியம் நடைபெற்று இருக்கிறது என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

டாக்டர் கே. சமரசம் : பாயின்ட் ஆப் ஆர்டர்.

திரு. அ. ரகுமான்கான் : ஐ ஆம் நாட் ஈல்டிங்.

திரு. இரா. சண்முகம் : பாயின்ட் ஆப் ஆர்டர் கேட்கப் படுகிறது. அப்படி கேட்கும் போது, எதிர்க்கட்சிக்காரர் களுக்குத்தான் கொடுக்கிறீர்கள். ஆளுங்கட்சிக்கு கொடுப்ப தில்லை.

டாக்டர் கே. சமரசம் : பேரவைத் தலைவர் அவர்களே, செய்தித் தாள்கள் வழங்குவதைப் பற்றி இங்கே மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் பேசினார்கள். கலைஞர் அவர்கள் முதல்வராக இருந்த போது, காமராஜ் அவர்கள் முதலமைச்சராக இருந்த போது, செய்தித் தாள்கள் எப்படி வழங்கப்பட்டன என்பது உங்களுக்குத் தெரியும். அதையும் தெரிந்து பேச வேண்டும். ஆள்வதற்காக எங்களை அனுப்பி இருக்கின்றனர்; ஆலோசனைகளைக் கூறுவதற்காக உங்களை அனுப்பி இருக்கின்றனர். எனவே, உங்கள் ஆலோசனையில் எந்த அளவுக்கு நியாயம் இருக்கிறதோ, அதை கருத்தில் கொண்டு அரசு செய்யும் என்பதை இந்த நேரத்தில் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமரசம் அவர்கள் குறுக்கிட்டுச் சொன்ன விளக்கம் சரியல்ல. அமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்ல வேண்டும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வேலூர் சிறைச்சாலையிலே மாசிலாமணி என்ற மாணவ நண்பன் ஆயுள் தண்டனைக் கைதியாக இருக்கிறான். அப்படி ஆயுள் கைதியாக இருக்கின்ற அந்த மாணவனுக்கு எந்தவிதமான பாதுகாப்பும் கொடுக்க முடியாத சூழ்நிலை இருக்கிறது. நான் கேட்கிறேன். அவர் இன்றைக்கு பயங்கரமாக மற்றொரு கைதியால் தாக்கப்பட்டிருக்கிறார். இப்படி தாக்கியது யார்?





தண்டனைக்கு உள்ளாகி சிறையிலே வாடிக்கொண்டிருக்கும் ஒருவரை, மற்றொரு கைதி இப்படி தாக்குகின்ற தவறு அங்கே எப்படி நடந்தது? இது குறித்து அமைச்சர் அவர்கள் விளக்கம் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். நம்முடைய கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்த அருமை நண்பர் திரு. உமாநாத் அவர்கள் இங்கே ஒரு பிரச்னையை எழுப்பி, திருச்சி சிறையிலே இரண்டு பேர்கள் களியன், தைலப்பன் என்பவர்கள் தங்களுக்குரிய ரேஷன் அளவு கொடுக்கப்படவில்லை, அவர்களுக்கு உரிய அளவு கொடுக்கப்படவில்லை என்று கேட்ட காரணத்தினால், அவர்கள் அடிக்கப்பட்டார்கள்; நிர்வாணப்படுத்தப்பட்டார்கள்; பல கொடுமைகளுக்கு உள்ளாக்கப்பட்டார்கள் என்ற தகவலின் அடிப்படையில் திரு. உமாநாத் அவர்கள் இங்கே ஒரு கேள்வியை எழுப்பிய நேரத்தில், அமைச்சர் அவர்கள் அதற்கு விளக்கம் சொல்கின்ற போது, அப்படி நடந்ததாகத் தகவல் இல்லை என்று ஐ.ஜி. அவர்கள் சொல்கிறார்கள் என்று சொன்னார்கள். இப்படிப்பட்ட பல்வேறு சம்பவங்கள் நடைபெற்று இருக்கின்றன. உண்மை நிலையைக் கண்டுபிடிக்க வேண்டுமென்று சொன்னால், நீங்கள் வெறும் அதிகாரிகளை நம்பினால் மட்டும் போதாது. இந்த மாமன்றத்திலே இருக்கக்கூடிய எல்லாக் கட்சி உறுப்பினர்களையும் கொண்ட ஒரு குழுவை அமைத்து, இது போன்ற சம்பவங்கள் நடைபெற்றால், அவர்களை விசாரித்து ஒரு அறிக்கை கொடுக்க இந்த அரசு முயற்சியை மேற்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, நான் மிக முக்கியமான ஒன்றைக் கேட்க விரும்புகிறேன். இன்றைக்கு நக்சலைட்டுகள் என்று சொல்லக் கூடியவர்கள் சிறையிலே வாடுகின்றார்கள். துப்பாக்கிக் குழாயில் இருந்து அரசியல் அதிகாரம் பிறக்கிறது. பழைய சமுதாயத்தை தன் கருவிலே வைத்திருக்கக் கூடிய புதிய மருத்துவச்சி தான் பலாத்காரம் என்று மார்க்கிஸ்ட் சித்தாந்தத்தால், மாவோ சித்தாந்தத்தால் கவரப்பட்டு, இன்றைக்கு அவர்கள் '' எக்ஸ்ட்ரீம் அட்வென்சரிசம் '', அதாவது அதி தீவிர செயல் என்று சொல்லக் கூடிய கொள்கை சுரண்டலற்ற சமுதாயம், நிலப் பிரபுத்துவமற்ற சமுதாயம், முதலாளித்துவமற்ற சமுதாயம் உருவாக்குவதாக இருக்கலாம். ஆனால், அந்த வழிமுறைகள் தவறானவை. ஆனாலும், இந்த தேசத்தின் விடுதலைக்காக, இந்த இந்தியாவின் விடுதலைக்காக ராஜ குரு, பகத் சிங், சுரதை போன்றவர்கள் அன்றைக்கு நாடாளுமன்றக் கட்டிடத்தை வெடி வைத்து தகர்த்தார்கள். அவர்களை இந்த நாட்டு மக்கள் தியாகிகளாகக் கருதினார்கள். இதற்குக் காரணம் என்னவென்று சொன்னால், அவர்களுடைய வழி முறைகள், மீன்ஸ் தான். அண்ணா அவர்கள் சொன்னார்கள். இலட்சியம் எந்த அளவுக்கு தூய்மையானதாக இருக்கிறதோ, அந்த அளவுக்கு வழிமுறைகளும் இருக்க வேண்டும் என்று சொன்னார்கள்.

நான் சொல்கிற அர்த்தத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தயவுசெய்து தவறாகப் புரிந்துகொள்ளக்கூடாது. புரிந்துகொள்ள மாட்டார்கள் என்று கருதுகிறேன். விபசாரத் தடைச் சட்டத்தின்கீழ் பல பெண்கள் குற்றவாளிகளாக சிறையிலே அடைக்கப்படுகிறார்கள்—தாய்க்குலத்தின்மீது அக்கறை படுகிற அவர்கள் ஒரு நல்ல கருத்தைச் சொன்னார்கள்—விபச்சாரத்திற்கு அடிப்படைக் காரணம் வறுமைதான். உண்மையிலேயே ஆண்கள் தான் குற்றவாளிகள். பெண் குற்றவாளிகளை கருணையோடும் மனிதாபிமானத்தோடும்........

<u>மாண்புமிகு திரு. எம்.ஜி. இராமச்சந்திரன்</u> : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கானுக்குச் சொல்லிக்கொள்கிறேன். நான் இங்கே என்ன சொன்னேனோ அதை மத்திய அரசுக்கு அனுப்பினேன். அதை பிரதமராக இருந்த மொரார்ஜி தேசாய் மனப்பூர்வமாக ஒத்துக் கொண்டார்கள். ஆனால் அப்போது சட்ட அமைச்சராக இருந்தவர்கள் அதை முழுமையாக ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டார்கள், தாமதப் பட்டது, இழுபறியிலே இருந்தது.

<u>திரு. அ. ரகுமான்கான்</u> : அந்த முயற்சியிலே ஈடுபட்டதற்காக முதலைச்சருக்கு தாய்க்குலத்தின் சார்பாகவும் என்சார்பாகவும் நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : 25 நிமிடம் நேரம் ஆகிவிட்டது, சீக்கிரம் முடித்துவிடுங்கள்.

<u>திரு. செ. சிவசாமி</u> : சார், ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர், பேரவைத் தலைவர் அவர்களே, 403-வது எண்ணுள்ள வெட்டுத் தீர்மானத்திலே ''சிறைச்சாலையிலே நீண்ட காலமாக தண்டனை அனுபவித்துவரும் நக்சலைட் கைதிகளை விடுதலை செய்வது பற்றி விவாதிக்க'' என்று நாங்கள் கொடுத்து இருந்தும்கூட மதிப்பிற்குரிய நண்பர் பேசும்போது, கம்யூனிஸ்டுகள் சும்மா இருந்துவிட்டார்கள். இன்னும் 6 மாதம் கழித்துத் தான் பேசுவார்கள் என்று சொன்னது எங்களை நேரடியாகக் குற்றம்சாட்டுவதுபோல், இருக்கிறது. ஆனால் தி.மு.க. ஆட்சிக் காலத்திலே தான் நக்சலைட்டுகள் வேட்டையாடப்பட்டார்கள், அந்த நேரத்திலே தான் கொடுமைகள் செய்யப்பட்டன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>திரு. கே. ஆர். சுந்தரம்</u> : தலைவர் அவர்களே, ஒரு தன்னிலை விளக்கம் தர விரும்புகிறேன். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் நிலையைப்பற்றி நான் தெளிவாகச் சொல்லியிருக்கிறேன். நக்சலைட் கைதிகளை விடுதலை செய்யவேண்டும், மேற்கு வங்கத்திலே செய்ததைப் போல இங்கேயும் விடுதலை





செய்யவேண்டுமென்று நான் காலையிலே பேசியிருக்கிறேன் என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன். ஆகவே இந்த மன்றத்திலே கம்யூனிஸ்ட் கட்சியைப்பற்றித் தவறான தகவலைத் தரக் கூடாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : ஒவ்வொருவரும் தாங்கள் பேசியதைப்பற்றியெல்லாம் விளக்கம் கொடுத்துக்கொண்டிருக்க முடியாது.

<u>திரு. அ. ரகுமான்கான்</u> : இங்கே கம்யூனிஸ்ட் கட்சி நண்பர்கள் கனல்கக்க விளக்கத்தைக் கொடுத்திருக்கிறார்கள். அறிஞர் அண்ணா அவர்கள் ஒரு முறை ஒரு விளக்கம் சொன்னார்கள். பூனை எலியைக் கவ்வுவதற்கும், தன் குட்டியைக் கவ்வுவதற்கும் வேறுபாடு இருக்கிறது என்று. அதைப்போல வாதாடுவது என்பது வேறு, போராடுவது என்பது வேறு. அவர்கள் கூட்டணியிலே இருக்கின்ற காரணத்தினாலே பேசவேண்டிய வேகத்தோடு அவர்கள் பேசவில்லை. அந்த டாக்டிக்ஸைத் தான் சொன்னேன். அடிப்படையிலே அவர்கள் வேறுபட்டவர்கள் என்று நான் சொல்லவில்லை.

<u>திரு. கு. ரமணி</u> : ஓரே ஒரு விளக்கம் மட்டும் சொல்ல விரும்புகிறேன். அவர்கள் பேசி முடித்தபிறகு வாய்ப்புக் கொடுத்தால் போதும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>திரு. அ. ரகுமான்கான்</u> : அவர்களை நான் குறைசொல்லவில்லை. அவர்களுடைய 'டாக்டிக்ஸ்' அப்படி இருக்கலாம். விபச்சாரத்திலே ஈடுபட்ட பெண்களை சிறையிலே அடைக்காமல் விஜிலன்ஸ் ஹோமிலே வைக்கலாம் என்று நீங்களே போட்ட கமிட்டியே சிபாரிசு செய்திருக்கிறது. பெண்களுக்கு வேலூரிலே ஓரே ஒரு சிறைதான் இப்போது இருக்கிறது. அது போதாது. பெண்களை சிறையிலே அடைக்கச் சொல்கிறேன் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தவறாகக் கருதக் கூடாது.

(பிற்பகல் 1-10)

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : தங்கள் மானியத்திலே பேசலாம் என்று அவர் சொன்னார். வேறொன்றும் இல்லை. பெண்களுக்கு இன்னொரு சிறைச்சாலை கட்ட வேண்டும், அது தானே, அதோடு முடிக்க வேண்டும்.

* * *

<u>திரு. அ. ரகுமான்கான்</u> : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் சொல்லிய கருத்து அது அல்ல. விபசாரத் தடைச் சட்டத்தின்படி....

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> திரு ரகுமான்கான் ஒரு சிறைச்சாலை போதாது என்று சொன்னதைத்தான் நான் திருப்பிச் சொன்னேன். அதையொட்டி அவர் சொன்னதை நீக்க வேண்டும்.

<u>திரு. அ. ரகுமான்கான் :</u> தைரியமாக அதைச் சபைக் குறிப்பிலேயிருந்து நீக்கி விடலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

விபச்சாரத் தடைச் சட்டத்தின் கீழே தண்டிக்கப்பட்ட பெண்களைப் பெரும்பகுதி சிறைக்கு அனுப்பாமல் விஜிலன்ஸ் ஹோமிலே இருந்தால் அவர்கள் வாழ்க்கையிலே மீண்டும் ஒழுக்கம் பெற்று முறையாக வாழ்வார்கள் என்ற நல்லெண்ணத்தோடுதான் உங்களாலே போடப்பட்ட கமிட்டி சொல்லி இருக்கிறது அதற்காகச் சொன்னேன்.

வேலூரில் குற்றவாளிப் பெண்களுக்கு அக்காமடேஷன் போதாது என்பதற்காகத்தான்—தப்பு செய்ய வேண்டுமென்று நான் சொல்லவில்லை—அவர்களுக்கு வாய்ப்புகள் கொடுப்பதற்கு பிரிசன் அக்காமடேஷன் போதுமானதாக இல்லை, ஆகையினாலேதான் நீங்கள் மதுரைக்கு, குறைந்தபட்சம் ஒன்றைச் செய்வீர்களேயானால் தென் பக்கத்திலே இருக்கக்கூடியவர்கள், தென் மாவட்டங்களிலே இருக்கக்கூடிய அவர்களுடைய உறவினர்கள் பார்ப்பதற்கும், மற்றக் காரியங்களுக்கெல்லாம் உதவியாக இருக்கும். அடுத்து நான் கேட்டுக் கொள்வது....

*<u>திரு. கு. ரமணி</u> : தலைவரவர்களே, நான் ஒன்றைக் கூற விரும்புகிறேன். எங்கள் கட்சியைப் பற்றிச் சொல்லிய விஷயத்தைப்பற்றி மட்டும் சொல்ல விரும்புகிறேன். மதிப்புமிகு அங்கத்தினர் திரு. ரகுமான்கான் அவர்கள் பேசுகின்ற காலத்தில், 'இப்பொழுது கம்யூனிஸ்ட் குரல் கொடுக்காவிட்டாலும்' என்ற கருத்தைச் சொன்னார்கள். நக்சலைட்டுகள் சம்பந்தப்பட்டவரையில் அவர்கள் தத்துவத்தைப்பற்றியெல்லாம் அவர்கள் சொன்னார்கள்; அதற்கு நான் வரவில்லை. தத்துவத்தைப்பற்றிய அவர்களுடைய அறிவு தவறானது என்பது எங்களுடைய கருத்து. அது போகட்டும், அது இப்பொழுது வேண்டாம்.

நக்சலைட்டு கைதிகளை, திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கம் இருந்த காலத்திலும் சிறையில் வைத்தவர்களை விடுதலை செய்ய வேண்டுமென்று குரல் கொடுத்தவர்கள் நாங்கள். அது ஒன்று.



இரண்டாவதாக, இன்றைக்கும் நாங்கள் அரசாங்கத்தினி
டத்தில் வேண்டிக் கேட்டுக்கொண்டே வருவது, நக்சலைட்
கைதிகளாக இருக்கின்றவர்கள் அரசியலிலே தப்பான கண்ணோட்
டத்தோடு போவது மட்டுமல்ல ; அவர்களுடைய வழிமுறைகள்,
சமுதாயத்தினுடைய இன்றைய நடவடிக்கைகளுக்கு விரோத
மானது என்ற முறையில் தப்பு செய்கிறார்கள். ஆயினும் அர
சியல்வாதிகள் என்பதால் அவர்களை விடுதலை செய்ய வேண்டு
மென்று, இன்றைய அரசாங்கத்தினிடத்திலேயும் நாங்கள் கேட்
டுக்கொண்டே இருக்கிறவர்கள்.

அதுமட்டுமல்ல, இந்தக் கொள்கையை நடைமுறையிலே
இந்திய நாட்டிலே செய்து காட்டியிருக்கக்கூடிய ஒரே கட்சி
மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி என்பதை நான் சொல்ல விரும்பு
கிறேன். மேற்கு வங்கத்திலே எங்களுடைய அரசாங்கம் வந்த
பிறகு இப்பொழுது நக்சலைட் கைதிகளை விடுதலை செய்
திருக்கிறார்கள் என்பதையும் நண்பர் திரு. ரகுமான்கான்
அவர்கள் புரிந்து கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்
கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> திரு. ரகுமான்கான்
அதைத்தான் சொன்னார். வங்காளத்திலே விடுதலை செய்
திருக்கிறார்கள் என்பதையும் சேர்த்துதான் சொல்லியிருக்கிறார்.
ஆனால், நடுவிலே ஒரு வார்த்தை உங்களைப்பற்றிச் சொன்
னார்.

<u>திரு. கு. ரமணி</u> : குரலே கொடுக்காதவர்கள் என்பது மாதிரி
சொன்னார். அது உண்மையல்ல.

<u>திரு. இரா. கருப்பையா</u> : தலைவரவர்களே, அவர்கள்
எழுப்பிய ஒரு பிரச்சினையைப்பற்றி விளக்கம் சொல்ல விரும்பு
கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> சபையிலே பல்வேறு
பிரச்சினைகளை இப்பொழுது கொண்டு வந்து சேர்க்க வேண்
டாம்.

<u>திரு. இரா. கருப்பையா</u> : எங்களுடைய விளக்கத்தையும்
நாங்கள் கொடுக்கிறோம்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : இரண்டு பேர் விளக்கம்
கொடுத்திருக்கிறார்கள். அவர்களில் உறுப்பினரின் கட்சியைச்
சேர்ந்த திரு. சிவசாமி அவர்களும் ஒருவர். எனவே, உறுப்பினர்
அவர்களும் விளக்கம் கொடுக்க வேண்டிய தேவை இல்லை.

[திரு. சி. பொன்னையன்] [1980 ஜூலை 14

[பிற்பகல் 1-20]

அதைப்போலவே 7-வது நிதிக் குழுவின் ஆலோசனையின்
பேரில் சென்னை உயர்நீதி மன்றம் கீழ்க்கண்ட குற்றவியல் நீதி
மன்றங்களை நிறுவ பரிந்துரை செய்துள்ளது. அந்த அடிப்
படையில் அரசு நடவடிக்கை எடுக்க இருக்கிறது. நெய்வேலியில்
ஒரு இரண்டாம் வகுப்பு மாஜிஸ்ட்ரேட் நீதி மன்றமும், அதைப்
போல வள்ளியூரில்துணைக் கோட்ட ஜுடீசியல் நீதி
மன்றம், ஒன்றும், திருவண்ணாமலையில் துணைக் கோட்ட
ஜுடீசியல் நீதிமன்றம் ஒன்றும், கோபிச்செட்டிப்பாளையத்தில்
துணைக் கோட்ட ஜுடீசியல் நிதி மன்றம் ஒன்றும், அமைக்க
அரசு இந்த ஆண்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

அதைப்போலவே முன்னுரிமைப் பட்டியலிலே முதல் கட்டமாக
80-81-லே கீழ்க்கண்ட இரண்டாவது சிவில் நீதி மன்றங்களை
அரசு நிறுவுவதற்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.
அரியலூரிலும் பெரியகுளத்திலும் துணை நீதி மன்றங்களையும்,
உத்தமபாளையத்தில் மாவட்ட முன்சீப் நீதி மன்றம் ஒன்றையும்,
அதைப்போலவே பெரம்பலூர், ஜெயங்கொண்டம், பொன்
னேரி ஆகிய பகுதிகளில் மாவட்ட முன்சீப் நீதி மன்றங்களும்,
விருத்தாசலத்தில் துணை நீதி மன்றம் ஒன்றையும், மேட்டூரிலும்
ஆத்தூரிலும் மாவட்ட முன்சீப் நீதிமன்றத்தையும், சங்கரன்
கோவிலில் ஒரு மாவட்ட முன்சீப் நீதி மன்றத்தையும் அரசு
நிறுவுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளும். அந்தப் பணிகளை
மேற்கொள்ளுகிறபோது மாமன்ற உறுப்பினர்கள் கூறிய அந்தக்
காலதாமதம் என்ற பிரச்சினை ஓரளவுக்கு நீக்க முடியும் என்ற
நம்பிக்கை இருக்கிறது.

அதைப்போலவே ஏழைஎளிய மக்களுக்கு சட்ட ஆலோசனை
வழங்குவதற்காக Free legal aid என்ற அமைப்பின்
மூலம் அந்த உதவியினை வசதி அற்ற ஏழைகளுக்கு அதிசப்
படியான வாய்ப்பினைத் தரும் நோக்கோடு 10 லட்சம் ரூபாய்
நிதியினை இந்த அரசு நடப்பாண்டில் ஒதுக்கியுள்ளது என்பதைத்
தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள். பலர் பேசும்போது ஒரு முக்கிய
மான பிரச்சினையைச் சுட்டிக் காட்டினார்கள். மரண தண்
டனை பெற்றுள்ள கைதிகள் ஆயுள் தண்டனைக் கைதிகளாக
அவர்கள் ஆக்கப்படுவார்களானால், அவர்களைப் பொறுத்தவரை
யில் தண்டனை குறைக்கப்படவேண்டும் என்று இருக்கிற அந்த
அதிகாரம் மாநில அரசின் வரம்பிற்குள் இருந்து அது எடுக்கப்
பட்டுவிட்டது. அதை மீண்டும் பெறுவதற்காக சட்ட திருத்தம்
கொண்டு வரவேண்டும் என்றும், அதற்கான முயற்சிகளை
மேற்கொள்ளவேண்டும் என்று சொன்னார்கள். ஆயுள் தண்



1980 ஜூலை 14] [திரு. சி. பொன்னையன்]

டனைக் கைதிகளுக்குக் குறிப்பாக உலகத் தமிழ் மாநாட்டின்
போது ஓராண்டு காலமும், காந்தி நூற்றாண்டு விழாவின்போது
ஓராண்டும், இந்திய சுதந்திர விழாவின்போது $1\frac{1}{2}$ ஆண்டுக் கால
மும் அண்ணா அவர்கள் பிறந்த தின விழாவின்போது 6 மாதமும்
அவர்களுக்குத் தண்டனை குறைக்கப்பட்டது.

ஆனால் 1973 ஆம் ஆண்டு குற்றவியல் நடைமுறை விதித்
தொகுப்பு, 1978 ஆம் ஆண்டில் திருத்தப்பட்டு, 433 (எ)-ன் கீழ்
தற்போது கொண்டு வரப்பட்டிருக்கிற சட்டத்தின் அடிப்படை
யில் அவர்களுக்குத் தண்டனையைக் குறைக்க கூடிய அதிகாரம்—
அவர்கள் நன்னிலையிலே நடப்பார்களானால்—அவர்களை
சீர்திருத்தவேண்டும் என்ற நோக்கோடு மாநில அரசு எடுக்கும்
அதிகாரம் கூட இப்போது மைய அரசால் பறிக்கப்பட்டுவிட்டது.
அதை மீண்டும் கொண்டு வரவேண்டும் என்ற நோக்கோடும்,
சீரான புனர்வாழ்வு ஆயுள் கைதிகளுக்குக் கிட்ட வேண்டும்
என்றால் அவர்களுக்கு நன்னடத்தையின் அடிப்படையில் தண்ட
னையைக் குறைக்கக் கூடிய அதிகாரத்தை; மாநிலத்திற்குப் பெற
வேண்டும் என்ற நோக்கத்தோடு, சட்டத் திருத்தத்தைக்கொண்டு
வர மாநில அரசு முடிவு செய்து இருக்கிறது. மத்திய அரசு
அந்த அதிகாரத்தை........

திரு. அ. ரகுமான்கான் : தலைவர் அவர்களே, அமைச்சர்
அவர்கள் பேச்சில் குறுக்கிடுவதற்காக அவர் மன்னிக்க வேண்டும்.
இந்த செக்ஷன் 439 (எ) அமென்மென்ட் இருக்கிறதே, அதைத்
தான் சென்ட்ரல் கவர்ன்மென்ட் முடியாது என்று சொல்கிறது
என்று சொன்னார்கள். ஆனால் இது வந்தது 19 டிசம்பர் 1978-ல்.
அதற்கு முன்னால் அனைத்திந்திய அண்ணா தி.மு.க. ஆட்சி
தான் இருந்தது. கொள்கை அளவில் அதை இப்போது ஒத்துக்
கொண்டவர்கள், ஏன் அதை முன்பே செய்யவில்லை ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே,
இது மைய அரசினுடைய சட்டம். மைய அரசின் சட்டத்தை
மாநில அரசுகள் எல்லாம் நடைமுறைப்படுத்தி வந்திருக்கிறது.
ஆனாலும் மைய அரசை அணுகி, அந்தச் சட்டத்தை திருத்த
வேண்டும் என்றும், மாநில அரசின் அதிகாரத்தை அவர்கள்
பறிக்கக்கூடாது என்பதற்காகத்தான் நாங்கள் வலியுறுத்தி வருகி
றோம். மாநில அரசு இந்த சட்டத்தை இயற்றும் மைய அரசுக்கு
அனுப்பி இருக்கிறது. மைய அரசின் அனுமதி பெற்ற பிறகுதான்
அந்தச் சட்டத்தை இங்கே கொண்டு வர முடியும். மாண்புமிகு
உறுப்பினர் அவர்கள் மாநிலத்தினுடைய அதிகாரத்தைப் பறித்த
அந்த சட்டத்தை மீண்டும் திருப்பி மாநிலத்திற்கு அதிகாரம்
பெறக்கூடிய அளவுக்கு புரட்சித் தலைவர் அரசு முயற்சி எடுப்
பதை பாராட்டவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : தலைவரவர்களே, ஒரு பர்சனல் எக்ஸ்ப்ளனேஷன் கொடுக்க விரும்புகிறேன். என்னைப்பற்றி ஒரு கருத்தைத் தெரிவித்தார்கள். மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நேரத்தை நான் வீணாக்க விரும்பவில்லை. ஒரே நிமிடத்தில் சொல்லிவிடுகிறேன். நம்முடைய திரு. ரமணி அவர்கள் என்னைப்பற்றி ஒரு கருத்து தெரிவித்தார்கள். நக்சலைட்டுகள் பற்றிச் சொல்லிய அந்தக் கருத்து அவருக்கு அது பற்றிச் சம்பந்தமே இல்லை என்று சொன்னார். நான் அதற்கு மட்டும் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். அதாவது....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்பொழுது விளக்கம் வேண்டாம். அமைச்சரவர்கள் பதில் சொல்லட்டும்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் நான் முன்மொழிந்த மூன்று மானியக் கோரிக்கைகளிலும் நல்ல கருத்துக்களையும் பல ஆலோசனைகளையும் மற்றும் சிலவற்றையும் கூறினார்கள். முதலில் நான் நீதித் துறைபற்றி என்னுடைய விளக்கத்தையும் கருத்தையும் கூற விழைகின்றேன்.

நீதித் துறையைப் பொறுத்தவரைக்கும் மன்ற உறுப்பினர்களுக்குத் தெளிவாகத் தெரியும். இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தில் கண்டுள்ள கோட்பாடுகளுக்கும் விதிமுறைகளுக்கும் இணங்க மக்கள் அனைவருக்கும் சமநீதி கிட்டும் முகத்தான் நீதி மன்றம் செயல்படுவதில் அரசின் தலையீடோ, அரசின் நிர்வாகப் பிரிவு, செயற்பிரிவின் தலையீடுகளோ இல்லாத அளவில் நீதி மன்றம் செம்மையான முறையில் நடைபெற வேண்டுமென்ற கொள்கையில் இந்த அரசைப் பொறுத்த வரைக்கும் நடைமுறைப்படுத்தி வருகிறது. நடைமுறைப்படுத்தி வரும் என்ற உறுதியினைக் கூறுகின்றேன்.

நீதித் துறையைப் பொறுத்தவரைக்கும், மக்களுக்கு அவர்கள் சந்தித்து வருகின்ற பல இன்னல்களை ஆண்டு பலவாக அவர்கள் சந்தித்து வருகின்ற இன்னல்களைக் களைவதற்கு என்ன, என்ன நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமோ, அவைகளை விரைந்து எடுக்க நடைமுறையில் அரசு முயற்சிகளை மேற்கொள்ளும் என்ற உறுதியினைச் சொல்லுகின்றேன்.

குறிப்பாக, நீதிபதிகளுக்கு வீட்டு வசதி போதியதாக இல்லையென்றும், வாகன வசதி போதியதாக இல்லையென்றும் அரசு வழக்குரைஞர்கள், சில ஆண்டுகளுக்கு முன்னாலே போடப்பட்ட அரசு வழக்குரைஞர்கள், அரசியல் காரணமாக போடப்பட்ட சிலர், திறமைக் குறைவு காரணமாய் நல்லமுறையில் வழக்குகளை நடத்தாத காரணத்தால், அரசு வழக்குகள் பல





தோல்வி யுறுகின்றன என்பதைத் பற்றிக் கூடச் சுட்டிக்காட்டி னார்கள். மாமன்ற உறுப்பினர்கள் கூறியிருக்கிற ஆலோசனை களைக் கருத்தில் கொண்டு தக்க நடவடிக்கைகளை எடுக்கும் முயற்சியை இந்த அரசு மேற்கொள்ளும் என்று உறுதி கூறுகின் றேன்.

அதற்கு முன்னால் நீதி மன்றங்களில் தாமதத்தைத் தடுக்க வேண்டுமென்றால், அதிகப்படியான நிதிமன்றங்களை அமைப் பதும், வழக்குகள் அதிகமாக பென்டிங் நிலையில் இருப்பதை நீக்குவதற்கு அவர்களுக்குத் தேவையான ஸ்டேஷனரி போன்ற பொருள்களை வழங்குவதும் மாண்புமிகு உறுப்பினர் திரு. வேட செந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் அவர்கள் சுட்டிக்காட்டியதை போல், தீர்ப்புகளை அச்சடிப்பதில் கூட 6 மாதம், 1 ஆண்டுக் காலம் என காலதாமதம் ஆகின்ற காரணத்தால், நீதி நீதிமன்றத் தீர்ப்பு, விரைவிலே மக்களுக்குக் கிடைக்காத சூழ்நிலையைத் தடுக்க வேண்டுமென்பதும் அவசியமென்ற சூழ்நிலையில் அரசு பல நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறது. அந்த அடிப் படையில் அதிகமாக நீதிமன்றங்களைப் பரவலாக்க வேண்டு மென்ற நோக்கோடும், வட்டப் பகுதிகளில் இருக்கின்றவர்களும் மாவட்டங்களுக்கு வந்து நீதி பெறுகின்ற காலத்தில், ஏழை களுக்கு இன்னல் ஏற்படுகின்ற காரணத்தால், அந்த நீதிமன்றப் பணிகளைப் பொறுத்தவரைக்கும் that should be decentralised என்ற அணுகு முறையோடு, அரசு பல இடங்களில் நீதிமன்றங் களைத் துவக்க நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறது.

செங்கல்பட்டில் நீதித்துறை முதல் வகுப்பு மாஜிஸ்ட்ரேட் நீதிமன்றம் ஒன்றும் அதைப் போல் தர்மபுரியிலும், துறையூரி லும், பாலக்கோட்டிலும், வில்லிப்புத்தூரிலும், விளாத்திகுளத்தி லும், திண்டுக்கல், திருக்கழுக்குன்றம், உசிலம்பட்டி, அம்பத்தூர், பொன்னேரி ஆகிய பகுதிகளில் நீதிமன்றங்களைத் துவக்க இந்த அரசு 1979-80-ல் அனுமதி வழங்கியுள்ளது.

அது மட்டுமின்றி, பெரியார் மாவட்டத்தில் ஈரோட்டில் நீதித்துறை தலைமை மாஜிஸ்டிரேட் நீதிமன்றத்திற்கு அரசு அனுமதி வழங்கியிருக்கிறது. 1979-80-ல் நான் சொல்ல இருக் கின்ற கீழ்க்காணும் பகுதிகளில் எல்லாம் நீதிமன்றங்களை அமைப் பதன் மூலம் வழக்குகளுக்குத் தாமதமாக தீர்ப்பளிக்கப்படுகின்ற குறையினைப் போக்க முடியும் என்று அரசு கருதுகிறது. அதில் ஈரோட்டில் ஒரு கூடுதல் துணை நீதிமன்றமும், தூத்துக்குடி யிலும் கோயம்புத்தூரிலும், அதைப் போலவே இராமநாதபுரத்தி லும் கூடுதல் துணை நீதிமன்றங்களை அமைப்பதற்கும், திண்டுக் கல், திருப்பத்தூர், ஸ்ரீவில்லிபுத்தூர், சாத்தூர், ஆரணி, கோபிச் செட்டிபாளையம் ஆகிய பகுதிகளில் கூடுதல் மாவட்ட முன்சிப் நீதிமன்றங்களை அமைப்பதற்கும் திருவண்ணாமலையிலே ஒரு கூடுதல் மாவட்ட முன்சீப் நீதிமன்றத்தை அமைப்பதற்கும் அரசு இந்த ஆண்டு நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறது.

[திரு. சி. பொன்னையன்] [1980 ஜூலை 14

அதைப் போலவே, இன்னொரு முக்கியமான சட்டத் திருத்
தத்தை மாநில அரசு மைய அரசுக்கு தெரிவித்து இருக்கிறது.
குறிப்பாக பண்புணர்ச்சி குற்றத்திற்கான தண்டனை கடுமை
யாக்க வேண்டும் என்றும், அவர்களுக்கு மரண தண்டனை கூட
விதிக்க வேண்டும் என்றும், முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள்
ஏற்கனவே அறிவித்து இருப்பது மன்ற உறுப்பினர்களுக்குத்
தெரியும். தற்போதுள்ள இந்திய சட்டத்தின் பிரிவின்படி
அவர்களுக்கு மரண தண்டனையோ, ஆயுள் சிறை தண்டனையோ
விதிக்க இயலாது. எனவே அவர்களுக்கு மரண தண்டனை
அல்லது ஆயுள் சிறை தண்டனை அளிக்க வேண்டும் ; சிறை
வாசம் மட்டுமே போதும் என்று கருதப்பட்டால் குறைந்தபட்ச
தண்டனையாக 10 ஆண்டு கடுங்காவல் சிறை தண்டனை
கொடுக்கப்பட வேண்டும் என்ற நோக்கத்தோடு பண்புணர்ச்சி
குற்றத்திற்கான தண்டனையைக் கடுமையாக்கும் முகத்தான்
சட்டத்தைத் திருத்தி, அதற்கும் மைய அரசின் ஒப்புதல் பெற
நடவடிக்கை மேற்கொள்ளப் போகிறோம் என்பதைத் தெரி
வித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் பேசுகிறபோது, மாவட்ட
அளவில் உள்ள கீழ் நீதிமன்றங்களில் அதனுடைய பண வரம்பை
உயர்த்த வேண்டும் என்று கோரிக்கை வைத்தார்கள். ஏழை
எளிய மக்கள் குறிப்பாக வட்ட அளவில் இருக்கும் மக்கள்
வழக்குகளைத் தொடர்வதற்கு மாவட்ட தலைநகரங்களுக்குப்
போவதும், பிறகு அப்பீல் என்ற முறையில் உயர்நீதி மன்றத்
திற்கு வரவும் என்பது அவர்களுக்கு பணச் செலவையும், இழப்
பையும் தருகிற காரணத்தால், அவர்களுடைய கஷ்டத்தைக்
குறைக்கும் முகத்தான், மாவட்ட முன்சீப்கள் விசாரிக்கக்கூடிய
வழக்குகளில் பண அதிகார வரம்பை தற்போது இருக்கும் ரூ 5,000
என்ற நிலையில் இருந்து ரூ. 15,000 என்கிற அளவிற்கு உயர்த்து
வது என்று அரசு முடிவு எடுத்துள்ளது.

அதைப் போலவே, டிஸ்டிரிக்ட் ஜட்ஜ் கோர்ட்டுகளுக்கு, மேல்
முறையீடு நீதிமன்றங்களுக்கு, அவர்களுக்கு உள்ள அதிகார பண
வரம்பை ரூ. 10,000-ல் இருந்து ரூ. 30,000 என்ற அளவிற்கு
உயர்த்த அரசு முடிவு எடுத்துள்ளது. அதைப் போலவே,
உயர்நீதி மன்றத்திலே தற்போது சென்னையைப் பொறுத்த
வரையிலும் 1 இலட்ச ரூபாய்க்கு மேல் என்று வரம்பு நிர்ணயிக்கப்
பட்டு உள்ளது. ஆனால் சென்னையில் உள்ள சிட்டி சிவில்
கோர்ட்டுக்கு தற்போதுள்ள ரூ. 50,000 என்ற பண வரம்பை
ரூ. 1 இலட்சம் அளவிற்கு உயர்த்துவதற்கு நடவடிக்கை மேற்
கொள்வது என்று அரசு முடிவு எடுத்து இருக்கிறது என்று தெரி
வித்துக் கொள்கிறேன். இந்தத் திருத்தங்களின் மூலமாக
குறிப்பாக மாவட்டங்களிலும், வட்ட நீதி மன்றங்களிலும்
இருக்கின்ற வழக்கறிஞர்களுக்கு நல்ல பணி கிடைத்திடுவ



1980 ஜூலை 14] [திரு. சி. பொன்னையன்]

தோடு அங்கே இருக்கும் ஏழை எளிய மக்கள் வழக்கு என்ற
முறையில் ஏகப்பட்ட பணத்தைச் செலவழித்து மாவட்ட தலை
நகரங்களுக்குச் செல்லும் தொல்லையை துடைக்கும் முகத்தான்
இந்த நடவடிக்கையை அரசு மேற்கொண்டு இருக்கிறது என்று
தெரிவித்துக் கொள்கிறேன்.

மற்றொரு வேண்டுகோள், மாண்புமிகு உறுப்பினர்கள்
கேட்டார்கள். '' இன்டக்கிரேஷன் ஆப் ஜுடிசியரி ''—மேஜிஸ்
டிரேட்—முன்சீப் ஒருங்கிணைக்கப்பட வேண்டும் என்று சொன்
னார்கள். இந்தக் கூட்டத் தொடரில் அதற்கான சட்டம்
கொண்டு வந்து, அதன் மூலமாக குற்றவியல் மேஜிஸ்டிரேட்,
சிவில் நீதிபதிகள் ஆகிய இருவரையும் ஒரே நீதிபதியாக ஆக்கி,
நீதித் துறையின் பல்வேறு பிரிவின் பணிகளை திறம்பட நிர்
வகிக்கும் நோக்கத்தோடு செயல்படுத்தப்படும் என்று தெரிவித்துக்
கொள்கிறேன். இதன் மூலம் பல்லாண்டு காலமாக இருந்து
வந்த இந்தக் குறை போக்கப்படும் என்றும் தெரிவித்துக் கொள்கி
றேன்.

அதைப் போலவே, உறுப்பினர்கள் மதுரையில் உயர் நீதி
மன்றத்தின் ஒரு ஆயம் ஏற்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்
என்று கேட்டார்கள். ஏற்கனவே நம்முடைய மாநில அரசு
மத்திய அரசுக்கு எழுதி இருக்கிறது. மறுபடியும் இந்த மைய
அரசை வலியுறுத்தி மதுரையில் ஒரு உயர்நீதி மன்றத்தின் ஆயம்
ஒன்றை ஏற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளும்.

உச்ச நீதி மன்றத்தின் ஆயம் ஒன்று சென்னையில் அமைக்க
வேண்டும் என்றும் நடவடிக்கை எடுத்து வருகிறோம். இதன்
காரணமாக சென்னையில் உள்ள பொது மக்கள் டெல்லி
மாநகரத்திற்குச் செல்லும் 'தொல்லைகளைத் துடைக்கும் முகத்
தான் சென்னையிலேயே உச்ச நீதிமன்றத்தின் ஆயம் ஒன்றை
அமைக்க மைய அரசை மாநில அரசு கேட்டுக் கொண்டு
இருக்கிறது.

நீதி மன்றத்தின் தீர்ப்புகளை தமிழிலேயே வழங்க வேண்டும்
என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. கருப்பையா அவர்களும்,
மற்றவர்களும் எடுத்துச் சொன்னார்கள். தற்போது உயர்நீதி
மன்றத்திற்கும் கீழ் நிலையில் உள்ள உரிமைநாட்டு மன்றங்களில்
வழங்கும் தீர்ப்பு ஆங்கிலத்தில்தான் இருந்து வருகின்றன.
ஆனால் குற்றவியல் நீதிமன்றங்களில் வழக்குகள் எல்லாம்
தமிழிலேயே நடத்திக்கொண்டு வரப்படுகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவையின் அனுமதி
யோடு, பேரவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

[பிற்பகல் 1-30]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : காரணம், தமிழில் தீர்ப்பினை வழங்கக்கூடிய அளவுக்கு சில மொழி பெயர்ப்புகள் முற்றுப் பெறாத நிலையில் இருந்ததால் அந்த தாமதம் ஏற்பட் டிருக்கிறது. நடப்பாண்டிலே அந்தக்குறையைப் போக்கி (சிவில் கோர்ட்) உரிமை வழக்கு மன்றத்தில் தமிழை புகுத்தி, அதைத் தொடர்ந்து (ஹைகோர்ட்டிலும்) உயர் நீதிமன்றத்திலும் தமிழிலே தீர்ப்பு வழங்க வேண்டுமென்ற முடிவைக் கொண்டுவர இந்த அரசு முடிவு செய்திருக்கிறது.

மாண்புமிகு உறுப்பினர் ஆண்டித் தேவர் போன்றவர்கள் எல்லாம் பேசும்போது தற்போது ஏ.பி.பி. 1 ஆக இருக்கிற வரை நேரடியாக பப்ளிக் ப்ராசிகியூட்டராகப் போடுவதால், அவருக்கு போதுமான தகுதி, அனுபவம் இல்லாத காரணத்தால் அரசு வழக்குகளை அவர் செவ்வனே நடத்த முடியவில்லை என்றும், தகுதி வாய்ந்த வழக்கறிஞர்களை நியமிக்க வேண்டு மென்றும், அதற்கு முன்பிருந்த சட்டத்தைத் திருத்த வேண்டும் என்றும் கேட்டிருக்கிறார்கள். மைய அரசின் சட்டத் திருத் தத்தின் அடிப்படையில் மாநில அரசு கொண்டு வந்த அந்தச் சட்டத்தை மீண்டும் திருத்தி, ஏ.பி.பி. 1 ஆக இருக்கிறவரை பப்ளிக் ப்ராசிகியூட்டராக மாற்றும் நடைமுறையை மாற்றி, தகுதியுள்ள வழக்கறிஞரை நியமிக்க, இந்த நடைமுறையைக் கொண்டுவர அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரி வித்துக் கொள்கிறேன்.

அதைப் போன்று இன்னொன்றையும் கூறினார்கள். டிப் பார்ட்மென்டிலே பணியாற்றுகின்றவர்கள் எங்கோ பகுதிநேரப் படிப்பு படித்து, சட்டத்திலே பட்டம் பெற்று வருகின்றவர்கள் நீதிபதிகளாக வரக்கூடிய சூழ்நிலை ஏற்படுகிற காரணத்தால் சில சிக்கல் ஏற்பட்டதாகக் கூறினார்கள். '' பாரிலே '' அனுபவம் உள்ள, தகுதி வாய்ந்த வழக்கறிஞர்களைத் தேர்ந் தெடுப்பதில் தீவிரம் காட்ட வேண்டுமென்றும் சொன்னார்கள். அது குறித்து அரசு தக்க நடவடிக்கை எடுக்கும் என்று கூறிக் கொள்கிறேன்.

அடுத்து சிறைத் துறையைப் பொறுத்தமட்டில் அரசினுடைய எண்ணம் எல்லாம் மாண்புமிகு உறுப்பினர்கள் சுட்டிக் காட்டிய தைப் போல அங்கு இருக்கிற கைதிகளுக்கு நல்ல முறையில் உணவு தருதல், இருப்பிடத்தை நல்ல முறையில் அமைத்துத் தருதல், கழிப்பிடம் நல்ல முறையில் அமைத்துத் தருதல், குடிநீர் வசதியை நல்ல முறையில் ஏற்படுத்தித் தருதல் போன்ற வசதி களை '' சைகாலாஜிக்கல் '' அடிப்படையில், மனோதத்துவ ரீதியில் அளிக்கின்ற மாறுதல் என்ற அடிப்படையில்தான் இந்த அரசு சிறைத் துறை நிர்வாகத்தைப் பொறுத்தவரையில் அவை



களை மேற்கொண்டிருக்கிறது. அந்த அடிப்படையில் மாண்பு மிகு உறுப்பினர்கள் கூறிய ஆலோசனைகளை எல்லாம் ஏற்று, பல முன்னேற்றங்கள் விரைவில் சிறைகளில் கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுப்போம் என்ற உறுதியை கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மேலும் பல வேண்டுகோள்களை மாண்புமிகு உறுப்பினர்கள் விடுத்தார்கள். சத்துணவுத் திட்டத்தில் சோளம் மற்றும் ராகிக்குப் பதிலாக மற்ற உணவுகளைத் தரவேண்டுமென்று வேண்டுகோள் விடுத்தார்கள். இந்த ஆண்டிலிருந்து சத்துண வுத் திட்டத்தின் கீழ் சோளம் மற்றும் ராகி ஆகியவைகளுக்குப் பதிலாக அனைத்துச் சிறைகளிலும் தீட்டிய அரிசி போடுவதற்கு அரசு முடிவு செய்திருக்கிறது. அதைப் போலவே சிறையிலே உள்ள கைதிகளுக்கு தலையணை தரப்படாத நிலைமை இருந்தது. இனிமேல் கைதிகளுக்கு தலையணை தருவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

சிறையிலே பணியாற்றுகின்ற, சிறையிலே இருக்கிற கைதிகள் அங்கே சில தொழில்களில் ஈடுபடும்போது அவர்களுக்கு இது காறும் தந்து வந்த ஊதியம் குறைவாக இருந்ததால், இனிமேல் அவர்களுக்கு தற்போது இருந்து வருகிற 20 காசு, 10 காசு என்ற முறை மாற்றப்பட்டு குறைந்த பட்சம் 25 காசு முதல் அதிக பட்சம் $1\frac{1}{2}$ ரூபாய் வரையில் சிறையிலே பணியாற்றுகின்ற, தொழிலில் ஈடுபடுகின்ற கைதிகளுக்கு தருவதற்கு அரசு திட்டமிட்டிருக்கிறது.

அதைப்போலவே எல்லா சிறைகளிலும் '' கான்டீன் '' திறக்க வேண்டும் என்ற வேண்டுகோள் பல்லாண்டுகளாக இருந்து வருகிறது. சிறை கைதிகளுக்காக, அவர்களுக்கு வேண்டிய சில பொருட்களை வாங்க அங்கே வசதி இருந்தால்—அங்கே பணி யாற்றுகின்ற பணியாளர்களோடு தொடர்பு கொண்டு வாங்க வேண்டியிருப்பதால் சில தவறுகள் கூட நடப்பதைச் சுட்டிக் காட்டினார்கள் ; அதை நிரந்தரமாகப் போக்குவதற்காக சிறை களிலே கான்டீன்களை ஏற்படுத்தி, அங்கே அந்த கைதிகளுக்குத் தேவையான பற்பசை, பல் துலக்கி, சோப்பு, எண்ணெய் போன்ற அத்தியாவசியப் பொருட்களை அனைத்துச் சிறை களிலும் பெறுவதற்கேற்ற சூழ்நிலையை ஏற்படுத்த அரசு முடிவு செய்திருக்கிறது.

மாண்புமிகு உறுப்பினர்கள் சிலர் பேசுகின்றபோது காப்பு விடுப்புத் திட்டத்தை பொறுத்தவரையில் இன்னும் காவல் துறையினரின் பரிந்துரையின் பேரில்தான் நடக்கின்றது என்று சொன்னார்கள். அந்த முறை மாற்றப்பட்டு விட்டது, நேரடியாக கண்காணிப்பாளர் அவர்களுடைய பரிந்துரையின் பேரிலேயே அந்த விடுப்பைப் பொறுத்தவரையில் தாராளமான முறையில் நடவடிக்கை எடுக்க அரசு திட்டத்தை தீட்டி இருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. சி. பொன்னையன்] [1980 ஜூலை 14

மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் பேசும்போது, பல மாவட்டத்திலுள்ள கீழ்மட்ட சிறைச் சாலைகள் எல்லாம் மாவட்ட ஆட்சித் தலைவர்களின் பொறுப் பிலே இருக்கின்ற காரணத்தால் அங்கு சில குறைபாடுகள் இருப்பதை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கூறினார்கள். அந்தக் குறையை அரசு உணர்ந்து இருக்கின்றது. இந்த ஆண்டிலிருந்து படிப்படியாக மாவட்ட ஆட்சித் தலைவர்களின் பொறுப்பிலே இருக்கின்ற சிறைச் சாலைகளை எல்லாம் அரசு எடுத்து நேரடியாக சிறை நிர் வாகத்தின் கீழ் கொண்டு வந்து அங்குயிருக்கின்ற எண்ணற்ற குறைகளைக்களைய நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, திறந்த வெளியில் சிறைச்சாலைகள் அமைக்க வேண் டும் என்று சிலர் கோரிக்கை விட்டார்கள். அந்த அடிப்படை யில் இராமநாதபுரம் மாவட்டத்தில் சிவகங்கை அருகில் முத்துப் பேட்டையிலும், திருநெல்வேலி மாவட்டத்தில் சிங்கம்பட்டியிலும் தென்னாற்காடு மாவட்டத்தில் வேளப்பாக்கம் அரசு விதைப் பண்ணையிலும் செங்கையிலே வெங்கடமங்கலத்திலே அரசு திறந்தவெளி சிறைச்சாலைகள் அமைக்கும் என்பதைத் தெரிவித் துக்கொள்கிறேன். வேலூர் சிறையிலே உற்பத்தி செய்கின்ற பாத அணிகளை வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்யக் கூடிய அளவுக்கு சிறைக் கைதிகளுக்கு இன்னும் வேலைவாய்ப்பை ஏற் படுத்தித் தந்து பிற்காலத்திலே அவர்களுக்கு புனர்வாழ்வு ஏற்படுத்தக்கூடிய அளவுக்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று சொன்னார்கள். அந்த அடிப்படையிலே நடவடிக்கைகள் மேற்கொள்வதோடு மேலும் ஒரு மாதிரி தயாரிக் கின்ற சிறைச்சாலைகளைக் கூட வேலூரிலே நிறுவ அரசு திட்டமிட்டிருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, கூட்டுறவுத் துறை பற்றிய மானியக்கோரிக்கையின் மீது மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு கருத்துக்களைக் கூறி னார்கள். குறிப்பாக விவசாயக் கடன் முழுவதையும் ரத்து செய்யவேண்டுமென்று சிலரும், காங்கிரஸ் உறுப்பினர்களில் சிலர் விவசாயக் கடன் முழுவதையும் ரத்து செய்யக்கூடாது என்ற கருத்தையும் மாறி மாறி பல்வேறு கருத்துக்களை கூறினார்கள். விவசாயத்தைப் பொறுத்த வரை,

'' சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை.''

என்னும் வள்ளுவப் பெருந்தகையின் கொள்கைக்கேற்ப எண்ணற்ற பிரச்சினைகளைத் தீர்ப்பதிலேயும் அவர்களுக்காக மேம்பாட்டுத் திட்டங்களை நடைமுறைக்குக் கொண்டுவருவதிலும் புரட்சித் தலைவர் அவர்களின் அரசு கடந்த 3 ஆண்டு காலமாக பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு இருப்பதை அவை

123084



[illegible] என் நம்புகிறேன். கூட்டுறவுத் துறையைப் பொறுத்த [illegible]ம் அந்தக் கூட்டுறவுத் துறை துவக்க[illegible] தன் [illegible]ம கிராமப்புறத்தினுடைய விவசாய சூழ்[illegible]யாக [illegible]லும் சரி, அர்பன் கோ-ஆப்பரேட்டிவ் சொ[illegible]டி [illegible]சொல்லப்படுகின்ற நகர்ப்புற சூழ்நிலையாக இருந்தா[illegible] நலிந்த மக்களுக்காக ஏழை எளிய மக்[illegible] [illegible]றி, வறுமையிலே வாடுகிற மக்களுக்கா[illegible] நல்ல[illegible] [illegible]முறையிலே அமைய வேண்டும் என்பதேயாகும். [illegible]கயில் பணக்காரர்களின் சுரண்டலிலிருந்து விடுதலை [illegible]டுமென்ற நோக்கத்தோடு கூட்டுறவு அமைப்பு ஆரம் [illegible] துவக்கப்பட்டது. குறிப்பாக கிராமப்புறத் பத்திலேயே இருக்கின்ற விவசாயப் பெருங்குடி மக்களில் 80 சதவீத திலே இருக்கின்ற விவசாயப் பெருங்குடி மக்களில் [illegible] விவசாயிகள் ஏழை எளியவர்களாகவும், சிறு விவசாயிகளாக வும், நலிந்தவர்களாகவும், மற்றப் பணிகளைச் செய்கின்ற ஏழை எளியவர்களாகவும் தான் இருக்கிறார்கள். கூட்டுறவு அமைப் பினுடைய பலன் பணக்காரர்களுக்கு சில நேரத்தில் தேவைப் படாமல் இருக்கலாம். ஆனால் ஏழை எளிய நலிந்த மக்களுக்கும், சிறு விவசாயிகளுக்கும், நிலமற்ற ஏழைகளுக்கும் கூட்டுறவு அமைப்பு மிகவும் இன்றியமையாதது என்பதனை மாமன்ற உறுப்பினர்கள் மறுக்க மாட்டார்கள் என நம்புகிறேன். புரட்சித் தலைவர் அவர்களின் அரசு வந்த பிறகு சென்ற 3 ஆண்டு காலமாக கிராமப்புறத்திலே இருக்கின்ற விவசாயி களுக்குப் பல்வேறு சலுகைகளை அளித்திருப்பதை இந்த மாமன்றம் அறியும். 1979 ஆம் ஆண்டிலே விவசாயிகளின் பிரச்சினைகளை அறிய தமிழக அரசால் ஒரு குழு அமைக்கப் பட்டு அந்தக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் கடன் வசூலை நாங்கள் தளர்த்தியதையும் சில பேர்களுக்கு வட்டிகளைத் தள்ளுபடி செய்ததையும் இந்த மாமன்றம் அறியும். தமிழக அரசின் வரலாற்றிலேயே முதன்முறை யாக விவசாயிகளுக்குள்ள 27 கோடி ரூபாய் வட்டிகளை ரத்து செய்ய 1979 ஆம் ஆண்டிலே உத்தரவிட்டோம். அப்போது புரட்சித்தலைவர் இருந்ததை இந்த மாமன்றம் அறியும். அதைப்போலவேதான் கடந்த கால அளவுக்கு அரசுகள் செய்யாத அளவுக்கு, கிராமப்புற பொருளாதாரத்தை முன்னுக்கு கொண்டுவந்தால் தான் நாட்டினுடைய ஒட்டுமொத்த பொருளாதாரமே ஒரு மறுமலர்ச்சி அடையும் என்ற நன் னோக்கத்தோடு கிராமப்புற பொருளாதார மறுமலர்ச்சி ஏற் படுத்த வேண்டும் என்று புரட்சித் தலைவர் அவர்களின் அரசு தற்போதும் பல சலுகைகளை அளித்து நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கின்றது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

[பிற்பகல் 1-40]

ஐந்து ஏக்கருக்கும் குறைவாக இருக்கிற விவசாயிகளுக்கு அவர் கள் நஞ்சை நிலம் வைத்திருந்தாலும் சரி, புஞ்சை நிலம் வைத்திருந்தாலும் சரி, குத்தகைதார்களாக இருந்தாலும்



V211.3) N8

சரி, அனைத்து சிறு விவசாயிகளுக்கும் அவர்கள் பட்டிருக்கிற
மத்திய கால கடன்களாக மாற்றப்பட்ட பயிர்க்
கடன்கள் 42 கோடி ரூபாயை ரத்து செய்ய வேண்டும்
என்று புரட்சித் தலைவர் அவர்களின் அரசு அறிவித்திருக்
கிறது. கடந்த காலத்தில் தமிழக வரலாற்றிலேயே முதன்
முறையாக பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நன்மை செய்ய
வேண்டும் என்ற நோக்கோடு ஏழை எளிய விவசாயிகள்
இன்னலில் சிக்கி உள்ள விவசாயிகளுக்கு நன்மை செய்ய
வேண்டும் என்ற நோக்கோடுதான் இந்த 42 கோடி
ரூபாய் கடனை அரசு ரத்து செய்திருக்கிறது என்பதை
இந்த மாமன்றம் அறியும்.

கூட்டுறவுக் கடன்கள் முழுவதையுமே ரத்து செய்யவேண்டு
மென்று ஒரு கோரிக்கை எழுப்பப்பட்டிருப்பது உண்மையிலேயே
எந்த அளவுக்கு பொருத்தமாக இருக்கும் என்பதை என்னால்
புரிந்து கொள்ள முடியவில்லை. பாதிக்கப்பட்ட விவசாயி
களுக்கு கடனை ரத்து செய்யலாம். ஆனால் பாதிக்கப்
படாத விவசாயிகள், வளமான நிலைமையிலே பல ஏக்கர்களுக்கு
சொந்தக்காரர்களாக இருக்கக் கூடிய விவசாயிகளுக்குக்
கடன்களை ரத்து செய்ய வேண்டுமென்று ஒரு முடிவுக்கு வருவோ
மேயானால் கூட்டுறவு அமைப்பே "The basic structure of
co-operative movement will get spoiled"

அதை இம்மாமன்ற உறுப்பினர்கள் அறிவார்கள், உணர்
வார்கள் என்று நான் நம்புகிறேன்.

மேலும், கூட்டுறவு கடனை ரத்து செய்ய வேண்டுமென்றால்
மாநில அரசே எடுத்த எடுப்பில் இஷ்டம் போல் எதையும்
செய்து விட முடியாது. ரிசர்வ் வங்கியினுடைய பல விதிமுறை
களுக்கு உட்பட்டுத்தான் எந்த நடவடிக்கையும் அரசு மேற்
கொள்ள வேண்டியிருக்கிறது. விவசாயிகள் குறுகிய கால
கடன்களாக வாங்கியிருப்பதில் 30 சதவீதம் கடனை ஒவ்வொரு
ஆண்டும் மார்ச் 31 ஆம் தேதியும், 40 சதவீதம் கடனை
ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 30 ஆம் தேதியும் கண்டிப்பாக
அவர்கள் மத்திய வங்கிக்கு திருப்பி தந்து, மத்திய வங்கி மாநில
வங்கிக்கு தந்து அந்த கணக்கு வகைகள் சீர் செய்தாக வேண்டும்.
இந்த விதிமுறைகளை மத்திய வங்கியும் அதன் கீழ் பணிபுரிகின்ற
சங்கங்களும் மீறுமேயானால், விவசாயக் கடனை ரத்து செய்
வதற்கு ரிசர்வ் வங்கி அனுமதி தராது. வேறு விவசாயிகள்
மீண்டும் பயிரிட கடன் உதவி கேட்டாலும் ரிசர்வ் வங்கி தராது.





ரிசர்வ் வங்கியின் இந்த விதிமுறைகளின் காரணமாக பாதிக்கப்
படுவது ஏழை விவசாயிகளே. கடனைத் திருப்பித் தரக்கூடாது
என்று பாதிக்கப்படாதவர்களும், எல்லா விவசாயிகளுமே கடனை
திருப்பித் தரக்கூடாது என்ற நிலைமை சில ஆண்டுகளாக இருந்து
வருகிறதுஅதிலும் குறிப்பாக கிராம கூட்டுறவு சேவா சங்கம் மூல
மாக இது வரைக்கும் 304·22 கோடி ரூபாய் கடன் நிலுவையாக
இருக்கிறது. அது மட்டும்அல்ல. நிலவள வங்கிகளிலிருந்து வழங்
கப்பெற்ற கடன்கள் நிலுவையிலுள்ளவை 173 கோடியே 25
லட்சம் ரூபாய். ஆக மொத்தம் 477 கோடியே 47 லட்சம்
ரூபாய் பாக்கியாக நிற்கிறது.

பணக்கார விவசாயிகளும் கூட விவசாயக் கூட்டுறவு கடன்
என்றாலே திருப்பித் தரக்கூடாது என்ற ஒரு நடவடிக்கையை
மேற்கொண்ட காரணத்தினால்தான் இந்த அளவுக்கு கடன்
நிலுவை ஏற்பட்டு விவசாயிகளுக்கு மீண்டும் கடன் தருவதற்
குரிய ஒரு நிலைமையை ரிசர்வ் வங்கி தராத அளவுக்கு நிலைமை
ஏற்பட்டிருக்கிறது. இந்த நடவடிக்கை காரணமாக பாதிக்கப்
பட்டது பணக்கார விவசாயிகள் அல்ல. பாதிக்கப்பட்டது சாதா
ரண சிறு விவசாயி. 1 ஏக்கர், 2 ஏக்கர்கள். 3 ஏக்கர்கள்,
5ஏக்கர்கள் என்று நிலம் வைத்திருக்க கூடிய சிறு விவசாயிகள்
தாம் மீண்டும் பயிரிட வேண்டுமானால், அவர்கள் கடன் வேண்டு
மென்று சொன்னால், அவர்களாத் தூண்டி விடுகிற பணக்கார
விவசாயிகளிடம்தான் செல்ல வேண்டும். கூட்டுறவு வங்கி
யின் கடன் உதவி சிறு விவசாயிகளுக்கு கிடைக்காத நிலையில்
உண்மையிலேயே ஆதாயம், கூட்டுறவுக் கடனை கட்டாமல்
இருக்கும் பணக்கார விவசாயிகளுக்குத்தான் ஏற்படுகிறது.

காரணம், அவர்கள் எந்தவிதப் பாதிப்புக்கும் உள்ளாவது
இல்லை. அவர்கள் விவசாய வேலைகளையும் நிறுத்துவது இல்
லை. வட்டிக்கு விட்டிருக்கும் பணத்தை வாங்கி அல்லது வங்கி
யிலே போட்டு வைத்திருக்கும் பணத்தை எடுத்து மீண்டும்
விவசாய வேலைகளை அவர்கள் செய்கிறார்கள். ஆனால் விவ
சாயம் செய்ய வழி இல்லாது இருக்கிற ஏழை விவசாயிகள்
கூட்டுறவு வங்கிகளின் உதவி இல்லாத காரணத்தினால், மைய
வங்கியினுடைய உதவி சேவா சங்கங்களுக்கு கிடைக்காத
காரணத்தினால் பணக்காரர்களிடம் கடன் வாங்கச் செல்கிறார்
கள். அதிக வட்டிக்கு கடனை வாங்குகிறார்கள். இன்னலி உ.
ஆட்படுகிறார்கள். அப்படிப்பட்டவர்கள் சிறு விவசாயிகே
என்பதை சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

1977–78-ல் 120 கோடி 69 லட்சம் ரூபாய் பயிர்க்கடனாக
தரக்கூடிய சூழ்நிலை இருந்தது. ஆனால் பெரும் விவசாயிகள்
அனைவரும் ஒருங்கிணைந்து கூட்டுறவுக் கடனை தராத காரணத்

தினால், மீண்டும் விவசாயிகளுக்கு தரவேண்டிய கடன் உதவி யின் அளவு ரிசர்வ் வங்கியின் விதிமுறைகளின் காரணமாய் தற் போது குறைந்து விட்டது. இங்கே இன்னொன்றையும் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

ரிசர்வ் வங்கி குறைந்தபட்சம் 40 சதவிகிதம் குறிய காலக் கடனை வசூலிக்க வேண்டும் என்ற நிபந்தனை இருக்கிறது. அப் படியிருக்கிறபோது குறிப்பிட்ட ஒரு மாவட்டத்திலுள்ள மைய வங்கி 40 சதவீதம கடனை வசூலிக்காமல் இருக்குமேயானால் ரிசர்வ்வங்கி கடன் அந்த மைய வங்கிக்குக் கிடைக்காது. அப்போது சிலவிவசாயிகள், குறிப்பாக கூட்டுறவுக் கடனை நேர்மையான முறையில் திருப்பிக் கட்டினால் நமக்கு மீண்டும் கூட்டுறவு வங்கி மூலம் கடன் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் கூட்டுறவுக் கட னை சில சிறிய விவசாயிகள் திருப்பிக் கட்டுகிறார்கள். அப்படி திருப்பிக் கட்டுகிற விவசாயிகளுக்கும் இத்தகைய வங்கிக்கு 40 சதவிகிதத்திற்குக் குறைவாக வசூலித்து இருந்தால் புதியதாகக் கடன் தரஇயலாது. இந்த கடனை நேர்மையான முறையில் திருப் பித் தரலாம். திருப்பித் தந்தால் நமக்கு மீண்டும் கடன் கிடைக் கும் என்ற நல்ல நோக்கத்தோடு இருக்கிற சிறு விவசாயிகளை ரிசர்வ் வங்கியின் இப்படிப்பட்ட விதிமுறை பாதிக்கிற காரணத் தால் அந்த விதிமுறையைத் தளர்த்த வேண்டும் என்றும் எந்த ஒரு சிறு விவசாயி கடனைத் திருப்பிக் கட்டினாலும் அந்த விவசாயிக்கு கடன் தரவேண்டுமென்றும் அப்போதுதான் சிறு விவசாயிகள் ஊக்கமாக வாங்கிய கடனை கூட்டுறவுத் துறைக்கு திருப்பிக் கொடுப்பார்கள் என்றும் நாங்கள் ரிசர்வ் பாங்குக்கு கூறியிருக்கிறோம்.

தமிழ்நாட்டில் இருக்கிற விவசாயப் பெருங்குடி மக்களில் 1 கோடியே 57 இலட்சம் 37 ஆயிரம் ஏக்கர்களில் விவசாயம் செய்கி றார்கள். அதில் கிட்டத்தட்ட 80 சதவிகிதம் விவசாயிகள் சிறு விவசாயிகளாக இருக்கிறார்கள். 42 சதவிகிதமான 66 இலட் சத்து 10 ஆயிரம் ஏக்கர் நிலத்தை உழுகிறவர்கள் 5 ஏக்கருக் குக் குறைவான நிலத்தையுடையவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் ஒட்டுமொத்த விவசாயிகளில் 483 ஆக இருக்கிறார் கள். ஆனால் பத்து ஏக்கருக்கு அதிகமாக நிலமுள்ள பெருவிவ சாயிகள் மொத்த விவசாயிகளில் 6% ஆக உள்ளனர். ஆனால் அவர்கள் கையில்மட்டும் மொத்த நிலத்தில் 33% நிலம் அதா வது 51 இலட்சத்து 92 ஆயிரம் ஏக்கர் நிலம் இருக்கிறது. நான் இதைச் சுட்டிக்காட்டுவதற்குக் காரணம் கூட்டுறவுக் கடனை அனைவருமே திருப்பித்தரமாட்டோம் என்ற நட வடிக்கைகளில் ஈடுபடும்போது இந்த 33% நிலம், அதாவது 51 இலட்சத்து 92 ஆயிரம் ஏக்கர் நிலம் வைத்திருக்கிற வெறும் 6 சதவிகிதம் பணக்கார விவசாயிகள் எந்தளவிற்கு கூட்டுறவு





அமைப்புக்கு, கூட்டுறவுத் துறைக்கு, கூட்டுறவுக் கொள்கைக்கு ஊறுவிளைவிக்கிறார்கள். என்பதைத் புரிந்துகொள்வதற்காகத் தான் இதைச் சுட்டிக்காட்டுகிறேன்.

கடன் என்பது வேறு. நாவலர் அவர்கள் தமது நிதிநிலை அறிக்கையில் சுட்டிக்காட்டியதுபோல் கஷ்டம் என்பது வேறு. கஷ்டப்படுகிற விவசாயிகளின் கடனை ரத்து செய்யவேண்டும் அல்லது தவணைமுறையில் கொடுத்துஅவர்களுக்கு வசதி செய்ய வேண்டுமென்றால் அதில் பொருள் இருக்கிறது. ஆனால் இரு பது ஏக்கர் நிலம் வைத்திருக்கிற விவசாயிகள் இருக்கிறார்கள். அதுமட்டுமல்ல. அவர்களுக்கு சினிமாத் தியேட்டர்கள் இருக் கின்றன. மற்ற தொழில்கள் இருக்கின்றன. அவர்கள் வசதி படைத்தவர்களாக இருக்கிறார்கள். வெளியே அவர்கள் அதிக வட்டிக்கு பணத்தைத் தந்து, தாங்கள் சம்பாதித்த பணத்தைக் வட்டிக்கு கொடுத்துவிட்டு கூட்டுறவு வங்கியில் குறைந்த வட்டி யில் கடன் கொடுப்பதால் அந்தப் பணத்தைப் பெற்று விவசாயக் காரியங்கள் செய்கிற அந்த விவசாயிகள் கூட்டுறவு கடனைத் திருப்பிக் கொடுக்காமலிருக்கிறபோது அவர்களை கஷ்டப்படுகிற விவசாயிகள் என்று சொல்லமுடியாது. டாட்டா, பிர்லா கூடத் தான் கடன் வாங்குகிறார்கள், அவர்கள் தொழிலுக்காக.

விவசாயிகளில் பலர் நல்ல நிலையில் உள்ளவர்கள் கூட கூட்டுறவுக் கடன் வட்டி குறைவாக இருக்கிற காரணத்தால் கடன் வாங்குகிறார்கள். அவர்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து கூட்டுறவுக் கடனை திருப்பித் தரமாட்டோம் என்று சொல்கிற போது அவர்களுக்கு பாதிப்பு ஏற்படவில்லை. ஏற்கனவே நான் சுட்டிக்காட்டியதுபோல் 'விவசாயத்தை அடுத்த வருட மும் அவர்கள் நடத்திவிடுகிறார்கள். கூட்டுறவுக் கடனில் இந்தளவு நிலுவை இந்தபோதிலும் உற்பத்தி குறையவில்லை. Fertiliser 'consumption is also not reduced அதற்குக் காரணம் என்ன என்பதை ஆய்ந்து பார்க்கவேண்டும். காரணம், பணம் படைத்தவர்கள், வசதிபடைத்த விவசாயிகள் எல்லாம் கூட்டுறவுக் கடன் கேட்காமலே கையில் இருக்கிற பணத்தைக் கொண்டு விவசாயத்தை நடத்திவிடுகிறார்கள். இறுதியில் பாதிக்கப்படுகிறவர்கள் சாதாரண பாட்டாளிகள், உழைக்கிற வர்க்கமாக ஐந்தாறு ஏக்கர்களுக்குக் குறைந்து நிலம் வைத் திருக்கிற சிறிய விவசாயிகள்தான் பாதிப்புக்கு உட்படுத்தப் படுகிறார்கள்.

[திரு. சி. பொன்னையன்] [1980 ஜூலை 14]

எனவேதான், கூட்டுறவுக் கடன்களை ரத்து செய்கிற விஷயத்தைப் பொறுத்தவரையில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடியாக நாங்கள் நிவாரணம் அளிப்போம் என்ற கொள்கையை ஏழைகள் நலன்கருதி புரட்சித்தலைவர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். மைய அரசுக்கு நாங்கள் ஏற்கனவே எழுதி இருக்கிறோம். பாதிக்கப்பட்ட சிறு விவசாயிகளின் கடன்களை ரத்து செய்யவேண்டுமென நாங்கள் முடிவெடுத்து உதவி கோட்டு மைய அரசுக்கு எழுதியிருக்கிறோம். பாதிக்கப்பட்ட சிறு விவசாயிகளுக்கு உதவி செய்வதில் எங்களுக்கு ஆட்சேபணையில்லைக ஆனால் விவசாயிகளுக்கு கடன் ரத்து என்ற போர்வையில் பணக்காரர்கள் பலன் அடையமுயல்கிறபோது எந்தளவிகு கிராமப் பொருளாதாரத்தை அது சீர்குலைக்கும் என்பதை மனதில்கொண்டு நாங்கள் இப்போது நடவடிக்கை எடுத்திருக்கின்றோம்.

[பிற்பகல் 1–50]

மாண்புமிகு மைய துணை அமைச்சர் திரு. பாரட் அவர்கள் கூட்டுறவுக் கடன்கள் முழுவதையும் ரத்து செய்வதென்பது கூட்டுறவு அமைப்பின் அடிப்படையையே சீர்குலைத்து விடும் என்று கூறியிருக்கிறார். அதைப்போலவே, திரு. ஐ. ஜி. படேல், ரிசர்வ் வங்கியினுடைய கவர்னர் அவர்கள் பேசுகின்ற போது, பாதிக்கப்படாத விவசாயிகள் வாங்கிய கடன்களை திருப்பித் தராத நிலைமையை ஏற்படுத்துவது பெரும் சிக்கலை உருவாக்கும் என்று எச்சரித்திருக்கிறார். அதே நேரத்தில் மைய நிதி அமைச்சர் மாண்புமிகு திரு. ஆர். வெங்கட்ராமன் அவர்கள் கூட்டுறவுக் கடன் முழுவதையும் ரத்து செய்கின்ற எண்ணம் மத்திய அரசுக்கு இல்லை என்று தெரிவித்திருக்கிறார்கள். இது விவசாயிகளுடைய முக்கியப் பிரச்சினை அல்ல என்று இந்த அரசு கருதவில்லை. இதிலே முக்கியப் பிரச்சினை என்னவென்றால், மற்ற மாநிலங்களை விட தமிழகத்தைப் பொறுத்தவரையில், நாம் பெரிதும் நிலத்தடி நீரையே ஜீவநாடியாக கருதுகின்ற காரணத்தினால், நமக்கு நிலத்தடி நீர் போதுமான அளவுக்கு இல்லாத காரணத்தினால், பல இடங்களில் விவசாயிகளுக்கு போதுமான தண்ணீர் கிடைப்பதற்காக அவர்களுடைய இந்தக் குறையைப் போக்குவதற்காக அரசு விவசாயத்துறையின் மூலமாக நிலத்தடி நீரை ஊக்குவிப்பதற்கு பெர்குலேஷன் பாயின்ட் மூலம் அடியிலே இருந்து, நிலத்தடியிலே இருந்து எடுக்கப்படுகின்ற நீர் மீண்டும் மீண்டும் செலுத்தப்பட வேண்டும் என்பதற்காக ஏரி, குளங்களை ஆழப்படுத்தி, அதற்காக நிதி ஒதுக்கப்பட்டு, அந்த அடிப்படையில் நிலத்தடி நீரைப் பெருக்குவதற்கு, கிராமத்திலுள்ள விவசாயப் பெருங்குடி மக்கள் இன்றியமையாத் தேவையான தண்ணீர் வசதியை செய்து தர நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறோம்,



1980 ஜூலை 14] [திரு. சி. பொன்னையன்]

அது மட்டுமல்ல. விவசாயிகளுக்கு அவர்கள் உற்பத்தி
செய்கின்ற பொருள்களுக்கு ஏற்ற ஊதியம் கிடைப்பதில்லை
என்ற குறை இருக்கிறது. அதை ஒத்துக் கொள்கிறேன்.
ஆனால், அந்த நிலை தமிழகத்திற்கு மட்டும் இல்லை. பாரதம்
தழுவிய அளவிலே பன்னெடும் காலமாக மைய அரசு மேற்
கொண்டிருக்கிற ஒரு மாறுபட்ட பொருளாதாரக் கொள்கையின்
காரணமாக இந்தப் பிரச்னை இருந்து வருகிறது. தமிழக
அரசைப் பொறுத்தவரைக்கும் இந்தப் பிரச்னையைத் தீர்ப்பதற்கு
உற்பத்தி செய்யும் விவசாயப் பொருள்களுக்கு, விவசாயப்
பெருங்குடி மக்களுக்கு நல்ல விலை கிடைக்க வேண்டும். அப்படி
நல்ல விலைக்கு விற்கின்றபோது அவர்களுக்கு பிரச்னை குறைந்து
விடுகிறது. ஆனால், தற்போது விவசாய விளை பொருள்களை
நல்ல விலைக்கு விற்க முடிவதில்லை. உற்பத்திக் காலத்தில்
இடைத் தரகர்கள், வியாபாரிகள், பெரும் வியாபாரிகள் விவசாயி
களிடமிருந்து குறைந்த விலைக்கு வாங்கி, அந்தப் பொருள்களை
பின்னர் அதிக விலைக்கு விற்று விடுகிறார்கள். இதனால்,
விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற பொருள்களுக்கு அவர்களுக்கும்
நல்ல விலை கிடைக்காமல், அதை வாங்கி நுகர்வோரின்
தலையிலே சுமத்தி, இந்த இடைத் தரகர்கள் பயனடைந்து
வருகிறார்கள். இந்தக் குறையைப் போக்க புரட்சித் தலைவர்
அவர்கள் அரசு கடுமையான நடவடிக்கைகளை எடுக்க முடிவு
செய்திருக்கிறது. உதாரணமாக, ஆங்காங்கே புரோடியூ
சர்களைக் கொண்ட விற்பனைச் சங்கங்களை பெருமளவில்
ஏற்படுத்தி உற்பத்தியாகின்ற பொருள்களை எல்லாம் உற்பத்தி
யாளர்களிடமிருந்து பெற்று, அந்தப் பொருள்களை இடைத் தர
கர்கள் கையில் சிக்காமல், கன்சியூமர்ஸ் கோவாபரேடிவ்ஸ் மூலம்
நுகர்வோர்களுக்கு கிடைக்கும்படி செய்தால், உற்பத்தியாளர்
களுக்கும் நல்ல விலை கிட்டும்; அதே நேரத்தில் அதை வாங்கி
நுகர்வோர்களுக்கும் நியாயமான விலைக்கு அந்தப் பொருள்கள்
கிடைக்கும். அந்த அடிப்படையிலே மார்க்கெட்டிங் பெடரேஷன்
மூலமாகவும், கன்சியூமர்ஸ் கோவாபரேடிவ் ஸ்சங்கங்கள் மூல
மாகவும் செய்கின்ற இந்தப் பணியை தீவிரப்படுத்த இந்த அரசு
முடிவு செய்திருக்கிறது. அதற்கென பிரத்தியேகமாக நடவடிக்
கைகளை மேற்கொள்ள பல திட்டங்களை வைத்திருக்கிறது.

கிராமப்புற மற்றும் நலிந்த மக்களின் மேம்பாட்டிற்காக
கூட்டுறவு அமைப்புகளின் மூலம் கீழ்க்கண்ட திட்டங்களை வரும்
ஆண்டில் இந்த அரசு மேற்கொள்ள இருக்கிறது:

1. 1980–81 ஆம் ஆண்டிற்கு பயிர்க் கடனாக, குறுகிய
கால கடனாக 120 கோடி ரூபாய் மத்திய கூட்டுறவு வங்கிகள்
மூலம் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

2. கறவை மாடுகள், உழவு மாடுகள், மாட்டு வண்டிகள்
வாங்குதல், ஆடு வளர்த்தல், கோழி வளர்த்தல் போன்றவற்
றிற்கும் மத்திய கால கடனாக ரூ. 12 கோடி மத்திய கூட்டுறவு

[திரு. சி. பொன்னையன்] [1980 ஜூலை 14]

வங்கிகள் மூலம் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. [illegible] போலவே, விவசாயிகளுடைய உபவருமானத்தை பெருக்கும் [illegible] முகந்தான்:

3. தென்னை, முந்திரி, திராட்சை, மா, [illegible] வற்றின் உற்பத்தி பெருக்கத்திற்கும், பட்டுப் பூச்சி வளர்த்தல், கோழிப் பண்ணை அமைத்தல், ஆட்டுப் பண்ணை, [illegible] மாடுகள், மீன் பிடித்தல், கிணறு வெட்டுதல் போன்றவற்றிற்கும் நீண்ட கால கடனாக நிலவள வங்கிகள் மூலம் 17 கோடி ரூபாய் வழங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

இன்னும் முக்கியமாக நலிந்த பிரிவினர், கிராமத்திலே இருக்கிற ஆதித் திராவிட அருந்ததி மக்கள், நலிவுற்ற ஏழை களுக்கு கறவை மாடுகள் வாங்கவும் அல்லது கோழிப் பண்ணை வைக்கவும் கடன் வாங்க வேண்டுமென்றால் அதற்கு [illegible] டரல் செக்யூரிட்டி' தேவை. அசையாச் சொத்து [illegible] அதிலிருந்து விடுதலை தந்து அரசு உத்தரவாதத்தில் [illegible] நிலவள வங்கிகள் கிராமத்தில் இருக்கும் நலிந்த பிரிவினருக்கு கோழிப் பண்ணை வைக்கவும், அதே போல் கறவை மாடுகள் வாங்கவும், ஆடு வளர்க்கவும் உதவிட வேண்டுமென்ற வகையிலே நடவடிக்கை எடுக்க அரசு திட்டமிட்டிருக்கிறது.

சென்ற ஆண்டு பொதுக் காப்பீட்டுக் கழகத்தின் (General Insurance Corporation of India) நிதி உதவியோடு 17 வட்டங்களில் பயிர்க் காப்புறுதித் திட்டத்தை (Crop Insurance Scheme) கொண்டு வந்த இந்த அரசு 20 வட்டங்களிலுள்ள 17 ஆயிரம் ஏக்கர் நிலத்தில், முதல் மற்றும் இரண்டாம் போக நெல் சாகுபடிக்கு 1 கோடி ரூபாய் அளவிற்கு பயிர்க் பாதுகாப்புறுதித் திட்டத்தை இந்த ஆண்டு நஷ்டமுறைப்படுத்த உள்ளது.

1975–76ல் கூட்டுறவு அமைப்புகளின் மூலம் 22 கோடி ரூபாய் மட்டுமே நலிந்த பிரிவினருக்கு நகைக்கடன் வழங்கப்பட்டு வந்தது. சாதாரண மக்கள், ஏழை மக்கள் அவசரத்திற்குக் கடன் வாங்க வேண்டுமென்றால் மார்வாடிகளிடம் செல்ல வேண்டியிருக்கிறது. பணம் படைத்த நிலச் சுவான்தார்களிடம் செல்ல வேண்டியிருக்கிறது. இந்த நிலையிலிருந்து அவர்களுக்கு விடுதலை தரும் வகையில் ஏற்கெனவே இந்த அரசு எடுத்த நடவடிக்கையின் அடிப்படையில் 1,581 கூட்டுறவு அமைப்புகளின் மூலம் 1979–80 ஆம் ஆண்டில் மட்டும் 111.42 கோடி ரூபாய் நகைக் கடனாக வழங்கப்பட்டிருக்கிறது. அந்த முறை இன்னும் பல பகுதிகளுக்கெல்லாம் விரிவாக்கப்பட, தாமதம் இல்லாமல் ாடன் கொடுக்க இந்த ஆண்டு மேற்கொண்டும் திட்டத்தை விரி வகக்க அரசு முடிவு செய்திருக்கிறது.



1980 ஜூலை 14] [திரு. சி. பொன்னையன்]

மாண்புமிகு உறுப்பினர்கள் பினாமிக் கடன் பற்றிக் கூறினார்கள். பினாமிக் கடன்கள் மற்றும் பிற ஒழுங்கீனங்களைத் தடுக்கும் பொருட்டு கூட்டுறவுத் துறையின் அமைப்புகளில் இருக்கும் உறுப்பினர்கள் அனைவருக்கும் பாஸ் புத்தகம் வழங்குகிற முறையும், பயிர்க் கடனில் பணப் பகுதியை நேரில் ரொக்கமாக வழங்குவதற்குப் பதிலாக உறுப்பினரின் சேமிப்புக் கணக்கில் வரவு வைக்கும் முறையும் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

கிராமத்தில், நகரத்தில் இருக்கும் நலிந்த, பிரிவினருக்கும், வேலை இல்லாதிருக்கும் படித்த இளைஞர்களுக்கும் சுய தொழில் துவக்க வழி செய்து தர வேண்டுமென்பது தமிழக அரசின் திட்டம். அது புரட்சித் தலைவரின் எண்ணமாக இருந்து கொண்டிருக்கிறது. அந்தத் திட்டத்தைக் கூட்டுறவுத் துறை மூலமாக நடைமுறைப்படுத்த தோல் பொருள் தயாரித்தல், கைக்குத்தலரிசி தயாரித்தல், ரொட்டி தயாரித்தல், எண்ணெய் எடுத்தல், பனை வெல்லம் தயாரித்தல், நாட்டுச் சர்க்கரை தயாரித்தல், பழங்கள், காய்கறிகளைப் பதப்படுத்துதல், பட்டுப் பூச்சி வளர்த்தல், கயிறு தயாரித்தல் போன்ற குடிசை மற்றும் சிறிய தொழில்களுக்கு நகர்ப்புற கூட்டுறவு வங்கிகள் மூலமும் மத்திய கூட்டுறவு வங்கிகள் மூலமும் கடன் வழங்கும் திட்டம் தீவிரப்படுத்தப்படும். இதுபோன்ற தொழில்களுக்கு ஏ.ஆர்.டி.சி. மூலம் உதவி பெற்று உதவிகள் செய்ய அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

இரசாயன உரங்கள், இன்றியமையாத நுகர் பொருட்கள் மற்றும் விவசாய விளை பொருட்களைச் சேமித்து வைப்பதற்கு இவ்வாண்டு 200 கிராம கிடங்குகளையும் 5 விற்பனைச் சங்க கிடங்குகளையும் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது.

காய்கறிகள், பழங்கள் பற்றிய பிரச்சினையில் --அவை உற்பத்தி செய்கிற விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைக்க வேண்டு மென்ற நோக்கோடும், வாங்கி உண்ணுகின்ற மக்களுக்கு நியாய விலையில் பொருட்கள் கிடைக்க வேண்டுமென்ற நோக்கோடும் அழுகு பொருட்களான பழங்கள், காய்கறிகள் போன்றவற்றை சேமித்து வைக்க 80 லட்சம் ரூபாய் செலவில் தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்தின் மூலம் நான்கு குளிர் சாதன சேமிப்புக் கிடங்குகள் வேலூரிலும் கோவையிலும், திண்டுக்கல்லிலும், சென்னையிலும் நிறுவ ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இது போன்ற நடவடிக்கைகள் இன்னும் பரவலாக்கப்பட அரசு ஏ.ஆர்.டி.சி. உதவி பெற நடவடிக்கை எடுத்து விவசாய விளை பொருட்களுக்கு நல்ல விலை கிடைக்கின்ற வகையில், விளை பொருட்களான எள், பருத்தி, ஏலக்காய், மிளகு, புளி, மஞ்சள், உளுந்து, பாசிப்பயறு, மிளகாய், நிலக்கடலை, வெல்லம், பாக்கு, கொத்தமல்லி, நெல், சோளம், கம்பு போன்றவற்றை எல்லாம்

[திரு. பி. பொன்னையன்] [1980 ஜூலை 14

மான்கான் அவர்களுக்கு இப்படிப்பட்ட தவறான தகவலை கொடுத்து இருக்கிறார்கள் என்று நான் கருதுகிறேன். அதைப் பற்றி மாண்புமிகு அமைச்சரிடம் நான் விளக்கம் கேட்டேன் அவர்களும் கூறியிருக்கிறார்கள். அதிகாரிகளும் அதைப்பற்றிய தகவல்களைத் தந்திருக்கிறார்கள். அவர்களுடைய அலுவலகத்தைப் பொறுத்தவரையில் அங்கே ஒரு பெரிய காம்பவுண்டுக்குள் இருக்கிறது. அங்கே பல அலுவலகங்கள் இருக்கின்றன அங்கு ஒரு பிரிவிலே இந்த இடம் வைக்கப்பட்டிருக்கிறது. இதற்கும் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. முத்துசாமி அவர்களுக்கும் சம்பந்தம் இல்லை என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய குற்றச்சாட்டிற்கு ஆதாரம் இல்லை என்பதையும் தெரிவித்துக்கொண்டு மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுத்திருக்கின்ற வெட்டுத்தீர்மானங்களையெல்லாம் திரும்பப்பெற்று, நான் மொழிந்திருக்கின்ற மானியக் கோரிக்கைகளையெல்லாம் நிறைவேற்றித் தருமாறு மாண்புமிகு தலைவர் அவர்களைக் கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

## கோரிக்கை எண். 13

திரு. சு. பாலன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று தோல்வியுற்றது.

திருவாளர்கள் இல. பலராமன், பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், செ. சிவசாமி, பொ. விஜயராகவன் ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப் பெற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

''மானியக் கோரிக்கை எண். 13 —நீதி நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 6,93,29,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.



1980 ஜூலை 14]

## கோரிக்கை எண். 14.

திருவாளர்கள் பெ. சு. திருவேங்கடம், இல. பலராமன் ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, தோல்வியுற்றன.

திருவாளர்கள் கு. ரமணி, பொ. உத்திராபதி, பொ. விஜயராகவன் ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப் பெற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி —

''மானியக் கோரிக்கை எண். 14 —சிறைச் சாலைகள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 5,80,51,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

## கோரிக்கை எண். 23.

திரு. சு. பாலன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, தோல்வியுற்றது.

திருவாளர்கள் உ. சுப்பிரமணியன், பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், பொ. உத்திராபதி, பொ. விஜயராகவன் ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி —

''மானியக் கோரிக்கை எண். 23 —கூட்டுறவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 8,86,98,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (15—7—1980) காலை 9 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 2—08 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

அதிக அளவில் வாங்கி விவசாயிகளுக்கு நியாயமான விலை
கிடைக்க தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்தில் 116
தொடக்கக் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் மூலம் நடவடிக்கை
மேற்கொள்ளப்பட்டுள்ளது. சென்ற ஆண்டு சுமார் 41.15
கோடி ரூபாய்க்கு விவசாயிகளிடமிருந்து விளை பொருட்களை,
விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைக்கிற வகையில் விற்பனை
செய்த இந்த அமைப்பு நடப்பு ஆண்டில் 50 கோடி ரூபாய்க்கு
மேல் கொள்முதல் செய்யத் திட்டமிட்டு விவசாயிகளுக்கு
உழைப்புக் கேற்ற ஊதியம், கிடைக்க, நல்ல விலை கிடைக்க
அரசு ஏற்பாடு செய்திருக்கிறது.

[பிற்பகல் 2—00]

அதைப் போலவே கூட்டுறவு விற்பனை இணையத்தின்
மூலமாக 75 லட்சம் ரூபாய்க்கு இங்கிலாந்திற்கும் 1 கோடியே
2 லட்சம் ரூபாய்க்கு சைனாவிற்கும் பருத்தியை ஏற்றுமதி செய்ய
கூட்டுறவு விற்பனை இணையம் நடவடிக்கையை மேற்கொள்ளும்.
அதைத் தொடர்ந்து இப்போது தமிழகத்திலே இருக்கின்ற
கூட்டுறவு நூல் உற்பத்தியாலைகளுக்கு வேண்டிய பஞ்சை
வெளியிலிருந்து வாங்குகிறார்கள். விவசாயிகளுக்கு அதனால்
நன்மை கிட்டவில்லை. எனவே விவசாயிகளிடமிருந்து கூட்டுறவு
விற்பனை சங்கங்கள் அந்தப் பருத்தியை அவர்களிடமிருந்து
வாங்கி அவர்களது ஜின்னிங் பேக்டரியில் பஞ்சாக்கி கூட்டுறவு
ஆலைகள் அனைத்துமே கூட்டுறவு விற்பனை நிலையங்களிலிருந்து
அந்த பஞ்சை வாங்க வேண்டுமென்ற முறையிலே இந்த ஆண்டி
லிருந்து அரசு நடவடிக்கை மேற்கொள்ள இருக்கிறது.

புதிதாக அமைக்கப்பட்டிருக்கிற பெரியார் மாவட்டத்திற்கு
தனியாக ஒரு மத்திய கூட்டுறவு வங்கி நிறுவனம் நிறுவ இந்த
ஆண்டு அரசு நடவடிக்கைகளை மேற் கொண்டுள்ளது.

அதைப்போலவே மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் தேர்தலை
உடனடியாக நடத்த வேண்டும். நடத்த வேண்டும் என்று
கூறினார்கள். கூட்டுறவு அமைப்புகளுக்கு தேர்தல் உடனடியாக
வர வேண்டுமென்பதில் இந்த அரசு அக்கறையோடு இருக்கிறது.
காரணம் கூட்டுறவு இயக்கத்தைப் பொறுத்தவரையில் 'கோவாப்
ரேடிவ் மூவ்மெண்ட் இஸ் ஆஃப் தி பீபிள், பை தி பீபிள் அன்ட்
பார் தி பீபிள்''. ஆனால் ''ஆப் தி பீபிள்'' என்றும் ''பார் தி
பீபிள் '' என்றும் இருக்கிற இந்த அமைப்புகள் தற்போது
தனி அதிகாரிகளால் நிர்வகிக்கப்படக் கூடிய நிலைமையை மாற்றி
'' பை தி பீபிள் '' என்ற நிலைமையைக் கொண்டு வருவதற்கு
நாங்கள் நடவடிக்கை எடுத்திருக்கிறோம். குறிப்பாக ஏற்கெனவே
இருக்கிற கூட்டுறவுச் சட்டத்தைப் பொறுத்தவரைக்கும் அதிலே
இருக்கின்ற சந்து பொந்துகளைப் பயன்படுத்தி எந்த





அளவுக்கு கூட்டுறவுத் துறையைப் பணக்காரர்கள் பயன்படுத்த
முடிந்தது என்பதையும் அரசியல்வாதிகள் சிலர் தவறு செய்ய
முயல்கிறபோதும் கூட்டுறவுச் சட்டத்திலே இருக்கிற சந்து
களைப் பயன்படுத்தி தவறுசெய்தார்கள் என்பதையும் இந்த
மாமன்றம் அறியும். எனவே இந்தக் குறைபாடுகளையெல்லாம்
களைகின்ற அளவுக்கு கூட்டுறவுச் சட்டத்தைத் திருத்த ஏற்
கெனவே நாம் ஒரு மசோதாவைக் கொண்டுவந்து செலக்ட்
கமிட்டிக்கு அனுப்பப்பட்டு, சட்டமன்றம் கலைக்கப்பட்ட
காரணத்தினால் அது காலாவதியாகிவிட்டது. இந்த கூட்டத்
தொடரிலேயே அந்தச் சட்டத்தை அரசு கொண்டுவரும். அந்தச்
சட்டம் ஈடேறிய பிறகு கூட்டுறவுத் துறைக்கு தேர்தலை விரை
விலே நடத்த நடவடிக்கையை அரசு எடுத்துக் கொள்ளும்,
மக்களால் இயக்கப்படுகிறபோதுதான் கூட்டுறவு அமைப்பு
அதனுடைய முழுப் பொலிவினையும் பெறும் என்ற
நம்பிக்கையோடு நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும்
என்று கூறி, மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துவைத்த எல்லா
கருத்துக்களுக்கும் நேரம் இல்லாத காரணத்தால் பதில் சொல்ல
வில்லை என்று கூறி ஆனாலும் அவர்களுடைய கருத்துக்களை
யெல்லாம் மனத்திலே கொண்டு தக்க நடவடிக்கை எடுப்பேன்
என்ற உறுதியினைச் சொல்லி . . . . . . . . . .

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, ஈரோடில் நேதாஜி வீதியில் இருக்கும் சிந்தாமணி
கூட்டுறவு அங்காடி முன்புறம் 20, 21, 22, 27 ஆகிய வார்டு
களுக்கு மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அலு
வலகத்தில் மாணிக்கம் தியேட்டர் அருகில் அஸ்கா விநியோகிக்
கப்படுகிறது என்று போடப்பட்டிருப்பதாக நான் ஏற்கனவே
ஒரு குற்றச்சாட்டைச் சொல்லியிருக்கிறேன். அது சம்பந்த
மாக என்னிடம் போட்டோஸ்டட் காப்பி இருக்கிறது, அதை
மாண்புமிகு அமைச்சரிடத்தில் கொடுத்து அதை விசாரிக்க வேண்டு
மென்று கேட்டுக்கொள்கிறேன். (அதைக் கொடுத்தார்).

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே
அதற்கு இப்போதே விளக்கம் தந்துவிடுகிறேன். மாண்புமிகு
உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் குற்றச்சாட்டுகள் என்ற
பெயரிலே சில தவறான தகவல்களைத் தந்திருக்கிறார்கள்.
ஈரோட்டில் சப்கலெக்டர் அலுவலகத்திலே உள்ள கட்டடத்
தில் சர்க்கரை விநியோகம் நடந்து வந்தது. அந்த இடத்தை
காலி செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டதால சிந்தாமணி அலுவல
கத்திற்கு அருகில் உள்ள இடத்திற்கு தற்காலிகமாக அந்த அலு
வலகம் மாற்றப்பட்டது. அந்த அலுவலகமும் போக்குவரத்துத்
துறை அமைச்சர் மாண்புமிகு திரு. முத்துசாமி அவர்களுடைய
சொந்த அலுவலகமும் அதே காம்பவுண்டுக்குள் இருக்கிற
காரணத்தினால் அரசியல் உணர்வோடு மாண்புமிகு திரு. ரகு

5. மாநகர மாஜிஸ்ட்டிரேட் நீதிமன்றங்கள்.

6. சார்நிலை குற்றவியல் நீதிமன்றங்கள் (தலைமை நீதித்துறை மாஜிஸ்ட்டிரேட் நீதிமன்றங்கள், முதல் வகுப்பு, இரண்டாம் வகுப்பு மாஜிஸ்ட்டிரேட் நீதிமன்றங்கள்.)

7. அரசுப் பொறுப்புச் சொத்தில் ஆட்சியர்-பொறுப்புச் சொத்தாட்சியர், சென்னை.

8. அரசுச் சட்ட ஆலோசகர்கள், வழக்குரைஞர்கள்.

9. சென்னை, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் தொழிலாளர் நீதிமன்றங்கள், சென்னை, தொழில் நடுவர்மன்றம்.

விற்பனை வரி, மேல்முறையீடு, நடுவர் மன்றம், மாநிலப் போக்குவரத்து மேல்முறையீடு நடுவர் மன்றங்கள், கூட்டுறவுச் சங்கங்களின் வழக்குகளுக்கான நடுவர் மன்றங்கள், தனியார் கல்லூரிகள் சட்டத்தின்படி செய்து கொள்ளப்படும் மேல்முறையீடுகளைக் கவனிக்கும் மேல் முறையீட்டு அதிகார மன்றம், போன்ற நடுவர் மன்றங்கள் அந்தந்தத் துறையின் நிதிக் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளன. அத்தகைய நடுவர் மன்றங்களின் செலவு தொடர்புடைய துறைக் கணக்குகளுக்கு பற்று எழுதத்தக்கதாகும்.

நீதி மன்றங்களின் அலுவலகங்களிடையே பின்வருவன வற்றைப் பற்றிய செலவு ''சாட்டிய செலவினம்'' என்றும் '' அனுமதிக்கப்பட்ட செலவினம்'' என்றும் வகைப்படுத்தப் பட்டுள்ளன.

| சாட்டியவை. | அனுமதிக்கப்பட்டவை. |
| --- | --- |
| 1. உயர்நீதி மன்றம் (நீதிபதிகள், பதிவாளர், அசல் தரப்பு, அப்பீல் தரப்புக் கொண்ட பணியாளர் அமைப்பு, மொழிபெயர்ப்பு, அச்சுத் துறை, சட்ட அறிக்கையாளர்கள், பணியாளரமைப்பு புதுச்சேரிக்கு அதிகார வரம்பை நீட்டித்தல் குறித்த தனி அலுவலர், ஷெரீப், உயர்நீதி மன்றம் சென்னை—பணியாளர்கள்). | 1. மாநகர சிவில் நீதி மன்றம் உட்பட சிவில், செஷன்ஸ் நீதி மன்றங்கள். |
| | 2. சிறு வழக்குகள் நீதி மன்றம், சென்னை. |
| | 3. மாநகர மாஜிஸ்ட்டிரேட் நீதிமன்றங்கள், சென்னை. |



| சாட்டியவை. | அனுமதிக்கப்பட்டவை. |
| --- | --- |
| 2. நொடித்தவர் சொத்தாட்சியர்—அவருடைய பணியாளரமைப்பு. | 4. சார்நிலை குற்றவியல் நீதிமன்றங்கள். |
| | 5. அரசுப் பொறுப்புச், சொத்தாட்சியர், சென்னை. |
| | 6. அரசுச் சட்ட ஆலோசகர்கள், வழக்குரைஞர்கள். |
| | 7. சென்னை, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் தொழிலாளர் நீதிமன்றங்கள் சென்னையில் தொழில் நடுவர் மன்றங்கள். |

## 1. சென்னை, உயர்நீதி மன்றம்.

உயர்நீதி மன்றம் இம்மாநிலத்தில் நீதி வழங்கும் தலைமையான நீதிமன்றமாகும். உயர் நீதிமன்றத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்ட மொத்த நீதிபதிகளின் எண்ணிக்கை 25 ஆகும். (21 நிரந்தர நீதிபதிகள், 4 கூடுதல் நீதிபதிகள்).

உரிமை வழக்குகளில் அசல் தரப்பு வழக்குகளையும், ரிட் வழக்குகளையும், உயர்நீதிமன்றம் விசாரணை செய்யும் அதிகாரம் பெற்றதாகும். உரிமை வழக்குகளிலும், குற்றவியல் வழக்குகளிலும் இதற்கு மேல்முறையீடு மனுக்களை விசாரணை செய்யும் அதிகாரம் உண்டு. அசல்தரப்பு வழக்கில் ரூ. 50,000க்கு மேற்பட்ட மதிப்பும் சென்னை மாநகருக்குள்ளேயே எழக்கூடியதுமான வழக்குகளை உயர்நீதிமன்றம் விசாரணை செய்கிறது. தலைமை நீதிபதி, நீதிபதிகளுக்கு பணி முறையைப் பிரித்து வழங்குகிறார். தலைமை நீதிபதி உட்பட 21 நீதிபதிகள் தற்போது உள்ளனர். திங்கள் ஒன்றுக்குத் தலைமை நீதிபதியின் ஊதியம் ரூ. 4,000 ஆகும். நீதிபதிகளின் ஊதியம் திங்கள் ஒன்றுக்கு ரூ. 3,500 ஆகும். நீதிபதிகளின் சம்பளம் அரசியலமைப்புச் சட்டத்தால் நிர்ணயிக்கப்படுகிறது. அவர்களின் பணிநிபந்தனைகள், உயர்நீதிமன்ற நீதிபதிகள் (பணி நிபந்தனைகள்) சட்டத்தால் முறைப்படுத்தப்படுகின்றன.

## 6. பேரவை முன்வைக்கப்பெற்ற ஏடுகள்.

### அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

எதுவுமில்லை.

### ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

*35. 1980–81 ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண்கள் 13, 14 மேலும் 23 ஆகியவற்றின் விரிவான மானியக் கோரிக்கைகள் (தமிழ், ஆங்கிலம்).

*36. 1980–81 ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண்கள் 6, 9, 10, 11, 15, மேலும் 16 ஆகியவற்றின் விரிவான மானியக் கோரிக்கைகள் (தமிழ், ஆங்கிலம்).

*37. 1980–81 ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண்கள் 20, 21, 22 மேலும் 48 ஆகியவற்றின் விரிவான மானியக் கோரிக்கைகள் (தமிழ், ஆங்கிலம்).

@38. கோரிக்கை எண். 23 —கூட்டுறவுத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1980–81 (தமிழ், ஆங்கிலம்).

@39. 1980–81 ஆம் ஆண்டில் செயல் திறன்-வரவு செலவுத் திட்டங்கள்-பள்ளிக் கல்வி, கல்லூரிக் கல்வி, தொழில் நுட்பக் கல்வி (ஆங்கிலம்).

---

*12-7-1980 அன்று பேரவைமுன் வைக்கப்பெற்றன.

@11-7-1980 அன்று உறுப்பினர்களுக்கு அனுப்பப்பெற்றன.



## இணைப்பு I.

[805ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

### மானியக்கோரிக்கை எண். 13

### நீதி நிர்வாகம்.

### 1980–81 ஆம் ஆண்டிற்கான சிறப்புக் கூறுகள்—கொள்கை விளக்கக் குறிப்பு.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் கண்டுள்ள கோட்பாடுகளுக்கிணங்க, குடிமக்கள் அனைவருக்கும், நீதி கிட்டுமாறு செய்வதே இவ்வரசின் கொள்கையாகும். நீதியை நிர்வகிப்பது நீதி மன்றங்களின் பொறுப்பாகும். அரசின் நிர்வாகப் பிரிவு செயற் பிரிவு ஆகியவற்றைச் சார்ந்து செயல்படாமல் தனித்துச் செயற்படுகின்றது. புதிதாக நீதிமன்றங்கள் அமைப்பது பற்றி உயர்நீதிமன்றம் பரிந்துரைப்பதன் மேல் காலத்தாழ்வின்றி அரசு ஒப்புதல் அளித்தும், நீதிமன்றங்களுக்குத் தேவையான இடவசதி உட்பட நீதி மன்றங்களுக்கான அனைத்து வசதிகளுக்கும் வகை செய்வதன் வாயிலாகவும் அரசு பயனுள்ள பணியாற்றுகிறது.

### நீதி நிர்வாகம் பற்றிய சிறப்புக் கூறுகள்.

13 ஆம் எண் கோரிக்கையும் "நீதி நிர்வாகம" [தொடர்பான மானியங்களும், இதன் கீழ் குறிப்பிடப்பட்ட நீதிமன்றங்கள், அதிகாரிகள் பணியாளரமைப்பு ஆகியவை குறித்த செலவைக் குறிப்பதாகும்:—

1. உயர்நீதிமன்றம், சென்னை.

2. தொடிந்தவர் சொத்தாட்சியர், (Official Assignee) உயர்நீதிமன்றம், சென்னை.

3. (சென்னை மாநகர சிவில் நீதிமன்றம் உட்பட) சிவில்-செஷன்ஸ் நீதிமன்றங்கள்.

4. சிறு வழக்கு நீதி மன்றங்கள், சென்னை.

பதிவாளர், உயர்நீதி மன்ற அலுவலகத்தின்
தலைவர் ஆவார். அவருக்குக் கூடுதல் பதிவாளர், நிர்வாகத்
துணைப் பதிவாளர், நீதிமன்றம் நியமித்த கணக்கு ஆய்வாளர், மேலாளர்,
வழக்குகளை வகைப்படுத்தும் தனி அதிகாரி, உதவிப் பதிவா
ளர்கள், துணை உதவிப் பதிவாளர்கள், முதலிய அதிகாரி
கள் உதவி புரிகின்றனர். உயர்நீதி மன்ற அலுவலகம்
பல பிரிவுகளைக் கொண்டது. நிர்வாகத் துறை, நூலகம்,
அசல் தரப்பு வழக்குப் பிரிவு, மேல் முறையீட்டு தரப்பு வழக்குப்
பிரிவு, நொடிப்பு நிலை வழக்குப் பிரிவு, தலைமை நீதிமன்றப்
பிரிவு, குற்றவியல் வழக்குப் பிரிவு, புதுச்சேரி பிரிவு, நீதி
மன்ற அதிகாரிகள் துறை, மேல்முறையீடுகள் பரிசிலனையாளர்
கள் பிரிவு, சுருக்கெழுத்தர் பிரிவு; மொழி பெயர்ப்பு—
அச்சுத் துறை, நகல் எடுப்போர் துறை, ஆவணப்பிரிவு,
ஆகியன ஆகும். புதுச்சேரி தொடர்பான வழக்கு விசாரணை
செய்யவும் உயர்நீதிமன்றம் அதிகாரம் பெற்றதாகும். புதுச்
சேரி தொடர்பான வழக்குகளை உயர்நீதி மன்றத்தில் கவனிக்
கும் அதிகாரி, பணியாளர்கள் ஆகியோர் குறித்த செலவை
முதற்கண் தமிழ்நாடு அரசு ஏற்றுக்கொண்டு பின்னர், புதுச்சேரி
அரசிடமிருந்து அத்தொகை வசூலிக்கப்படுகின்றது.

நீதி வழங்குவதோடு உயர் நீதிமன்றத்தின் பொறுப்புகள்
முடிவதில்லை. மாநில நிதித் துறையின் நிர்வாகக் கட்டுப்பாடு
முழுவதும் உயர்நீதி மன்றத்தின் பொறுப்பாகும்.

## 2. சட்ட அதிகாரிகள்.

மாநகரத்திலும் வெளியூரிலும் உள்ள சட்ட
அரசு சார்பில் உச்ச நீதிமன்றத்தில் வழக்காட அதிகாரிகள்
பெற்றுள்ள வழக்குறைஞர் ஆகியோர் குறித்த நியமிக்கப்
ஏற்க இத்தலைப்பின் கீழ் நிதி ஒதுக்கப்படுகிறது. செலவுகளை
குரைஞர் ஒருவரும், கூடுதல் அரசு வழக்குரைஞர் அரசு வழக்
சிவில் வழக்குக்கு அரசு வழக்குரைஞர்கள் (உரிமை இருவரும்,
ஐவரும், அரசு வழக்கு நடத்துநர் ஒருவரும், அரசு வழக்குகள்)
ஞர்கள் (குற்றவியல் வழக்குகள்) மூவரும் உயர்நீதி வழக்குரை
உள்ளனர். இவர்களைத் தவிர, மாநிலத் தலைமை மன்றத்தில்
ஞர், மாநகர அரசு வழக்குரைஞர், மாநகரக் கூடுதல் வழக்குரை
வழக்குரைஞர், மாநகர அரசு வழக்கு நடத்துநர், அரசு
கூடுதல் அரசு வழக்கு நடத்துநர் ஆகியோர் மாநகரச
சட்ட அலுவலர்களாவர். ஒவ்வொரு மாவட்டத்திலும் மாநிலத்திலுள்ள
வழக்குரைஞர் ஒருவரும் அரசு வழக்கு நடத்துநர் அரசு
உள்ளனர். மாநகரத்திலும் பிற இடங்களில் உள்ள ஒருவரும்
வழக்கு நடத்துநரும், உதவி வழக்கு நடத்துநர்களும் (நிலை I. II) அரசு
முறையான சம்பள நிலையில் உள்ள முழுநேர அரசுப் பணியாளர்



மாவட்ட முன்சீப் நீதிமன்றங்களிலும், துணை நீதி
களாவர். மாவட்ட முன்சீப் நீதிமன்றங்களிலும், துணை நீதி
மன்றங்களிலும் அரசுப் பணியை மேற்கொள்ளுவதற்காக வழக்
குரைஞர்கள் அவ்வப்போது நியமனம் செய்யப்படுகின்றனர்.
அனுமதிக்கப்பட்ட கட்டணம் மட்டுமே அவர்களுக்கு வழங்கப்
படுகிறது. வழக்குரைஞர் அமர்த்துகைக் கட்டணம் எதனையும்
அவர்கள் பெற இயலாது. சட்ட அதிகாரிகளுக்கு வழங்கப்படும்
அனுமதிக்கப்பட்ட கட்டணங்கள், தொடர்பான துறையின்
வரவு-செலவுத் திட்டத்தில் பற்று எழுதப்படுகின்றன.

சட்ட அதிகாரிகள் செய்த பணியின் அடிப்படையில் அனு
மதிக்கப்பட்ட கட்டணம் வழங்கப்படுகிறது. இக்கட்டணம்
அரசால் அல்லது துறைத் தலைவர்களால் அனுமதிக்கப்படுகிறது.

பல்வேறு அரசுத் துறைகள் சார்பில் சிவில் வழக்குகளைத்
தாக்கல் செய்வதற்காக நீதி மன்ற முத்திரைத்தாள் வாங்கும்
வகையில் கணிசமான தொகை செலவாகிறது. மேற்சொன்ன
செலவினம் தற்போதைக்கு "214. நீதி நிர்வாக—H. சட்ட
ஆலோசகர்கள் வழக்கறிஞர்கள்—AC. அரசு வழக்கு நடத்துநர்
கள்—04. அலுவலகச் செலவுகள்" என்பதன் கீழ் பற்று வைக்
கப்பட்டு வருகிறது. இச்செலவினத்தை அரசின் சார்பில் சிவில்
வழக்குகளை தாக்கல் செய்யுமாறு அரசு வழக்கு நடத்துநர்
களுக்கு உத்தரவிடுகின்ற சம்பந்தப்பட்ட துறைகளின் வரவு-
செலவுத் திட்ட மதிப்பீட்டில் பற்று எழுத முடிவு செய்யப்பட்டுள்
ளது.

1980–81-ம் ஆண்டில் "சட்ட அதிகாரிகள்" என்ற தலைப்
பின்கீழ் மொத்தச் செலவுத் தொகை 'ரூ. 18,01,000' என்று
மதிப்பிடப்பட்டுள்ளது.

## 3. அரசுப் பொறுப்புச் சொத்தாட்சியர்— பொறுப்புச் சொத் தாட்சியர், சென்னை.

சென்னை, அரசுப் பொறுப்புச் சொத்தாட்சியர்-பொறுப்பு
சொத்தாட்சியர் மாவட்ட நீதிபதி தரத்தில் உள்ள ஓர் அதிகாரி
யாவார். அவருக்கு உதவியாக துணை அரசுப் பொறுப்பு
சொத்தாட்சியர்—பொறுப்புச் சொத்தாட்சியர் ஒருவர் உள்
ளார். அவருடைய சம்பள விதம் ரூ. 750–50–1,350 ஆகும்.
தற்போது அப்பதவி வகிப்பவர் மாவட்ட முன்சீப் ஒருவர்.
இவ்விரு அதிகாரிகளும், மரணமடைந்தவர்களின் உரிய வய
தடையாப் பிள்ளைகளின் சொத்துக்கள்; எஸ்டேட்டுகள் ஆகிய
வற்றுக்குப் பொறுப்பாக உள்ளனர். அவர்கள், அரசு
பொறுப்பு சொத்தாட்சியர் சட்டத்திலும், பொறுப்பு சொத்
தாட்சியர் சட்டத்திலும் தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள கடமை
களை நிறைவேற்றி வருகின்றனர். இவ்வதிகாரிகளுக்குத்

7. சார்நிலை நீதிபதிகள்.

இம்மாநிலத்தில் 56 துணை நீதிமன்றங்கள் (நிலையானவை 40, தற்காலிகமானவை 16) உள்ளன. சார்நிலை நீதிபதி களுக்கு, அசல் தரப்பில் ( original side ) வழக்குகளை விசாரணை செய்ய வரையிலா அதிகார வரம்பு உண்டு. அவர் களுடைய அதிகார வரம்பு சிவில் நீதிமன்றங்கள் சட்டத்தில் விளக்கப்பட்டுள்ளது. துணை நீதிபதிகள் ரூ. 10,000 மதிப்பு வரை அந்தந்த நிலைவரை அதிகாரவரம்பிற்குள் செயல்படும் மாவட்ட முன்சீப்புகளின் தீர்ப்புகளுக்கு எதிராகச் செய்து கொள்ளப்படும் மேல் முறையீடுகள் விசாரணை செய்ய அதிகாரமுண்டு. துணை நீதிபதிகள். உதவி செஷன்ஸ் நீதி பதிகளுமாவார். மோட்டார் வண்டி விபத்துக்கள் உரிமை கோரிக் கை தொடர்பான வழக்குகளை விசாரணை செய்ய தலைமை யிடங்களிலுள்ள முதன்மைத் துணை நீதிபதிகளுக்கும் ஏனைய துணை நீதிபதிகளுக்கும் அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

8. மாவட்ட முன்சீப் நீதிமன்றங்கள்.

மாவட்ட முன்சீப் நீதிமன்றங்கள் 93 (நிலையானவை 87, தற்காலிகமானவை 6) உள்ளன. மாவட்ட முன்சீப் நீதி மன்றங்கள் ரூ. 5,000 வரை மதிப்பு முறை அதிகார வரம்பைச் செலுத்துகின்றன. மாவட்ட முன்சீப் நீதிமன்றங்களின் ரொக்க மதிப்பு அதிகாரவரம்பை ரூ. 10,000 வரை உயர்த்துவதற்காக உயர்நீதிமன்றம் அனுப்பிய செயற்குறிப்புகள் குறித்து அரசு பரிசீலித்து வருகிறது. மாவட்ட முன்சீப் நீதி மன்றம் ஒவ்வொன் றும் தனித்தனியாக வரையறுக்கப்பட்ட விசாரணை அதிகாரப் பகுதியைக் கொண்டுள்ளது. அவை ரூ. 500 வரை மதிப்புள்ள சிறுவழக்குகளையும் விசாரணை செய்கின்றன. அந்தந்த நீதி மன்றங்களுக்குரிய பகுதிகளில் வாடகைக் கட்டுப்பாட்டு அதிகார மன்றங்களாகவும் அவை செயல்படுகின்றன.

படி எடுப்போர், நீதிமன்றக்கட்டளைகளைச் சேர்ப்பிப் போர், ஆகியோர் உட்பட அனைத்து மாவட்ட நீதிமன்றங்கள், துணை நீதிமன்றங்கள், வெளியூரிலுள்ள மாவட்ட முன்சீப் நீதி மன்றங்கள் ஆகியவற்றைப் பொறுத்த மட்டில் 1980–81- ஆம் ஆண்டுக்குரிய செலவு ரூ. 3,42,62,000 ஆகும். இச்செல வில் அதிகாரிகளின் சம்பளம், படிகள், ஆகியவையும், தபால் செலவுகள், கட்டணங்கள், வரிகள், வாடகைகள், அலுவலகச் செலவுகள், புத்தகங்கள், குறிப்பிட்ட காலத்திற்கு ஒருமுறை வெளியிடப்படும் புத்தகங்கள், மின்சாரக் கட்டணங்கள், தொலை பேசிக் கட்டணங்கள், மேசை, நாற்காலிகள், செஷன்ஸ்



நீதிமன்றங்களுக்கு விசாரணைக்காக வரும் சாட்சிகளுக்கு வழங்கக்கூடிய உணவு, போக்குவரத்துச் செலவுகள் போன்ற சில்லறைச் செலவுகளும் அடங்கும்.

9. சென்னை, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய இடங்களி லுள்ள தொழிலாளர் நல நீதிமன்றங்கள்.

சென்னை, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் தொழிலாளர் நல நீதிமன்றங்கள் அய்ந்து (நிலையானவை 4, தற்காலிகமானவை 1) இயங்கி வருகின்றன. சென்னையில் தொழிற் தகராறுகள் நடுவர் மன்றம் ஒன்றும் உள்ளது. தொழி லாளர் நல நீதிமன்றங்கள், தொழில் தகராறுகள் நடுவர் மன்றம் ஆகியவற்றின் நீதிபதிகள், மாவட்ட நீதிபதிகள் பதவித் தரத்தில் உள்ளவர்களாவர். தொழிலாளர் நல நீதி மன்றங்கள் அரசால் குறிப்பிடப்படும் தொழில் தகராறுகளையும், தரப் பினரால் தாக்கல் செய்யப்படும் உரிமைக் கோரிக்கை மனுக் களையும் விசாரணை செய்து தீர்ப்பு வழங்குகின்றன. தொழி லாளர் நல நீதிமன்றங்கள், தொழில்தகராறுகள் நடுவர் மன்றம் ஆகியவற்றின் நீதிபதிகள் அனைவரும் தங்களது அதிகார வரம்புப் பகுதிகளில், தொழில் தகராறுகள் ஏற்படும் இடங் களுக்குச் சென்று, தொழில் தகராறுகளையும், உரிமைக் கோரிக்கை மனுக்களையும் விசாரணை செய்து தீர்ப்பு வழங்க முகாம் நீதிமன்றங்களை நடத்துவோராவர். தொழிலாளர் நல நீதிமன்றங்கள் குறித்த செலவு "மானியக் கோரிக்கை எண். 13 இன் 287ஏ தொழிலாளர் நலன்—வேலைவாய்ப்பு" என்ற தலைப்பின்கீழ் பற்றெழுதப்பட்டு வருகிறது.

தொழிலாளர் நல நீதிமன்றங்கள், சென்னை தொழிற் தக ராறுகள் நடுவர் மன்றம் ஆகியவற்றைப் பொறுத்த மட்டில் 1980–81-ஆம் ஆண்டிற்குரிய மொத்தச் செலவு ரூ. 5,26,000 என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

10. சென்னை, சிறு வழக்குகள் நீதிமன்றம்.

மாவட்ட நீதிபதி பதவித் தரத்திலுள்ள தலைமை நீதிபதி ஒருவர் இந்நீதிமன்றத்தின் நீதிபதியாகவுள்ளார். துணை நீதி பதிகள் பதவித்தரத்தில் 6 நீதிபதிகளும், மாவட்ட முன்சீப் பதவித்தரத்தில் 7 நீதிபதிகளும் (நிலையானவர்கள் 3 பேர், தற்காலிகமானவர்கள் 4 பேர்) உள்ளனர். மாவட்ட முன் சீப் பதவித்தரத்தில் பதிவாளர் ஒருவர் உள்ளார். அவர் [illegible] நிர்வாகத்திற்குப் பொறுப்பு [illegible] விசாரணைசெய்தல் [illegible] நிறைவேற்றும் மனுக்களை [illegible] கவனிக்கிறார். மாநகர் சிறு நீதிமன்ற அலுவல்களையும்

தொழில் நுட்ப முறையில் உதவி செய்வதற்காக ரூ. 600—30—750—35—890—40—1,050 என்ற சம்பள விகிதத்தில் உதவிப் பொறியாளர் பதவி ஒன்று உள்ளது.

1980–81-ல் இத்தலைப்பு தொடர்பாக ரூ. 3,20,000 செலவாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது.

## 4. மாநகர மாஜிஸ்ட்ரேட் நீதிமன்றங்கள்.

இம்மாநகரில் பெருநகர் தலைமை மாஜிஸ்ட்ரேட் நீதிமன்றம், கூடுதல் மாநகரத் தலைமை மாஜிஸ்ட்ரேட் நீதிமன்றம் உட்பட 21 மாநகர மாஜிஸ்ட்ரேட் நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன. மாநகரத் தலைமை மாஜிஸ்ட்ரேட் இரண்டாம் நிலை மாவட்ட நீதிபதி பதவித் தரத்தில் இருப்பவராவார். கூடுதல் மாநகரத் தலைமை மாஜிஸ்ட்ரேட் துணை நீதிபதி பதவி தரத்தில் இருப்பவராவார். இரண்டாவது மூன்றாவது, நான்காவது, பத்தாவது, பதினோராவது மாநகர மாஜிஸ்ட்ரேட்டுகள், துணை நீதிபதிகள் பதவித் தரத்தைச் சேர்ந்தவர்களாவர், ஏனைய மாநகர மாஜிஸ்ட்ரேட்டுகள் அனைவரும் மாவட்ட முன்சிப் பதவித் தரத்தைச் சேர்ந்தவர்களாவர். மாநகர மாஜிஸ்ட்ரேட்டுகள், சென்னை மாநகரில் உள்ள சம்மந்தப்பட்ட காவல் நிலையங்களின் ஆட்சி வரம்பில் அதிகாரம் செலுத்தி வருகின்றனர்.

சென்னை மாநகரில் உள்ள மேற்சொன்ன குற்றவியல் நீதிமன்றங்களுக்கு 1980—81-ம் ஆண்டில் ரூ. 31,80,000 செலவாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது. பயணச்சீட்டு இல்லாமல் பயணம் செய்பவர்களை விசாரித்து தண்டனை அளிப்பதற்கு எழும்பூர், சென்ட்ரல் இரயில் நிலையங்கள் ஒவ்வொன்றிலும், இரயில்வே, மாஜிஸ்ட்ரேட் நீதிமன்றம் உள்ளது. இது குறித்த செலவை முதற்கண் அரசு ஏற்று பின்னர் இரயில்வே துறையினரிடமிருந்து பெறுகிறது.

## 5. சென்னை, மாநகர சிவில் நீதிமன்றம்.

சென்னை, மாநகர சிவில் நீதிமன்றத்தில் 21 நீதிமன்ற அதிகாரிகள் (ஒன்பது மாவட்ட நீதிபதிகள், 12 துணை நீதிபதிகள்) செயல்பட்டு வருகின்றனர். நிர்வாகப் பொறுப்பினைக் கவனிக்கும்பொருட்டு மாவட்ட முன்சிப் பதவி தரத்தில் தனியே பதிவாளர் பதவி ஒன்று உள்ளது. மாநகர சிவில் நீதிமன்றத்தின் அதிகார வரம்பு, சென்னை மாநகர் முழுவதற்கும், பரந்து நிற்கும். மாநகர சிவில் நீதிமன்றம் ரூ. 50,000 வரையிலான சொத்து மதிப்பு முறை விவகாரங்களைக் கொண்ட வழக்குகளை



விசாரணை செய்யும் அதிகாரத்தைக் கொண்டுள்ளது. சென்னை மாநகர சிவில் நீதிமன்றத்தில் மதிப்பு முறை அதிகார வரம்பினை ரூ. 1,00,000 ஆக உயர்த்தும் உயர்நீதி மன்றத்தில் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது. சென்னைக் கோட்டத்தைப் பொறுத்த வரையில், மாநகர சிவில் நீதிமன்றம், செஷன்ஸ், நீதிமன்றமாகவும் செயல்பட்டு வருகிறது. சென்னை மாநகர சிவில் நீதிமன்றத்தில் மாவட்ட நீதிபதியின் பதவித் தரத்திலுள்ள நீதிபதிகளில் சிலருக்கு, குற்றவியல் சட்டத் திருத்தச் சட்டத்தின் கீழ் பட்டிகை வழக்குகளை விசாரிப்பதற்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

மாநகர சிவில் நீதிமன்றத்தைப் பொறுத்த மட்டில் 1980—81 ஆம் ஆண்டில் மொத்த செலவு ரூ. 19,61,000 என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

## 6. வெளியூரில் உள்ள சிவில் நீதி மன்றங்கள்.

இம்மாநிலத்தில் 15 மாவட்ட நீதிமன்றங்கள் உள்ளன. கோயம்புத்தூர், மதுரை, இராமநாதபுரம், மாவட்டங்களில் ஒவ்வொன்றும், திருநெல்வேலியில் இரண்டுமாக இம்மாநிலத்தில் கூடுதல் மாவட்ட நீதிமன்றங்களும், செஷன்ஸ் நீதிமன்றங்களும் உள்ளன. அண்மையில், தென் ஆற்காடு மாவட்டத்தில் கடலூரிலும், சேலம், திருச்சிராப்பள்ளி மாவட்டங்களிலும் கூடுதல் மாவட்ட செஷன்ஸ் நீதிமன்றம் அமைப்பதற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. மாவட்ட நீதிபதி, அந்தந்தக் கோட்டத்தின் செஷன்ஸ் நீதிபதியாகவும் இருப்பார். தொழிலாளர் அரசுக் காப்புறுதி நீதிமன்றம், எஸ்டேட் ஒழிப்பு நடுவர் மன்றம், மோட்டார் வண்டிகள் விபத்து உரிமைப் கோரிக்கை நடுவர் மன்றங்கள் போன்று குறிப்பிட்ட வகைத் தனிச் சட்டங்களின் கீழ் சிறப்பு நடுவர் மன்றங்களாகவும் செயல்படுகின்றன. மாவட்ட நீதிபதிகள், அவரவரது கோட்டங்களிலுள்ள சார் நிலை சிவில் நீதிமன்றங்களையும், நீதித்துறை தலைமை மாஜிஸ்ட்ரேட் நீதிமன்றத்தையும் ஆய்வு செய்கின்றனர். மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, ஆகிய மாவட்ட நீதிபதிகள், மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட மாவட்டங்களில் விசாரணை அதிகாரத்துடன் குற்றவியல் சட்டத் திருத்தச் சட்டத்தின்கீழ் வழக்குகளை விசாரணை செய்கின்ற சிறப்பு நீதிபதிகள் எனப் பெயரிடப்பட்டுள்ளனர்.

மன்றங்களை ஏற்படுத்த அரசு அனுமதி அளித்துள்ளது. இதற்
குரிய செலவு ''AE குற்றவியல் நீதிமன்றங்கள்'', என்ற தலைப்
பின்கீழ் பற்று எழுதப்பட்டதாகும்.

முப்பத்தி ஏழாம் ஆம் எண் மானியக் கோரிக்கையில் இது
வரை காட்டப்பட்டுள்ள அரசுக் கட்டிடங்கள் மீதான செலவு,
1979–80 ஆம் ஆண்டிலிருந்து சம்பந்தப்பட்ட துறைகளின்கீழ்
காட்டப்பட்டுள்ளது. உயர்நீதிமன்றக் கட்டிடங்களையும்,
உயர்நீதிமன்றக் கட்டிடங்கள் தவிர ஏனைய கட்டிடங்களையும்
பராமரிப்பதற்குரிய செலவு, 13 ஆம் எண் மானியக்
கோரிக்கையில் '' 259 பொதுப் பணிகள் '' என்ற கணக்குத்
தலைப்பின்கீழ் காட்டப்பட்டுள்ளது. 1980-81 ஆம் ஆண்டிற்
குரிய உத்தேசச் செலவு ரூ. 6,22,000 ஆகும்.

## பொது.

குறிப்பிட்ட ஓர் இடத்தில் பல நீதிமன்றங்கள் அமைக்கப்படு
வதைத் தவிர்க்கவும், தங்களுடைய வழக்குகளுக்காக
தலைமையிடங்களுக்குச் செல்வதில் தற்போது இடர்பாட்டை
அனுபவித்து வரும் வழக்காடும் பொது மக்களுக்குப் போதிய
நிவாரணம் அளிக்கவும் இயலும் வண்ணம், தலைமையிடங்களி
லுள்ள நீதிமன்றங்களைப் பரவலாக பல்வேறு இடங்களில்
அமைக்க வேண்டுமென்று அரசும், உயர்நீதிமன்றமும் கருது
கின்றன. சிவில்-குற்றவியல் நீதிமன்றங்களின் அதிகார எல்லைகள்
குறித்து மாநில அளவிலான ஆய்வை மேற்கொள்ள அரசால் நிய
மிக்கப்பட்ட அதிகாரிகள் குழு, தனது அறிக்கையை அளித்துள்ளது.
நீதிமன்றங்களின் அதிகாரவரம்பு குறித்த குழுவின் பரிவுரை
களை அரசு கொள்கையளவில் ஏற்றுக்கொண்டு, ஐந்தாண்டு கால
அளவில் படிப்படியாக நிறைவேற்றுவதென முடிவு செய்துள்ளது.

முதல்கட்டமாக, துணை நீதிமன்றங்கள் 8, மாவட்ட முன்சீப்
நீதிமன்றங்கள் 10 அடங்கிய சிவில் நீதிமன்றங்கள் தொடங்கு
வதற்கான தனி முன்னுரிமைப்பட்டியல் ஒன்றும், உட்கோட்ட
நீதித்துறை மாஜிஸ்டிரேட் நீதிமன்றம் 1, நீதித்துறை முதல்வகுப்பு
மாஜிஸ்டிரேட் நீதிமன்றஙகள் 2, நீதித்துறை இரண்டாம்வகுப்பு
மாஜிஸ்டிரேட் நீதிமன்றங்கள் 8 ஆகியவை அடங்கிய குற்ற
வியல் நீதிமன்றங்கள் தொடங்குவதற்கான தனி முன்னுரிமைப்
பட்டியல் ஒன்றும் அரசின் பரிசிலனைக்கு வந்தன.



முன்னுரிமைப்பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள நீதி மன்றங்
களில், திண்டிவனத்தில் ஒரு துணை நீதிமன்றம், நாமக்கல்லில் ஒரு
துணை நீதிமன்றம், செஞ்சியிலும், ராசிபுரத்திலும் மாவட்ட
முன்சீப் நீதிமன்றம் ஏற்படுத்த அரசு, 1978–79-ல் அனுமதி வழங்
கியது. 1979–80-ல் தென்காசியிலும், திருவள்ளூரிலும், பட்டுக்
கோட்டையிலும் துணை நீதிமன்றம் ஏற்படுத்த அனுமதி வழங்
கப்பட்டுள்ளது. முன்னுரிமைப்பட்டியலின் முதற்கட்டத்தில்
உள்ள கீழ்க்காணும் பதினொன்று குற்றவியல் நீதிமன்றங்களுக்
கும் 1979–80-ல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1 | நீதித் துறை முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட் நீதிமன்றம். | செங்கற்பட்டு. |
| 2 | நீதித்துறை முதல்வகுப்பு மாஜிஸ்டிரேட் நீதிமன்றம். | தர்மபுரி. |
| 3 | நீதித்துறை இரண்டாம் வகுப்பு மாஜிஸ்டிரேட் நீதிமன்றம். | துறையூர். |
| 4 | நீதித்துறை இரண்டாம் வகுப்பு மாஜிஸ்டிரேட் நீதிமன்றம். | பாலக்கோடு. |
| 5 | நீதித்துறை இரண்டாம் வகுப்பு மாஜிஸ்டிரேட் நீதிமன்றம். | ஸ்ரீவில்லிப்புத்தூர். |
| 6 | நீதித்துறை இரண்டாம் வகுப்பு மாஜிஸ்டிரேட் நீதிமன்றம். | விளாத்திகுளம். |
| 7 | நீதித்துறை இரண்டாம் வகுப்பு மாஜிஸ்டிரேட் நீதிமன்றம். | திண்டுக்கல். |
| 8 | நீதித்துறை இரண்டாம் வகுப்பு மாஜிஸ்டிரேட் நீதிமன்றம். | திருக்கழுக்குன்றம். |
| 9 | நீதித்துறை இரண்டாம் வகுப்பு மாஜிஸ்டிரேட் நீதிமன்றம். | உசிலம்பட்டி. |
| 10 | நீதித்துறை இரண்டாம் வகுப்பு மாஜிஸ்டிரேட் நீதிமன்றம். | அம்பத்தூர். |
| 11. | உட்கோட்ட நீதித்துறை மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றம். | பொன்னேரி. |

முன்னுரிமைப்பட்டியலில் முதற்கட்டத்தில் உள்ள எஞ்சிய
பதினொன்று சிவில் நீதிமன்றங்களுக்கு 1980–81-ல் அனுமதி
வழங்கக் கருதப்பட்டுள்ளது.

வழக்குகள் நீதிமன்றங்கள் சட்டத்தின்கீழ், தலைமை நீதிபதி
யும் II, III, IV ஆம் நீதிபதிகளும் சிறு வழக்குகளை விசாரணை
செய்து தீர்ப்பு வழங்கும் அதிகாரங்களைச் செலுத்தி வருகின்ற
னர். V ஆம் நீதிபதி, மோட்டார் ஊர்திகள் சட்டத்தின்கீழ்
வழக்குகளை விசாரணை செய்வதற்கென்றேவுள்ள நடுவர் மன்ற
மாகப் பணி புரிந்து வருகிறார். VI, VII ஆம் நீதிபதிகள்
வாடகைக் கட்டுப்பாட்டு வழக்குகளுக்குரிய (அண்மையில்
ஒப்புதல் அளிக்கப்பட்டது) மேல்முறையீட்டு நீதிமன்றங்களாகச்
செயல்பட்டு வருகின்றனர். VIII, IX, X, XI, XII, XIII,
XIV ஆம் நீதிபதிகள், சென்னை மாநகரத்திற்குரிய வாட
கைக் கட்டுப்பாட்டு அதிகாரிகளாகச் செயல்பட்டு வருகின்
றனர். தலைமை நீதிபதிக்கும், II, III, IV, VI, VII,
ஆம் நீதிபதிகளுக்கும், வாடகைக் கட்டுப்பாடு மேல் முறையீடு
களை விசாரணை செய்யும் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. சிறு
வழக்குகள் நீதிமன்றங்கள் குறித்து 1980–81 ஆம் ஆண்டில் ரூ.
14,51,000 செலவு ஏற்படும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.
திருச்சி முன்னாள் ஜமீன் எஸ்டேட்டுகள் இனாம் ஒழிப்பு நடு
வர் மன்றம் தொடர்பாக இழப்பீட்டுத் தொகையைப் பங்கிட்டு
அளிப்பதற்குரிய நடுவர் மன்றத்தைப் பொறுத்தவரையில் சிறு
துணைத் தலைப்பின்கீழ் ஏற்பட்ட ரூ. 41,000 செலவும்
மேற் சொன்ன தொகையில் அடங்கும்.

11. வெளியூர்களிலுள்ள குற்றவியல் நீதிமன்றங்கள்.

இம்மாநிலத்தில் நீதித்துறை தலைமை மாஜிஸ்டிரேட்டுகள் 14
பேர் செயல்பட்டு வருகின்றனர். தென் ஆர்க்காடு, தர்மபுரி,
திருநெல்வேலி ஆகிய இடங்கள் ஒவ்வொன்றிலும் ஒரு நீதி
மன்றம் என்ற வீதத்தில் நீதித்துறை கூடுதல் தலைமை மாஜிஸ்
டிரேட் நீதிமன்றங்கள் உள்ளன. இவற்றில் துணை நீதிபதிகள்
பதவித் தரத்திலுள்ளவர்கள் நீதிபதிகளாக உள்ளனர். நீதித்
துறைத் தலைமை மாஜிஸ்டிரேட்டுகள், தங்களது மாவட்டங்
களிலுள்ள குற்றவியல் துணை நீதிமன்றங்களை ஆய்வு செய்
கின்றனர்: அவர்களுக்குத் திங்கள் ஒன்றுக்கு ரூ. 50 தனிச் சம்
பளம் வழங்கப்படுகிறது. நீதித்துறை தலைமை மாஜிஸ்டிரேட்
டுகள் தங்களது நிர்வாகப் பணிகளைக் கவனிப்பதோடு, 1973
ஆம் ஆண்டு குற்றவியல் நடைமுறைச் சட்டக் கோவையின் விதித்
துறைகளின் கீழ் மாவட்ட, செஷன்ஸ் நீதிபதிகளிடம் செய்து
கொள்ளப்படும் மேல் முறையீடுகள், இவர்களால், நீதித்துறைத்
தலைமை மாஜிஸ்டிரேட்டுகளுக்கு அனுப்பி வைக்கப்படுவதன்
பேரில் அவற்றை விசாரணை செய்து தீர்ப்பு வழங்கும் பணியை
யும் நீதித் துறை தலைமை மாஜிஸ்டிரேட்டுகள் கவனிக்க மேற்
சொன்ன சட்டக் கோவையின்கீழ் அதிகாரம் அளிக்கப்பட்டுள்
ளனர்.



துணைக் கோட்ட நீதித்துறை மாஜிஸ்டிரேட்டுகள் 18 பேரும், மாவட்ட முன்சீப்—துணைக் கோட்ட நீதித்துறை மாஜிஸ்டிரேட்டுகள் 7 பேரும், மாவட்ட முன்சீப் நீதித்துறை முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட் ஒருவரும் உள்ளனர். அவர்கள் மாவட்ட முன்சீப் பதவி தரத்தில் உள்ளனர். அவர்கள் முதல் வகுப்பு அதிகாரங்களைச் செலுத்துகின்றனர். ஆனால் நீதித் துறை இரண்டாம் வகுப்பு மாஜிஸ்டிரேட்டுகள் வழங்கும் தீர்ப்புகளுக்கெதிராகச் செய்துகொள்ளப்படும் மேல்முறையீடுகளை விசாரணை செய்யும் அதிகாரம் அவர்களுக்கு இல்லை. நீதித்துறை முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட்டுகள் 24 பேர் உள்ளனர். அவர்கள் முதல் வகுப்பு வழக்குகளை முடிவு செய்வதில் நீதித் துறைத் தலைமை மாஜிஸ்டிரேட்டுகளுக்கு உதவி செய்வதற்குரியவர்களாவர்.

நீதித்துறை இரண்டாம் வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டுகள் 135 பேர் உள்ளனர். இந்த மாஜிஸ்டிரேட்டுகள், 1973 ஆம் ஆண்டு குற்றவியல் நடைமுறைச் சட்டக் கோவையின் முதலாம் விவர அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, அவர்களுக்குரிய அதிகார எல்லைக்குள் தாக்கல் செய்யப்படும் புகார்கள், வழக்குகள் ஆகியவற்றை விசாரணை செய்து, முடிவு செய்கின்றனர்.

வெளியூர்களிலுள்ள குற்றவியல் நீதிமன்றங்கள் அனைத்திற்கும் 1980–81 ஆம் ஆண்டில் ரூபாய் 1,95,41,000 செலவு ஏற்படும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. மேற்கூறிய செலவில், I, II ஆம் பதவித் தரத்திலுள்ள அரசு வழக்கு உதவி நடத்துநர்களுக்குரிய சம்பளமும், படிகளும் அடங்கும். எனினும் அவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவர்களின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் செயல்படுகின்றனர். இது தவிர, பயணச்சீட்டு இன்றி பயணம் செய்வது முதலிய குற்றங்களை விசாரணை செய்ய வட ஆற்காடு, தென் ஆற்காடு, கோயம்புத்தூர், மதுரை, சேலம், தஞ்சாவூர், திருச்சி, திருநெல்வேலி ஆகிய இடங்களில் இரயில்வே மாஜிஸ்டிரேட்டு நீதிமன்றங்களும் உள்ளன. இரயில்வே மாஜிஸ்ட்டிரேட் நீதிமன்றங்களுக்குரிய செலவு தொடக்கத்தில் மாநில அரசால் செய்யப்படுகிறது. பின்னர் சென்னை, கணக்குத்துறைத் தலைவர் மூலமாக இரயில்வேத் துறையிடமிருந்து வசூலிக்கப்படுகிறது.

வணிகக் குற்றம் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த வழக்குகளை விசாரணை செய்வதற்காக மதுரை, கோயம்புத்தூர், திருநெல்வேலி ஆகிய இடங்கள் ஒவ்வொன்றிலும் ஒரு நீதிமன்றம் என்ற வீதத்தில் நீதித்துறை முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட் தனி நீதி

பெரியார் மாவட்டத்தில் ஈரோட்டில் நீதித்துறை தலைமை
மாஜிஸ்டிரேட் நீதிமன்றத்திற்கு 1979–80-ல் அரசு அனுமதி
வழங்கியது. சிவில் நீதிமன்றங்களில் முடிவுறாமல் உள்ள
வழக்குகளின் எண்ணிக்கையைக் குறைக்க, கீழ்க்காணும்
பதின்மூன்று கூடுதல் சிவில் நீதிமன்றங்களுக்கு 1979–80-ல் அரசு
அனுமதி வழங்கியுள்ளது.

1. கூடுதல் துணை நீதிமன்றம், ஈரோடு.

2. கூடுதல் துணை நீதிமன்றம், தூத்துக்குடி.

3. கூடுதல் துணை நீதிமன்றம், கோயம்புத்தூர்.

4. கூடுதல் துணை நீதிமன்றம், இராமநாதபுரம் (தலைமை
யிடம் மதுரை).

5. கூடுதல் மாவட்ட முன்சீப் நீதிமன்றம், திண்டுக்கல்.

6. கூடுதல் மாவட்ட முன்சீப் நீதிமன்றம், திருப்பத்தூர்.

7. கூடுதல் மாவட்ட முன்சீப் நீதிமன்றம், ஸ்ரீவில்லிப்புத்தூர்.

8. கூடுதல் மாவட்ட முன்சீப் நீதிமன்றம், சாத்தூர்.

9. கூடுதல் மாவட்ட முன்சீப் நீதிமன்றம், ஆரணி.

10. கூடுதல் மாவட்ட முன்சீப் நீதிமன்றம், கோபிசெட்டி
பாளையம்.

11. கூடுதல் மாவட்ட முன்சீப் நீதிமன்றம், திருவண்ணா
மலை.

12. வீட்டு வாடகை மேல்முறையீடு வழக்குகளை விசாரிக்க
சென்னையில் சிறு வழக்கு கூடுதல் நீதிமன்றங்கள் இரண்டினைத்
தற்காலிகமாக ஏற்படுத்துதல்.

நீதித்துறை இரண்டாம் வகுப்பு மாஜிஸ்டிரேட் பதவிகள்
முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட் பதவிகளாக நிலை
உயர்த்தப்பட்டு, மாவட்ட முன்சீப் பதவித்தரத்துடன்
ஒருங்கிணைக்கப்படலாமென அரசு ஆணையிட்டுள்ளது.
குற்றவியல் மாஜிஸ்டிரேட்டுகள், சிவில் நீதிபதிகள் ஆகிய இரு
வகையினரும் மாவட்ட செஷன்ஸ் நீதிபதிகளாகப் பதவி உயர்வு
பெறுகின்ற காலத்தில், அவர்கள் நீதித்துறையின் பல்வேறு பிரிவு
களையும் சேர்ந்த பணிகளை மிக நன்றாக அறிந்திருக்கச் செய்ய



வேண்டி, மாஜிஸ்டிரேட்டுகள், சிவில் வழக்குகள் குறித்து
அனுபவம் பெறவும் சிவில் நீதிபதிகள் குற்ற வழக்கு விசாரணை
கள் பற்றி அனுபவம் பெறவும் உதவ இத்திட்டம் வகுக்கப்
பட்டுள்ளது. மேற்சொன்ன ஆணையைச் செயல்படுத்த சட்டம்
இயற்றப்பட வேண்டும். நடப்புக் கூட்டத் தொடரிலேயே இது
குறித்துச் சட்டமியற்றக் கருதப்பட்டுள்ளது.

நீதித்துறை தொடர்பான இன்னொரு முக்கியமான அம்சம்
என்னவெனில், உயர்நீதிமன்றமும் சார்நிலை குற்றவியல் நீதி
மன்றங்களும் அசல் மேல் முறையீட்டு வழக்குகளின் மூலம்
"நீதி நிர்வாகம்" என்னும் தலைப்பின்கீழ் வருவாயைப்
பெறுவதே ஆகும். நீதி நிர்வாகம் என்னும் தலைப்பின் கீழ்
வருகின்ற வருவாயைக் கருத்திற் கொண்டு பார்த்தால் இதற்கு
ஏற்படக்கூடிய செலவினம் நீதித்துறை வரவினங்களிலிருந்தே
சரிக்கட்டப்படும்.

[1980 ஜூலை 14

" 65 A நீதி நிர்வாகம் ", " 030 B முத்திரைத்தாள்கள் கொடுத்தல் " என்னும் தலைப்பின்கீழ், 1976--77, 1977–78, " 214A நீதி நிர்வாகம் " என்னும் தலைப்பின்கீழ் மேற்சொன்ன கொடுக்கப்பட்டுள்ளது.

| | ஆண்டு கணக்குகள். 1976–77 (1) | 1977–78 (2) | 1978–79 (3) | 1979–80-ம் ஆண்டு வரவு செலவுத்திட்ட மதிப்பீடு. 1979–80 (4) | 1980–81-ம் ஆண்டு வரவு செலவுத்திட்ட மதிப்பீடு. 1980–81 (5) |
|---|---|---|---|---|---|
| | | | (ரூபாய் | இலட்சத்தில்.) | |
| வரவு — | | | | | |
| 065 A நீதிநிர்வாகம் .. | 380.40 | 314.14 | 304.68 | 383.71 | 319.07 |
| 030 B முத்திரைத்தாள்கள் நீதித்துறை. | 307.29 | 371.07 | 505.36 | 530.46 | 626.27 |
| மொத்தம் .. | 687.69 | 685.21 | 810.04 | 914.17 | 945.34 |
| செலவு — | | | | | |
| 214. நீதிநிர்வாகம் .. | 510.83 | 541.52 | 607.41 | 652.02 | 730.83 |
| மொத்தம் .. | 510.83 | 541.52 | 607.41 | 652.02 | 730.83 |

1976–77, 1977–78, 1978–79 ஆகிய ஆண்டுகளில் வரவினம் மேற்சொன்ன அட்டவணையிலிருந்து தெளிவாகிறது. நீதித் அந்த ஆண்டுகளில் கிடைக்கின்ற வருவாய்க்குள் இருக்கும்.

ஏழை எளியவர்களுக்குச் சட்ட ஆலோசனை உதவியளிக்கும் அமைத்துள்ளதோடு, சென்னை மாநகரிலும் மாவட்டங்களிலும் குழுக்களையும் அமைத்துள்ளது. 1980–81-ல் இக்குழுவிற்கு

சென்னை உயர்நீதிமன்றத்திலும், சார்நிலை நீதிமன்றங்களி ஆகிய மூன்றாண்டுகளில் தொடரப்பட்ட, முடிக்கப்பட்ட, முடிக்கப் கொடுக்கப்பட்டுள்ளது.



1980 ஜூலை 14]

நீதித்துறை நீதிமன்றக் கட்டணங்கள் முத்திரைத்தாள்கள் வடிவில் 1978–79, 1979–80, 1980–81 ஆகிய ஆண்டுகளுக்கான வரவு, ஆண்டுகளுக்கான செலவு குறித்த விவர அட்டவணை கீழே

களுக்குள் அவ்வாண்டுகளுக்குரிய செலவினம் அடங்கியிருப்பது துறையில் 1979–80, 1980–81 ஆம் ஆண்டுகளுக்கான செலவு

நோக்குடன், தமிழ்நாடு சட்ட உதவி ஆலோசனைக்குழுவை அரசு சட்ட உதவி அறிவுரை ஆலோசனை நிலையங்களையும் மாவட்ட மானியமாக வழங்க ரூ. 10,00,000 ஒதுக்கப்பட்டுள்ளது.

லும் (சிவில் குற்றவியல் ஆகிய இரண்டும்) 1977, 1978, 1979 பெறாமல் நிலுவையிலுள்ள வழக்குகளின் விவரம் இணைப்பில்

[1980 ஜூலை 14

1977, 1978, 1979 ஆகிய மூன்றாண்டுகளில் சென்னை உயர்நீதி மன்றத்திலும் சார்நிலை நீதிமன்றங்களிலும் (சிவில்) தொடரப்பட்ட, முடிக்கப்பட்ட, முடிவுறாமலுள்ள வழக்குகள் குறித்த விவர அட்டவணை.

| நீதிமன்றங்கள். | 1977 இவ்வாண்டில் தொடரப்பட்ட வழக்குகள். | 1977 இவ்வாண்டில் முடிக்கப்பட்ட வழக்குகள். | 1977 இவ்வாண்டு இறுதியில் முடிவுறாமலுள்ள வழக்குகள். | 1978 இவ்வாண்டில் தொடரப்பட்ட வழக்குகள். | 1978 இவ்வாண்டில் முடிக்கப்பட்ட வழக்குகள். | 1978 இவ்வாண்டில் இறுதியில் முடிவுறாமலுள்ள வழக்குகள். | 1979 இவ்வாண்டில் தொடரப்பட்ட வழக்குகள். | 1979 இவ்வாண்டில் முடிக்கப்பட வேண்டிய வழக்குகள். | 1979 இவ்வாண்டில் முடிக்கப்பட்ட வழக்குகள். | 1979 இவ்வாண்டின் இறுதியில் முடிவுறாமலுள்ள வழக்குகள். |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) |
| **உயர்நீதி மன்றம்.** | | | | | | | | | | |
| 1. அசல் வழக்கு மேல் முறையீடு .. .. .. | 1,130 | 1,570 | 3,390 | 1,146 | 1,036 | 3,500 | 1,246 | 4,746 | 892 | 3,854 |
| 2. அசல் வழக்குப்பிரிவு மேல் முறையீடு .. .. | 133 | 184 | 154 | 141 | 140 | 155 | 129 | 284 | 76 | 208 |
| 3. இரண்டாம் மேல் முறையீடுகள் .. .. .. | 2,677 | 2,355 | 6,137 | 2,404 | 3,349 | 5,192 | 2,184 | 7,376 | 2,851 | 4,525 |
| 4. சிவில் பல்வகை மேல் முறையீடுகள் .. .. .. | 822 | 264 | 1,712 | 603 | 983 | 1,332 | 593 | 1,925 | 839 | 1,086 |
| 5. சிவில் பல்வகை இரண்டாம் மேல் முறையீடுகள் .. | 85 | 92 | 320 | 38 | 273 | 85 | 37 | 122 | 98 | 24 |
| 6. லெட்டர் பேட்டன்ட் குறித்த மேல் முறையீடுகள் .. .. .. | 66 | 47 | 175 | 123 | 106 | 192 | 153 | 345 | 162 | 183 |
| 7. ரிட் மனுக்கள் .. .. | 4,636 | 4,526 | 8,121 | 5,099 | 5,357 | 7,863 | 6,731 | 14,594 | 5,699 | 8,895 |
| 8. ரிட் மேல் முறையீடுகள் .. | 603 | 232 | 734 | 599 | 445 | 888 | 711 | 1,599 | 659 | 940 |
| 9. தனி நடுவர் மன்ற மேல் முறையீடுகள் .. .. | 415 | 44 | 1,182 | 340 | 691 | 831 | 130 | 961 | 10 | 951 |
| **மாநகர் சிவில் நீதிமன்றம்.** | | | | | | | | | | |
| சிவில் வழக்குகள் .. .. | 10,888 | 10,118 | 16,775 | 11,360 | 9,331 | 18,804 | 10,599 | 29,403 | 10,802 | 18,601 |
| பல்வகை வழக்குகள் .. .. | 31,568 | 31,740 | 20,595 | 26,749 | 27,089 | 20,255 | 27,118 | 47,373 | 24,246 | 23,127 |
| முறையாகச் செய்யப்படும் மேல் முறையீடுகள் .. | 427 | 263 | 545 | 370 | 399 | 516 | 642 | 1,158 | 891 | 267 |
| பல்வகை மேல் முறையீடுகள் | 275 | 217 | 216 | 258 | 239 | 235 | 361 | 596 | 376 | 220 |
| நிறைவேற்றல் நடவடிக்கைகள் | 2,765 | 3,808 | 1,340 | 3,551 | 2,980 | 1,911 | 3,132 | 5,043 | 2,706 | 2,337 |

1977, 1978, 1979 ஆகிய மூன்றாண்டுகளில் சென்னை மாநகர நீதி மன்றத்திலும் சார்நிலை நீதிமன்றங்களிலும் (சிவில்) தொடரப்பட்ட, முடிக்கப்பட்ட, முடிவுறாமலுள்ள வழக்குகள் குறித்த விவர அட்டவணை.

| நீதிமன்றங்கள். | 1977 | | | 1978 | | | 1979 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | இவ்வாண்டில் தொடரப்பட்ட வழக்குகள். | இவ்வாண்டில் முடிக்கப்பட்ட வழக்குகள். | இவ்வாண்டின் இறுதியில் முடிவுறாமலுள்ள வழக்குகள். | இவ்வாண்டில் தொடரப்பட்ட வழக்குகள் | இவ்வாண்டில் முடிக்கப்பட்ட வழக்குகள். | இவ்வாண்டில் இறுதியில் முடிவுறாமலுள்ள வழக்குகள். | இவ்வாண்டில் தொடரப்பட்ட வழக்குகள். | முடிக்கப்பட வேண்டிய வழக்குகள். | இவ்வாண்டில் முடிக்கப்பட்ட வழக்குகள். | இவ்வாண்டு இறுதியில் முடிவுறாமலுள்ள வழக்குகள். |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (8) | (10) | (11) |
| சிறு வழக்கு நீதிமன்றம்.— | | | | | | | | | | |
| சிவில் வழக்குகள் .. .. | 5,216 | 4,882 | 3,488 | 4,566 | 4,703 | 3,351 | 5,232 | 8,583 | 5,441 | 3,142 |
| பல்வகை வழக்குகள் .. .. | 11,918 | 12,003 | 3,991 | 12,354 | 13,452 | 2,893 | 11,276 | 14,169 | 11,368 | 2,801 |
| நிறைவேற்றல் மனுக்கள் .. | 1,180 | 1,285 | 389 | 1,368 | 1,274 | 483 | 1,465 | 1,948 | 1,493 | 455 |
| மாவட்ட நீதிமன்றம்.— | | | | | | | | | | |
| சிவில் வழக்குகள் .. .. | 745 | 1,248 | 185 | 1,090 | 1,085 | 190 | 1,377 | 1,567 | 1,393 | 174 |
| மேல் முறையீடுகள் .. | 4,864 | 5,474 | 2,894 | 4,827 | 5,167 | 2,554 | 4,246 | 6,800 | 4,354 | 2,446 |
| பல்வகை மேல் முறையீடுகள் | 1,755 | 1,746 | 1,522 | 1,698 | 2,258 | 962 | 1,317 | 2,279 | 1,429 | 850 |
| பல்வகை வழக்குகள் .. .. | 24,948 | 24,460 | 4,968 | 26,999 | 27,925 | 4,042 | 26,104 | 30,146 | 25,872 | 4,274 |
| நிறைவேற்றல் மனுக்கள் .. | 125 | 250 | 52 | 149 | 128 | 73 | 183 | 256 | 195 | 61 |
| நொடிப்பு நிலை குறித்த மனு | 6 | 15 | .. | 3 | 2 | 1 | 3 | 4 | 4 | .. |
| துணை நீதிமன்றம்.— | | | | | | | | | | |
| சிவில் வழக்குகள் .. .. | 9,400 | 8,070 | 17,882 | 17,403 | 12,509 | 22,776 | 28,433 | 51,209 | 22,915 | 28,294 |
| பல்வகை வழக்குகள் .. .. | 92,024 | 90,785 | 20,951 | 110,321 | 106,835 | 24,437 | 128,033 | 152,470 | 123,298 | 29,172 |
| மேல் முறையீடுகள் .. | 2,555 | 2,702 | 6,732 | 2,888 | 3,408 | 6,212 | 5,609 | 11,821 | 6,508 | 5,313 |
| பல்வகை மேல் முறையீடுகள் | 2,210 | 1,651 | 2,607 | 2,856 | 2,815 | 2,648 | 3,321 | 5,969 | 2,858 | 3,111 |
| நிறைவேற்றல் மனு .. | 5,665 | 5,150 | 4,080 | 6,823 | 5,926 | 4,977 | 9,951 | 14,928 | 8,059 | 6,869 |
| தொடிப்பு நிலை குறித்த மனு | 501 | 402 | 558 | 441 | 467 | 532 | 501 | 1,133 | 527 | 606 |
| மாவட்ட முன்சிப் நீதி மன்றம்.— | | | | | | | | | | |
| சிவில் வழக்குகள் .. .. | 39,433 | 39,023 | 63,680 | 100,652 | 77,113 | 87,219 | 151,631 | 238,850 | 124,935 | 113,913 |
| பல்வகை வழக்குகள் .. .. | 172,683 | 171,668 | 15,991 | 233,568 | 218,739 | 50,820 | 285,473 | 336,293 | 275,832 | 60,461 |
| நிறைவேற்றல் மனு .. | 23,308 | 22,502 | 11,366 | 26,860 | 24,184 | 14,042 | 51,754 | 65,796 | 37,028 | 28,785 |
| தொடிப்பு நிலை மனு ... | 36 | 34 | 20 | 29 | 40 | 19 | 75 | 94 | 41 | 53 |

[1980 ஜூலை 14

1980 ஜூலை 14]

1977, 1978, 1979 ஆகிய ஆண்டுகளில் சென்னை உயர் நீதிமன்றத்திலும் சார்நிலை நீதிமன்றங்களிலும் (குற்றவியல்) தொடரப்பட்ட, முடிக்கப்பட்ட முடிவுறாமலுள்ள வழக்குகளின் புள்ளி விவரங்கள்.

| நீதிமன்றங்கள். | 1977 | | | | 1978 | | 1979 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | இவ்வாண்டில் தொடரப்பட்ட வழக்குகள். | இவ்வாண்டில் முடிக்கப்பட்ட வழக்குகள். | இவ்வாண்டின் இறுதியில் முடிவுறாமலுள்ள வழக்குகள். | இவ்வாண்டில் தொடரப்பட்ட வழக்குகள். | இவ்வாண்டில் முடிக்கப்பட்ட வழக்குகள். | இவ்வாண்டில் இறுதியில் முடிவுறாமலுள்ள வழக்குகள். | இவ்வாண்டில் தொடரப்பட்ட வழக்குகள். | இவ்வாண்டில் முடிக்கப் பெறவுள்ள வழக்குகள். | இவ்வாண்டில் முடிக்கப்பட்ட வழக்குகள். | இவ்வாண்டு இறுதியில் முடிவுறாமலுள்ள வழக்குகள். |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) |
| உயர்நீதி மன்றம்.— | | | | | | | | | | |
| குற்றவியல் மேல் முறையீடுகள் | 881 | 656 | 1,676 | 943 | 348 | 2,271 | 876 | 3,147 | 612 | 2,535 |
| மறு விசாரணை .. .. | 847 | 539 | 1,696 | 887 | 846 | 1,737 | 1,263 | 3,000 | 859 | 2,141 |
| ஆய்வு .. .. .. | 17 | 22 | 3 | 15 | 8 | 10 | 18 | 28 | 16 | 12 |
| பெருநகர் மாஜிஸ்டிரேட் நீதிமன்றம்.— | | | | | | | | | | |
| முறையான வழக்கு விசாரணைகள் .. .. .. | 237,201 | 232,202 | 13,764 | 253,642 | 247,059 | 20,347 | 199,352 | 219,699 | 199,546 | 20,153 |
| செஷன்ஸ் நீதி மன்றங்கள்.— | | | | | | | | | | |
| செஷன்ஸ் வழக்குகள் .. | 1,361 | 1,263 | 519 | 1,590 | 1,430 | 679 | 1,385 | 2,064 | 1,324 | 740 |
| மேல் முறையீடுகள் .. | 7,792 | 7,507 | 1,494 | 8,371 | 8,131 | 1,734 | 7,824 | 9,558 | 7,669 | 1,889 |
| மறு விசாரணை .. .. | 1,301 | 1,068 | 489 | 1,424 | 1,387 | 526 | 1,250 | 1,776 | 1,268 | 508 |
| நீதித்துறை தலைமை மாஜிஸ்டிரேட் நீதிமன்றங்கள்.— | | | | | | | | | | |
| மேல் முறையீடுகள் .. | 3,339 | 3,263 | 648 | 3,647 | 3,691 | 604 | 3,520 | 4,124 | 3,541 | 583 |
| ஏனைய சட்டங்கள் .. | 932,177 | 927,293 | 53,488 | 860,121 | 834,780 | 78,829 | 1,510,202 | 1,589,031 | 1,500,264 | 88,767 |
| இந்திய தண்டனை சட்டக் கோவை .. .. | 86,932 | 81,899 | 17,767 | 91,491 | 85,142 | 24,116 | 126,837 | 150,953 | 118,913 | 31,040 |
| குற்றவியல் நடைமுறை சட்டக் கோவை .. .. .. | 16,559 | 16,617 | 736 | 6,607 | 6,735 | 608 | 21,700 | 22,308 | 20,951 | 1,357 |

## இணைப்பு II.

[805ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக்காண்க.]

### தமிழ்நாடு சிறைகளின் நிர்வாகம், 1980--81.

### சிறைகள்.

சிறைத்துறை 8 மத்திய சிறைகள், மற்றும் புதுக்கோட்டையி
லுள்ள ஒரு பார்ஸ்டல் பள்ளி, சென்னை பல்லாவரத்திலுள்ள
ஆண்கள் பிற்காப்பு இல்லம், வேலூரில் உள்ள மாநில மகளிர்
சிறை, சேலம், திருச்சிராப்பள்ளி, கொக்கிரகுளம் ஆகிய மூன்று
இடங்களிலும் உள்ள தனிக் கிளைச் சிறைகள், தஞ்சாவூர், சிங்க
நல்லூர் ஆகிய இடங்களில் உள்ள இரு திறந்த வெளிச் சிறைகள்,
சேலம் மத்திய சிறையிலுள்ள பண்ணைச்சிறை, தஞ்சாவூர்,
நாகர் கோவிலில் உள்ள கிளைச் சிறைகள் ஆகியவற்றின் அமைப்பு,
கட்டுப்பாடு, நிர்வாகம் முதலியவற்றைக் கவனிக்கிறது. செங்
கற்பட்டு மாவட்டத்திலுள்ள கிளைச் சிறைகள், 15-7-1977
லிருந்து வருவாய்த்துறையின் நிர்வாகத்திலிருந்து இத்துறையின்
நேரடி நிர்வாக பொறுப்பின்கீழ் கொணரப்பட்டன. நன்ன
டத்தைப் பிரிவும் இத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ளது.
சிறைவாசிகள், விடுதலையான பின்னர் சட்டத்திற்குக் கட்டுப்
பட்ட நல்ல குடிமக்களாக வாழும் வகையில் பயிற்சி அளித்து
சீர்திருத்துவதே இதன் முக்கிய நோக்கமாகும்.

I. சிறைகளின் வகைப்பாடு :—

இம்மாநிலத்திலுள்ள சிறைகள் கீழ்க்கண்ட வகையில் பிரிக்கப்
பட்டுள்ளன :—

1. மத்தியச் சிறைகள்.
2. தனிச்சிறை (மாநில மகளிர் சிறைச்சாலை, வேலூர்).
3. கிளைச்சிறைகள்.

பொதுவாக ஒரு மாதத்திற்கு மேற்பட்ட தண்டனையை
அடைந்தவர்களும், ஆயுள் தண்டனை அடைந்தவர்களும், வழக்க
மாக குற்றம் செய்வோரும் மத்திய சிறைகளில் வைக்கப்படு
கின்றனர். கிளைச் சிறைகளில் விசாரணைக் கைதிகளும் ஒரு
மாதத்திற்குக் குறைவாகத் தண்டனை பெற்றவர்களும் வைக்கப்
படுகின்றனர். வயது வந்த சிறைவாசிகள், இளம் குற்றவாளி
களிடமிருந்து பிரித்து வைக்கப்படுகின்றனர். அதுபோல ஆண்
சிறைவாசிகளும், பெண் சிறைவாசிகளும் பிரித்து வைக்கப்



வழக்கமாக குற்றம் செய்யும் சிறைவாசிகள்
படுகின்றனர். (Habitual Prisoners) சேலத்திலும், கடலூரிலும் உள்ள
மத்திய சிறைகளிலும், பெண் சிறைவாசிகள், வேலூரில் உள்ள
மாநில மகளிர் சிறையிலும் வைக்கப்படுகின்றனர். இளங்குற்ற
வாளிகளுக்கென்று பிரத்தியேகமாக புதுக்கோட்டையிலுள்ள
பார்ஸ்டல் பள்ளி இயங்கி வருகிறது. தற்காலிக நடவடிக்கை
யாக, மனநோய் குற்றவாளிகளை சென்னை அரசாங்க மனநல
காப்பகத்தில் சேர்க்க வேண்டும் என்று அரசு ஆணையிட்டுள்ளது.
வேலூர், திருச்சி மத்திய சிறைகளில் தொழுநோய், தொற்று
நோய் சிறைவாசிகளுக்கென்று தனிச் சிறைக் கூடங்கள் உள்ளன.

சிறைத்துறையின் பொறுப்பிலுள்ள வெவ்வேறு நிறுவனங்கள்
வருமாறு—

| | |
|---|---|
| 1. மத்திய சிறைகள் .. .. .. | 8 |
| 2. மாநில மகளிர் சிறை .. .. .. | 1 |
| 3. பார்ஸ்டல் பள்ளி .. .. .. | 1 |
| 4. தனிக் கிளைச் சிறைகள் .. .. .. | 3 |
| 5. கிளைச் சிறைகள்— (அ) சிறைத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ளவை 10; (ஆ) வருவாய்த்துறையின் கட்டுப்பாட்டில் உள்ளவை .. .. .. 109 | 119 |
| 6. திறந்தவெளிச் சிறைகள் .. .. .. | 2 |
| 7. பண்ணைச் சிறை .. .. .. | 1 |
| 8. ஆண்கள் பிற்காப்பு இல்லம் .. .. | 1 |

கிளைச் சிறைகள் நீங்கலாக மத்திய சிறைகளில் மொத்தம்
12,121 குற்றவாளிகளுக்கும், கிளைச் சிறைகளில் மொத்தம்
3,446 குற்றவாளிகளுக்கும் இடவசதி உண்டு.

II. நிர்வாகம் :

சிறைத் துறையின் நிர்வாக அமைப்பைக் காட்டும் விளக்கப்
படம் ஒன்று இணைப்பு I-ல் இணைக்கப்பட்டுள்ளது.

1972-73 முதல் 1978-79 வரை சிறைத் துறையின் செலவினங்கள், 1979-80-க்குரிய திருத்த மதிப்பீடு, 1980-81 ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு, 1972-73 முதல் 1978-79ம் ஆண்டு வரை சிறைத் துறையின் வரவினங்கள். 1979-80-க்குரிய திருத்த மதிப்பீடு, 1980-81 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு குறித்த விவரங்கள், இணைப்பு II-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

(அ) சிறைக் காவலர் பயிற்சிப் பள்ளி—

உள்துறையின், 6-5-1970 ஆம் நாளிட்ட 998 ஆம் எண்ணுள்ள அரசாணையில் பிறப்பிக்கப்பட்ட ஆணைகளை யொட்டி இரண்டாம் நிலை சிறைக் காவலர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்காக வேலூரில் காவலர் பயிற்சிப் பள்ளி ஒன்று தொடங்கப் பெற்றது.

உள்துறையின் 27-3-1978 ஆம் நாளிட்ட 662 ஆம் எண்ணுள்ள அரசாணையின்படி, பயிற்சிக்கால அளவும் பயிற்சி பெறுபவர்களின் எண்ணிக்கையும் உயர்த்தப்பட்டன. சிறைக்காவலர்கள் தங்களுடைய பணிகளை செவ்வனே ஆற்றிடவும், தற்கால சிறை நிர்வாகத்திற்கேற்ற வகையில் பணியாற்றவும் பயிற்சி, பாட முறைகள் மாற்றப்பட்டன.

சீர்திருத்த முறைகள், சிறை நிர்வாகம், ஒழுங்கு உடற் பயிற்சி போன்ற பல்வேறு துறைகளில் 48 இரண்டாம் நிலைக் காவலர்களுக்கு தற்போது பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சியின் கால அளவு 6 மாதங்களாகும்.

மேலும் உள் துறையின் 19-11-1976 ஆம் நாளிட்ட 2878ஆம் எண்ணுள்ள அரசாணைகளின்படி, மத்திய சிறைகள், பார்ஸ்டல் பள்ளியைச் சேர்ந்த 50/52 வயதுக்குட்பட்ட 6 முதல் நிலைக் காவலர்களுக்கும் 6 முதன்மை தலைமைக் காவலர்களுக்கும் முறையே 30, 15 நாட்களுக்கு நினைவூட்டுப் பயிற்சி அளிக்கப்பட்டது.

(ஆ) சீர்திருத்த அலுவலர்களுக்கு வட்டாரப் பயிற்சிப் பள்ளி

தென் மாநிலங்களான ஆந்திரா, கர்நாடகா, கேரளா மற்றும் தமிழ்நாட்டைச் சேர்ந்த சீர்திருத்த அலுவலர்களுக்கு பயிற்சியளிக்க உள்துறையின் 9-10-73 ஆம் நாளிட்ட 2645 ஆம் எண்ணுள்ள அரசு ஆணையின்படி, சுமார் ரூ. 18.55 இலட்சம் செலவில் வேலூரில் கட்டப்பட்ட வட்டாரப் பயிற்சிப்பள்ளி 1-10-1979 முதல் செயல்படத் தொடங்கியது. இப்பள்ளியில் புதிதாகப்



பணியில் சேர்ந்த 20 சிறை அதிகாரிகளுக்கும், பணியில் சேர்ந்த ஆனால் பயிற்சியில்லாத எட்டு சிறை அதிகாரிகளுக்கும் மற்றும் இதர எட்டு பேர்களுக்கும் ஒரே சமயத்தில் பயிற்சி அளிக்க இட வசதி உண்டு. இப்பள்ளியின் தொடர் இனச் செலவுகளும் தொடரா இனச் செலவுகளும், நான்கு தென் மாநிலங்களாலும் சமமாகப் பகிர்ந்து கொள்ளப்படுகின்றன.

III. திறந்தவெளிச் சிறைகள் :

தற்போது இம்மாநிலத்தில் இரண்டு திறந்தவெளிச் சிறைகள் உள்ளன. ஒன்று தஞ்சாவூரில் உள்ள நீலகிரி கிராமத்திலும் மற்றொன்று கோவை மாவட்டத்திலுள்ள சிங்கநல்லூரிலும் உள்ளது. பண்ணைச் சிறை (5-வது தோட்டம்) ஒன்று சேலம் மத்திய சிறையில் உள்ளது.

2. திறந்த வெளிச் சிறைகளின் நோக்கங்களாவன :—

(அ) சாதாரண சிறையில் ஏற்படும் நெருக்கடியைத் தவிர்த்தல் ;

(ஆ) சிறைக்கைதிகளின் எதிர்கால புனர் வாழ்வுக்காக அவர்களுக்கு சரியான முறையில் விவசாயத்தில் பயிற்சி அளித்தல்

(இ) வேளாண்மை விளை பொருட்களில் சிறைகள் தன்னிறைவு பெறுதல் :

(ஈ) நன்முறையில் நடந்துகொள்ளும் சிறைவாசிகளை மதித்து அவர்களுக்கும் சிறிதளவு சுதந்திரமளித்தல் ;

(உ) குறைந்த அளவு கட்டுப்பாடுள்ள சிறைகளில், கைதிகளை நடத்துதல் அவர்கள் மீது கட்டுப்பாடுகள் விதித்தல் சம்பந்தமான கோட்பாடுகளை மேம்படுத்தல்.

திறந்த வெளிச் சிறையில் உள்ள சிறைவாசிகளுக்கு வழங்கப்படும் கூடுதல் வசதிகள்.

3. இச் சிறையில் சிறைவாசிகள், மத்திய சிறைகளில் அடைக்கப்படுவதுபோல் அடைக்கப்படுவதில்லை. இச்சிறையைச் சுற்றி சுவர்கள் இல்லை. ஆனால் கால்நடைகள் புகாவண்ணம் கம்பி வேலி அமைக்கப்பட்டுள்ளது. கிராமங்களில் விவசாயிகள் வேலை செய்வதைப் போன்றே, சிறைவாசிகள் திறந்த வெளி சிறைகளில் பணிபுரிகிறார்கள். இரவு வேளைகளில் அவர்கள்

ஒவ்வொரு வகை சிறைவாசிகளுக்கும் வழங்கப்படவேண்டிய
உணவுப் பொருட்கள் நிர்ணயிக்கப்பட்டு, அவர்களுக்கு விதிகளின
படி, நிர்ணயிக்கப்பட்ட உணவு வழங்கப்படுகிறது. வெவ்வேறு
வகைக் கைதிகளுக்கு பொருந்தத்தக்க அளவுக் கேற்ப, உணவு
குறித்த செலவு வேறுபடுகிறது. சிறைவாசிகளுக்கு அனுமதிக்கத
தக்க உணவுச் செலவு குறித்து உச்ச வரம்பு ஏதுமில்லை.
அரசு மாறுதல் செய்ய வேண்டுமென்று ஆணையிட்டாலன்றி
மற்றபடி உணவின் அளவு அவ்வாறே இருக்கும். ஆனால்
உணவு குறித்த செலவு, அவ்வப்போது வாங்கப்படுகிற உணவு
பொருள்களின் அங்காடி விதங்களுக்கேற்ப வேறுபடும்.

## (2) சத்துணவு.

சிறைவாசிகளுக்கு உணவில், கலோரி அளவை அதிகம்
கொடுப்பதற்கு வகை செய்யும் சத்துணவுத் திட்டம் சென்னை
மத்திய சிறையில் 1971 ஆம் ஆண்டு அமுல் படுத்தப்பட்டு பின்பு
மதுரை, கோவை மத்திய சிறைகளிலும் 1973 ஆம் ஆண்டு
ஆகஸ்டு மாதத்திலிருந்து அமுலாக்கப்பட்டது.

சத்துணவு திட்டத்தின்படி காலையில் கொடுக்கப்பட்டு வந்த
கஞ்சிக்குப் பதிலாக, வாரத்தில் மூன்று நாட்களுக்கு இட்லியும்,
மீதி நான்கு நாட்களுக்கு பிட்டும் கொடுக்கப்படுகின்றன.
ஏனைய சிறைகளில், மாலையில் கொடுக்கப்படும் கடலைச் சுண்ட
லுக்குப் பதிலாக, வேர்க்கடலைப் பருப்பும் கொடுக்கப்படுகின்றது.

## (3) ஓரளவுக்குச் சத்துணவுத் திட்டம் (Party Nutritious Diet Scheme).

இத்திட்டத்தின் கீழ், 'பி' வகுப்பு சிறைவாசிகளுக்குக்
காலை நேரங்களில் கொடுக்கப்பட்டு வந்த கஞ்சிக்குப்
பதிலாக வாரத்தில் மூன்று நாட்களுக்கு இட்லியும், 4
நாட்களுக்கு பிட்டும் வழங்கப்படுகிறது. மாலை வேலைகளில்
கடலைச் சுண்டல் வழங்கப்படுகிறது. இத்திட்டம் மற்ற மத்திய
சிறைகளிலும், வேலூர் மாநில மகளிர் சிறையிலும் செயல்பட்டு
வருகின்றது. இத் திட்டம் 1975–76 ஆம் ஆண்டு செயலுக்கு
வந்தது. வேலூர் மாநில மகளிர் சிறை உட்பட எல்லா மத்திய
சிறைகளிலும் உள்ள அனைத்து 'பி' வகுப்பு சிறைவாசிகளுக்கும்
ஓரே சீரான உணவு முறையைக் கொண்டு வருவதற்கான செயற்
குறிப்புகள் அரசின் பரிசீலனையில் உள்ளன. சோதனை நட
வடிக்கையாக, அரசு ஆணை நிலை எண் 108, உள்துறை,
நாள் 14—1—1980-ன் மூலம், வேலூர் மாநில மகளிர் சிறை
வாசிகளுக்கு வாரத்தில் நான்கு நாட்கள் வழங்கப்பட்டு வந்த
பிட்டுக்குப் பதிலாக, தற்போது வழங்கப்படும் உணவுப் பொருட்
களின் அளவில் கூடுதல் ஏதும் இன்றி, கொண்டைக்கடலை, காப்பி
மற்றும் கஞ்சி அல்லது உப்புமா வழங்க ஆணையிடப்பட்டுள்ளது.



## (4) உணவிற்கான செலவு.

பல்வேறு வகுப்பு சிறைவாசிகளுக்கும், நாளொன்றுக்கு ஒரு
சிறைவாசிக்கு வழங்கப்பட வேண்டிய அளவுகளின்படி உணவு
பொருட்களுக்காகும் தோராயமான செலவு விவரம் பின்வரு
மாறு :—

| | | ரூ. காசு. |
|---|---|---|
| (1) | 'ஏ' வகுப்புக் கைதிகள் | 6.64 |
| | வேலை செய்யும் சைவ சிறைவாசி .. | 5.79 |
| | வேலை செய்யா சைவ சிறைவாசி .. | 6.92 |
| | வேலை செய்யும் அசைவ சிறைவாசி .. | 5.46 |
| | வேலை செய்யா அசைவ சிறைவாசி .. | |
| | | 3.33 |
| (2) | 'பி' வகுப்பு சிறைவாசி—சத்துணவுத் திட்டத்தின் கீழ். | |
| (3) | 'பி' வகுப்பு சிறைவாசி—ஓரளவுத் சத்துணவுத் திட்டத்தின் கீழ்— | 3.05 |
| | வேலை செய்வோர் .. .. .. | 2.75 |
| | வேலை செய்யாதோர் .. .. .. | |

## (5) சிறப்பு உணவு.

பொங்கல், சுதந்திர தின விழாக்களை முன்னிட்டு எல்லா
சிறைவாசிகளுக்கும் நபர் ஒன்றுக்கு ரூ. 1 கூடுதல் செலவில்,
சிறப்பு உணவு வழங்கப்படுகிறது.

## (ஆ) உடுக்கையும் படுக்கையும்.

'ஏ' வகுப்பு சிறைவாசிகள் வேலை செய்யும் நேரத்தை'
தவிர மற்ற நேரங்களில் தங்களுடைய சொந்த உடை, படுக்கை
ஆகியவற்றைப் பயன்படுத்த அனுமதிக்கப்படுகிறார்கள். வேலை
செய்யும் நேரங்களில் சிறை ஆடையை அவர்கள் அணியவேண்டும்.
உறவினர்களைக் காணும் பார்வை நேரத்தின் போது 'ஏ' வகுப்பு
சிறைவாசிகள் தங்களுடைய சொந்த உடையை அணிய அனுமதிக்
கப்படுகிறார்கள். 'பி' வகுப்பு சிறைவாசிகள் எல்லா நேரங்
களிலும் சிறை ஆடைகளையே அணிய வேண்டும்.

(இ) சோப்பு, வாசனைப் பொருட்கள்.

எல்லா சிறைவாசிகளும் சோப்பு, தலைக்குத் தேய்க்கும் எண்ணெய், எண்ணெய் ஆகியவைகளை தங்களுடைய சொந்தச் செலவில் வாங்கிப் பயன்படுத்த அனுமதிக்கப்படுகிறார்கள். மாதத்திற்கு ஒரு முறை எண்ணெய் தேய்த்துக் குளிப்பதற்காக ஒவ்வொரு சிறைவாசிக்கும் 28 கிராம் எண்ணெய் வழங்கப்படுகிறது. மாதம் ஒன்றுக்கு ஒவ்வொரு சிறைவாசிக்கும் ஒன்றரை அவுன்சு (42 கிராம்) சீயக்காய்த் தூளும் (370 கிராம்) சலவை சோப்பும் வழங்கப்படுகிறது. கோவை மத்திய சிறையிலுள்ள நூற்பாலையில் வேலை செய்யும் சிறைவாசிகள் எண்ணெய் தேய்த்துக் குளிப்பதற்காக மாதத்திற்கு ஒரு முறை 2 அவுன்சு (55 கிராம்) எண்ணெய் கொடுக்கப்படுகிறது. நன்னடத்தை உள்ள எல்லா வகுப்பு சிறை வாசிகளும் தங்களுடைய நண்பர்கள் அல்லது உறவினர்களிடமிருந்து இரண்டு வாரங்களுக்குத் தேவையான அளவை மட்டும் பெறுவது என்ற வரம்பு நிபந்தனைக்குட்பட்டு, சோப்பு, எண்ணெய், பற்பொடி ஆகியவற்றை பெற்றுக்கொள்ள அனுமதிக்கப்படுகிறார்கள். மேற்கண்ட பொருட்கள் சிறைச் சாலையின் முது நிலை அதிகாரி ஒருவரால் நன்கு பரிசீலிடப்பட்ட பின்பே சிறைவாசிகளுக்கு வழங்கப்படுகின்றன.

(ஈ) நேர் காணலும், கடிதங்களும்.

'ஏ' வகுப்பு சிறைவாசிகள் வாரத்திற்கு ஒரு முறை கடிதம் எழுதவும் பெறுவதற்கும், இரண்டு வாரங்களுக்கு ஒரு முறை மூன்று பேர்களை அரை மணி நேரம் நேர்காணவும் அனுமதிக்கப்படுகிறார்கள். 'பி' வகுப்பு சிறை வாசிகள் மாதத்திற்கு இரண்டு கடிதங்கள் எழுதவும், பெறவும், மேலும் இரண்டு வாரங்களுக்கு ஒரு முறை மூன்று பேர்களை அரை மணிநேரம் நேர்காணவும் அனுமதிக்கப்படுகிறார்கள்.

(உ) செய்தித் தாள்களும், சஞ்சிகைகளும்.

தற்சமயம் 'பி' வகுப்புச் சிறைவாசிகளுக்குக் கீழ்க்கண்ட தமிழ் நாளிதழ்கள் வழங்கப்படுகின்றன :—

(1) தினமணி

(2) சுதேசமித்திரன்

(3) நவசக்தி (இப்பொழுது வெளிவருவதில்லை).

(4) அண்ணா

(5) தென்னகம் (இப்பொழுது வெளிவருவதில்லை).



தமிழ் நாளிதழ்கள், நூறு அல்லது அதில் ஒரு பகுதி சிறைவாசிகளுக்கு ஓர் இதழ் வீதம் அரசுச் செலவில் வழங்கப்படுகின்றன. இவையன்றி சிறைவாசிகளின் எண்ணிக்கை என்னவாயிருப்பினும் ஆங்கில நாளிதழான "இந்து" பத்திரிகை ஒரு சிறைக்கு ஒரு இதழ் வீதம் வழங்கப்படுகின்றது. அரசால் அனுமதிக்கப்பட்ட தினத்தாட்களை தங்களது சொந்த செலவில் வாங்கிக் கொள்ள 'ஏ' வகுப்பு சிறைவாசிகள் அனுமதிக்கப்படுகிறார்கள். மேலும், சிறை நூலகத்தில் பயனுள்ள புத்தகங்கள் வைக்கப்பட்டுள்ளன. மாவட்ட நூல் நிலைய அதிகாரிகளிடமிருந்து பெறப்பட்ட புத்தகங்களும் சிறைவாசிகளுக்கு வழங்கப்படுகின்றன. பள்ளிக் கல்வி இயக்குநருடன் கலந்தாலோசித்து, தயாரிக்கப்பட்ட புத்தகப் பட்டியல் ஒன்று, எல்லாச் சிறைக் கண்காணிப்பாளர்களின் பார்வைக்கு அனுப்பப்படுகிறது. புத்தகப் பட்டியிலுள்ள புத்தகங்கள் எவையேனும் தேவைப்பட்டால் அவற்றை வாங்குவதற்கு அவர்கள் மேற்கொண்டு நடவடிக்கை எடுப்பர்.

(ஊ) இதர சலுகைகள்.

'ஏ' வகுப்பு சிறைவாசிகள் மரச்சாமான்கள், கொசுவலை மற்றும் புகையிலை, சமையலுக்கும், உண்டி அருந்துவதற்கும் தேவைப்படும் பாத்திரங்கள் ஆகியவற்றைப் பயன்படுத்த அனுமதிக்கப்படுகிறார்கள். சிறைக் கண்காணிப்பாளரின் முடிவுக்கிணங்கி, மருத்துவ ஆலோசனையின் பேரில் இதற்கு முன் சிறைத் தண்டனை அடையாத, வழக்கமாக குற்றம் செய்யாத சிறை மருத்துவ மனையில் இருக்கும் சிறைவாசிகள் சிறை மருத்துவ மனையின் வெளிப் புறத்தில் தகுந்த காவலோடு உறங்க அனுமதிக்கப்படுகிறார்கள். தண்டனைச் சிறைவாசிகள், அவர்களுடைய நன்னடத்தையைப் பொறுத்தும் அவர்கள் அனுபவித்துள்ள தண்டனைக் காலத்தைக் கணக்கில் கொண்டும், தண்டனை இரவு காவற்காரர்கள் ( Convict Night Watchmen ) தண்டனை மேற்பார்வையாளர் ( Convict Overseer ) மற்றும் தண்டனைக் காவலர்கள் ( Convict Warders ) என நியமிக்கப்படுவதற்குத் தகுதியுடையவர்கள் ஆவர்.

(எ) மனமகிழ்வு வசதிகள்.

எல்லா மத்தியச் சிறைவாசிகளும், ஞாயிற்றுக்கிழமையும், மற்றைய சிறை விடுமுறை நாட்களிலும், கைப்பந்து (கபடி, பூப்பந்து ஆகிய விளையாட்டுகளை விளையாடவும், வேலூர் மாநில மகளிர் சிறைவாசிகள் வளை பந்து விளையாடவும் அனுமதிக்கப்படுகிறார்கள்.

[1980 ஜூலை 14

## VI. சிறைவாசிகளின் தொழிலும் சிறைகளில் தொழிற்சாலைகளும்.

சிறைகளில் தொழில் அனுமதிக்கப்படுவதன் முக்கிய நோக்
கம் சிறைவாசிகள் விடுதலையடைந்த பின்பு அவர்களுக்குப்
புனர்வாழ்வு கிடைக்க உதவுவதே ஆகும். எனவே பயனில்லாத
உற்பத்தி நோக்கமில்லாத வேலைகள் தவிர்க்கப்படுகின்றன.
எல்லாச் சிறை வேலைகளும் கடினம், நடுத்தரம், சுலபம்
என்ற மூன்று தரங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. மருத்துவ
அலுவலரின் ஆலோசனையின்படி சிறைவாசிக்கு உரிய வேலை
கொடுக்கப்படுகிறது. சிறைவாசிகளின் விடுதலைக்குப்பின்
அவர்களுக்கு உதவிடும் வகையில் தச்சு வேலை, தையல், நெசவு,
சாயம் தோய்த்தல், கட்டிட வேலை, கருமார் வேலை, தோலால்
பொருட்களைச் செய்யும் பணி, புத்தகம் கட்டுதல், காகிதம்
செய்தல், சோப்பு செய்தல் ஆகிய தொழில்கள் பயிற்றுவிக்கப்
படுகின்றன. சிறைவாசிகள் தங்களது விடுதலைக்குப்பின் தங்
களைச் சொந்தத் தொழிலில் ஈடுபடுத்திக் கொள்ளுகின்ற வகை
யில் நவீன வேளாண்மை முறைகள் மற்றும் பால் பண்ணை
வளர்ச்சி ஆகிய தொழில்களிலும் பயிற்றுவிக்கப்படுகிறார்கள்.
கோவை மத்தியச் சிறையில் நெசவுப் பிரிவுடன் கூடிய நூற்
பாலை மற்றும் சாயத்தொழிற்சாலையும் இயங்கி வருகிறது.
இத் தொழிற்சாலைகளை நவீனப்படுத்துவதற்காக கடந்த ஆண்
டில் ரூபாய் 12,60,065.65 செலவிடப்பட்டது. இதைத்தவிர,
இந்நெசவு தொழிற்சாலையை நவீனப்படுத்த அரசு மேலும் ரூபாய்
8,50,000 அனுமதி அளித்துள்ளது.

கூடுமான வரையில் சிறைவாசிகள் சிறைக்கு வரும் முன்ன
தாக எந்தெந்தத் தொழில்களை செய்து வந்தார்களோ அந்
தந்தத் தொழில்களிலேயே அவர்களுக்குப் பயிற்சி கொடுக்கப்
படுகிறது. நோய் கண்டுபிடிப்புக் காலத்தின்போது, சிறைவாசி
களுக்குக் கொடுக்க வேண்டிய வேலை, கல்வி, பயிற்சி
ஆகியவைகளைத் தீர்மானிப்பதற்காகச் சிறையின் கண்காணிப்
பாளர், முது நிலை உதவி மருத்துவ அலுவலர், மற்றும் சிறை
அலுவலர் ஆகியோரைக் கொண்ட " வகைப்படுத்தும் குழு "
கள் மத்தியச் சிறைகளில் அமைக்கப்பட்டுள்ளன. சிறைவாசி
கள் சென்னை மத்தியச் சிறையில் உள்ள கிளை அச்சுக்கூடத்தில்
தொழில் செய்ய அனுமதிக்கப்படுகின்றனர். சிறைவாசி தன்
னுடைய வேலையில் மாற்றம் வேண்டினால் அந்தச் சிறை கண்
காணிப்பாளரிடம் விண்ணப்பிக்கலாம். இரண்டாண்டுகளுக்கு



1980 ஜூலை 14]

மேல் தண்டனை வழங்கப்பட்ட சிறைவாசிகள் கீழ்க்காணும் விகிதப்படி பணிக் கொடை சம்பாதிக்கவும் தகுதி பெறுகிறார்கள் :—

| (1) | | | | | பணிக் கொடையின் விகிதம் (ஒரு மாதத்திற்கு). (2) |
|---|---|---|---|---|---|
| | | | | | ரூ. கா சு. |
| 1. சிறைவாசி | .. | .. | .. | .. | 0.25 |
| 2. சிறைவாசி (இரவுக் காவலர்) | | | .. | .. | 0.50 |
| 3. சிறைவாசி (வேலை மேற்பார்வையாளர்) | | | | .. | 1.00 |
| 4. சிறைவாசிக் காவலர் | | .. | .. | .. | 2.00 |

ஊதியம் ஈட்டும் திட்டமானது சேலம் மத்தியச் சிறையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

நாள் ஒன்றுக்கு வழங்கப்படும் ஊதிய விகிதங்களாவன—

| | | | ரூ. கா சு. |
|---|---|---|---|
| 1. தேர்ச்சி பெற்ற வேலையாள் | .. | .. | 0.40 |
| 2. ஓரளவு தேர்ச்சி பெற்ற வேலையாள் | | .. | 0.20 |
| 3. தேர்ச்சி பெறாத வேலையாள் | .. | .. | 0.10 |

ஏனைய மத்திய சிறைகளுக்கும் இத்திட்டத்தை விரிவு படுத்துவதற்கான செயற் குறிப்புகள் அரசின் பரிசீலனையில் உள்ளன.

## VII. மருத்துவ சுகாதார ஏற்பாடுகள் :

சிறைகளில் மருத்துவ சுகாதார ஏற்பாடுகள் திருப்திகரமாக உள்ளது. ஒவ்வொரு மத்திய சிறையிலும் ஒரு மருத்துவமனை உள்ளது. அன்றியும் வேலூரிலுள்ள மாநில மகளிர் சிறை, புதுக்கோட்டையிலுள்ள பார்ஸ்டல் பள்ளி ஆகியவை ஒவ்வொன்றிலும் ஒரு மருத்துவமனை உள்ளது. சென்னை, பல்லாவரத்திலுள்ள

ஆண்கள் பிற்காப்பு இல்லத்தில் ஒரு மருந்தகம் உள்ளது. ஒவ்வொரு மத்திய சிறையிலும் வேலூரிலுள்ள மாநில மகளிர் சிறையிலும் ஒரு மருத்துவ அதிகாரியும், ஒரு உதவி மருத்துவரும் அவருக்கு உதவி செய்ய மருந்தாக்குநரும் உள்ளனர். சென்னையிலுள்ள ஆண்கள் பிற்காப்பு இல்லத்தில் பகுதி நேர மருத்துவ அதிகாரியும், முழு நேர மருந்தாக்குநரும் உள்ளனர். அவசியப்படும் சிறைவாசிகளுக்கு மூக்குக் கண்ணாடி வழங்கப்படுகிறது. சிறைவாசிகளுக்கு அவர்களின் பாகுபாட்டின்படியும், அவர்களுக்கு வழங்கப்படும் சிகிச்சையின் பொருட்டும் அவர்களுடைய சொந்தச் செலவிலோ அல்லது அரசாங்கச் செலவிலோ பல் வைத்தியம் செய்யப்படுகின்றது. வாரத்திற்கு இரு முறை தலைமையிட மருத்துவமனையைச் சார்ந்த (பல்) உதவி மருத்துவர் சிறைவாசிகளைப் பார்வையிடுவதுண்டு.

தலையில் ஏற்படும் காயங்களிலிருந்து சிறைக் கைதிகளைப் பாதுகாக்கும் இரும்புத் தொப்பி வழங்குவதற்கும் அரசு ஒப்புதல் அளித்துள்ளது. வேலூர், திருச்சி மத்திய சிறைகளில் தொழு நோயால் பாதிக்கப்பட்ட சிறைக் கைதிகள் தனியாகப் பிரிக்கப்பட்டுத் தனிக் கூடங்களில் வைக்கப்படுகின்றனர். மன நோயாளிகள், குற்றவாளிகளான மன நோய்க் கைதிகள் சென்னை மனநலக் காப்பகத்திற்கு அனுப்பப்படுகின்றனர்.

இன்னும் சில மத்திய சிறைகளிலும் துணைச் சிறைகளிலும் உலர் கழிப்பிடங்களை (Dry earth Latrines) முற்றிலும் அகற்றி அவற்றிற்குப் பதில் நவீன நீரடிக்கழிப்பிடங்களை எல்லாச் சிறைகளிலும் அமைக்க அரசு ஆர்வம் கொண்டுள்ளது. இதனைக் கருத்தில் கொண்டு, ஏழு மத்திய சிறைகள், ஒரு தனித் துணைச் சிறை, ஐம்பத்தொன்பது துணைச் சிறைகள் ஆகியவற்றில் நவீன தண்ணீர் வசதிகளுடன் நீரடிக்கழிப்பிடங்களுக்கு வகை செய்வதற்காக அரசு ரூபாய் 39,87,100 நிதி வழங்கியுள்ளது. இப்பணி பொதுப்பணித் துறையால் நிறைவேற்றப்பட்டு வருகிறது. மேலும், மத்திய சிறைகளிலும், துணைச் சிறைகளிலும் ரூபாய் 10.51 இலட்சம் செலவில் நீரடிக்கழிப்பிடங்கள், தண்ணீர் வசதி மின் இணைப்பு முதலிய வசதிகளைப் செய்வதற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டத்திற்கான நிதி, மத்திய அரசால், கடனாகவும், மானியமாகவும் வழங்கப்பட்டுள்ளது. 1980–81 ஆம் ஆண்டு முடிவுக்குள் எல்லாச் சிறைகளும் நீரடிக் கழிப்பிட வசதிகளைப் பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ரூபாய் 7.46 இலட்சம் செலவில் சில குறிப்பிட்ட மத்திய சிறைகளிலும், துணைச் சிறைகளிலும், கூடுதல் சிறைக்கூடங்கள், உணவுக் கூடங்கள், முதலியவற்றைக் கட்டுவதற்குரிய திட்டத்திற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது.



## VIII. சிறைவாசிகளுக்குக் கல்வி வசதி அளித்தல்

கல்வியின் மூலம் பயனடையக்கூடிய நிலையில் இருக்கும் கைதிகளுக்குக் கல்வி வசதி அளிக்கப்படுகின்றது. ஒவ்வொரு மத்திய சிறையிலும் சிறந்த பயிற்சி பெற்ற ஆசிரியர்களைக் கொண்ட தொடக்கப்பள்ளி ஒன்று உள்ளது. சில குறிப்பிட்ட சிறைகளில் முதியோர் கல்வியின் பயிற்சி பெற்ற ஆசிரியர்களைக் கொண்டு முதியோர் கல்வித் திட்டம் நவீன முறையில் நடத்தப்படுகிறது. விளக்கு வசதி உள்ள சிறைகளில் கைதிகள் இரவு 9 மணி வரை படிக்க அனுமதிக்கப்படுகிறார்கள். விளக்கு வசதி இல்லாத சிறைகளில் அவ்வசதியை ஏற்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. கைதிகளின் பயனுக்காகவும் சிறையில் கல்வியை மேம்படுத்துவதற்காகவும், சிறைக் கண்காணிப்பாளர்கள் புகழ் மிக்க நிறுவனங்களிலிருந்து ஆசிரியர்களையும் விரிவுரையாளர்களையும் வரவழைத்து சிறை விடுமுறை நாட்களிலும் ஞாயிற்றுக் கிழமைகளிலும் அரசியல் சம்பந்தப்படாத பொருட்களைப்பற்றி உரையாற்ற ஏற்பாடு செய்கிறார்கள். கைதிகள் பல்கலைக் கழகங்கள் நடத்தும் தேர்வுகளில் கலந்து கொள்ளவும் அனுமதிக்கப்படுகின்றார்கள். புத்தகங்கள், தேர்வுக் கட்டணங்கள், இது தொடர்பான ஏனைய செலவுகளையும் அரசு ஏற்றுக் கொள்கிறது. கைதிகள் ஒரு முறை தேர்வில் தேர்ச்சி பெறாவிட்டால் மறுமுறையும் அரசு செலவில் தேர்விற்குச் செல்ல அனுமதிக்கப்படுகின்றனர். கைதிகள் தேர்வுகளுக்குச் சாதாரண உடை அணிந்து செல்வதற்கு அனுமதிக்கப்படுகின்றனர். அவர்களைக் காவல் காத்து அழைத்துச் செல்லும் காவலர்களும் சாதாரண உடை அணிந்து செல்கின்றனர்.

சிறையில் மதம், நீதி சம்பந்தமான போதனைகள் அனுமதிக்கப்படுகின்றன. ஆனால், நீதி அல்லது மத சம்பந்தமான விரிவுரைகள் என்ற பெயரால் மத மாற்றம் செய்வது கூடாது என்பதோடு அத்தகைய விரிவுரையாற்றுவோர் எம்மதத்தைச் சேர்ந்தவராக உள்ளனரோ அம்மதத்தைச் சார்ந்த கைதிகளிடம் மட்டுமே உரையாற்ற வேண்டும் என்ற நிபந்தனையுடன் அத்தகைய உரைகள் அல்லது போதனைகள் அனுமதிக்கப்படுகின்றன.

## IX. பார்ஸ்டல் பள்ளி, புதுக்கோட்டை.

இளம் குற்றவாளிகள் (18 வயதிலிருந்து 23 வயது வரை] புதுக்கோட்டை பார்ஸ்டல் பள்ளியில் சேர்க்கப்படுகின்றனர். பார்ஸ்டல் பள்ளி மாணவர்களுக்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள தொழில்களில் அல்லது வாழ்க்கைத் தொழில்களில் பயிற்சி அளிக்கப்படுகின்றது :—

(அ) தச்சு வேலை.

(ஆ) கருமார் வேலை.

[1980 ஜூலை 14

## கைதிகள் தங்களது இல்லங்களுக்குச் செல்ல விடுப்பில் அனுமதித்தல்.

இம்மாநிலத்திலுள்ள ஆயுள் தண்டனைக் கைதிகள் உட்பட,
கைதிகள், தங்களது இல்லங்களுக்குச் சென்று தங்களது குடும்பத்
தேவைகளைக் கவனிக்க இயலும் வண்ணம், அவர்களுக்கு விடுப்பு
அளிக்கப்படுகிறது. இதுவரையில் அத்தகைய விடுப்பு, சென்னை
மாநகரைப் பொறுத்த மட்டில், சென்னை காவல்துறைக் கமிஷன
ரிடமிருந்தும் வெளியூர்களைப் பொறுத்தமட்டில் சம்பந்தப்பட்ட
காவல்துறை சூப்பிரண்டுகளிடமிருந்தும் அறிக்கைகள் வரப்பெற்ற
பின்னர் வழங்கப்பட்டு வந்தது. கைதிகளுக்கு விடுப்பு அளிக்க
காவல் துறையினரின் அறிக்கைகளைக் கேட்பது அவசியமில்லை
யென்றும், குற்றவாளிகள் நன்னடத்தைக் கண்காணிப்பு அதிகாரி
யின் அறிக்கையே போதுமானதாகும் என்றும், கைதிகள் விடுதலை
செய்யப்பட்டது மட்டும் காவல் துறையினருக்குத் தெரிவித்தால்
போதுமென்றும், பாட்னா உயர்நீதி மன்ற முன்னாள் தலைமை
நீதிபதி திரு. ஆர். எல். நரசிம்மன், ஐ.சி.எஸ். (ஓய்வு) அவர்கள்,
தலைமையில் 1978–79-ம் ஆண்டில் அமைக்கப்பட்ட தமிழ்
நாடு சிறை சீர்திருத்த ஆணைக்குழு பரிந்துரைத்தது.
இவ்வாணைக்குழுவின் பரிவுரையை ஏற்றுக் கொண்டு, அரசு,
வரை விடுப்பில் முதன்முதல் விடுதலை செய்கையில் உள்ளூர் கைதி ஒரு
காவல்துறை சப்இன்ஸ்பெக்டரைக் கலந்து ஆலோசித்து
குற்றவாளிகள் நன்னடத்தைக் கண்காணிப்பு அதிகாரி பிறகு
அறிக்கையை அனுப்பி வைத்தால் போதுமானதென்றும், தனது
பின்னர், அடுத்தடுத்து, விடுப்பில் அக்கைதி விடுதலை இதற்குப்
படும்போது குற்றவாளிகள் நன்னடத்தைக் கண்காணிப்பு செய்யப்
உள்ளூர் காவல்துறை சப்இன்ஸ்பெக்டரைக் கலந்தாலோசிக்கா அதிகாரி
மலேயே தனது அறிக்கையை அரசுக்கு நேரடியாக அனுப்பி
வைத்தால் போதுமானதாகும் என்றும் கூறி அரசு அண்மையில்
ஆணைகளைப் பிறப்பித்துள்ளது. இதைத் தொடர்ந்து கைதி
களுக்கு விடுப்பு அளிப்பது தொடர்பாகக் குற்றவாளிகள் நன்னடத்
தைக் கண்காணிப்பு அதிகாரிகள் மட்டுமே (காவல்துறை அதிகாரி
கள் அல்ல) அறிக்கைகளை அரசுக்கு நேரடியாக அனுப்பி வைக்
கின்றனர். காவல்துறையினர் சரிபார்க்கும்போது ஏற்படும்
இடர்ப்பாடுகளை நீக்கும் நோக்கோடு அண்மையில் கொண்டு
வரப்பட்ட இத்திருத்த நடைமுறை நன்முறையில் செயல்படு
கிறது. ஐந்தாண்டுகள் சிறைவாசம் அனுபவித்தோரும், இது
வரை விடுப்பில் செல்லாதவருமான கைதிகளுக்கு விடுப்பு
அளிப்பது குறித்து கருதிப் பார்க்கப்பட்டு அவர்களுக்கு ஒரு
மாதம் விடுப்பு அளிக்கப்படுகிறது. மேலும், அவர்கள் பின்னர்
விடுப்புக்கோரினால் இரண்டாண்டுகளுக்கு ஒரு முறை 1 மாதம்
விடுப்பு அளிக்கக் கருதிப் பார்க்கபபடுகிறது. இன்னும் மூன்றாண்டு
களே சிறையில் இருக்க வேண்டிய கைதிகள் விடுப்பில் செல்ல
விரும்பினால் அவர்கள் தங்களது விடுதலைக்குப் பிறகு தங்களது
குடும்பத்தை அமைத்துக் கொள்ள இயலும் வண்ணம் அவர்களுக்கு



1980 ஜூலை 14]

விடுப்பு அளிக்கப்படுகிறது. கைதிகள் தங்களது மகன்/மகள்
அல்லது சகோதரி/சகோதரர்களது திருமணத்தை நடத்த இயலும்
வண்ணம், விவரங்களைச் சரிபார்த்த பிறகு, ஒரு வார காலத்
திற்கு குறுகிய விடுப்பு அளிக்கப்படுகிறது.

கைதிகளின் சொந்த மகன்/சொந்த மகள், உடன் பிறந்த
சகோதரர்/உடன் பிறந்த சகோதரரி போன்ற உறவினர்களின்
திருமணத்தை நடத்துவதற்காகக் குறுகிய கால விடுப்பு (அவசர
கால விடுப்பு) அளிக்கும் அதிகாரம் மத்திய சிறைக் கண்காணிப்
பாளரிடம் நிலைபெற்றிருக்கலாமென்று 1978-79 ஆம் ஆண்டு
தமிழ் நாடு சிறை சீர்திருத்த ஆணைக்குழு பரிந்துரைத்தது.
வழங்கப்படும் அவசரக் கால விடுப்பின் மொத்தக் கால அளவு
ஓராண்டில் 15 நாட்களுக்கு மேற்படக் கூடாது, அத்தகைய
விடுப்பு பின்வருமாறு முறைப்படுத்தப்பட வேண்டும் என்பதற்கு
உட்பட்டு சொந்த மகன்/சொந்த மகள், உடன்பிறந்த சகோதரர்/
உடன் பிறந்த சகோதரி போன்ற உறவினரின் திருமணத்தை
நடத்துவதற்காகக் குறுகிய கால விடுப்பு அளிப்பதற்குரிய அதிகா
ரங்களை, வேலூர், மாநில மகளிர் சிறைக் கண்காணிப்பாளர்
உட்பட மத்திய சிறைகள் அனைத்தின் கண்காணிப்பாளர்களுக்கு
அளித்து அரசு மேற்சொன்ன ஆணை குழுவின் பரிவுரைகளை
ஏற்று அண்மையில் ஆணைகளைப் பிறப்பித்துள்ளது.

| | | |
|---|---|---|
| (i) | ஓராண்டில் முதல் தடவை .. | .. 6 நாட்கள் |
| ii) | ஓராண்டில் இரண்டாம் தடவை | .. 3 நாட்கள் |
| (iii) | ஓராண்டில் மூன்றாம் தடவை | .. 3 நாட்கள் |
| (iv) | ஓராண்டில் நான்காம் தடவை | .. 3 நாட்கள் |
| | மொத்தம் .. | 15 |

ஓராண்டில் ஐந்தாம் தடவை அவசரகால விடுப்புக்காகச்
செய்து கொள்ளப்படும் விண்ணப்பம், ஆணைகள் பிறப்பிக்கப்
படுவதற்காக அரசுக்கு தாக்கல் செய்யப்படும். கைதிகளுக்கு
குறுகிய கால விடுப்பு அளிப்பதற்குரிய அதிகாரங்கள் மத்திய
சிறைகளின் கண்காணிப்பாளர்களுக்கு வழங்கப்படும் இத்திட்டம்
நன்முறையில் செயல்படுகிறது.

(இ) புத்தகம் கட்டுதல்.

(ஈ) தையல் வேலை.

(உ) விவசாயம்.

(ஊ) கொத்து வேலை.

(எ) சலவை தொழில்.

(ஏ) பாண்டு '' வாத்தியக் கருவிகள் வாசிப்புப் பயிற்சி.

(ஐ) சமையல் வேலை போன்ற வீட்டு வேலைகள்.

பார்ஸ்டல் பள்ளி மாணவர்கள் அங்கிருந்து விடுதலை செய்
யப்பட்ட பின்னர், பிற்காலத்தில் வேலையில் அமர்வதற்கு
வசதியாக மேற்கண்ட தொழில்களில் தேர்ச்சி பெற்றதற்குரிய
சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன. பார்ஸ்டல் பள்ளியில் 405
மாணவர்களுக்கு இடவசதி அளிப்பதற்கு அங்கீகரிக்கப்பட்டுள்ளது.
தற்போது, சராசரியாக 150 மாணவர்கள் இங்கு உள்ளனர்.
இங்குள்ள துயிற்கூடம் ஒன்று இளங்குற்றவாளிகளுக்கான
இடமாக மாற்றப்பட்டு அங்கு 24–25 வயது பிரிவைச் சேர்ந்த
இளங்குற்றவாளிகள் வைக்கப்படுகின்றனர். இத்தகைய கைதி
கள் இங்கு 25 வயது வரை வைக்கப்படுகின்றனர். புதுக்கோட்டை
பார்ஸ்டல் பள்ளியிலுள்ள துயிற்கூடம், சிறைகள் சட்டத்தின்
கீழ் ''சிறை'' என்று அறிவிக்கப்பட்டுள்ளது, விடுதலை செய்
யப்பட்ட பார்ஸ்டல் பள்ளி மாணவர்களின் புது வாழ்வுக்காக
இயந்திரங்கள் அல்லது பசுமாடு அல்லது எருமை மாடுகள் முதலி
யவை வாங்குவதற்காக அவர்களுக்கு நிதி உதவி வழங்கப்படு
கிறது. மேற்கூறியவாறு அளிக்கப்பட்ட நிதி உதவி அவர்களிடம்
இருந்து சுலபத் தவணைகளில் வசூலிக்கப்படும்.

## X. ஆண்கள் பிற்காப்பு இல்லம், ல்லாவரம்.

பல்லாவரம், ஆண்கள் பிற்காப்பு இல்லம், சீர்திருத்த நிறு
வனங்களில் இருந்தும் அல்லது சீர்திருத்தப்பணி சாராத நிறு
வனங்களிலிருந்தும் வெளி வருபவர்களுக்கு, அவர்கள் தங்களை
நேர்மையான, சட்டத்திற்குட்பட்ட குடிமக்களாக இருப்பதற்கு
இயலும் வண்ணம், இரண்டு ஆண்டுகளுக்குத் தச்சு வேலை,
உலோக வேலை அல்லது தையல் வேலை ஆகியவற்றில் பயிற்சி
அளிப்பதற்காக அமைக்கப்பட்டுள்ளது. பயிற்சிக் காலத்தில்
அவர்களுக்கு இலவசமாக உணவு, உடை, இருப்பிடம் ஆகியவை
அளிக்கப்படுவதோடு, முதலாண்டு தினம் ரூபாய் 1.50 வீதமும்,
இரண்டாம் ஆண்டு தினம் ரூபாய் 2 வீதமும் பயிற்சி
உதவித் தொகையும் வழங்கப்படுகின்றது. அவர்களுக்கு தொழில்
பயிற்சிக்கூடங்களில் நடைமுறையில் உள்ள பாடத் திட்டங்
களின்படி, ஆனால், பிற்காப்பு இல்லத்தின் நிலைமைக்கும்,
தேவைக்கும் ஏற்றாற்போன்ற மாற்றங்களுடன், பயிற்சி அளிக்



கப்படுகின்றது. உரிய வயது வந்த ஆண்கள் மட்டுமே இவ்வில்லத்
தில் அனுமதிக்கப்படுகின்றார்கள். இவ்வில்லத்தில் அனுமதிக்
கப்பட்ட மொத்த இருப்பிடங்கள் 100 என்றாலும், சராசரியாக
40 பேர்களே தங்கி பயிற்சி பெறுகிறார்கள். இவ்வில்லத்தில்
தச்சு வேலை, தையல் வேலை, உலோக வேலை ஆகிய மூன்று
தொழிற் பிரிவுகள் உள்ளன.

தற்போது இவ்வில்லம் பல்லாவரத்தில் வாடகைக் கட்டிடம்
ஒன்றில் இயங்கி வருகிறது. இவ்வில்லத்தைச் சேர்ந்த கட்டிடத்
தில் அமைக்கும் பொருட்டு சிறைத் துறைக்குச் சொந்தமான
புழல் ஏரிக்கு அருகிலுள்ள இடத்தில் இருக்கும் தற்போதைய
கட்டிடங்களைப் பழுது பார்க்கவும், புதுப்பிக்கவும், அரசு ரூபாய்
3.78 இலட்சம் வழங்கியுள்ளது. இப்பணிகள் 1980–81- ஆம்
ஆண்டில் முடிவடையுமென எதிர்பார்க்கப்படுகிறது. அதன்பின்
இவ்வில்லம் அங்கு மாற்றப்படும்.

## XI. சிறைப் பார்வையாளர்கள்.

அரசுச் சார்புள்ள பார்வையாளர்களைத் தவிர, அரசுச்
சார்பில்லாத பார்வையாளர்களையும் அரசு நியமிக்கிறது.
குறிப்பாக நீதி, குற்றவியல், மருத்துவம், சுகாதாரம், தொழில்
தியணைப்புத் துறைகளிலிருந்து நியமிக்கப்படும் அரசுச் சார்
புள்ள பார்வையாளர்கள் தவிர, சிறைக்கைதிகளின் நலனில்
உண்மையில் அக்கறை கொண்டவர்களும், உளநோய் மருத்துவ
நிபுணர்களும், உள நூல் வல்லுநர்களும், சமூகப் பணியாளர்
களும் அரசுச் சார்பற்ற பார்வையாளர்களாக நியமிக்கப்படு
கிறார்கள். அரசுச் சார்பற்ற பார்வையாளர்கள் தமிழ்நாடு
விடுதலை பெற்ற கைதிகள் உதவிச் சங்கத்தின் உறுப்பினர்
களாகவும், கைதிகளின் நலனில் தீவிர அக்கரை உள்ளவர்களாக
வும் இருப்பவர்கள் ஆவர். ஒவ்வொரு சிறையிலும் நியமிக்கப்
பட்டுள்ள அரசுச் சார்பற்ற பார்வையாளர்களோடு, அரசுச்
சார்பற்ற மாவட்டப் பார்வையாளர்களையும் அரசு நியமித்து
உள்ளது. இவர்கள் அந்தந்த மாவட்டங்களிலுள்ள எல்லாச்
சிறைகளையும் பார்வையிடலாம். கைதிகள், சிறைகள் ஆகிய
வற்றை முறைப்படுத்தும் சட்டங்கள், விதிகள் நன்முறையில்
கடைப்பிடிக்கப்படுகின்றனவா என்பதைக் கவனிப்பதும் சிறை
களின் எல்லாப் பகுதிகளையும் சுற்றிப்பார்த்து, கைதிகள் புகார்
ஏதும் செய்தால் அதனை விசாரிப்பதும் இவர்களது பணியாகும்.
இவர்களுடைய பதிவிக்காலம் 2 ஆண்டுகளாகும்.

## XII தண்டனைக் குறைப்பு.

கைதிகளின் நன்னடத்தையை வளர்க்கவும், வேலை செய்யும் ஆர்வத்தை வளர்க்கவும், தங்களுடைய குற்றம் செய்யும் மனப் போக்கை மாற்றிக் கொள்ளவும் ஊக்கமளிக்கும் பொருட்டு பல விதமான தண்டனைக் குறைப்புகள் அனுமதிக்கப்பட்டுள்ளன. ஒரு மாதத்திற்கு இரண்டு நாட்கள் கைதிகளின் நன்னடத்தைக் காகவும், இரண்டு நாட்கள் அவர்கள் செய்யும் நல்ல வேலைக் காகவும் சாதாரண வகைத் தண்டனைக் குறைப்பு அளிக்கப் படுகிறது. சிறைகளில் ஞாயிறன்றும் ஏனைய விடுமுறை நாட் களிலும் சமையற்கூடங்களில் வேலை செய்யும் கைதிகளுக்கும், துப்புரவு செய்யும் கைதிகளுக்கும் இந்த விதிகளின் கீழ் அவர்கள் ஈட்டிய ஏனைய தண்டனைக் குறைப்போடு மூன்று மாதத்திற்கு மூன்று நாட்கள் கூடுதலாக தண்டனைக் குறைப்பு அளிக்கப்படு கிறது. கைதியாகவுள்ள காவலர்களுக்கு (Convict warders) மாதத்தில் எட்டு நாட்கள் தண்டனைக் குறைப்பு அளிக்கப் படுகிறது. சிறைகளில் ஒழுங்கு அல்லது கட்டுப்பாட்டைப் பேணிவரும் கைதிகளுக்கு சிறைக் கண்காணிப்பாளர் வழங்கும் சிறப்புத் தண்டனைக் குறைப்பாக ஓர் ஆண்டில் 30 நாட்களும் நற்பணிக்காக சிறைத்துறைத் தலைவர் வழங்கும் ஓராண்டில் 60 நாட்கள் தண்டனைக் குறைப்பும் அளிக்கப்படுகிறது. கருத் தடை அறுவை சிகிச்சை செய்துகொண்ட ஆண் கைதிகளுக்கு ஓராண்டுத் தண்டனைக் குறைப்பும், இரத்தத் தானம் செய்யும் கைதிகளுக்கு ஒரு நேரத்தில் 10 முதல் 15 நாட்களுக்கு தண் டனைக் குறைப்பும் அளிக்கப்படுகிறது. மேற்கண்டவர்களைத் தவிர ஆயுள்தண்டனைக் கைதிகளுக்குக் கீழ்க்கண்ட 'விசேஷ நிகழ்ச்சிகளை முன்னிட்டு சிறப்பு தண்டனைக் குறைப்புகள் அளிக் கப்பட்டன.

| | | |
|---|---|---|
| (1) | உலகத் தமிழ் மாநாடு .. .. | ஓர் ஆண்டு. |
| (2) | காந்தி நூற்றாண்டு விழா .. | ஓர் ஆண்டு. |
| (3) | இந்தியச் சுதந்திர வெள்ளி விழா .. | ஒன்றரை ஆண்டு. |
| (4) | முன்னாள் முதல்வர் மறைந்த திரு. சி. என். அண்ணாதுரை 69-ஆம் பிறந்தநாள் விழா. .. .. | 6 மாதங்கள். |
| (5) | மறைந்த மூதறிஞர் திரு. இராஜாஜி அவர்களின் நூற்றாண்டு விழா. | 6 மாதங்கள். |

எனினும் கி.பு.கோ. 433ஏ என்ற புதுப் பிரிவு சேர்க்கப் பட்டதன் விளைவாக, ஆயுள் தண்டனைக் கைதிகளுக்கு மேற் சொன்ன தண்டனைக் குறைப்புக்கள் பொருந்தாது. மறைந்த தந்தை திரு. பெரியார் அவர்களின் நூற்றாண்டு விழா கொண் டாட்ட நினைவாக, உள்துறையின் 1979 ஆம் ஆண்டு அக்டோ பர் திங்கள் 13 ஆம் நாளிட்ட 2567 ஆம் எண்ணுள்ள அரசாணை



யில் தமிழ்நாடு 1937-ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் 4(A) 4(i) (J) ஆகிய பிரிவுகளின் கீழ் தண்டனையடைந்த கைதி களின் எஞ்சியுள்ள தண்டனைக் காலத்தை இரத்து செய்தது. மேலும், உள் துறையின் 1979 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 22-ஆம் நாளிட்ட 3143 ஆம் எண்ணுள்ள அரசாணையில் 2 மாதங்கள் முதல் ஒரு வருடம் வரையிலான சிறப்புத் தண்டனைக் குறைப்பு வழங்கியது. இதே அரசாணையில் 3 மாதங்களுக்குக் குறைவாகத் தண்டனையடைந்த கைதிகளின் தண்டனைக் காலத்தை இரத்து செய்து அவர்களை விடுதலை செய்ய ஆணை யிட்டது. மீண்டும், உள்துறையின் 1980-ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 24 ஆம் நாளிட்ட 192 ஆம் எண்ணுள்ள அரசாணை யில் 1937-ம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் 4(1)(a) 4(i)(e), 4(i)(J), 4(A) ஆகிய பிரிவுகளின் கீழ் தண்டனையடைந்த கைதிகளை விடுதலை செய்ய உத்தரவிட்டது. மேற்கண்ட தண்டனைக் குறைப்புகளைத் தவிர, மூன்றாண்டுகளுக்கு மேல் தண்டனை பெற்றவர்களை, அக்கால அளவிற்கு முன்னரே விடு தலை செய்வது குறித்து ஆலோசனைக் குழுவால் பரிசீலிக்கப் படுகிறது. மாவட்ட ஆட்சித் தலைவரின் தலைமையிலான ஆலோ சனைக் குழு, கைதிகள் பற்றிய முந்தையகால நடவடிக்கைகள் குறித்த குறிப்புகள், குற்றவாளியின் நன்னடத்தைக் கண்காணிப்பு அலுவலரின் அறிக்கை ஆகியவற்றைக் கருதிப் பார்த்து, அரசின் பரிசீலனைக்குத் தனது முடிவைத் தெரிவிக்கிறது.

இந்திய அரசு, 1973 ஆம் ஆண்டு குற்றவியல் நடைமுறை சட் டக் கோவையில் 433-ஏ என்னும் புதிய பிரிவைக் கொண்டுவருவ தற்குமுன்னர், ஆயுள் தண்டனைக் கைதிகள் குறித்த நேர்வுகள் அக்கைதிகளை உரிய தண்டனைக் காலம் முடிவடைவதற்கு முன்னரே விடுதலை செய்வது குறித்து கருதிப் பார்ப்பதற்காக ஆலோசனைக் குழுவின் முன் வைக்கப்பட்டன. ஆனால் அவர் கள் சிறைகளில் நன்முறையில் நடந்து கொண்டிருந்து அவர் களது தண்டனைக் காலம் முடிவடைவதற்கு முன்னரே அவர்களை விடுதலை செய்யலாம் என்று சம்பந்தப்பட்ட உள்ளூர் அதிகாரிகள் பரிந்துரைப்பதன்பேரிலும் அவர்கள் பத்தாண்டுக் காலம் சிறைத் தண்டனை அனுபவித்து முடிந்ததின் பேரில் அவர்கள் சாதாரணமாக விடுதலை செய்யப்பட்டனர். இருப் பினும், அத்தகைய ஆயுள் தண்டனைபெற்ற கைதிகள் ஆண்க ளுக்குரிய கருத்தடை அறுவைச் சிகிச்சை செய்துகொண்டிருந்தால் 9 ஆண்டுகள் சிறைத் தண்டனை அனுபவித்து முடிந்தாலேயே ஆலோசனைக் குழுவின் திட்டத்தின்கீழ் தண்டனைக்காலம் முடிவடைவதற்கு முன்னரே விடுதலை செய்யப்படுவதற்குத் தகுதி யுடையவராவார். இவ்வாறாக ஆயுள் தண்டனைக் கைதிகள் அனைவருக்கும் தண்டனைக்காலக் குறைப்புச் சலுகை அளிக்கப் பட்டது.

[1980 ஜூலை 14

65 வயதுக்கு மேற்பட்ட ஆண் கைதிகளும்,
மேற்பட்ட பெண் கைதிகளும் முதன் 55 வயதிற்கு
தண்டனை அளிக்கப்பட்டிருந்து அவர்கள் முறையாக சிறைத்
குறைப்பு உட்பட 2½ ஆண்டுகள் அவர்கள் ஈட்டிய தண்டனைக்
அனுபவித்திருந்தால் "வயது முதிர்வுத் திட்டத்தின்" கீழ் அவர்
களை விடுதலைசெய்யக் குழு கருதிப் பார்க்கலாம். மாநிலச் தண்டனை
சிறை நடைமுறை நூல் விதிகளில் குறிப்பிடப்பட்டு உள்ளவாறு
சிறை மருத்துவ அதிகாரி சான்றிதழ் வழங்குவதன் பேரில் -
நோயுற்ற ஆயுள் தண்டனைக் கைதிகளை அவர்களது தண்டனைக்
காலம் முடிவடைவதற்கு முன்னரே விடுதலை செய்யக் கருதி
பார்க்கப்படுகிறது.

இந்திய அரசு, 1973-ஆம் ஆண்டு குற்றவியல் நடைமுறை
சட்டக் கோவையின் (மத்திய சட்டம் 2/1974) 433-ஆம்
பிரிவைத் திருத்தியதன் மூலம் 433-ஏ என்னும் புதிய பிரிவை
அதில் சேர்த்தது. குற்றம் புரிந்த ஒருவருக்கு சட்டத்தின்படி
அளிக்கப்படுகின்ற தண்டனைகளில் மரண தண்டனை ஒன்று
எனத் தீர்ப்பளிக்கப்பட்டு, ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டால்
அல்லது ஒருவருக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனை 433 ஆம்
பிரிவின்படி ஆயுள் தண்டனையாக மாற்றப்பட்டால், அத்த
கைய கைதி குறைந்தது 14 ஆண்டுகள் சிறைத் தண்டனை
அனுபவித்திருந்தால் அன்றி மற்றபடி விடுதலை செய்யப்பட
மாட்டார் என்று அப்புதிய பிரிவு கூறுகிறது. இத்திருத்தம்
1978 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 19 ஆம் நாளன்று செய
லுக்கு வந்தது. இது மரண தண்டனை விதிப்பதற்கு உரிய
குற்றங்களுக்கு மட்டுமே பொருந்தும். மேற்சொன்ன புதிய
பிரிவு செயலுக்கு வந்த பின்னர், 1973 ஆம் ஆண்டு குற்ற
வியல் நடைமுறை சட்டக் கோவையின் 432 ஆம் பிரிவின்படி
முன்கூட்டி விடுதலை பெறத் தகுதி பெற்ற ஆயுள்
தண்டனைக் கைதிகளை அவர்களது தண்டனைக் காலம்
முடிவடைவதற்கு முன்னரே விடுதலை செய்வதற்குரிய மாநில
அரசின் அதிகாரங்கள் முற்றிலும் நீக்கப்பட்டுவிட்டன. ஆயுள்
தண்டனைக் கைதிகள் ஈட்டிய தண்டனைக் கால குறைப்பு
அவர்களது தண்டனைக் காலம் முடிவடைவதற்கு முன்னரே
விடுதலை செய்வதற்கு எவ்விதப் பயனையும் அளிக்காது.
ஏனெனில் கொண்டுவரப்பட்ட புதிய பிரிவு அவர்கள் குறைந்
தது 14 ஆண்டுகள் சிறைத் தண்டனை அனுபவித்திருக்க
வேண்டுமென்று வரையறுக்கிறது. தமிழ்நாடு சிறைச் சீர்
திருத்த ஆணைக்-குழு இப்புதிய பிரிவின் பாதகமான விளைவு
களை ஆய்வு செய்த பின்னர், இப்புதிய பிரிவு ஆயுள்
தண்டனைக் கைதிகளுக்கு தண்டனை குறைப்பு அளிப்பது,
தண்டனைக் காலம் முடிவடைவதற்கு முன்னரே அவர்களை
விடுதலை செய்வது ஆகியவற்றைச் செயலற்றதாக்கி
விட்டது என்று கருத்துத் தெரிவித்தது. 1975 ஆம் ஆண்டு
குற்றவியல் நடைமுறை சட்டக் கோவையின் 432 ஆம்



1980 ஜூலை 14]

பிரிவின் கீழ் மாநில அரசுக்கு வழங்கப்பட்டிருந்த கட்டுப்பா
டற்ற விருப்புரிமையைக் குறைக்கக் கூடாது என்று மத்திய
அரசுக்குத் தெரிவித்து இதை அதன் கவனத்திற்குக் கொண்டு
வரலாம் என்று ஆணைக்குழு கருத்துத் தெரிவித்துள்ளது.
433-ஏ பிரிவு செயல்பட்டு வந்தபோதிலும் மரண தண்டனை
விதிக்கத்தக்க குற்றங்கள் புரிந்ததற்காக ஆயுள் தண்டனை
அளிக்கப்பட்டு, உடல்நலக் குறைவு, வயது முதிர்வு, இயலாமை
முதலிய காரணங்களால் உரிய தண்டனைக் காலத்திற்கு
முன்னரே விடுதலை செய்யப்பட வேண்டிய ஆயுள் தண்டனைக்
கைதிகள், தற்போது ஆளுநர் அவர்களால் இந்திய அரசியல்
அமைப்புச் சட்டத்தின் 161 ஆம் பிரிவின்கீழ் அவரிடம்
நிலைபெற்றுள்ள அதிகாரங்களைக் கொண்டு விடுதலை செய்யப்
படுகின்றனர்.

1973 ஆம் ஆண்டு குற்றவியல் நடைமுறைச் சட்டக் கோவை
யின் 433-A எனனும் புதிய பிரிவு கொண்டுவரப்பட்டதால்
ஏற்பட்ட பாதகமான விளைவு பற்றி அரசு உணர்ந்து கைதிகளை
சீர்திருத்தி, அவர்களுக்குப் புது வாழ்வு அளிக்கும் நோக்கத்தை
எவ்வாறு வெற்றிகரமாக எய்த இயலும் என்பது பற்றியும், எந்த
அளவிற்குச் சிறந்த முறையில் இப்பிரச்சினைக்கு தீர்வு காணுவது
என்பது பற்றியும் அரசு தீவிரமாகக் கருதிப் பார்த்து
வருகிறது.

புதுக்கோட்டையிலுள்ள பார்ஸ்டல் பள்ளியிலுள்ளோரைப்
பொறுத்தவரையில், காலக் கெடு முடியுமுன் விடுதலை செய்யும்
முறை பிறிதொரு நடைமுறைப்படி செயலில் உள்ளது. இம்முறை
"நல்லிணக்கத்தின் பேரில் விடுதலை செய்தல் அல்லது விடுவித்
தல்" என்று அழைக்கப்படுகிறது. 1925 ஆம் ஆண்டு பார்ஸ்டல்
பள்ளிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1926) 15 ஆம்
பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின்படி கண்காணிப்பாளர்
விடுதலை செய்வதற்குப் பிரிவுரை செய்கிற நல்லொழுக்கமுள்
ளோரைப் பொறுத்தவரையில் அவர், ஒவ்வொரு குழுக்கூட்டம்
நடைபெறுவதற்கு முன்னர் ஆறு வாரங்களுக்குக் குறையாமல்
வெளியூர்களிலுள்ள அந்தந்த மாவட்ட நன்னடத்தை அலுவலர்
களுக்கும் சென்னை மாநகரில் தலைமை நன்னடத்தைக்
கண்காணிப்பாளருக்கும். மாணவர்களின் பெயர்கள், அவர்கள்
பெற்ற தொழிற் பயிற்சி விவரங்கள், அவர்களுக்குத் தகுதி
யான வேலைவகை ஆகியவை பற்றிய விவரங்களை அனுப்பி
வைப்பதோடு பள்ளியைப் பார்வையிட வரும் குழுவின் முன்
நன்னடத்தை அலுவலர்களிடமிருந்து அல்லது தலைமை
நன்னடத்தைக் கண்காணிப்பாளரிடமிருந்து வரப்பெற்ற
தகவலை வைக்கவேண்டும். பள்ளியைப் பார்வையிடும் குழு
பரிவுரை செய்துள்ள மாணவர்கள் பற்றிய விவரங்கள்
விடுதலைக்காகச் சிறைத்துறைத் தலைவரின் ஆணைக்காக
அனுப்பிவைக்கப்படும்.

## XIII. கைதிகளின் நலம்.

தற்போது ஒவ்வொரு மத்தியசிறைக்கும் வேலூரில் உள்ள மாநில மகளிர் சிறைக்கும், புதுக்கோட்டை பார்ஸ்டல் பள்ளிக்கும் ஒவ்வொரு பதவி வீதம் கைதிகள் நல அலுவலர்களின் பதவிகள் மொத்தம் பத்து உள்ளன. இந்த நல அலுவலர்கள், கைதிகளுக்குச் சிறையின் விதிமுறைக்கேற்ப அவ்வப்போது வேண்டிய உதவிகளை அளித்தும், அவர்கள் உறவினர்களுடன் அல்லது பிற சிறையிலுள்ள கைதிகளுடன் கடிதத்தொடர்பு கொள்ள உதவி செய்தும், அவர்களின் விடுதலைக்குப் பின், அவர்கள் சமூகத்தில் நன்னிலையில் வாழவும் அவர்களுடன் தொடர்பு கொண்டு உதவி செய்கிறார்கள். பெண் கைதிகளுக்கு மாற்று நடவடிக்கை செய்ய முடியாவிட்டால் அவர்களின் மூன்று வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு குழந்தைக் காப்பிடமும், மூன்று வயதிற்கு மேற்பட்ட குழந்தைகளுக்கு குழந்தை வளர்ப்பிடமும் வேலூர் மாநில மகளிர் சிறையில் தொடங்கப்பட்டுள்ளன.

கைதிகளின் நலத்திற்கும் கலாச்சாரத்திற்கும் ஒழுக்கச் சீரமைப்பிற்காகவும் ஒவ்வொரு மத்திய சிறையிலும், கலாச்சாரக் குழு அமைக்கப்பட்டுள்ளது. இந்த கலாச்சாரக் குழு கைதிகளின் நன்மைக்காக காலமுறையாக பல கலை நிகழ்ச்சிகளை வெளியில் உள்ளவர்களைக் கொண்டு சிறைக்குள் நடத்துகிறது.

கைதிகளுக்கென சிற்றுண்டி விடுதி (canteen) ஒன்று கோவை, மதுரை, சேலம், வேலூர், சென்னை மத்திய சிறைகளில் திறக்கப்பட்டது. தங்களது சொந்தக் கணக்கில் பணமுள்ள கைதிகள் சிற்றுண்டி விடுதியைப் பயன்படுத்த அனுமதிக்கப்படுகிறார்கள். இதுபோன்ற இதர மத்திய சிறைகளிலும் சிற்றுண்டி விடுதிகளைத் திறக்கும் செயற் குறிப்புகள் பரிசீலனையில் உள்ளன.

## XIV. நன்னடத்தைப்பணி.

நன்னடத்தைப்பணி சிறைத் துறையின் ஒரு பிரிவாகும். நன்னடத்தைப் பணியானது, கைதிகளின் வீட்டு நிலைமை முதலியன பற்றி விசாரிப்பது. பிணையப்பத்திரத்தின் பேரில் முன்விடுதலையாகும் குற்றவாளிகளையும் நல்வினக்கத்தின் பேரில் பார்ஸ்டல் பள்ளியிலிருந்தும். சீர்திருத்தப் பள்ளியிலிருந்தும் ஒழுக்கக் கண்காணிப்பாளர் இல்லத்திலிருந்தும் விடுதலை செய்யப்பட்டவர்களைக் கண்காணிப்பது முதலியன ஆகும். சிறைத்துறை தலைவரின் கட்டுப்பாட்டிற்கும், கண்காணிப்பிற்கும் உட்பட்ட நன்னடத்தைப் பணிப்பிரிவு, தலைமை



நன்னடத்தைக் கண்காணிப்பாளரின் நேரடிப் பொறுப்பில் உள்ளது. ஒரு மண்டல நன்னடத்தை அலுவலர், மற்றும் ஒரு பதிவு எழுத்தரை கொண்ட ஒரு ஆராய்ச்சி பிரிவு தலைமை நன்னடத்தை கண்காணிப்பாளரின் அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு குற்றவாளிகள் நன்னடத்தைச் சட்டம் 1958 ஆம் ஆண்டு குற்றவாளிகள் நன்னடத்தைச் சட்டம் எனப்படும் மத்திய சட்டம் ஒன்றினால் மாற்றப்பட்டது. இம் மத்தியச் சட்டம் சென்னை மாநகரம், செங்கல்பட்டு மாவட்டத்தில் 1962 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 1 ஆம் தேதியிலிருந்தும், தமிழ்நாடு முழுவதும் 1964 ஆம் ஆண்டு மே மாதம் 1 ஆம் தேதியிலிருந்தும் செயலுக்குக் கொண்டுவரப்பட்டது. இச்சட்டம் நீதிமன்றங்களுக்கு குற்றவாளிகளை அவர்கள் செய்த குற்றம் முதல் தடவையாக இருந்தாலும். அக்குற்றத்திற்கான தண்டனை இரண்டு வருடங்களுக்கு மேற்பட்டு அல்லது அபராதம் அளிக்கக்கூடிய அல்லது அபராதத்துடன் தண்டனை அளிக்கக் கூடிய வகையில் இருந்தால், தக்க எச்சரிக்கையின் பேரில் நன்னடத்தை கண்காணிப்பில் விடுதலை செய்ய அதிகாரம் அளித்துள்ளது. இம்மத்திய சட்டத்திலுள்ள விதித்துறைகள் தாராளமாகவும், தற்கால சீர்திருத்த நிர்வாகத்திற்கு ஏற்றதாகவும் உள்ளன.

## XV. விடுதலை பெற்ற சிறைவாசிகள் உதவிச் சங்கத்தின் செயல் முறைகள்.

விடுதலை பெற்ற கைதிகள் உதவிச் சங்கம் விடுதலை பெற்ற கைதிகளுக்குப் புதுவாழ்வு அமைத்துக் கொடுக்கவும், குற்றம் புரிந்து தண்டிக்கப்பட்டவர்களுக்கு தேவையாக உள்ள பலவித உதவிகள் செய்து கொடுக்கவும், அவர்கள் வழக்கமாக குற்றம் புரிந்து வருவதைத் தடுக்கவும், இளங்குற்றவாளிகளைத் திருத்தவும் அவர்களது நல்வாழ்வுக்கு வேண்டிய சட்ட திட்டங்களை வகுத்து ஆவன செய்வதற்கான நல்ல நோக்கத்துடன் 1921-ல் அமைக்கப்பட்டது. இச் சங்கம், சிறு தொழில்கள் நடத்துவதற்கும், கருவிகள் மற்றும் தேநீர் கெண்டி, தையல் இயந்திரங்கள் வாங்குவதற்காகவும் உதவித் தொகையை கொடுக்கிறது. மேலும் புகைவண்டி, பேருந்து செலவிற்காக உதவித் தொகையும், தொழில் செய்வதற்கும், துணைக் கருவிகள் வாங்குவதற்கும் கடன்களையும் வழங்குகிறது. மேலும் வேலை வாங்கித் தருவதற்கும், வழக்காட சட்ட உதவிகள் செய்வதற்கும், ஓய்வூதியங்கள் பெறுவதற்கும் உதவி செய்கிறது. ஆடைகள், மூக்குக் கண்ணாடி ஆகியவற்றையும் வழங்குகிறது.

இச்சங்கம் சென்னையிலுள்ள மத்திய குழுவாலும், மாவட்டங்களில் மாவட்டக் குழுக்களினாலும் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. தற்பொழுது, தமிழ்நாட்டில்10 மாவட்டக் குழுக்கள் உள்ளன. அவை மத்திய குழுவின் ஆலோசனைகளின்படி செயல்பட்டு வருகின்றன. இம் மாவட்டக் குழுக்களுக்கு மாவட்ட ஆட்சியர்கள் அலுவல் முறையில் தலைவர்களாக இருக்கிறார்கள். சென்னையில் உள்ள மத்தியக் குழுவில் மொத்தம் 30-க்குக் குறையாத தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் உள்ளனர். இந்த உறுப்பினர்களில் சிறைத் துறைத் தலைவர், காவல் துறைத் தலைவர், நகர காவல் துறை ஆணையாளர், பெருநகர்த் தலைமை மாஜிஸ்ட்ரேட், சென்னையிலுள்ள மத்திய சிறைக் கண்காணிப்பாளர், தலைமை நன்னடத்தைக் கண்காணிப்பாளர், ஆண்கள் காப்பகக் கண்காணிப்பாளர் ஆகியோர் அலுவல் முறையில் உறுப்பினர்கள் ஆவர். அரசு மத்தியக் குழுவிற்கு ஐந்து உறுப்பினர்களுக்கு மேற்படாமல் நியமனம் செய்ய விதி முறையும் உள்ளது. மாவட்ட குழுக்களின் ஐம்பது உறுப்பினர்களுக்கு ஒரு நியமனதாரர் என்ற வீதத்தில் பத்து மாவட்டக் குழுக்கள் அவற்றின் நியமனதாரர்களை மத்திய குழுவிற்கு அனுப்புகின்றன.

ஆண்டுதோறும் நடைபெறும் பொதுக் குழு கூட்டத்தைத் தவிர காலாண்டுக்கு ஒரு முறை கூட்டங்கள் நடத்தப்படுகின்றன. வழக்கமான அலுவல்களைக் கவனிக்க தலைமைச் செயலாளர் அல்லது அரசு உள்துறைச் செயலாளர் இக் கூட்டங்களுக்கு தலைமை வகிக்கின்றார். அதே போன்று மாவட்டக் குழுக்கள் மாவட்ட ஆட்சியாளர் தலைமையில் கூட்டங்களை நடத்துகின்றன.

சிறையிலிருந்து விடுதலை பெற்றவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பதற்காக சென்னையிலுள்ள மத்திய குழுவும், மதுரையிலுள்ள மாவட்டக் குழுவும் தொழிற் பிரிவுகளை நடத்துகின்றன. சென்னையிலுள்ள மத்தியக் குழுவைச் சார்ந்த தச்சுப்பட்டறையில் சராசரியாக மாதமொன்றுக்கு 20 நபர்களுக்கு பணி அளிக்கப்படுகிறது.

பொதுமக்களிடமிருந்து கட்டணமாகவும், நன்கொடையாகவும் ரூபாய் 6,000 வசூலிக்கவேண்டும் என்ற நிபந்தனையின் பேரில் நிர்வாகச் செலவை சமாளிப்பதற்காக தமிழ்நாடு விடுதலையான கைதிகளின் உதவிச் சங்கத்திற்கு அரசு இது வரையில் ஆண்டுதோறும் ஆண்டு மானியமாக ரூபாய் 12,000 இரண்டு சம தவணைகளில் வழங்கியது. பொதுமக்களிடமிருந்து கட்டணமாகவும், நன்கொடையாகவும் சங்கம் ஆண்டுதோறும் ரூபாய் 9,000 வசூலிக்க வேண்டும் என்ற நிபந்தனையின் பேரில் விடுதலையான கைதிகளின் நலத்தை கருத்திற்கொண்டு ரூபாய்



9,000 வீதம் இரண்டு சம தவணைகளில் வழங்கும் வண்ணம் அரசு 1980–81 முதல் ஆண்டு மானியத்தை ரூபாய் 12,000லிருந்து 18,000க்கு உயர்த்தி சென்ற மார்ச் மாதம் ஆணை பிறப்பித்திருக்கிறது. அதிகரித்துள்ள இந்த நிதி உதவியினால் சங்கம் தகுதியுள்ள விடுதலையான கைதிகள் மறுவாழ்வு பெற கணிசமான உதவியை அளிக்கக்கூடும் என்று நம்பப்படுகிறது. சங்கம் செய்யும் இந்த உதவியைத் தவிர விடுதலைப் பெற்ற தகுதியுள்ள நீண்டகால ஆயுள் கைதிகள் தச்சு, தையல், நெசவு, புத்தகம் கட்டுதல், கருமார் தொழிலுக்கு வேண்டிய கருவிகளை அல்லது பசு, எருமை போன்ற கறவையினங்களை வாங்குவதற்கு மத்திய சிறை கண்காணிப்பாளர் உதவி புரியும் வண்ணம் அரசு தற்போது ஒரு நிதியுதவி திட்டத்தை வகுத்து உள்ளது. இத்திட்டத்தின்கீழ் ரூபாய் 200லிருந்து 600 வரை நிதியுதவி அளிக்கப்படுகிறது. வழங்கப்பட்ட நிதியுதவி, விடுதலை பெற்ற கைதிகள் நல்வாழ்வு பெற வேண்டி மேற்படி தொகை எளிய தவணைகளில் வசூலிக்கப்படும்.

## XVI. சென்னை மாநகரம், செங்கற்பட்டு மாவட்டத்திலிருந்து தண்டனை பெறும் குற்றவாளிகளை அடைப்பதற்கென்று புழல் (செங்குன்றம்) கிராமத்தில் ஒரு புதிய சிறையைக் கட்டுதல்.

செங்குன்றத்திற்கு அருகாமையில் புழல் கிராமத்தில் இத்துறைக்குச் சொந்தமான நிலத்தில் நவீன வசதிகளைக் கொண்ட புதிய சிறை ஒன்று கட்டும் திட்டம் அரசின் தீவிர பரிசீலனையில் உள்ளது. தற்போது சென்னை மாநகரத்திலுள்ள மத்திய சிறையில் காவலில் வைக்கப்பட்டுள்ள மற்றும் விசாரணைக் கைதிகளை அடைப்பதற்கு போதிய இட வசதி இன்மையால், புதிய சிறையை கட்டுவது மிக அத்தியாவசியமாகிறது. இத்திட்டத்திற்கு வேண்டிய நிதியை ஒதுக்குவது அவசியம் என ஏழாவது நிதிக் குழுவிடம் தெரிவிக்கப்பட்டு (1979–84) ஆண்டுக்கான திட்ட காலத்தில், புதிய சிறைகள் கட்டுவதற்கான, மூலதன செலவு வகையின்கீழ் ரூபாய் 862 இலட்சம் வழங்குவதற்கு ஏழாவது நிதிக்குழு பரிந்துரைத்துள்ளது. புழலில் புதிய சிறையை அமைக்க தோராயமாக ஆகும் செலவு ரூபாய் 10 கோடி என மதிப்பிடப்படுகிறது.

புதிதாக கட்டப்படவிருக்கும் சிறைக்கு தண்ணீர் கொண்டு வரும் பிரச்னையே இத்திட்டத்தை நிறைவேற்றுவதில் தடையாக உள்ளது. சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் வடிகால் வாரியம் புதிய சிறைக்கென புழல் ஏரியிலிருந்து 2.5 இலட்சம் லிட்டர் குடிநீர் வழங்கிட தற்போது இசைந்துள்ளது. கட்டம்

[1980 ஜூலை 14

படஉள்ள சிறைக்கான திட்டங்கள் பொதுப்பணித்துறை கட்டிட நிர்மாணரால் தயாரிக்கப்பட்டுள்ளது. இது பரிசீலனையில் இருந்து வருகிறது. சிறை கட்டுமானப் பணி விரைவில் துவங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தற்போது மாவட்டத் தலைமையிடங்களில் உள்ள கீழ்க்கண்ட துணை சிறைகளை தனித் துணைச் சிறைகளாக மாற்றும் திட்டம் ஏழாவது நிதிக்குழுவினால் பரிந்து உரைக்கப்பட்ட நிதி உதவியை வைத்து படிப்படியாக நிறைவேற்ற திட்டமிடப்பட்டுள்ளது.

1. துணைச்சிறை, வேலூர், வடாற்காடு மாவட்டம்.
2. துணைச்சிறை, கடலூர், தென்னாற்காடு மாவட்டம்.
3. துணைச்சிறை, செங்கை, செங்கை மாவட்டம்.
4. துணைச்சிறை, ஈரோடு, பெரியார் மாவட்டம்.
5. துணைச்சிறை, நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம்.
6. துணைச்சிறை, தர்மபுரி, தர்மபுரி மாவட்டம்.
7. துணைச்சிறை, நாகப்பட்டினம், தஞ்சாவூர் மாவட்டம்.

முதலாவது நடவடிக்கையாக வேலூர், செங்கற்பட்டு மற்றும் கடலூர் துணைச் சிறைகளை தனித்துணைச்சிறையாக மாற்றுவது குறித்து பரிசீலனை செய்து வருகிறது. சேலம் மாவட்டத்திலுள்ள மேட்டூரில் புதிதாக துணைச் சிறை ஒன்றைக் கட்டும் செயற் குறிப்பு 1982–83-ல் பரிசீலனை செய்யப்படும்.

## XV. சிறை சீர்திருத்தக் கமிஷன்.

சிறை நிர்வாகத்திலும் மற்றும் கைதிகளின் நிலைமைகளிலும் மேற்கொள்ளப்படவேண்டிய மேம்பாட்டு பணிகள் பற்றி கவனிக் கவும், சரியான சீர்திருத்தங்கள் குறித்து கருத்து கூறவும், அரசு 1978 மார்ச்சு இறுதியில் கமிஷன் ஒன்றை அமைத்தது. இக்கமிஷனுக்கு திரு. ஆர். எல். நரசிம்மன், ஐ.சி.எஸ். (ஓய்வு) பாட்னா உயர்நீதி மன்றத்தின் ஓய்வு பெற்ற தலைமை நீதிபதி தலைமை வகித்தார். டாக்டர் வெங்கோபராவ், உளவியல், அறிஞர், மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனை, திரு. எஸ்.எம். டயாஸ், ஐ.பி.எஸ். (ஓய்வு) ஆகியோர் இக்குழுவின் இதர உறுப்பினர்களாக இருந்தனர். 189[illegible]ம் ஆண்டு சிறைகள் சட்டம், 1900-ம் ஆண்டு சிறைக் கைதிக[illegible]ம் ஆகியவற்றி லுள்ள குறைகளை நடைமுறை அனுப[illegible] அடிப்படையில் ஆராய்ந்தறிந்து இச்சட்டங்களின் எந்த [illegible]களை மாற்ற வேண்டும் என்பது குறித்தும் எத்தெந்த [illegible]ங்களை மாற்ற



1980 ஜூலை 14]

வேண்டும் என்பது குறித்தும் பரிவுரை செய்ய வேண்டுமென்றும் அரசியல் கைதிகளை தடுப்புக் காவலில் வைத்தல், அவர்களை நடத்துதல் பற்றிய சட்டங்கள் விதிகளை ஆராய்ந்து அவசிய மாயின் அவற்றைத் திருத்துவதற்குத் தகுந்த பரிவுரைகளை செய்ய வேண்டுமென்றும் கமிஷன் கேட்டுக் கொள்ளப்பட்டது. தற்போதுள்ள சிறைக் கட்டிடங்களை பார்வையிட்டு அங்குள்ள வசதி குறைவுகளை களைந்து சிறை வசதிகளை மேம்படுத்தத் தேவையான பரிவுரைகளையும் அளிக்குமாறு கேட்டுக் கொள்ளப் பட்டது. கமிஷன் தனது அறிக்கையை 28–4–79 அன்று அரசுக்கு அனுப்பியது. இந்த அறிக்கையின் நகல்கள் சட்ட மன்றத்தின் இரு அவைகளின் முன்பும் 6–11–1979 அன்று வைக்கப்பட்டன.

கமிஷனின் அறிக்கை 3 தொகுதிகள் கொண்டதாகும். 40 அத்தியாயங்கள் உள்ளன. சிறை நிர்வாகத்தைத் தவிர சீர் திருத்தப் பள்ளிகள், மகளிர் கண்காணிப்பு இல்லங்கள், இளங் குற்றவாளிகள் கண்காணிப்பு போன்ற பல கூறுகள் குறித்தும் முக்கியமான பரிவுரைகள் 178 இதில் அடங்கியிருந்தன. இவற்றில் 30 பரிவுரைகள் தனியாக சமூகநலத் துறையில் பரிசீலனை செய்யப்பட்டு வருகின்றன. எஞ்சிய 148 பரிவுரைகள் உள்துறை தொடர்பானவையாகும். 48 பரிவுரைகள் குறித்து தகுந்த ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய பரிவுரைகள் பரிசீ லனையில் உள்ளன. அவை குறித்து விரைவில் முடிவெடுக்கப் படும். கமிஷன் அளித்த சில முக்கியமான பரிவுரைகள் மீது எடுத்த முடிவுகளின் சுருக்கம் இணைப்பு III-ல் கொடுக்கப்பட் டுள்ளன.

## XVIII. நிறைவேற்றக் கருதியுள்ள திட்டங்கள்.

1980–81-ம் ஆண்டில் கீழ்க்கண்ட திட்டங்கள் நிறை வேற்றப்பட உள்ளன :–

| | | செலவு ரூபாய். |
|---|---|---|
| 1 | மத்திய சிறைகள், மாநில மகளிர் சிறை, வேலூர் ஆண்கள் பிற்காப்பு இல்லம், சென்னை சிறை வாசிகளின் நலனுக்[illegible] 35 எம்.எம். மற்றும் 16 எம். எம். திரைப்படக் கருவிகளை வழங்குவது. | 1,75,000 |
| 2 | வேலூர் மாநில ம[illegible] சிறை, சிறைவாசிகளின் பயனுக்கென திற[illegible]வெளிக் கலையரங்கம் கட்டுதல் மற்றும் [illegible]றையினுள் உள்ள அலு வலகத்திற்கு நீர்[illegible]ழிப்பிடம் அமைத்தல். | 19,000 |


| | 1979-80 | 1980-81 | 1981-82 | 1982-83 | 1983-84 | மொத்தம். |
|---|---|---|---|---|---|---|
| 3 சிறைவாசிகளுக்கு கூடுதல் படுக்கைகள் மற்றும் பாத்திரங்கள் வழங்குவது. | 3 | 4 | 5 | 6 | 7 | 25 |
| 4 ஊதியம் வழங்கும் திட்டத்தை விரிவுபடுத்தல் குறைந்த தண்டனை பெற்ற சிறைவாசிகளுக்கு சிறு தொழில்கள் மற்றும் சிறைவாசிகளுக்கு சிறைக்குள்ளேயே தேனீர் விடுதி. | 2 | 20 | 26 | 27 | 28 | 103 |
| மொத்தம் .. | 10 | 122 | 163 | 203 | 250 | 748 |

(ரூபாய் இலட்சம்.)

| | |
|---|---|
| ஐந்தாண்டிற்கான மொத்த ஒதுக்கீடு .. .. | 7,48 |
| மத்திய அரசிடமிருந்து கிடைக்கக்கூடிய நிதி உதவி | 6,31 |
| 1979—84 ஆண்டு கால அளவில் மாநில அரசு ஏற்றுக் கொள்ள வேண்டிய செலவுத் தொகை .. .. | 1,17 |

## XX. சிறைச்சாலை நடைமுறை நூலைத் திருத்துதல்:

தமிழ்நாட்டில் சிறைச்சாலைகள் நிர்வாகம் மேற்பார்வை.
கைதிகள் தொடர்பான சட்டங்களின் கீழ் இயற்றப்பட்ட விதிகள்
மாநில சிறைச்சாலை நடைமுறை நூலில் கூறப்பட்டுள்ளன,
இவ்விதிகள் கடைசியாக 20 ஆண்டு காலத்திற்கு முன் திருத்தி
யமைக்கப்பட்டன. 1979-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 9-ம் நாள்
புது டில்லியில் நடைபெற்ற தலை[illegible]ச் செயலாளர்கள் மாநாட்
டில், மத்திய அரசு தயாரித்த மா[illegible]சாலை நடைமுறை
நூல் விதித்துறைகளையொட்டி, [illegible]சிறைச்சாலை நடை
முறை நூலைத் திருத்த வேண்டு[illegible]பரிதும் வலியுறுத்தப்
பட்டது. இதன் அடிப்படையிலும் [illegible]978-79-ம் ஆண்டு தமிழ்
நாடு சிறைச்சாலைகள் சீர்திருத்த[illegible] பரிந்துரைகளின்
அடிப்படையிலும், மாநிலச் சிறைச்சா[illegible]நடைமுறை நூலில்
உரிய சட்டப்படிக்கான விதிகள் முழுவ[illegible]ம் சீர்திருத்த நிர்
வாகத்தின் தற்காலப் போக்கைப் பிரதிப[illegible]ம் வகையில் திருத்
தும் பணி மேற்கொள்ளப்பட்டு நடைபெ[illegible] வருகிறது.



(vii) மதுரை மாவட்டம்.

கிளைச் சிறை—

49 திண்டுக்கல்.
50 கோடைக்கானல்.
51 நிலக்கோட்டை.
52 பழனி.
53 பெரியகுளம்.
54 திருமங்கலம்.
55 உசிலம்பட்டி.
56 உத்தமபாளையம்.
57 வேடசந்தூர்.
58 மேலூர்.

(viii) கன்னியாகுமரி மாவட்டம்.

கிளைச் சிறை—

59 தக்கலை.
60 குழித்துறை.

(ix) இராமநாதபுரம் மாவட்டம்.

கிளைச் சிறை—

61 அருப்புக்கோட்டை.
62 முதுகுளத்தூர்.
63 பரமக்குடி.
64 இராமநாதபுரம்.
65 சாத்தூர்.
66 சிவகங்கை.
67 ஸ்ரீவில்லிபுத்தூர்.
68 திருப்பத்தூர்.
69 திருவாடானை.
70 விருதுநகர்.



(x) திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

கிளைச் சிறை—

71 அரியலூர்.
72 செயங்கொண்டம்.
73 குளித்தலை.
74 லால்குடி.
75 மணப்பாறை.
76 முசிறி.
77 பெரம்பலூர்.
78 துறையூர்.
79 கரூர்.

(xi) புதுக்கோட்டை மாவட்டம்.

கிளைச் சிறை—

80 புதுக்கோட்டை.
81 அறந்தாங்கி.
82 கீரனூர்.
83 திருமயம்.

(xii) திருநெல்வேலி மாவட்டம்.

கிளைச் சிறை—

84 அம்பாசமுத்திரம்.
85 கோவில்பட்டி.
86 நாங்குநேரி.
87 சங்கரன்கோவில்.
88 தூத்துக்குடி.
89 ஸ்ரீவைகுண்டம்.
90 தென்காசி.
91 திருச்செந்தூர்.

(7) பாற்பண்ணை செயல்பட்டு வருகின்ற சிறைகளில் சாண எரி வாயு தயாரிக்கும் தொழிற்கூடத்தை நிறுவுதல் ;

(8) சிறைப் பணியாளர்கள் தங்களுடைய அலுவல்களை ஒழுங்காக நிறைவேற்றுவதைக் கண்காணிக்க சிறைக் கண்காணிப் பாளர்கள் பல்வேறு நேரங்களில் அடிக்கடி சிறைக்கு வருவதைக் கவனிக்க சிறைத்துறைத் தலைவர் நடவடிக்கை எடுத்தல் ;

(9) சிறையின் ஒவ்வொரு அறைக்குள்ளும் நல்ல குடி தண்ணீர் வசதிக்கு வகை செய்தல் ;

(10) சோதனையிடுகையில் கண்ணியமாகவும் அவர்களது தனிமைக்கு யாதொரு பங்கம் நேரிடக்கூடாது என்பதன் அவசி யத்தையும் வலியுறுத்தி சார்நிலை அதிகாரிகள் அனைவருக்கும் சிறைத்துறைத் தலைவர் உத்தரவுகள் பிறப்பித்தல் ;

(11) விடுதலை செய்யப்பட்ட கைதிகளை, சமூகப் பணி யாளர்கள், சமுதாயப் பொது நலனில் அக்கறையுள்ள நபர்கள் முதலியவர்களின் உதவியுடன் ஆதாயம் தரத்தக்க வேலை வாய்ப்புகளில் அமர்த்தும் பொருட்டு, நன்னடத்தைத் தலைமை கண்காணிப்பாளர், தமிழ்நாடு விடுதலை செய்யப்பட்ட கைதிகள் உதவிச் சங்க கௌரவச் செயலாளர் ஆகியோரைக் கலந்தாலோ சித்து சிறைத்துறைத் தலைவர் நடவடிக்கை எடுத்தல் ;

(12) கைதிகள் அனைவரின் நலனுக்காக, உடற் பயிற்சி அல்லது யோகாசனப் பயிற்சி நடத்தவும், கடவுள் வழிபாடு நடத்தவும் ஏற்பாடுகள் செய்வதற்கு சிறைத்துறைத் தலைவர் நடவடிக்கை எடுத்தல்;

(13) பாளையங்கோட்டை, கடலூர், திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களிலுள்ள மத்திய சிறைகளில் சிற்றுண்டி விடுதிகள் தொடங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் ;

(14) சீர்திருத்தக் கல்விக்கென்று அமைக்கப்பட்ட நிறுவனங் களில் சீர்திருத்த கல்வியில் பார்ஸ்டல் பள்ளிப் பணியாளர் களுக்குப் (ஆசிரியர்களுக்கு) பயிற்சியளித்தல் ;

(15) மத்தியச் சிறையிலுள்ள கைதிகளின் நலனுக்காக வசதி உள்ள இடங்களில் புலனடக்கி மனதை ஒருமுகப்படுத்தித் தியானம் செய்வதற்குப் பயிற்சியளிப்பதற்கான வாய்ப்புகள் நல்குதல். இத்திட்டத்தின் கீழ் இன்னும் இதனை மத்தியச் சிறை யில் கொண்டு வரவில்லை ;

(16) அரசு அங்கீகரித்த ஏதேனும் ஒரு தொழிலில் கல்வித் தகுதி அல்லது திறமையில் தேர்ச்சி பெற்றுள்ள கைதிகளுக்கு தண்டனைக் குறைப்பு செய்தல் ;



(17) 'பரோல் விடுப்பில்' கைதிகளை விடுதலை செய்ய வும், தண்டனைக் காலம் முடிவடைவதற்கு முன்னர் விடுதலை 'செய்யவும் காவல்துறை அறிக்கை அவசியம் என்னும் நடை முறையை விட்டுவிட்டு, அதற்குப் பதிலாக குற்றவாளிகள் நன்னடத்தை (பொறுப்பு) அதிகாரியின் அறிக்கையை ஆதாரமாகக் கொண்டு அத்தகைய விடுதலையை அனுமதித்தல் ;

(18) சிறையின் அன்றாட நிர்வாகத்தில் அவர்கள் பங்கு பெறவும் கைதிகளிடையே சுமுகமான நல்லுறவு மனப்பான்மை வளர்க்கவும், சிறந்த குடிமகனாக உருவாக்க அவர்களை ஊக்கு விக்கவும், கைதிகளின் நன்மைக்காக, சோதனை அடிப்படை யில், முதலில் மதுரை, மத்திய சிறையில் கைதிகள் பஞ்சாயத்து குழு அமைத்தல் ;

(19) அரசியல் கைதிகள் என்பதற்கான பொருள் விளக் கத்தை வரையறுத்தலும் 'ஏ' வகுப்பு கைதிகளுக்கு அனுமதித் துள்ள சிறப்புச் சலுகைகளை இவர்களுக்கும் வழங்குதல்;

(20) பாதுகாப்புத் துறையில் தகுந்த வேலைகள் சில வற்றில் பார்ஸ்டல் பள்ளியிலிருந்து அனுப்பப்பட்ட மாணவர் களைச் சேர்த்துக் கொள்ளுமாறு இந்திய அரசாங்கத்தைக் கேட்பதற்கு உறுதியான முயற்சிகள் எடுத்துக் கொள்ளுதல் ;

(21) சிறை/சீர்திருத்த நிர்வாகத்திற்குப் பொறுப்பு வகிக் கும் அதிகாரி ஒவ்வொருவருடைய முன்னிலையிலும் ஒரு கைதி எவ்விதம் நடத்தப்பட வேண்டுமென்பதை எடுத்துக் காட்டும் விதத்தில்—

> " கைதி பாதுகாக்கப்பட வேண்டியவர் ;
> அடிமையாகக் கருதலாகாது என்பதைக் கவனத்தில் கொள்க "

என்ற வாசகம் எழுதிய அட்டையை வைக்க நடவடிக்கை மேற் கொள்ளுதல்.

(22) கைதிகள் சொந்தமாக சமயப் புத்தகங்கள் இரண்டும், ஏனைய அங்கீகரிக்கப்பட்ட புத்தகங்கள் பத்தும், பாடப் புத்தகங் கள் எத்தனை வேண்டுமானாலும் வைத்திருக்கவும், அவர்கள் குடும்ப உறுப்பினர் எவருடைய நிழற்படம் அல்லது அவர்கள் சார்ந்த சமயத்தின் தெய்வ உருவப் படங்கள் வைத்திருக்கவும், கைதிகள் தங்கள் சொந்தச் செலவில் நிழற்படங்கள் எடுத்துத் தங்கள் நெருங்கிய உறவினர்களுக்கு அனுப்பவும் அனுமதித்தல்.

## இணைப்பு III.

[805 ம்பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

### கூட்டுறவுத்துறையின் 1980–81 ஆம் ஆண்டிற்கான கொள்கை விளக்கம்.

கூட்டுறவு இயக்கம் தமிழ்நாட்டில் மக்களின் பல்வகைப்பட்ட பொருளாதார நடவடிக்கைகளில், குறிப்பாக வேளாண்மைக் கடன் மற்றும் இடுபொருட்களை வழங்குதல், விளை பொருட்களை விற்பனை செய்தல், இன்றியமையாத நுகர் பொருட்களை விநியோகித்தல் ஆகியவற்றில் மக்களுக்கு உதவி வருகிறது.

2. 1979–80-ல் அடைந்த முன்னேற்றம் பற்றிய கண்ணோட்டம்.—1979–80-ல் குறுகிய காலக் கடன்களும் மத்திய காலக் கடன்களும் 42.70 கோடி ரூபாய் அளவிற்கு வழங்கப்பட்டன. நீண்ட காலக் கடன்கள் 8.85 கோடி ரூபாய் அளவிற்கு வழங்கப் பட்டன. இவையன்றி, நகைக் கடன்கள் 111.42 கோடி ரூபாய் அளவிற்கு வழங்கப்பட்டன. 65.83 கோடி ரூபாய் மதிப்புள்ள விவசாய விளை பொருட்கள் விற்கப்பட்டன. 140.92 கோடி ரூபாய் மதிப்புள்ள நுகர் பொருட்கள் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களால் சில்லறை விற்பனை செய்யப்பட்டன. '' ஒவ் வொரு கிராமத்திலும் ஒரு அங்காடி '' என்னும் திட்டத்தின் கீழ் மார்ச்சு 1980 வரை, 13.66 கோடி ரூபாய் மதிப்புள்ள இன்றி யமையாத நுகர் பொருட்கள் கிராம மக்களுக்கு விநியோகிக்கப் பட்டன.

3. வளர்ச்சித் திட்டங்களுக்கான செலவு.—கூட்டுறவு வளர்ச் சித் திட்டங்களுக்காக அரசு 1979–80-ல் செய்த செலவு, அதற்கு முந்தைய ஆண்டான 1978–79-ல் செய்த செலவு, நடப்பு 1980–81 ஆம் ஆண்டிற்கான மதிப்பீடுகள் ஆகியவற்றின் விவரங் கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—







| திட்டங்களின் விவரங்கள். (1) | 1978–79-ல் செலவு. (2) | 1979–80-க்கான மதிப்பீடு. (3) | 1979–80-ல் செலவு. (4) | 1980–81-க்கான மதிப்பீடு. (5) |
|---|---|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்.) | | | |
| அ. மாநில திட்டப் பணிகள்— | | | | |
| 1. கடன் கூட்டுறவுச் சங்கங்கள் .. | 4,45,19 | 3,38.34 | 11,86.49 | 2,92.42 |
| 2. விற்பனைக் கூட்டுறவுச் சங்கங்கள் .. .. | 6.58 | 16.20 | 15.40 | 34.[illegible] |
| 3. நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் .. .. | 1,53.14 | 1,61.17 | 1,60.28 | 1,94.92 |
| 4. ஏனைய வகைக் கூட்டுறவுச் சங்கங்கள் .. | 19.58 | 21.14 | 30.14 | 4.60 |
| 5. கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி | 0.27 | .. | .. | 0.40 |
| 6. பழங்குடியினர் பகுதிகள் துணைத் திட்டம் .. | 9.30 | 30.00 | 4.01 | 28.41 |
| அ. மாநில திட்டப் பணிகளின் மொத்தம் .. | 6,34.06 | 5,66.85 | 13,96.32 | 5,55.37 |
| ஆ. மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள், மத்திய அரசுத்துறை திட்டங்கள், தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் நிதியுதவி அளிக்கும் திட்டங்கள்.. | 5,46.00 | 1,15.67 | 5,06.22 | 108.53 |
| திட்டப் பணிகளின் மொத்தம் .. | 11,80.06 | 6,82.52 | 19,02.54 | 6,63.90 |
| இ. திட்டத்தில் சேராத பணிகள் .. | 22,34.41 | 22·37 | 47,88.12 | 27.53 |
| மொத்தம் .. | 34,14.47 | 7,04.89 | 66,90.66 | 6,91.43 |

(xiii) தஞ்சாவூர் மாவட்டம்.

கிளைச் சிறை—

92. கும்பகோணம்.
93. மாயூரம்.
94. மன்னார்குடி.
95. நாகப்பட்டினம்.
96. நன்னிலம்.
97. பட்டுக்கோட்டை.
98. பாபநாசம்.
99. சீர்காழி.
100. திருத்துறைப்பூண்டி.
101. திருவையாறு.
102. திருவாரூர்.
103. தரங்கம்பாடி.
104. திருவிடைமருதூர்.

(xiv) தருமபுரி மாவட்டம்.

கிளைச் சிறை—

105. ஓசூர்.
106. அரூர்.
107. தருமபுரி.
108. கிருஷ்ணகிரி.
109. ஊத்தங்கரை.





## இணைப்பு III.

(XVII இனத்தைக் காண்க.)

தமிழ்நாடு சிறைகள் சீர்திருத்தக் குழுவின் முக்கியமான பரிந்துரைகள் சிலவற்றின் மீது எடுத்த முடிவுகளின் சுருக்கம் வருமாறு :—

(1) சிறைகளில் பணிபுரிகின்ற மருத்துவ அதிகாரிகள் உடல் நலம், துப்புரவு, சுகாதாரம் முதலிய பணிகளில் தற்போது கவனம் செலுத்துவதைக் காட்டிலும் அதிகக் கவனம் செலுத்துமாறு உத்தரவுகள் பிறப்பித்தல் ;

(2) ஒவ்வொரு ‘ ரிமாண்டு ’ கைதிகள், விசாரணைக் கைதிகளின் சிறைக் காவல் கால அளவை ஆய்வு செய்து உரிய காலத்திற்கு மேல் கைதிகளைச் சிறையில் வைக்கும் நிகழ்வுகளை நீதிமன்றங்களின் கவனத்திற்குக் கொண்டுவருமாறு நீதித்துறை அதிகாரிகள் அனைவருக்கும் (அலுவல் முறையில் பார்வையிடுபவர்கள்) சென்னை, உயர்நீதி மன்றம் உத்தரவுகள் பிறப்பித்தல் ;

(3) ‘பி’ வகுப்பு கைதிகள் அனைவருக்கும், புதுக்கோட்டை பார்ஸ்டல் பள்ளியில் தங்கி இருப்பவர்களுக்கும் தென்னைநார் திணிக்கப்பட்ட தலையணைகள் வழங்குதல் ;

(4) திடீரென்று அதிக அளவிலான கைதிகள் வருவதால் ஏற்படக்கூடிய நெருக்கடி நிலைமைகளைச் சரிக்கட்டவும், மேக நோய் வல்லுநர்களைக் கொண்டு அந்நோய் பரவுவதைக் கட்டுப்படுத்தவும் உள்ளூர் மருத்துவ மனைகளிலிருந்து மருத்துவ அதிகாரிகளின் பணியினைப் பயன்படுத்திக் கொள்ளவும், தொழுநோயால் பாதிக்கப்பட்டுள்ள தண்டனைக் கைதிகளுக்கு மருத்துவ உதவி வழங்கும் பொருட்டு அருகிலுள்ள மருத்துவக் கல்லூரியிலிருந்து தொழுநோய் தணிப்பு வல்லுநரின் பணியினைப் பயன்படுத்திக் கொள்ளவும் மருத்துவக் கல்வி இயக்குநர், மருத்துவ பணிகள்-குடும்ப நலத்துறை இயக்குநர் நடவடிக்கை எடுத்தல் ;

(5) சிறை நிர்வாகம் சம்பந்தப்பட்ட அடிப்படை கொள்கைகளை மனதில் வைத்துக் கொள்ள வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி அனைத்து சார்நிலை பணியாளர்களுக்கும் சிறைத் துறைத் தலைவர், சீர்திருத்த நிர்வாக இயக்குநர் சுற்றறிக்கைகள் மூலம் உத்தரவுகள் பிறப்பித்தல் ;

(6) கைதிகளுக்குள்ள உரிமைகள், தண்டனை விதிக்கத் தக்க குற்றங்கள் ஆகியவை பற்றி சிறைக்குள் பொருத்தமான இடங்களில் அச்சிடப்பெற்ற அறிவிப்புகளைக் காட்டி வைத்தல் ;

## கூட்டுறவு விவசாயக் கடனுதவி.

### குறுகியகால, மத்தியகால, நீண்டகாலக் கடன்கள்.

4. முகவுரை.—இம்மாநிலத்தில் கூட்டுறவு இயக்கத்தின் மைய அமைப்பாக 4,742 கிராம விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்கள் விளங்குகின்றன. இச் சங்கங்கள், குறுகிய காலக் கடன்களையும், மத்திய காலக் கடன்களையும் வழங்கி வருகின்றன. விவசாயம் குறித்த தேசீய ஆணைக்குழு அம்மாநிலத்தின் குறுகிய கால, மத்திய காலக் கடன் தேவைகள் ஏறத்தாழ 310 கோடி ரூபாய் ஆகுமென மதிப்பிடப்பட்டுள்ளது. அத்தொகையில் 40 சதவீதத்தை 1977–78-ல் கூட்டுறவுச் சங்கங்கள் வழங்கின. ஆறாவது திட்ட இறுதியில் இதை 60 சதவீதத்திற்கு உயர்த்த திட்டமிடப்பட்டது. ஆனால், தவணை தவறிய கடன்கள் இதற்கு முன்பு இல்லாத அளவிற்கு அதிகரித்ததாலும், அதன் காரணமாக புதுக் கடன்கள் வழங்குவது குறைந்ததாலும் கடன் தேவைகளில் கூட்டுறவுச் சங்கங்கள் நிறைவு செய்த பங்கு 1978–79-ல் 33 சதவீதத்திற்கும், 1979–80-ல் 14 சதவீதத்திற்கும் குறைய நேரிட்டது. விவசாயிகளுக்குத் தேவைப்படும் நீண்ட காலக் கடன்களை 223 கூட்டுறவு நிலவள வங்கிகள் அளித்து வருகின்றன.

5. விவசாயிகளைக் கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினர்களாக ஆக்குதல்.—இம்மாநிலத்தில் உள்ள விவசாயக் குடும்பங்களில் ஏறத்தாழ முக்கால் பங்கு விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்களில், 31–5–1980-ல் இருந்த நிலவரப்படி, சேர்க்கப்பட்டுள்ளது. இது பற்றிய விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன :—

| | விவசாயக் குடும்பங்களின் எண்ணிக்கை (விவசாய நிலவுடமைகள்படி). | |
|---|---|---|
| | எல்லா விவசாயக் குடும்பங்கள். | சிறு மற்றும் மிகச் சிறு விவசாயிகளின் குடும்பங்கள். |
| 1. மொத்த குடும்பங்களின் எண்ணிக்கை. | 53.14 இலட்சம் | 42.05 இலட்சம். |
| 2. கூட்டுறவுச் சங்கங்களில் சேர்க்கப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கை | 40.80 இலட்சம் | 30.99 இலட்சம். |
| 3. சேர்க்கப்பட்ட குடும்பங்களின் சதவீதம் .. | 77 சதவீதம். | 74 சதவீதம். |

ஆறாவது திட்ட கால இறுதியில் மொத்த குடும்பங்களையு கூட்டுறவு இயக்கத்திற்குள் கொண்டுவர திட்டமிடப்பட்டுள்ள



6. கடன் வழங்குதல்.—கூட்டுறவுச் சங்கங்கள், கீழ்க்கண்ட விவரங்கள்படி, 1979–80-ல் 51.55 கோடி ரூபாய் அளவிற்கு விவசாயக் கடன்களை வழங்கியுள்ளன :—

| ஆண்டு. | குறுகிய கால மற்றும் மத்திய காலக் கடன்கள். | நீண்ட காலக் கடன்கள். | மொத்தம். |
|---|---|---|---|
| | (ரூபாய் கோடியில்.) | | |
| (1) | (2) | (3) | (4) |
| 1977–78 .. | 127.13 | 12.28 | 139.41 |
| 1978–79 .. | 102.65 | 11.24 | 113.89 |
| 1979–80 .. | 42.70 | 8.85 | 51.55 |

அண்மை ஆண்டுகளில் கூட்டுறவுச் சங்கங்கள் வழங்கிய கடனளவு குறைந்ததற்கு முக்கிய காரணம், உறுப்பினர்களின் தவணை தவறிய கடன் தொகை பெருமளவில் அதிகரித்தது ஆகும். 1974–75-லிருந்து 1977–78 வரை மாநிலத்தின் பல பகுதிகளில் வறட்சி அல்லது வெள்ளம் ஏற்பட்டதும், கூட்டுறவுக் கடன்களைத் திருப்பிக் கொடுப்பதை 1977–78-லிருந்து விவசாயிகள் எதிர்த்து வந்ததும் தவணை தவறிய கடன்கள் அதிகரித்ததற்குக் காரணங்கள் ஆகும்.

7. தவணை தவறிய கடன்கள் பற்றிய விவரங்கள் பின்வருமாறு :—

| | கேட்பில் தவணை தவறிய விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்கள். | கடன்களின் சதவீதம் பிரதம நிலவள கூட்டுறவு வங்கிகள். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 30–6–1978-ல் | 32.9 | 67.1 |
| 30–6–1979-ல் | 52.5 | 80.8 |
| 31–5–1980-ல் | 76.1 | 89.5 |

தவணை தவறிய கடன்கள் அதிகரித்து வந்ததால், பல மத்திய கூட்டுறவு வங்கிகள் தாம் மாநிலக் கூட்டுறவு வங்கியிடமிருந்து வாங்கிய கடன்களுக்கு ஈடாக பிரதம சங்கங்களிடமிருந்து தமக்கு வரவேண்டிய தவணை வறாத கடன்களை வேண்டிய அளவிற்கு ஈடு காண்பிக்க இயலாத நிலை ஏற்பட்டது. இதனால் ரிசர்வ் வங்கியினால் அனுமதிக்கப்பட்ட கடனைப் பெற்று விவசாயிகளுக்கு சாகுபடி செலவிற்காக புதிய பயிர்க்

கடன்களை இம்மத்தியக் கூட்டுறவு வங்கிகள் வழங்க
இயலவில்லை. நிலவள வங்கிகளைப் பொருத்த வரையில்,
தவணை தவறிய கடன்கள் இருந்ததின் காரணமாக ஆறு
வங்கிகள் மட்டுமே கடன் வழங்கும் தகுதியை முழுமையாகப்
பெற்றிருந்தன. 48 வங்கிகள் குறைந்த அளவு கடன்
வழங்கும் தகுதியைப் பெற்றிருந்தன: ஏனைய 169 வங்கிகளும்
கடன் வழங்கும் தகுதியை இழந்திருந்தன.

8. விவசாயிகளின் பிரச்சினைக்களை ஆராய தமிழக
அரசால் அமைக்கப்பட்ட ஒரு குழு சில பரிந்துரைகளை வழங்கியது.
இவற்றின்படி., கூட்டுறவுக் கடன்கள் பெற்றிந்த விவசாயி
களுக்கு அரசு சில சலுகைகளை 1979-ம் ஆண்டு மே மாதத்
தில் அறிவித்தது. இச் சலுகைகள், 1978-ம் ஆண்டு ஜூன்
திங்கள் 30-ஆம் தேதியில் நிலுவை நின்ற எல்லா தவணை
தவறிய விவசாயக் கடன்களுக்கும் 1979-ஆம் ஆண்டு ஜூன்
திங்கள் 30-ஆம் தேதி வரை அபராத வட்டியை தள்ளுபடி
செய்வது, 1977–78-ல் கட்டப்பட்ட அபராத வட்டியைத்
திருப்பித் தருவது, ஏற்கனவே மூன்று அல்லது ஐந்தாண்டுக் கடன்
களாக மாற்றப்பட்டு 1978 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 30-ஆம்
தேதியில் நிலுவையிலிருந்த கடன்களின் மீது சாதாரண வட்டியை
தள்ளுபடி செய்தது. அனைத்து மத்திய கால மாற்றுக் கடன்
கள் மற்றும் தவணை நீட்டித்த மத்திய கால மாற்றுக் கடன்
களின் மேல் வட்டி விகிதத்தை 13.8-லிருந்து சிறு விவசாயி
களுக்கு 10.5 ஆகவும் இதர விவசாயிகளுக்கு 12 ஆகவும்
1979-ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 1-ஆம் தேதி முதல்
குறைத்தது முதலியனவாகும். அன்றியும் 1978-ஆம் ஆண்டு
ஜூன் திங்கள் 30-ஆம் தேதியில் நிலுவை நின்ற இரண்டு
அல்லது அதற்கு மேற்பட்ட மத்தியக்கால மாற்றுக் கடன்களை
யும் தவணை நீடித்த மத்திய கால மாற்றுக் கடன்களையும்
ஒருங்கிணைத்து, கீழ்க்கண்டவாறு மூன்று முதல் ஆறு ஆண்டு
களுக்குள் திருப்பிச் செலுத்தவும், முதல் தவணைத் தொகை
1979–80-ல் ஆரம்பிக்கவும் அனுமதி அளிக்கப்பட்டது.

| கடன்களின் எண்ணிக்கை. | திருப்பிச் செலுத்துவதற்கான காலம். |
|---|---|
| 2 | 3 ஆண்டுகள் |
| 3 | 5 ,, |
| 4 | 6 ,, |

வட்டி சலுகை அளிப்பதற்காக 15 மத்தியக் கூட்டுறவு [illegible]
களுக்கும் தமிழ்நாடு கூட்டுறவு மாநில நிலவள வங்[illegible]
அரசு வட்டியில்லா முன்பணமாக 16 கோடி ரூபாய் தந்[illegible]



இது பின்னால் மானியமாக சரிக்கட்டப்படவேண்டியது வட்டி
சலுகைக்காக மானியம் வழங்குவது கடன்தாரர்கள் தமது
பாக்கி கடன்களைத் திருப்பி செலுத்துவதைப் பொருத்தது.
இதற்காக கடைசி நாள் 1979-ஆம் ஆண்டு செப்டம்பர் 30-ஆக
நிர்ணயிக்கப்பட்டது. பின்னர், இக்காலம் 1980-ஆம் ஆண்டு
ஜனவரி திங்கள் 15-ஆம் தேதி வரை நீடிக்கப்பட்டது.
இதன்படி அபராத வட்டி மற்றும் வட்டி மானியமாக 5. 7
கோடி ரூபாய், விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்களிலும்,
கூட்டுறவு நிலவள வங்கிகளிலும் உள்ள கடன்தாரர்களில் 5.19
இலட்சம் பேர்களுக்கு வழங்கப்பட்டது. கடன்களை ஒருங்
கிணைக்கும் சலுகை 51.99 கோடி ரூபாய் அளவிற்கு 2.32
இலட்சம் கடன்தாரர்களுக்கு வழங்கப்பட்டது.

9. மேற்கண்ட சலுகைகள் வழங்கிய பின்னும்,
தவணை தவறிய கடன்களை வசூலிப்பதில் முன்னேற்றம்
தொடர்ந்து குறைவாகவே இருந்தது. ரிசர்வ் வங்கி அனுமதி
த்த கடனைக் பெற்றுபுதுக் கடன்களை வழங்க ஏதுவாகும்
பொருட்டு தவணை தவறாத கடல்களை ஈடுகட்டுவதில்
உள்ள குறையை நீக்குவதற்காகவும், தவணைத் தேதியில்
செலுத்தத் தவறிய தொகையை செலுத்தவதற்காகவும்
ஒன்பது மத்தியக் கூட்டுறவு வங்கிகளுக்கு வழிவகை முன்பண
மாக அரசு 27.56 கோடி ரூபாய் அனுமதித்தது. இதில்
20.12 கோடி ரூபாயை எட்டு மத்திய கூட்டுறவு வங்கிகள்
பெற்று பயனடைந்தன.

10. 1980–81-ல் குறுகிய கால மத்திய காலக் கடன்களை
172 கோடி ரூபாய் அளவிற்கு வழங்க முதலில் திட்டமிடப்
பட்டது. ஆனால் உறுப்பினர்களின் தவணை தவறிய கடன்
கள் அதிகரித்து. அதனால் கூட்டுறவுச் சங்கங்கள் புதுக்
கடன்களை வழங்க இயலாதிருப்பதால், திட்டமிட்ட அளவிற்
குக் கடன்கள் வழங்குவது சாத்தியமில்லை. கடன்களை
வசூலிப்பதில் 1980–81-ல் கணிசமான முன்னேற்றம் இருக்கும்
என்ற நம்பிக்கையில், 132 கோடி ரூபாய் அளவிற்குக் கடன்
கள் வழங்க தற்பொழுது திட்டமிடப்பட்டுள்ளது.

11. நிலவள வங்கிகளைப் பொறுத்த வரையில், தவணை
தவறிய கடன்கள் அதிகமாக இருந்ததின் காரணமாகக் கடன்
வழங்கும் தகுதியை இழந்திருந்த 169 வங்கிகளில், 38 வங்கி
களுக்கு அரசு 40.16 இலட்சம் ரூபாய் அளவிற்குப் பங்குத்
தொகை செலுத்தியது; இதனால் இவ்வங்கிகள் ஓரளவு கடன்
வழங்கும் தகுதியைப் பெற்றன. சிறப்புத் திட்ட பகுதிகளில்
[illegible]படும் கடன் வழங்கும் தகுதியை இழந்த பிரதம நிலவள
[illegible] மேற்படி திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட சிறு
[illegible]யிகளுக்குக் கடன் வழங்குவதை ரிசர்வ் வங்கி அனுமதித்
[illegible]து. இது ரிசர்வ் வங்கி விவசாய மறுநிதி வளர்ச்சிக்

கழகம் ஏற்கத்தக்க ஒரு மறுசீரமைப்புத் திட்டத்தை அவ் வங்கிகள் செயல்படுத்த வேண்டும் என்ற நிபந்தனைக்குட் பட்டதாகும். அரசு அமைத்த ஒரு செயற்குழு நீண்டகால கூட்டுறவுக் கடன் அமைப்பைப் பற்றிய பல பிரச்சினைகளை ஆராய்ந்து அவற்றைத் தீர்ப்பதற்கான யோசனைகளைத் தெரிவித்துள்ளது. வரும் மாதங்களில் தவணை கடந்த கடன்கள் பற்றிய நிலையில் முன்னேற்றம் இருக்கும் என்ற நம்பிக்கையில், 1980–81-ல் 11 கோடி ரூபாய் அளவிற்கு நீண்ட காலக் கடன்கள் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

12. சிறு பாசனத் திட்டங்களுக்குக் கடன்கள் வழங்கு வதற்கான வாய்ப்புகள் குறைந்து வருவதால், நிலவள வங்கிகள் வணிகப் பயிர்களான தென்னை, முந்திரி, காப்பி, மற்றும் ஏனைய தோட்டப் பயிர்களின் சாகுபடி, பட்டுப்புழு வளர்த்தல், டிராக்டர் மற்றும் இயந்திரக் கலப்பைகள் வாங்கு தல், பண்ணை வீடுகள் மற்றும் கால்நடைக் கொட்டகைகள் அமைத்தல், பால் பண்ணைத் திட்டம், கோழி வளர்த்தல், ஆடு வளர்த்தல் போன்ற இதர நோக்கங்களுக்குக் கடன்கள் வழங்கவும் மின்வாரியம், மீன்வளக் கழகம், உணவுப்பொருள் வழங்கும் கழகம் போன்ற பொதுத்துறை நிறுவனங்களுக்குக் கடன் கொடுக்கவும் முயற்சி செய்து வருகின்றன.

13. விவசாய மறுநிதி வளர்ச்சிக் கழகத் திட்டங்கள். — 1968–69-ஆம் ஆண்டிலிருந்து விவசாய மறுநிதி வளர்ச்சிக் கழகத்தின் உதவியுடன் திட்டங்களை வகுப்பதின் மூலம், விவசாய வளர்ச்சிக்கு கடன் வழங்குவதற்காக பகுதிவாரியான வளர்ச்சித் திட்டம் மேற்கொள்ளப்பட்டது. 43.93 கோடி ரூபாய் செவிலான 85 சிறுபாசன திட்டங்களும். 15.29 கோடி ரூபாய் செலவிலான 65 சிறு பாசனமில்லாத பிற திட்டங்களும் தற்பொழுது நிறைவேற்றப்பட்டு வருகின்றன. 4,937 நீர் இறைக்கும் மின்விசை இயந்திரங்களுக்கு மின் இணைப்பு கொடுப்பதற்காக, மாநில நிலவள வங்கி தமிழ் நாடு மின்வாரியத்திற்கு 1976–77-லிருந்து இதுவரை 2.29 கோடி ரூபாய் கடன் வழங்கியுள்ளது.

14. நலிந்த பிரிவினர்களுக்கு கடன் வழங்குதல். —விவசாயி களில் நலிந்த பிரிவினர்களுக்குக் கடன் வழங்குதவதில் தனி கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. இந்திய ரிசர்வ் வங்கி யின் வழிமுறையின்படி மொத்தக் கடன் தொகையில் 20 சதவீதம் நலிந்த பிரிவினர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டும். ஆனால் தமிழகத்திலுள்ள விவசாய சேவைக் கூட்டுறவுச்சங்கங்கள் 1979–80-ல் நலிந்த பிரிவினர்களுக்கு, அதாவது சொந்தமாகவோ அல்லது குத்தகைக்கோ ஐந்து ஏக்கருக்கும் குறைவாக சாகுபடி செய்பவர்களுக்கு, 49 சதவீதம், அதாவது 20.87 கோடி ரூபாயைக் கடனாக வழங்கியுள்ளன. 1980–81-ம் ஆண்டு



இறுதிக்குள் இதை 56 சதவீதத்திற்கு உயர்த்தக் கருதப் பட்டுள்ளது. நீண்டகாலக் கடன்களில் 29 சத வீதம், அதாவது 2.57 கோடி ரூபாய் 1979–80-ல் சிறு விவசாயிகளுக்குக் கொடுக் கப்பட்டுள்ளது. இதை 50 சதவீதத்திற்கு உயர்த்த நடவடிக்கை க மேற்கொள்ளப்பட்டுள்ளன.

15. உள் நிதி வசதிகள்.—மேன்மேலும் அதிக அளவில் விவசாயக் கடன்களை வழங்க ஏதுவாக, விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்கள் (சென்னை மாநகரிலுள்ளது தவிர மற்ற) மத்தியக் கூட்டுறவு வங்கிகள், மாநில கூட்டுறவு வங்கி ஆகியவற்றின் உள்நிதி வசதிகள் போதிய அளவிற்கு வளர்க்கப் பட்டுள்ளன. அவற்றின் பங்கு மூலதனம் (அரசு பங்கு மூலதனம் நீங்கலாக) 1978–79 இறுதியில் 59.59 கோடி ரூபாயாக இருந்தது. 1979–80 இறுதியில் 60.70 கோடி ரூபாயாக அதிகரித்தது. அவற்றின் மொத்த வைப்புத் தொகை 1978–79 இறுதியில் 267.24 கோடி ரூபாயாக இருந்தது. 1979–80 80 இறுதியில் 312.92 கோடி ரூபாயாக உயர்ந்தது.

16. அரசு பங்கு மூலதனம்.—கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்கள் போதுமான அளவு கடன் பெறுவதற்குத் தகுதி உடை யனவாக இருப்பதற்காக இவற்றின் பங்கு மூலதனத்தில் அரசும் முதலீடு செய்து வருகிறது. நிலவள வங்கிகள் நகரவங்கிகள் உட்பட இக்கடன் கூட்டுறவுச் சங்கங்களின் பங்கு மூலதனத்தில் அரசின் மொத்த முதலீடு 1980-ம் ஆண்டு மார்ச் திங்கள் 31-ம் நாளன்று 28 கோடி ரூபாயாக இருந்தது. இந்திய ரிசர்வ் வங்கி யிடமிருந்து உதவி பெற்று, 1980–81-ம் ஆண்டிலும் அரசு இச் சங்கங்களில் முதலீடு செய்யும்.

17. மாநில நிலவள வங்கிக்கு உதவி.—மாநில நிலவள வங்கி கடனீட்டுப் பத்திரங்கள் வாயிலாக நிதி திரட்டுகிறது, மாநில அரசு, மத்திய அரசு, விவசாய மறுநிதி வளர்ச்சிக் கழகம், இன்னும் பிற நிறுவனங்கள் இப்பத்திரங்களை வாங்கி நிதி வழங்குகின்றன. இவ்வகைப் பத்திரங்களின் பேரில் மாநில அரசு [illegible] வழங்கி, 1980-ம் ஆண்டு மார்ச் திங்கள் 31-ம் நாளன்று நிலுவையாக இருந்த தொகை 15.28 கோடி ரூபாயாகும். 1980–81-ஆண்டில் மாநில அரசு கடனீட்டுப் பத்திரங்களுக்கு நிதி வழங்குவதற்காக, 1.25 கோடி ரூபாய் வரவு- செலவுத் திட்டத் [illegible] ஒதுக்கப்பட்டுள்ளது. மாநில நிலவள வங்கியிலிருந்து வழி [illegible] முன் பணமான 7 கோடி ரூபாயையும் வட்டியையும் [illegible]லிப்பதை மாநில அரசு தள்ளி வைத்துள்ளது. மேலும், [illegible]79-ம் ஆண்டு மார்ச் திங்கள் 31-ம் நாள்வரை காலம் முடிந்த, [illegible]னீட்டுப் பத்திரங்களின் பேரில் அரசுக்குத் திருப்பிச் செலுத் [illegible]பட வேண்டியிருந்த 5.15 கோடி ரூபாயை மாநில நிலவள

## கூட்டுறவு பதப்படுத்துதல்

27. அரசிடமிருந்து பங்கு மூலதனமாகவும், கடனாகவும், உதவி பெற்று கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் பதப்படுத்தும் பிரிவுகளை விற்பனை வசதிக்குத் துணையாக நிறுவியுள்ளன. 30 அரிசி ஆலைகள், 24 கடலை உடைக்கும் இயந்திரங்கள், 18 பருத்தி விதை நீக்கும் இயந்திரங்கள், 10 எண்ணெய் ஆலைகள் உட்பட 88 பதப்படுத்தும் பிரிவுகள் உள்ளன.

28. தென்னாற்காடு மாவட்டத்தில் விருத்தாசலத்திலும், கோயம்புத்தூர் மாவட்டத்தில் ஒண்டிப்புத்தூரிலும் நிறுவப்பட்டுள்ள இரு சூரியகாந்தி விதை எண்ணெய் ஆலைகளும், சூரிய காந்தி விதை போதிய அளவிற்குக் கிடைக்காததால் கடலை எண்ணெய் தயாரித்து வருகின்றன. இவ்விரு ஆலைகளும் 1979–80-ல், 2,729 டன் கடலை எண்ணெய்த் தயாரித்துள்ளன. தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் வட ஆற்காடு மாவட்டத்தில் திருவண்ணாமலையில் 77·10 இலட்சம் ரூபாய் செலவில் நிறுவிய கடலை எண்ணெய் ஆலை 19–2–1980-ல் உற்பத்தி துவங்கியது. அது 31–5–1980 வரையில் 325 டன் கடலை எண்ணெயைத் தயாரித்தது.

29. திருத்தப்பட்ட அரிசி அரவைத் தொழில் (முறைப்படுத்தலும், உரிமம் வழங்குதலும்) சட்டப்படி, பழைய அரிசி ஆலைகள் நவீனப்படுத்தப்பட வேண்டும். ஆலைகளை நவீனப்படுத்துவதற்காக, பங்கு மூலதனமாகவும் கடனாகவும் 1977–78-லிருந்து அரசு நிதி உதவி தருகிறது. 31–5–1980 வரையில், 11 ஆலைகளை நவீனப்படுத்துவதற்காக, 4.16 இலட்சம் ரூபாய் தரப்பட்டுள்ளது. நடப்பு (1980–81) ஆண்டில் 12 ஆலைகளை நவீனப்படுத்த நிதி உதவி தரப்படும்.

30. விதை மேம்பாட்டுத் திட்டம்.—கோயம்புத்தூர் மாவட்டத்தில் துடியலூர் கூட்டுறவு விவசாய சேவைச் சங்கமும், 9 கூட்டுறவு விற்பனைச் சங்கங்களும் சேர்ந்து, 170.50 இலட்சம் ரூபாய் செலவில், நெல் இதர தானியங்கள், பருத்தி, வேர்க்கடலை, பயறு வகைகள் ஆகியவற்றில் தரமான விதைகளைப் பெருக்குவதற்காக விதை மேம்பாட்டுத் திட்டம் ஒன்றை செயல்படுத்தி வருகின்றன. 11 இடங்களில் 23,000 ஏக்கர் நிலத்தில் 25,0[illegible] டன் விதைகள் இத்திட்டத்தின்மூலம் உற்பத்தி செய்யப்படும். துடியலூர் விவசாய சேவைச் சங்கமும், 5 கூட்டுறவு விற்பனைச் சங்கங்களும் 93.50 இலட்சம் ரூபாய் செலவில் இத்திட்டத்தின் முதற் கட்டத்தைச் செயற்படுத்தி வருகின்றன. இத்திட்டத்தின்கீழ், அரசு பங்குத் தொகை 9.35 இலட்சம் ரூபாயுடன் 65.45 இலட்சம் ரூபாயும் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் முதற் கட்டம் இவ்வாண்டு டிசம்பர் [illegible] நிறைவேறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.







## கிடங்கு வசதி.

31. கிடங்கு கட்டுதல்.—கூட்டுறவுச் சங்கங்கள் ஆண்டொன்றுக்கு 150/120 டன் கொள் திறனுடைய 200 கிராமக் கிடங்குகளை கிராம அளவிலும், 1,000 டன் கொள்திறனுடைய 5 விற்பனைக் கிடங்குகளை மண்டி அளவிலும் கட்டும்திட்டத்தை மேற்கொண்டுள்ளன. கிராமக் கிடங்குக் 40,000 ரூபாயும் விற்பனைக் கிடங்குக்கு 3 இலட்சம் ரூபாயும் நிதி உதவி தரப்படுகிறது. இதில் 40 சதவீதம் மானியமாக மாநில அரசிடமிருந்தும் 60 சதவீதம், கடனாக தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்திடமிருந்து தரப்படுகிறது. இரசாயன உரங்கள், இன்றியமையாத நுகர் பொருட்கள், மற்றும் விவசாய விளை பொருட்களைச் சேமித்து வைத்து விற்பனை செய்ய இக்கிடங்குகள் பயன்படுத்தப்படுகின்றன. 31–5–1980-ல் [illegible]7 கிராமக் கிடங்குகளும், 236 விற்பனைக் கிடங்குகளும் [illegible] இலட்சம் டன் மொத்தக் கொள் திறனுடன் இருந்தன. 498 கிராமக் [illegible]000 டன் மொத்தக் கொள்திறன் கொண்ட கிடங்குகளும் 16 விற்பனைக்கிடங்குகளும் கட்டப்பட்டு வருகின்றன. நடப்பு ஆண்டில் 200 கிராமக் கிடங்குகளையும் 5 விற்பனைக் கிடங்குகளையும் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது. இக்கிடங்குகள் கட்டுவதைக் கூட்டுறவுப் பதிவாளர் அலுவலகத்தில் மேற்பார்வைப் பொறியாளர் (கட்டுமானம்) தலைமையிலான கட்டுமானப் பிரிவு மேற்கொண்டுள்ளது. கட்டடம் பொருட்களின் விலையும், கூலியும் பெருமளவில் உயர்ந்துள்ளதை ஒட்டி, கிராமக் கிடங்கு ஒன்றுக்குக் கொடுக்கப்படும் நிதி உதவியை [illegible]0,000 ரூபாய்க்கும், விற்பனைக் கிடங்கு ஒன்றுக்கு 3·40 இலட்[illegible] ரூபாய்க்கும் உயர்த்தும் யோசனை தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தின் பரிசீலனையில் உள்ளது.

32. குளிர்சாதன கிடங்கு வசதி.—உருளைக்கிழங்கு ஆப்பிள் போன்ற அழுகும் பொருட்களைச் சேமித்து வைப்பதற்காக [illegible]0 டன் கொள்திறனுடைய குளிர்சாதன சேமிப்பு கிடங்கு [illegible] தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் நிறுவி[illegible]ளது. மேலும் நான்கு குளிர்சாதன சேமிப்புக் கிடங்குகளை [illegible]வொன்றும் 20 இலட்சம் ரூபாய் செலவில் 1980–81-ல் நிறுவ [illegible]மிடப்பட்டுள்ளது. பயிரிடுபவர்களிடமிருந்து காய்கறி[illegible]யும், பழங்களையும் வாங்கி, நகர்ப்புறங்களில் விற்று பயிரி[illegible]ரும் நுகர்வோரும் நன்மை பெறச் செய்வது இந்தக் குளி[illegible] கிடங்குகள் அமைப்பதன் நோக்கமாகும்.

## நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள்.

[illegible] நுகர்பொருட்கள் விநியோகம்.—3,479 பிரதமக் கூட்டு[illegible] நகர்ப்புறங்களிலும், கிராமப்புறங்களிலும் [illegible] சாலைகள் [illegible] வருகின்றன. இவற்றில் மாணவர்களுக்குப் பாட[illegible] குறிப்பேடுகள், மற்ற எழுது பொருட்கள் [illegible] மாணவர்கள் [illegible] கல்லூரி மற்றும் உயர்நிலைப்பள்ளி [illegible] மட்டுமேயான 18 பண்டகசாலைகளும் [illegible]

25. இரசாயன உரங்களின் விநியோகம்.—4,392 விவசாய சேவைச் சங்கங்களும் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களின் 104 சில்லறை விற்பனை நிலையங்களும் இரசாயன உரங்களை விநியோகிக்கின்றன. உறுப்பினர்களுக்குப் பயிர்க் கடன்களில் ஒரு பகுதியாகவும், உறுப்பினர்களுக்கும், உறுப்பினரல்லாதாருக்கும் ரொக்கத்திற்கும் இவை விநியோகிக்கப்படுகின்றன. 1979—80-ல் 25.82 கோடி ரூபாய் மதிப்புள்ள 1.85 இலட்சம் டன் உரங்கள் விநியோகிக்கப்பட்டன. 1978—79-ல் விநியோகிக்கப்பட்டது 38.83 கோடி ரூபாய் மதிப்புள்ள 2·53 இலட்சம் டன் உர விற்பனையில் குறைவேற்பட்டதற்குக் காரணம், பெருமளவிலான தவணை தவறிய கடன்களால் சங்கங்கள் வழங்கிய பயிர்க் கடன்கள் குறைந்தது ஆகும். 1980—81-ல் 75.00 கோடி ரூபாய் மதிப்புள்ள 5.00 இலட்சம் டன் விநியோகிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

26. விற்பனை வளர்ச்சிக்கான ஒருங்கிணைந்த திட்டம்.—கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் ஒவ்வொன்றும் படிப்படியாக ஒரு கோடி ரூபாய் அளவிற்கு விற்று முதல் செய்ய ஏதுவாகும் பொருட்டு, ஒருங்கிணைந்த திட்டம் ஒன்று நிறைவேற்றப்பட்டு வருகிறது. இதன் கீழ், ஆறாவதுத் திட்ட காலத்தில் ஒவ்வொரு ஆண்டிலும் ஐந்து சங்கங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவற்றில் ஒவ்வொன்றுக்கும் கீழ்க்கண்டவாறு நிதி உதவி தரப்படும்.

(1) விற்பனைக் களம் கட்ட (40;60 விகிதத்தில்) மானியமும், கடனுமாக 2 இலட்சம் ரூபாய்.

(2) லாரி வாங்க மத்தியக் கூட்டுறவு வங்கியிலிருந்து கடன் பெறுவதற்காகத் தொடக்க நிலை உதவித் தொகையாக மானியம் 25,000 ரூபாய்.

(3) தரம் பிரிக்கும் கருவிகள் வாங்க மானியம் 10,000 ரூபாய்.

(4) விற்பனைக்காகப் பொதுவில் சேர்க்கப்படும் விளை பொருட்களின் மதிப்பில் ஒரு சதவீதம் என்ற கணக்கில் உறுப்பினர்களுக்கு ஊக்கப் பணமாகக் கொடுக்க மானியம் 2,000 ரூபாய்.

1979—80-ல் ஐந்து சங்கங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, நிதி உதவி தரப்பட்டது. நடப்பு ஆண்டில் (1980—81) மேலும் ஐந்து சங்கங்கள் இத் திட்டத்தின் கீழ் உதவி பெறும்.

சாலைகளும், தொழிற்சாலை மற்றும் தோட்டத் தொழிலாளர் களுக்கென 268 பண்டகசாலைகளும் அடங்கும். மாநிலத்தில் 29 கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகளும் செயல் பட்டு வருகின்றன. அவை, பிரதமப் பண்டக சாலைகள் இல்லாத அல்லது பிரதமப் பண்டகசாலைகள் செவ்வையாகச் செயல்படாத இடங்களில்சில்லறை விற்பனைக்காக 801 கிளைகளைத் தொடங்கி யுள்ளன. நுகர்வோரின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக பிரதமப் பண்டகசாலைகளும், 313 கிளைகளைத் தொடங்கி யுள்ளன. நுகர்வோர் கூட்டுறவு பண்டகசாலைகள் 1979–80-ல் செய்த சில்லறை விற்பனை மதிப்பு 140·92 கோடி ரூபாய் ஆகும். 1978–79-ல் இது 137·42 கோடி ரூபாய் 1980–81-ல் 180 கோடி ரூபாய் மதிப்பிற்குச் சில்லறை விற்பனை செய்யத் திட்டமிடப் பட்டுள்ளது.

34. மத்திய அரசிடமிருந்து நிதி உதவி.—வளர்ச்சி மற்றும் வேலை வாய்ப்புகளுள்ள நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களின் தீவிர வளர்ச்சிக்காக, மத்திய அரசு பொறுப்பேற்கும் நுகர்வோர் திட்டங்களின்கீழ், மத்திய அரசு 1971–72 முதல் நிதி உதவி அளித்து வருகிறது. 1971–72 முதல் 1979–80 வரையில் கீழ்க் காணும் திட்டங்களுக்காக நிதி உதவி அளிக்கப்பட்டுள்ளது.

(1) 8 சிறப்பங்காடிகளை நிறுவுதல் ; ஒரு சிறப்பங்காடியை விரிவு படுத்துதல்; சிறப்பங்காடிகளின் கிளைகளை நிறுவுதல்.

(2) 38 பெரிய அளவிலான சில்லறை விற்பனை அங்காடி களை நிறுவுதல்; ஒரு பெரிய அளவிலான சில்லறை விற்பனை அங்காடியை விரிவு படுத்துதல்.

(3) நலிந்த பிரிவினருக்காகவும் தொழிற்சாலைத் தொழி லாளருக்காகவும் 60 சிறு கிளைகளை ஏற்படுத்துதல், மாநகரங் களிலும், நகர்களிலும் உள்ள குடிசை பகுதிகளில் வாழும் நலிந்த பிரிவினரின் மிகவும் நலிந்தவருக்கென்று 95 மிகச் சிறு கிளைகளை அமைத்தல்.

(4) 2 மண்டல நுகர்பொருள் விநியோக நிலையங்களை கோயம்புத்தூரிலும், சென்னையிலும் முறையே கோயம்புத்தூர் மாவட்ட மத்தியக் கூட்டுறவு விநியோக விற்பனைச் சங்கமும் தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையமும் நிறுவுதல்.

(5) 2 கிளை மற்றும் விநியோகப் பிரிவுகளை மதுரையிலும் திருச்சியிலும் தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையம் நிறுவுதல்.

(6) பல்கலைக் கழக, கல்லூரி மாணவர்களுக்காக பொதுச் சமையற்கூடங்களை அமைத்தல்.

(7) பனியன் தொழிற்சாலை ஒன்றை திருப்பூரில் கோயம் புத்தூர் மாவட்ட மத்தியக் கூட்டுறவு விநியோக விற்பனைச் சங்கமும், பீங்கான் பாண்டப் பிரிவு ஒன்றை விருத்தாசலத்தில் பாலிதீன் பைகள் செய்யும் பிரிவு ஒன்றை சென்னையில் தமிழ் நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையமும் நிறுவுதல்.



(8) 6 கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலை களை மறுசீரமைத்தல்.

மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்களின் கீழ் நுகர் வோர் கூட்டுறவுச் சங்கங்கள் 1979–80-ல் 93·58 இலட்சம் ரூபாய் அளவிற்கு நிதி உதவி பெற்றுள்ளன. 1978–79-ல் பெற்றது 86·08 இலட்சம் ரூபாய்.

35. சிறப்பங்காடிகளும் சிறப்புச் சிற்றங்காடிகளும்.—நுகர் வோர் பண்டகசாலைத் திட்டங்களைத் தொடங்கும் முனைப் புத் திட்டத்தின் கீழ் இம்மாநிலத்தில் 21 சிறப்பங்காடிகள் செயல்பட்டு வருகின்றன. நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களின் வணிகத்தைப் பெருக்க சிறப்புச் சிற்றங்காடிகள் எனப்படும் 106 நவீன சில்லறை அங்காடிகளைக் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகளும் நன்கு செயல்படும் பிரதமப் பண்டகசாலைகளும் திறந்துள்ளன. 1979–80 இறுதியில் அனு மதிக்கப்பட்ட ஒரு சிறப்பங்காடி திருவண்ணாமலையில் 14 சிறப்புச் சிற்றங்காடிகள் இதர இடங்களிலும் விரைவில் திறக்கப் படும். மத்திய அரசு நிதி உதவி அனுமதித்து உத்தரவு பிறப் பித்தவுடன், திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் இருதயபுரத்தில் ஒரு சிறப்புச் சிற்றங்காடி திறக்கவும், வட ஆற்காடு மாவட்டத் தில் செய்யாறிலும் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் சுப்பரமணிய புரத்திலும் உள்ள கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலை களின் கிளைகளைச் சிறப்பு சிற்றங்காடிகளாக மாற்றியமைக்க வும் திட்டமிடப்பட்டுள்ளது.

36. நலிந்த பிரிவினர்களுக்கு நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங் களின் பணி.—பின் தங்கிய பகுதிகளில் உள்ள நலிந்த பிரிவினர் தொழிற்சாலைத் தொழிலாளர்கள் முதலியோருக்காக 10 சிறு கிளைகளையும் மாநகரங்களிலும் நகரங்களிலும் குடிசைப்பகுதி யில் உள்ள நலிந்த பிரிவினருள் மிகவும் நலிந்த பிரிவினருக்கென 10 மிகச் சிறு கிளைகளையும் (மக்கள் அங்காடிகள்) தொடங்க 1979–80 மத்திய அரசு நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிதி உதவி தந்துள்ளது. தற்பொழுது 52 சிறு கிளைகளும் [illegible] மிகச்சிறு கிளைகளும் செயல்பட்டுவருகின்றன. [illegible] க்கிளைகள் 1978–79-ல் 1·04 கோடி ரூபாய் அளவிற்கு விற்பனை செய்திருக்க, 1979–80-ல் 2·83 கோடி ரூபாய் அளவிற்கு விற்பனை செய்தன. 1979–80-ல் அனுமதிக்கப்பட்ட 8 சிறு கிளைகளும், 7 மிகச் சிறு கிளைகளும் விரைவில் தொடங்கப்படும். மத்திய அரசு நிதி உதவி கிடைத்ததும், இன்னும் 7 சிறு கிளைகளையும், 8 மிகச் சிறு கிளைகளையும் தொடங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

37. மண்டல நுகர்பொருள் விநியோக நிலையங்கள்.—[illegible] வோர் கூட்டுறவுச் சங்கங்களின் கொள்முதல் திறனை ஒரு [illegible] படுத்தவும், பேரம் செய்யும் சக்தியைத் திறம்படுத்தவும், [illegible] சங்கங்களின் சில்லறை விற்பனை அங்காடிகளுக்குத் [illegible] ளர்கள் அல்லது உற்பத்தியாளர்களிடமிருந்து சமூக [illegible] தொடர்ச்சியாகவும் பொருட்கள் கிடைப்பதை உறுதி

களிலும், கிளைகளிலும் கிதுங்கு-அலுவலகம்-சில்லரை விற்பனைப் பிரிவு கட்டுவதற்காக. பாதி கடனாகவும் பாதி மானியமாகவும் அரசு நிதி உதவி அளித்துள்ளது. சாதாரணமாக சிறு விவசாயி களுக்கு 10.5 சதவீத வட்டிக்கும், மற்றவர்களுக்கு 12 சதவீத வட்டிக்கும் கடன் கொடுக்கப்படுகிறது. ஆனால்பழங்குடியினருக்கு குறைந்த வட்டி வீதத்தில் அதாவது 4 சதவீத வட்டிக்கு சாகுபடி மற்றும் துணைத் தொழில்களுக்காக கடன்களை இச்சங்கங்கள் வழங்குகின்றன. இயல்பான வட்டி வீதத்திற்கும், குறைந்த வட்டி வீதத்திற்கும் உள்ள வித்தியாசத்தை அரசு ஈடுசெய்கிறது. இச்சங்கங்களுக்கு மோட்டார் வண்டிகளும் வழங்கப்பட்டுள்ளன. இவற்றில் நான்கு சங்கங்கள், அரசு உதவியுடன், எட்டு கிளை களைத் தொடங்கியுள்ளன. பணியாளர் மானியம், இழப்பு நிதி, மானியம், மேசை நாற்காலி மானியம், மோட்டார் வண்டிகளின் பராமரிப்புக்கான மானியம், விலை ஏற்ற இறக்க மானியம் போன்ற இதர மானியங்களையும் அரசு இச்சங்கங்களுக்கு வழங்கி வருகிறது. தென் ஆற்காடு மாவட்டத்தில் கல்ராயன் குன்று களில் உள்ள மூன்று பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு இது போன்ற நிதி உதவி அளிக்கப்படுகிறது. 1979–80-ல் ஒப்ப ளிக்கப்பட்ட 17.66 இலட்சம் ரூபாய் உட்பட 1976–77 முதல் 1979–80 முடிய பெரிய அளவிலான பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும், கல்ராயன் குன்றுகளில் உள்ள மூன்று பல நோக்குச் சங்கங்களுக்கும் அரசு, 49.55 இலட்சம் ரூபாய் அளவிற்கு நிதி உதவி அளித்துள்ளது. 1980–81-ல் 28.40 இலட்சம் ரூபாய் நிதி உதவி அளிக்க வகை செய்யப்பட்டுள்ளது.

69. இந்த ஒன்பது பெரிய அளவிலான பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும், தென் ஆற்காடு மாவட்டத்தில் கல்ராயன் குன்றுகளில் உள்ள மூன்று பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும் 31–3–80 வரையில், 21,517 பழங்குடியினரை உறுப்பினர்களாகச் சேர்த்துள்ளன. இது இப்பகுதிகளில் வசிக்கும் மொத்த பழங்குடியினரில் 72 சதவீதம் ஆகும். இச்சங்கங்கள் ஆற்றிய பணிகள் பின்வருமாறு:—

| ஆண்டு. | வழங்கப்பட்ட கடன். | வாங்கப்பட்ட சிறுகாடுபடுபொருட்களின் மதிப்பு. | விநியோகிக்கப்பட்ட விவசாயத்துக்குத் தேவையான பொருட்களின் மதிப்பு. | விநியோகிக்கப்பட்ட நுகர் பொருட்களின் மதிப்பு. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | (ரூபாய் இலட்சத்தில்.) | | | |
| 1976–77 .. | 9.10 | 0.20 | 0.06 | 0.38 |
| 1977–78 .. | 34.23 | 8.52 | 1.23 | 7.70 |
| 1978–79 .. | 39.57 | 11.09 | 1.17 | 14.73 |
| 1979–80 .. | 38.31 | 8.66 | 5.74 | 21.64 |

2

| (1) | (2) | (1) | (2) |
|---|---|---|---|

கூட்டுறவுக் கல்வியும் பயிற்சியும்.

60. கூட்டுறவு பயிற்சி.—இம்மாநிலத்தில் கூட்டுறவுக் கல்வி, பயிற்சி, விளம்பரம் ஆகியவற்றைத் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் கவனித்து வருகிறது. [illegible] கூட்டுறவு களுக்கான கூட்டுறவுப் பயிற்சி, [illegible] பயிற்சிக் கல்லூரியில் தரப்படுகிறது. [illegible] கூட்டுறவு களுக்கான கூட்டுறவுப் பயிற்சி, [illegible] கூட்டுறவுப் பயிற்சி நிலையத்திலும், [illegible] ஏழு கூட்டுறவுப் பயிற்சி நிலையங்களிலும் தரப்படுகிறது.

61. கொள்கை பரப்புதலும் [illegible] திலும், தமிழிலும் மாத இதழ்கள் வெளியிட்டும், [illegible] பரப்புதலுக்கான [illegible] இந்தியக் கூட்டுறவு வாரம் கொண்டாடியும், [illegible] நடத்தியும், கூட்டுறவு பற்றிய [illegible] களையும் வெளியிட்டும், [illegible] முதலியன நடத்தியும், [illegible] தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் தொடர்ந்து கூட்டுறவு [illegible] தின் முயற்சிகள் பற்றி விளம்பரம் செய்து வருகிறது. [illegible] அளவில், மாவட்டக் கூட்டுறவு ஒன்றியங்களும் [illegible] வெளியிட்டும், [illegible] நவம்பர் 1979-ல் கொண்டாடப்பட்ட [illegible] கூட்டுறவு வாரத்தில் [illegible] இந்தியக் சங்கங்களுக்கு கேடயங்கள் வழங்கப்பட்டு கூட்டுறவுச் புகழ்பெற்ற உறுப்பினர்கள் சிறப்பிக்கப்பட்டனர். விழாவின் போது சென்னை மாநகரில் உள்ள கூட்டுறவுச் சங்க கள், தமது பொது நல நிதியிலிருந்து 10,000 ரூபாய் செலவில் உலக [illegible] குழந்தைகள் [illegible] 75 குழந்தைகளுக்கு, அவர்களுக்குத் தேவையான [illegible] கருவிகளை வழங்கின. [illegible] இல்லத்திற்கும் இரண்டு தொலை [illegible] பட்டன. பள்ளிக்கூட [illegible] வழங்கப் [illegible] உயர் நிலை [illegible] 19,000 ரூபாய் நன்கொடை தரப்பட்டது. இந்த [illegible] முற்றோர் சமுதாயத்தில் பின்தங்கியவர் [illegible] தமக்குள்ள அக்கறையைக் கூட்டுறவுச் சங்கங்கள் [illegible] வெளிப் [illegible]த்தின.

பொது.

[illegible] சட்டத்திற்குத் திருத்தம்.—கூட்டுறவுச் சங்கங்களில் [illegible] சீரமைக்க வேண்டி கூட்டுறவுச் சங்கங்களின் [illegible] விரிவான முறையில் திருத்தியமைக்கக் கொண்டு [illegible] தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்ட வரைவு [illegible] மன்றத்தால் கூட்டுக் குழுவிற்கு அனுப்பி வைக்க [illegible] பிப்ரவரி 80-ல் முந்தைய சட்டமன்றம் கலைக்க [illegible] சட்டபோது இந்த வரைவு உரிமையிழந்தது. தற்போது [illegible] சட்டமன்றத்தில் அந்த சட்ட வரைவினை மீண்டும் கொண் [illegible] பற்றி பரிசீலிக்கப்பட்டு வருகிறது

2

| (1) | (2) | (1) | (2) |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |